# சமாதான நோக்கு

மலர் 10 இதழ் 02
2013 ஆகஸ்ட் - செப்டெம்பர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு



# 13 செயலாக்கத்திற்கான சவால்கள்

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து / பேராசிரியர் ஜயதேவ உயன்கொட / சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா / பேராசிரியர் ஜயன்த்த செனவிரத்ன / மொஹமட் ஃபஸ்லான்
பேராசிரியர் கீதபொன்கலன் / திஸ்ஸ ஜயதிலக்க / மெதகம தம்மானந்த தேரர் / மாதுலுவாவே சோபித்த தேரர் / சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க / பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண
விமலவீர திசாநாயக்க / கலாநிதி ஜயம்பத்தி விக்ரமரத்ன / சட்டத்தரணி எஸ்.எல்.குணசேக்கர / அசங்க வெலிக்கல / உதய பிரபாத் கம்மன்பில / காமினி ஜயவிக்ரம பெரேரா
சாந்தினி கோன்கஹகே / டக்ளஸ் தேவானந்த / பேராசிரியர் ஹஸ்புல்லா / சீ. விக்னேஸ்வரன்

சமாதான நோக்கு

ISSN 955-1800-0061

மலர் 10 இதழ் 02 ஓகஸ்ட் - செப்டெம்பர் 2013

தொலைபேசி 94-1-2370801/4 தொலைநகல் 94-1-2370802 மின்னஞ்சல் cpa@sri.lanka.net இணையத்தளம் www.cpalanka.org

# இருளுக்குப் பழகிய கண்கள்

யுத்தம் முடிவடைந்து பல ஆண்டுகள் கடந்த போதும் மீண்டும் அவ்வாறானதோர் நிலைமை ஏற்படுவதைத் தடுப்பதற்கான பயனுறுதியுள்ள எந்தவொரு நடவடிக்கையினையும் அரசாங்கம் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. தமிழ் மக்களுக்கு நியாயமான அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சுக்கள் இனவாத சக்திகளினதும் அரசியல் சந்தர்ப்பவாதிகளினதும் ஓர் நாடக அரங்காக மாறியுள்ளது. இது ஒரு துரதிர்ஷ்ட வசமான நிலைமையாகும்.

மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டு 20 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு எமது தலையீட்டின் காரணமாக மாகாண சபைகளின் மக்கள் பிரதிநிதிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூகக் குழுவினர் என்பவர்களின் பங்களிப்புடன் மாகாண சபைகளை வலுவடையச் செய்யும் முறைமையினை அர்த்தமுள்ளதாக்கும் பொருட்டு பரிந்துரைக் கோவையொன்று தயாரிக்கப்பட்டது. இப் பரிந்துரைக் கோவையானது பாராளுமன்றப் பிரதிநிதிகள் மற்றும் ஜனாதிபதி உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அனைத்து தரப்பினர்களுக்கும் கிடைக்கச் செய்த போதிலும் அவர்களின் கவனத்தை ஈர்க்கவில்லை. ஆயினும் அதில் உள்ளடங்கியுள்ள பரிந்துரைகள் இன்றைக்கும் செல்லுபடியானதாகும்.

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட சர்வகட்சிக் குழுவின் யோசனைகள் கிடப்பில் இடப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளரது தலைமையில் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டதன் விளைவாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (எல்.எல்.ஆர்.சீ) யோசனைகள் அமுல்படுத்தப்படாமை தொடர்பாக ஏற்பட்ட பேச்சுக்கள் முற்றுப் பெற்றன. ஆமை வேகத்திலேயே அதன் செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

இந் நிலைமைகளினால் நாட்டில் விருத்தியடைந்து செல்கின்ற இன ரீதியான சகிப்பின்மை மற்றும் ஏமாற்றம், சர்வதேச ரீதியில் எதிர்நோக்கும் தலையீடுகள் என்பவற்றின் முன் அரசாங்கம் தான் தோன்றித்தனமாக செயற்படுகின்றதே ஒழிய இதன் ஆபத்தை உணர்ந்ததாக இல்லை.

இனவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காக மத ரீதியான மோதல்கள் மேலோங்குவதற்கு இடமளிப்பதனூடாக புதிய பிரச்சினைகள் உருவாக்கம் நடைபெற்று வருகிறது. நாடு அழிவுப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதே இதன் மூலம் நன்கு புலப்படுகிறது. ஆகவே இது பற்றி அறிவுள்ள பிரஜைகள் இந் நிலைமை தொடர்பாக கூருணர்வுடையவர்களாக மாறுவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

ஆலோசகர்: லயனல் குருகே

பதிப்பாசிரியர்: எஸ்.சிவகுருநாதன், பக்க வடிவமைப்பு: வாக்யாரூ 011-2708377 அச்சாக்கம் : க்ளோப் ப்ரின்டிங் வேர்க்ஸ் 0777-315971

"சமாதான நோக்கு" என்பது மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சமாதானமும் மோதல் ஆய்வும் பற்றிய பிரிவினதும் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவினதும் பிரசுரமாகும். மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் என்பன மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

"சமாதான நோக்கு" சஞ்சிகை, இலங்கையின் மோதலை தீர்ப்பதற்கு ஏதுவான பிரச்சினைகளையிட்டு, எமக்கும் பொதுமக்களுக்கும் இடையே இடையீட்டை ஏற்படுத்துவதற்கான ஒரு மார்க்கமாக பயன்படுகிறது. இச்சஞ்சிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினதோ அல்லது அதன் பணிப்பாளர் சபையினதோ கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை. மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்க.

தொடர்புகளுக்கு : "சமாதான நோக்கு"

24/2, 28வது ஒழுங்கை, ஃப்ளவர் வீதி, கொழும்பு-7

தொலைபேசி : 011 2565304-6, தொலைநகல் : 011 4714460

மின்னஞ்சல் : cpa@cpalanka.org இணையத்தளம் : www.cpalanka.org

## உள்ளடக்கம்


**அதிகாரப் பரவலாக்கல் விவாதத்தினூடே மோதல்களைத் தொடர்தல்**
கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து 3

**இரண்டாந்தர குடியுரிமையினை ஏற்றுக்கொள்ளும் அரசியல் யதார்த்தம்**
பேராசிரியர் ஜயதேவ உயங்கொட 6

**செய்வதற்கு இணங்கிய போதும் செய்யாது விட்டமையால் நாட்டைப் பிளவுபடுத்தலும்**
சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா 10

**13வது திருத்தத்திற்கு கொன்பியுசியஸ்ஸிடமிருந்து ஒரு படிப்பினை**
பேராசிரியர் ஜயந்த செனவிரத்ன 15

**13வது அரசியலமைப்புத் திருத்தமும் கிழக்கு மாகாண முஸ்லிம்களும்**
மொஹமட் ஃபஸ்லான் 18

**தமிழ் சமூகம் தவறுகள் அதிகம் இழைத்துள்ளது**
பேராசிரியர் கீதபொன்கலன் 21

**வெளியுறவுக் கொள்கை, ஜினீவா பிரேரணை மற்றும் நாட்டின் எதிர்காலம்**
திஸ்ஸ ஜயதிலக்க 25

**மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்வது மகாநாயக்க தேரர்களது கருத்து யாது?**
மெதகம தம்மாநந்த தேரர் 29

**உலக நிலைமை கருத்திலெடுத்தே அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்**
மாதுளுவாவே சோபித்த தேரர் 33

**வடக்கிற்கு அதிகாரங்களைக் கோருவது நியாயமானதே**
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 37

**மாகாண சபைகள் வெள்ளை யானை என்பது நியாயமற்றது**
அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண 45

**புற்றுக்குள் இருப்பது என்னவென்று தெரியாமல் புற்றுக்கு பயப்படுவது போன்றதே 13 பயம்**
விமலவீர திஸாநாயக்க 50

**தேசியப் பிரச்சினையும் ம.வி.மு யோசனைகளும்**
சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா 53

**பொலிஸ் அதிகாரங்களும் 13வது அரசியல் அமைப்புச் சட்டமும்**
கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன 55

**தாழ்வுச் சிக்கல் காரணமாகவே இந்தியாவுக்கு பயப்படுகின்றனர்**
சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எல். குணசேகர 58

**வடக்கு தேர்தலுடன் களத்துக்கு வந்துள்ள மூட நம்பிக்கைகள்**
அசங்க வெலிக்கல 62

**பிரிவினை வாதத்திற்குத் துணை போகும் வடக்கின் தேர்தல்**
உதய பிரபாத் கம்மன்பில 66

**வட முனையில் வாழும் மக்களுக்கு உரித்தான குறைந்தளவு அதிகாரத்தை வழங்குவோம்**
காமினி ஜயவிக்ரம பெரேரா 71

**மாகாண சபைகள் அளவுக்கு கிராமங்களுக்குப் பணியாற்றிய வேறெந்த நிகழ்ச்சித் திட்டமும் இல்லை**
சாந்தினி கோன்கஹகே 75

**பிரச்சினைகளுக்கு நீண்டகாலத் தீர்வைத் தேடுவதில் முதலாவது படி-முறை மாகாண சபையாகும்**
அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 77


**வட மாகாண சபைத் தேர்தல் 2013 முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்புக்கள்**
பேராசிரியர் ஹிஸ்புல்லா 80

**பதின்மூன்றும் நீக்கப்பட்டால் தமிழ் மக்களுக்கு எதுவுமே மிஞ்சாது**
சீ. விக்னேஸ்வரன் 82







இந்திய ஜனாதிபதி மன்மோஹன்சிங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்த போது Photo source: http://photodivision.gov.in

# அதிகாரப் பரவலாக்கல் விவாதத்தினூடே **மோதல்களைத் தொடர்தல்**



**_கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து_**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

அதிகாரப் பகிர்வும் 13 வது திருத்தமும் மீண்டுமொரு முறை அரசியல் விவாதத்தின் மையத்திற்கு வந்துள்ளன. பல்வேறு காரணிகளின் விளைவாக இந் நிலைமை தோன்றியுள்ளது. 2013 செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள முதலாவது வடமாகாண சபைத் தேர்தலே பிரதான காரணியாகும். தேர்தல் முடிவுகளுடன் தேர்தல் செயற்பாட்டின் நேர்மைத் திறன் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான தற்போதைய அரசியலமைப்புச் சட்ட ஏற்பாடுகளை பலவீனப்படுத்தாமையினை உறுதி செய்வதற்கான சர்வதேச மற்றும் விசேடமாக இந்தியாவின் தலையீடு ஆகிய காரணிகளாகும். மறுபுறத்தில் மாகாண மட்டத்தில் அதிகாரப் பகிர்வினை முற்றுமுழுதாக அகற்ற இயலாது விடின் அதனுள் எதுவுமற்ற வெறும் வெற்றுக் கூடொன்றாக அதனை மாற்றுவதற்கு ஆட்சி பீடத்திலிருக்கும் சிலரிடமுள்ள இலட்சியத்தை ஒரு காரணியாகக் கூற முடியும். அரசியல் தீர்வொன்று அவசியமற்றது எனும் அரசாங்கத்தின் பலத்த விசுவாசத்தின் காரணமாகவே இவ் இலட்சியம் உருவாகிறது. யுத்த வெற்றியின் மீது மையப்படுத்தப்பட்ட நிலைமைகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார அபிவிருத்தியின் மூலம் அரசாங்கத்தினால் முன் வைக்கப்படும் நிபந்தனைகளுக்கேற்ப சமாதானம், சௌபாக்கியம், நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை என்பவற்றுக்கான பாதை காட்டப்படுவதாக இங்கு தெரிகிறது.

அரசியலமைப்புச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் வட மாகாண சபையானது (உண்மையிலேயே அவர்களது பயம் இந்த மாகாண சபை தொடர்பாக மட்டுமே) தேசிய ஒருமைப்பாடு ஆபத்தை எதிர்கொள்ளும்

> **“அரசியலமைப்புச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் வட மாகாண சபையானது [உண்மையிலேயே அவர்களது பயம் இந்த மாகாண சபை தொடர்பாக மட்டுமே] தேசிய ஒருமைப்பாடு ஆபத்தை எதிர்கொள்ளும் என்பதே அதிகாரப் பகிர்வுக்கு எதிரானவர்கள் முன் வைக்கின்ற வாதத்தின் கருப்பொருள் ஆகும். ஆரம்பத்தில் இதுவொரு சிறு விடயமாகக் காணப்படுகின்ற போதும் எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளுக்கு காரணமாக அமையும் நிலைமையைத் தோற்றுவிக்கும்”**

என்பதே அதிகாரப் பகிர்வுக்கு எதிரானவர்கள் முன் வைக்கின்ற வாதத்தின் கருப்பொருள் ஆகும். ஆரம்பத்தில் இதுவொரு சிறு விடயமாகக் காணப்படுகின்ற போதும் எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளுக்கு காரணமாக அமையும் நிலைமையைத் தோற்றுவிக்கும் என ஜனாதிபதி, அரசாங்கத்திலிருக்கும் அவரது சகோதர்கள் மற்றும் அவர்களது கொள்கையை அனுசரிக்கும் சகாக்கள் ஆகிய பலரும் உறுதியாகக் கூறுகின்றனர். அவ்வாறே அது விடுதலைப் புலிகளுக்கு தாமதித்தேனும் கிடைக்கும் ஒரு வெற்றியாகுமெனவும், அதன் மூலம் நாடு பிளவுபடுவதற்கு வழிவகுக்கப்படுமெனவும் அவர்கள் கூறுகின்றனர். மாகாணங்களுக்கான உத்தேச அதிகாரப் பகிர்வானது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அமைவானதாகுமென உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது என்பதும் இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும் மாகாணங்களுக்கு அதிகாரம் பகிரப்படல் தொடர்பான அதிகார சமநிலை உறுதியாகவே மத்திய அரசுக்கு சாதகமானதாக உருவாக்கப்பட்டுள்ளதெனக் குறிப்பிடல் வேண்டும். இவ் அதிகார உருவாக்கம் கடந்த இருபது வருடங்கள் முழுவதும் நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் கூறுவதாயின் மாகாண சபைகளின் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் மத்திய அரசின் ஆட்சிக்கோ அதிகாரத்திற்கோ தடையாக அமையாது என்பதுடன் அவ் அதிகாரங்கள் பயன்படுத்தப்படல் தொடர்பான உச்ச வரையறையும் விதிக்கப்பட்டுள்ளது. ஏதாவதொரு விதத்தில் மாகாண சபையொன்றின் கருத்துக் கணிப்பொன்று மத்திய அரசின் அபிமானத்துக்குப் பொருந்தாது அல்லது அதன் அதிகாரத்திற்கும் ஆட்சிக்கும் பாதிப்பை ஏற்படுத்துமெனக் கருதினால் மட்டுமே உண்மையில் அது அவ்வாறு காணப்படாமலிருக்கும். மேற்குறிப்பிட்ட விடயங்கள் மற்றும் நிலைமைகள் தொடர்பாக 13வது திருத்தத்தின் கருவூலமான உள்ளடக்கத்தை அகற்றுவது முதல் அதனை முற்றுமுழுதாக இல்லாதொழிப்பது வரை செய்கின்ற அதிகாரப் பகிர்வு எதிர்ப்பு நிலைமைகள் பிரதானமாக கொள்கை வாதமானதாகும். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ராஜபக்ஷ ஆட்சியின் தலைமையினதும் அதன் தலைவர்களினதும் இவ் விடயங்கள் தொடர்பான அரசியல் கற்கைகள் தேசத்தின் ஒருமைப்பாடு, அரச மொழி ஒழுங்கு விதிகள் மற்றும் பௌத்த சமயத்திற்கு “முன்னுரிமை” பாதுகாக்கப்பட்ட முதலாவது குடியரசு அரசியலமைப்பு அங்கீகாரம் இடம்பெற்ற 40 ஆண்டுகளுக்கு முன்பிருந்த காலத்திலேயே உருவாகியது மட்டுமன்றி முடிவடைந்தது என்பதனை ராஜபக்ஷ அரசாங்கம் உறுதியாகவே காட்சிப்படுத்தியுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் அவர்களது மனங்களில் நிலவுகின்ற உண்மையான அல்லது ஊகங்களினடிப்படையிலான நாடு பிளவுபடுதல் தொடர்பான பயம், பெரும்பாலும் நாடு பிளவுபடுவதற்கு அண்மித்த அபாயத்தை விடவும் நாட்டினதும் அதன் வளங்களினதும் நிர்வாகம் தொடர்பானதொன்றாகவே காணப்படுகிறது. அதிகாரத்தைப் கைப்பற்றுவதனை உறுதி செய்வதற்கு “வேறொருவர்” தேவைப்படுகின்ற ஆட்சிக்கு அந்த “வேறொருவர்” தோற்கடித்தல் தொடர்பான ஊதுகுழலை இசைப்பதிலும் உள்ளடங்கியுள்ள தனிப்பட்ட ஒரு நன்மை உண்டு. இங்கு அவ் “வேறொருவர்” ஏதேனுமொரு குழுவாகவோ அல்லது ஒரு கருத்தாகவோ காணப்படலாம். அவ்வாறே அவ் “வேறொருவர் ஏதேனுமொரு வடிவத்திலோ அல்லது மாதிரியிலோ மீண்டும் வருகை தருவதானது எப்போதுமே உண்மையானதும் தற்போதுள்ள அபாயமும் ஆகும் என்பதனை உறுதிப்படக் கூறிக் கொள்வதும் இடம்பெறுகிறது.

அதனடிப்படையில் எப்போதுமே 13வது திருத்தமானது தற்போதைய ஆட்சியின் பிரதான ஓர் இலக்காக இருந்துள்ளது. அவர்கள் மிகத் திறமையாக விவாதத்தினை பதிமூன்றிற்கும் மேலான (Thirteen Plus) அதிகாரப் பகிர்வு என்ற கேலிப் பெயரிட்டு அரசியல் தீர்வொன்று தொடர்பான தனது நிலைப்பாட்டிலிருந்து பதின்மூன்றாவது திருத்தத்தை நலினமாக்குதல் மற்றும் இல்லாதொழித்தல் வரை கொண்டு சென்றுள்ளனர். இவை அனைத்தும் இடம்பெற்று வரும் வேளையில் தற்போதைய நிலைமையானது பதின்மூன்றிற்கு குறைவான (Thirteen Minus) தாக பேணப்பட்டுக் கொண்டிருக்கிறது.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பகிரப்படவில்லை. அது மட்டுமன்றி பகிரப்பட்ட அதிகாரங்கள் கூட பாரியளவிலான காணிச் சுவீகரிப்பு தொடக்கம் நகர மற்றும் கிராமிய திட்டமிடல் சட்டம் (Town and Country Planning Act) “திவிநெகும” வரையான செயற்பாடுகளினூடே படிப்படியாக குறைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உயர் நீதிமன்றத்தில் “திவிநெகும” சட்ட வரைவிற்கு காட்டப்பட்ட பதில் குறியே நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்கள் குற்றப் பிரேரணையொன்றின் மூலம் நீக்கப்படுவதற்கு உந்துதலாயமைந்தது என்பது மிகத் தெளிவாகிறது.

அரசியல் தீர்வொன்று தொடர்பாக ஆராய்வதற்கு தற்போது பாராளுமன்றத் தெரிவுக்

குழுவொன்று காணப்படுகிறது. அது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்களை மட்டுமே உள்ளடக்கியுள்ளது. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுடன் (APRC) தொடர்புள்ளவர்களென அனைவருக்கும் தெரிந்த திஸ்ஸ விதாரண மற்றும் ரவுப் ஹக்கீம் ஆகியோர் கூட அதில் உள்ளடக்கப்படவில்லை. 13வது திருத்தம் பற்றியும் குழு ஆராயவுள்ளது. பாராளுமன்ற தெரிவுக்குழு தமிழ் தேசியக் கூட்டணிக்கு (TNA) ஆரம்பத்திலேயே யோசனை தெரிவித்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்கும் அவர்களுக்குமிடையில் நேரடிப் பேச்சுவார்த்தைகள் எந்தவொரு திசை நோக்கியும் பயனளிக்காது இடையில் முறிந்தது. அரசாங்கம் தனது யோசனைகளை தெரிவிக்க விரும்பாமை அல்லது அரசாங்கத்தின் இயலாமை என்பனவே அதற்கான காரணமாயமைந்தது. அச் சந்தர்ப்பத்தில் பதின்மூன்றாவது திருத்தம் ஒரு விடயமாகக் காணப்படவில்லை. குழு அதனிலும் மேலாகச் செல்லும் என்பதிலேயே இணக்கம் காணப்பட்டது. அவை பேச்சுவார்த்தையின் ஆரம்பப் புள்ளியாக காணப்பட்டதே ஒழிய விவாதத்திற்கான விடயமாக காணப்படவில்லை. கோல் கம்பத்தை வேறு ஓர் இடத்திற்கு நகர்த்துவது அரசு இது தொடர்பாக மேற்கொண்ட செயற்பாடாகும். மற்றொரு விதத்தில் கூறுவதாயின் அது ஏமாற்றுக்காரன் ஒருவனுடன் சீட்டு விளையாடுவது போன்றதாகும்.

அதிகாரப் பகிர்வானது இச் சந்தர்ப்பத்தில் "எமது அரசாங்கத்தில்" இரட்டை அர்த்தம் கொள்ளப்படுகிறது என்பதுடன் பதில் குறியாக அது அதன் பாதையில் நிறுத்தப்பட்டுள்ளது. அது எவ்வகையிலும் கைவிடப்படவில்லை. 2013 மார்ச் மாத ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை (UNHCR) யோசனையில் வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பான குறிப்பு, அத் தேர்தல் நடைபெறுமென ஜப்பான் அரசுக்கு ஜனாதிபதி அவர்கள் அளித்த வாக்குறுதி, அது அவ்வாறு நடைபெறாது விடின் மற்றும் / அல்லது பதின்மூன்றாவது திருத்தம் தொடர்ந்தும் திருத்தப்படின் 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தை (CHOGM) வேறொரு நாட்டிற்குக் கொண்டு செல்வதற்கு இந்தியா அழுத்தம் கொடுப்பதற்கான வாய்ப்பு ஆகிய அனைத்து காரணிகளும் ஒருங்கு சேர்ந்து விசேடமாக இந்தியாவின் தாக்கம் அதிகாரப் பகிர்வு பற்றிய விவாத்தினைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

அது மீண்டும் ஆரம்பிக்கப்படும். புலிப் பூச்சாண்டி மற்றும் யுத்த வெற்றி என்பன தொடர்ந்து நாட்டில் இடம்பெறும் அரசியலில் அரசாங்கத்தின் சாதக நிலைமைக்காவுள்ள சிறந்த காரணியாக காணப்படுகிறது. ஆகவே பதின்மூன்றாவது திருத்தத்தை இல்லாதொழித்தல் அல்லது அதை ஒன்றுமே இல்லாத நிலைக்கு திருத்துதல் என்பன த.வி.பு ஐ யுத்த ரீதியாக தோற்கடித்தலுடன் தொடர்பான முடிவற்ற அரசியல் வேலைத்திட்டமாக காணப்படுகிறது. அதைச் செய்ய இயலுமான சிறந்த விதமானதும் அது இடம் பெறுவதற்கு மிகவும் சாத்தியமாகவுள்ளதுமான சந்தர்ப்பம் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் கூட்டத் தொடரின் சூட்டோடு சூட்டாக 2014 ஆண்டின் முதலாம் காலாண்டில் நடைபெறச் சாத்தியமுள்ள ஜனாதிபதித் தேர்தலொன்றின் தேர்தல் பிரச்சாரத்தில் அவ்விடயம் குறிப்பிடப்படுவதாகும். இதன் மூலம் இலங்கையின் வாக்காளர்களுக்கு அதிகாரப் பகிர்வொன்று அவசியமற்றதெனவும் செயற்பாட்டிலுள்ள ஒரு ஜனநாயகத்தில் வாக்காளார்களது விருப்பு கட்டாயம் கவனத்திற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இந்தியாவிற்கு அல்லது வேறு எவருக்கும் கூறுவதற்கு அரசாங்கத்திற்குத் தேவையான ஜனரஞ்சகமான உத்தியோகபூர்வ பணிப்பாணை (Mandate) கிடைக்கப்பெறும்.

இது நடைபெற்றால் தொடர்ந்தும் மோதல் நடைபெறுவதே அதன் விளைவாக அமையும். ஆகவே இது எவ்வளவு தூர நோக்கற்றுக் காணப்பட்ட போதும், அரசாங்கம் இந் நிலைமையின் கீழ் உள்நாட்டில் அரசியல் ரீதியான நன்மைகளை எதிர்பார்க்கின்ற வரை, இந் நிலைமை தொடரும். இவை காரணமாக அரசியல் விமர்சகர் பலராலும் எதிர்பார்க்கப்படுகின்றவாறு தெரிவு செய்யப்படும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA) ஆட்சி நடாத்தும் மாகாண சபையொன்றின் செயற்பாடுகளும் இந் நிலைமைகளின் கீழேயே இடம்பெறும். அமைதியான அரசியல் தடாகத்தில் பயணம் செய்ய அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுவர். மேலும் இடம்பெறப் போவது யாதெனில் அதன் வாக்காளர்களின் நாளாந்த வாழ்வியல் தேவைகள், அநீதியான மற்றும் அவற்றை தொடர்பற்ற விதமான அவலங்களாக வெளிக்காட்டுவதற்கான சிங்கள உரிமையின் பிடிவாதமான முயற்சிகள் என்பவற்றுக்கு முகங்கொடுக்க நேரிடும் ஒரு பிரயாணத்தையே எதிர்நோக்க நேரிடும்.

மோதலின் பின்னரான நிலைமையை நோக்கிப் பயணித்தல் என்பது எப்போதும் போலவே வசப்படுத்திக்கொள்ள முடியாததொன்றாக காணப்படுகிறது. போருக்குப் பின்னரான நிலைமையிலிருந்து மீண்டுமொரு முறை மோதல் நிலைமையினை நோக்கிப் பயணிப்பதற்கான வாய்ப்புக்களே தற்போது நிலவுகின்ற அபாயமாகும்.

**"மாகாணங்களுக்கான உத்தேச அதிகாரப் பகிர்வானது அரசின் ஒருமைப்பாட்டிற்கு அமைவானதாகுமென உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது என்பதும் இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அது எவ்வாறாயினும் மாகாணங்களுக்கு அதிகாரம் பகிரப்படல் தொடர்பான அதிகார சமநிலை உறுதியாகவே மத்திய அரசுக்கு சாதகமானதாக உருவாக்கப்பட்டுள்ளதெனக் குறிப்பிடல் வேண்டும். இவ் அதிகார உருவாக்கம் கடந்த இருபது வருடங்கள் முழுவதும் நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது."**




வடக்கின் ஆளுனர் இராணுவத்துடன் இணைந்து மக்களது காணிகளை கண்காணிப்பில் ஈடுபட்ட போது - உதயன் பத்திரிகையிலிருந்து Photo source : vannipost.com

# இரண்டாந்தர குடியுரிமையினை ஏற்றுக்கொள்ளும்
# அரசியல் யதார்த்தம்

"

**வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கே மாகாண சபைகள் முறைமை அவசியமாகக் காணப்படுகின்றது. ஆயினும் அங்கு அது செயற்படவில்லை. முதல் இரண்டு ஆண்டுகளில் மாத்திரம் மாகாண சபைகள் இயங்கின. தற்போது அது மத்திய அரசாங்கத்தின் ஓர் கருவியாகவே காணப்படுகிறது.**

"



பேராசிரியர்
**ஜயதேவ உயங்கொட**

13வது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அமைய செயற்படும் சந்தர்ப்பம் மாகாண சபைகளுக்கு கிடைக்காமையின் காரணமாக மாகாண சபை முறைமை வெற்றியளிக்குமா இல்லையா என்பது பற்றி சுமார் கடந்த 24 வருடகால அனுபவத்தின் மூலம் கூற முடியாதுள்ளது. மாகாண சபைகள் தமது அதிகாரத்தை உரிய முறையில் செயற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தினை மத்திய அரசாங்கம் வழங்கவில்லை.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கே மாகாண சபைகள் முறைமை அவசியமாகக் காணப்படுகின்றது. ஆயினும் அங்கு அது செயற்படவில்லை. முதல் இரண்டு ஆண்டுகளில் மாத்திரம் மாகாண சபைகள் இயங்கின. தற்போது அது மத்திய அரசாங்கத்தின் ஓர் கருவியாகவே காணப்படுகிறது.

மாகாண சபைகள் ஒரு வெள்ளை யானை எனப்படும் கருத்து இதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது. மாகாண சபைகள் முறைமை வெற்றிகரமாக செயற்படுவதற்கு பல நிபந்தனைகள் பல உண்டு. அதில் முதலாவது வடக்கு கிழக்கு மாகாண சபைகளுக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டிய அதிகாரங்களும் வளங்களும் உரியவாறு கிடைக்க வேண்டுமென்பதாகும். அவ்வாறே அது சுதந்திரமாகச் செயற்படுவதற்கு 5 வருட கால அவகாசமாவது கிடைக்கப் பெறல் வேண்டும்.

வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாண சபைகளும் ஆட்சி அதிகாரத்திலுள்ள அரசாங்கங்களின் கீழ், மத்திய அரசின் ஒரு பகுதியாகவே செயற்பட்டுள்ளது என்பது இரண்டாவது விடயமாகும். **ஆகவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாகாண சபைகளில் சுயமாக விருத்தியடைவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. தாம் மத்திய அரசாங்கத்தின் மற்றுமொரு கரமாகக் கருதியே மாகாண சபைகளின் ஆட்சியிலுள்ள மக்கட் பிரதிநிதிகள் செயற்பட்டுள்ளனர். மத்திய அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற ஒரு அரசாங்கமே மாகாண சபை என்பதையே இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.** இதற்கமைய மாகாண சபைகள் முறைமை பாரிய நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளது.

மத்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மாகாண சபைகளினால் பலவீனப்படுத்தப்படுவதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது.

**ஆகவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாகா சபைகளினால் சுயமாக விருத்தியடைவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. தாம் மத்திய அரசாங்கத்தின் மற்றுமொரு கரமாகக் கருதியே மாகாண சபைகளின் ஆட்சியிலுள்ள மக்கட் பிரதிநிதிகள் செயற்பட்டுள்ளனர். மத்திய அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற ஒரு அரசாங்கமே மாகாண சபை என்பதையே இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.**

**மாகாண சபைகளில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து ஆட்சி நடத்தும் பலம் வாய்ந்த நிறுவனங்களாக அவை உருவாவதற்குப் பொருத்தமான செயற்பாடுகளும் பின்பற்றப்படவில்லை. சாத்தியப்பாட்டு வளர்ச்சிக்கு அவசியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. சட்டவாக்க நியதிச் சட்டங்கள் தயார் செய்யப்பட பொருளாதார வளங்களும் கிடையாது. ஆகவே அக் கருத்திற்கு நியாயமான ஒரு பின்னணியும் காணப்படுகிறது.**

அரசியல் அதிகாரத்தை முறைகேடாக பாவித்தலும், ஊழலும் மூன்றாவது காரணியாகும். மாகாண சபை முறைமையிலுள்ள நெருக்கடி நிலைமையினை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி மாகாண சபை முறைமைக்கு எதிரான தரப்பினர் அம் முறைமை ஒழிக்கப்படல் வேண்டுமெனக் கூற முன்வந்துள்ளனர்.

வடமேல் மற்றும் மேல் மாகாண சபைகள் கூடுதலான நியதிச்சட்டங்களைதயாரித்துள்ள போதும் மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் சிக்கல் நிலைமை தோன்றியுள்ளது. அவை சட்டமா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டியுள்ளது. நியதிச் சட்டங்களுக்கும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களுக்குமிடையே முரண்பாடுகளிருப்பின் அப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உயர்நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. ஆயினும், இயல்பாகவே உயர் நீதிமன்றம் அரசாங்கத்திற்குச் சார்பாகவே நடந்துகொள்ளும். ஏற்படக்கூடிய முரண்பாடுகளை மாகாண சபைத் தரப்பினரைப் பற்றியும் சிந்தித்து தீர்வினை வழங்கும் ஒரு பொறிமுறை இந்நாட்டில் செயற்படவில்லை.

மாகாண சபை நிறுவன முறைமை பலம் பொருத்தியதாகக் காணப்படாத ஒரு சூழ்நிலையில் அதற்கு மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெறாமையின் காரணமாக அது பலவீனமடைகிறது. மாகாண சபை முறைமை பற்றி புதிதாக சிந்திக்கப்படல் வேண்டுமென்பதே இவ் அனைத்து விடங்களிலிருந்தும் தெளிவாகிறது.

இனப்பிரச்சினைக்குரிய ஒரு தீர்வாகவே மரபு ரீதியாக மாகாண சபைகள் தொடர்பான கருத்து நிலவுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து மாகாண சபைகள் வடக்கு கிழக்கிற்கு மட்டுமே தேவைப்படுகின்றன.

அதன்போது கேட்கப்படாத ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது என்ற வாதம் ஏனைய மாகாண சபைகளிலிருந்து எழுகின்றது. ஆகவே, இனப் பிரச்சினைக்குரிய தீர்வு மாகாண சபைகள் முறைமையே என்ற வாதம் செயலிழக்கிறது. அபிவிருத்தி, ஆட்சி முறைமை என்பவற்றை மக்களை நோக்கி நெருக்கமடையச் செய்வதற்கு மாகாண சபைகள் காரணமாயமைகிறது என்ற வாதத்தை சமர்ப்பிப்பதன் மூலமே அவ்வாறான வாதம் வலுவடையும்.

வடமேல், ஊவா, வட மத்திய, தென், மத்திய, சபரகமுவ மற்றும் மேல் மாகாணம் ஆகிய சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களில் அபிவிருத்தி தொடர்பான தொலை நோக்கொன்று காணப்படல் மற்றும் ஆட்சி நடாத்துதல் மக்களுக்கு நெருக்கமாதல் என்பனவே அவ்வாதத்திற்கான ஓர் அடிப்படைக்கு வழி வகுக்கிறது.

மாகாண சபைகளுக்கு சார்பாக இருந்தவர்கள் அது பற்றி கவனம் செலுத்துவதாக இல்லை. ஆகவே சிங்கள சமூகத்தில் மாகாண சபை முறைமை தொடர்பாகவுள்ள மக்கள் ஒத்துழைப்பு மிகக் குறைவாகும்.

அரசாங்கத்தின் அதிகாரப் பகிர்வு தமிழ் - முஸ்லிம் - தோட்டத் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி சிங்கள பிரஜைகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது என்ற வாதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

உள்ளூராட்சிக் கட்டமைப்புக் கூட மாகாண சபைகள் என்ற விடயத்திற்கு உட்பட்டதாகும். உள்ளூராட்சி நிறுவனங்களை வலுவடையச் செய்வதற்காக அவற்றை மாகாண சபைளிலிருந்து விடுவித்து மத்திய அரசாங்கத்துடன் தொடர்புபடுத்துவதற்குப் பதிலாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் மாகாண சபைகளுக்குமிடையே உள்ள தொடர்பினை வலுவடையச் செய்ய வேண்டும்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது சிவில் சமூகப் பிரிவினருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டுமென்று சமர்ப்பிக்கப்பட்ட கருத்துடன் நான் இணங்கவில்லை. கிராமிய மட்டத்தில் சிவில் சமூகம் என்பது கிராமிய பிரபு வர்க்கத்தினர் என்பதே இதற்கான காரணமாகும். சிவில் சமூகத்தின் அதிகாரங்கள் கிராமியப் பிரபுக்கள் வர்க்கத்தினரிடமே காணப்படுகிறது. ஆசிரியர்கள், பட்டதாரிகள் மற்றும் அரச தொழில் புரிபவர்கள் ஆகியோரே

கிராமிய பிரபுக்கள் ஆவர். ஆயினும், கிராமிய சமூகத்தில் செயற்படும் பல்வேறு சமூகக் குழுக்கள் காணப்படுகின்றன. அவை மகளிர் அமைப்புக்கள் மற்றும் மரண நன்கொடை சகாயச் சங்கங்களே அவை. அவ்வாறான இயக்கங்களின் உறுப்பினர்களைப் பெற்றுக்கொள்வதே செயன்முறைச் சாத்தியமானதாகும். பிரதிநிதித்துவம் அற்றவர்களைப் பிரதிநிதிகளாக நியமிக்கக் கூடாது. கிராமிய மட்டப் பிரபுக்களுக்கு பிரதிநிதித்துவ அதிகாரத்தை வழங்கக் கூடாது.

**மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதும் விவாதத்திற்குரிய ஒரு தலைப்பாகும். 13வது அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள அனைத்து அதிகாரங்களும் எந்தவொரு மாகாண சபைக்கும் வழங்கப்படவில்லை. அதிகாரம். வரையறுக்கப்பட்ட மாகாண சபைகளாகவே அவற்றை அழைக்க முடியும்.**

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவது தொடர்பான இரண்டு நுழைவாயில் காணப்படுகின்றன. மாகாண சபைகளுக்கு உயர்ந்த பட்ச அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டுமெனக் கூறுவது ஒரு நுழைவாயிலாகும். மாகாண சபைகளுக்கு குறைந்தபட்ச அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்பதே மற்றைய நுழைவாயிலாகும்.

மாகாண சபைகளுக்கு குறைந்தபட்ச அதிகாரத்தை வழங்க வேண்டுமென்ற கருத்தினடிப்படையிலேயே அனைத்து அரசாங்கங்களும் செயற்பட்டுள்ளன. சிங்கள அரசியல் பிரபுக்களின் கருத்து இதுவாகும். தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் சக்திகளும் பெருந்தோட்டத்துறை தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் சிவில் சமூகத்தில் சில உறுப்பினர்களுமே மாகாண சபைகளுக்கு உயர்ந்தபட்ச அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தினைக் கொண்டுள்ளனர். இவர்கள் இலங்கையின் சனத்தொகையில் ஒரு சிறு தொகையினர் ஆவர். இன ரீதியான பெரும்பான்மை சமூகத்தின் பிரபு வர்க்கத்தினர் மாகாண சபைகளுக்கு குறைந்தபட்ச அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தில் செயற்படுவார்களாயின் அக் கருத்தே நடைமுறைப்படுத்தப்படும். இவ் விடயங்கள் மாகாண சபை முறைமையின் எதிரே வலுவடையும் எனக் கூற முடியாது. வலுப் பெறுவதற்கு தேவையான ஓர் ஆயத்தம் சிங்கள சமூகத்தின் அரசியல் பிரபு வர்க்கத்திலிருந்து எழாது.

மாகாண சபை முறைமை தொடர்பாக இந்தியாவின் வகிபங்கு பற்றிக் கருத்திற்கொள்ளும் போது, தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அவர்களது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக செயற்படுத்துவதே ஒழிய அதற்கு மேலதிகமான ஒன்றையும் செய்யமாட்டார்கள். என்பது புலனாகிறது. இந்திய மத்திய அரசும் காலத்திற்குக் காலம் பிரகடனங்களை வெளியிடுவதைத் தவிர வேறெதுவும் செய்யவில்லை.

அதிகாரப் பகிர்வு சிறுபான்மையினரின் உரிமைகளையும் அரசியல் அபிலாசைகளையும் பாதுகாப்பதனை இலக்காகக் கொண்டே மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற வாதம் பற்றி ஆராய்ந்து பார்ப்போம். மாகாண சபைகள் தொடர்பாக அந்த வாதம் மட்டும் முன்வைக்கப்படுமாயின் சிங்கள பெரும்பான்மையினரின் சம்மதத்தை ஒரு போதும் பெற முடியாது. இவ் வாதத்துக்குச் சமாந்தரமாக மாகாண சபைகளிலிருந்து சிங்கள மக்களுக்கு கிடைக்கின்ற நன்மைகள் யாவை என்பது பற்றிய ஒரு புரிந்துணர்வினை ஏற்படுத்துதல் வேண்டும்.

இலங்கையில் அதிகாரப் பகிர்வினை வலுவடையச் செய்வதற்கு ஏற்றவாறு அரச மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுவது பற்றி விரிவாக கலந்துரையாடப்படல் வேண்டும்.

இலங்கையில் காணப்படுகின்ற பிரதான பிரச்சினை: சிங்கள பௌத்த மக்கள் வாழும் பெரும்பாலான பிரதேசங்களில் கூட அபிவிருத்தியில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுவதாகும்.

கொழும்பு நகரம் தவிர்ந்த ஏனைய நகரங்களின் அபிவிருத்தியிலும் அவ்வாறான ஏற்றத்தாழ்வுகள் உருவாகியுள்ளன. அபிவிருத்தியின் பயன்கள் புற எல்லைகளை அடையச்செய்வதற்காக மாகாண சபைகளை வலுவடையச் செய்தால் மட்டும் போதாது. அவ்வந்த மாகாண சபைகளிடம் ஒரு தொலைநோக்கும் காணப்படல் வேண்டும். வளங்கள் இருத்தல் வேண்டும். ஆயினும் அம் மாகாண சபைகளின் அரசியல் பிரபுக்கள் கூட அவ்வாறு சிந்தித்து செயற்படவில்லை. பிரதேச அரசியலிலிருந்து தேசிய அரசியலில் நுழைவதே அவர்களது நோக்கமாகும். ஆயினும் அவர்களது பிரதான நோக்கம் அதுவாக இருக்கக் கூடாது. **பிரதேச மட்டத்திலான அபிவிருத்திச் செயற்பாடுகளை தனது கையிலெடுக்கும் உணர்வு மிக்க பிரதேச ரீதியான முதலாளி வர்க்கத்தினர் இல்லாமையானது இலங்கையிலுள்ள ஒரு பிரதான குறைபாடாகும்.**

**அதன்போது கேட்கப்படாத ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது என்ற வாதம் ஏனைய மாகாண சபைகளிலிருந்து எழுகின்றது. ஆகவே, இனப் பிரச்சினைக்குரிய தீர்வு மாகாண சபைகள் முறைமையே என்ற வாதம் செயலிழக்கிறது. அபிவிருத்தி, ஆட்சி முறைமை என்பவற்றை மக்களை நோக்கி நெருக்கமடையச் செய்வதற்கு மாகாண சபைகள் காரணமாயமைகிறது என்ற வாதத்தை சமர்ப்பிப்பதன் மூலமே அவ்வாறான வாதம் வலுவடையும்.**

**அதிகாரப் பகிர்வு சிறுபான்மையினரின் உரிமைகளையும் அரசியல் அபிலாசைகளையும் பாதுகாப்பதனை இலக்காகக் கொண்டே மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற வாதம் பற்றிப் ஆராய்ந்து பார்ப்போம். மாகாண சபைகள் தொடர்பாக அந்த வாதம் மட்டும் முன்வைக்கப்படுமாயின் சிங்கள பெரும்பான்மையினரின் சம்மதத்தை ஒரு போதும் பெற முடியாது. இவ் வாதத்துக்குச் சமாந்தரமாக மாகாண சபைகளிலிருந்து சிங்கள மக்களுக்கு கிடைக்கின்ற நன்மைகள் யாவை என்பது பற்றிய ஒரு புரிந்துணர்வினை ஏற்படுத்துதல் வேண்டும்.**

பிரதேச வாரியாக அரசாங்கத்தின் ஏதேனுமொரு அதிகாரங்களை தாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சிந்திக்காத சிறு முதலாளி வர்க்கமே இங்கு உள்ளனர். இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் வியாபார வர்க்கத்தினர் உள்ளதன் காரணத்தினாலேயே சமஷ்டி முறைமை வெற்றியடைந்ததற்கான பிரதான காரணமாகும். சக்திவாய்ந்த ஒரு செல்வந்த வகுப்பினர் இருந்ததனாலேயே இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தின் தெலுங் கானாவில் தனியான மாநிலம் கோரி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வடக்கு தவிர்ந்த இலங்கையின் எந்தவொரு மாகாண சபையும் அதிகாரத்தைக் கோரவில்லை. கீழ் மட்டத்தில் ஒரு ஆர்ப்பாட்டத்தைக் கூட காண முடியவில்லை. பிரதேச மட்டத்திலான முதலாளித்துவ வர்க்கத்தினர் இல்லாமையே இதற்கான காரணமாகும்.

**பிரதேச மட்டத்தில் தொழிற்படும் அரசியல் கட்சிகள் இல்லாமை மற்றுமொரு குறைபாடாகும். இந்தியாவின் சமஷ்டி முறைமை வெற்றியடைவதில் மாநில மட்டத்தில் செயற்படும் அரசியல் கட்சிகளும் செல்வாக்குச் செலுத்தின. இங்கு குறிப்பிடப்படும் விடயங்கள் காரணமாகவே இலங்கையின் அரச அதிகாரப் பகிர்வு என்ற செயன்முறை நாம் எதிர்பார்ப்பதை விடவும் மிகவும் மந்த கதியில் செயற்படுகிறது.**

மாகாண சபையின் நிதி ஆணைக் குழுவின் தொழிற்பாடும் வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுகிறது. அது வலுவற்றது. நிதி அமைச்சுக்கும் நிதி ஆணைக்குழுவிற்குமிடையே உடன்பாட்டு பொறிமுறை ஒன்று செயற்படவில்லை. மத்திய அரசின் நிறுவனங்களுக்கம் பிரதேச ரீதியான நிறுவனங்களுக்குமிடையே பேரம் பேசும் மற்றும் இடைநிலை அமைதி என்பன அரசியல் கலாசாரத்தின் ஓர் அங்கமாக மாற்றமடைய வேண்டும். ஜேர்மனி, அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் அது நடைபெறுகிறது.

மத்திய அரசின் உத்தியோகபூர்வ ஆட்சி மையப்படுத்தப்பட்ட மனோபாவ வட்டத்தினுள் செயற்படும் ஒரு நிலைமையே இலங்கையில் காணப்படுகிறது. **அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்கு தடைகள் ஏற்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சபை அமைச்சர்கள் குற்றம் சுமத்துகின்றனர். ஆளுனருக்கே அங்கு கூடுதலாக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.** வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிகொள்ளுமிடத்து அரசியலமைப்பிற்கு ஏற்ப தமக்குள்ள அனைத்து அதிகாரங்களையும் பெற்றுக்கொள்வதற்கே அவர்கள் முயற்சிப்பார்கள், அதன் போது **முரண்பாட்டு நிலைமையொன்று தோன்றுமிடத்து வடக்கு மாகாண சபை கலைக்கப்படவோ அல்லது ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்படவோ முடியும். அதற்கான சட்ட ரீதியான பாதுகாப்பும் காணப்படுகிறது. அதன் போது நெருக்கடி நிலைமை உருவாகும். தமிழ் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் சமாதானமாக செயற்படுமென எண்ணுவது கடினமாகும். இந்த நிலைமையினையே அரசாங்கமும் எதிர்பார்க்கிறது.**

வட மாகாணத்தை அபிவிருத்தி செய்தல் தனது பணியாகும் என்பதை உணர்த்துவது அரசாங்கத்தின் விருப்பமாகும். அதனைத் தனது பணியாக மாற்றிக் கொள்ளவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு விரும்புகிறது. அரசாங்கமும் தமிழர் கூட்டமைப்பு இவ் விவாதத்திலேயே சிக்கிக் கொண்டுள்ளன. இவ்விரு தரப்பினர்களுக்குமிடையே சமாதானம் ஏற்படுவதே இடம்பெறல் வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகள் எவ்வாறு இருந்த போதும் சர்வதேச சமூகம் இலங்கையின் தமிழர் பிரச்சினையை தமது பிரச்சினையாக மாற்றிக் கொள்ளாது. இரண்டாந்தரப் பிரஜைகளாக சிங்களப் பிரபு வர்க்கத்தினர் தம்மை நடத்துகின்றனர் என்ற யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு மனதைத் தேற்றிக் கொண்டு வாழ்வதே இலங்கையில் தமிழ் மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கியுள்ள பிரச்சினையாகும்.

ஆயுதப் போராட்டமொன்றினால் தமது கோரிக்கைகளை வெற்றிகொள்ள முடியாதென்பது த.வி.பு இயக்கத்தின் அனுபவங்களின் மூலம் புலனாகின்றன.

கடந்த 60 ஆண்டுகால பாராளுமன்றப் போராட்டங்களினாலும் தமது எதிர்பார்ப்புக்களை அடைந்துகொள்ள முடியவில்லை என்பது புலனாகிறது.

**ஆயுதப் போராட்ட மார்க்கம் மற்றும் ஜனநாயகப் பாதை ஆகிய இரண்டு பாதைகளும் தோல்வியடைந்துள்ளன. இவ் அனைத்து விடயங்களுக்கும் ஏற்ப எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தமது இரண்டாந்தரக் குடியுரிமையை ஏற்று வாழ்வதற்கே நேரிடும். தற்போதைய நிலைமைகள் மாற்றமடையாதுவிடின் அவர்களுக்கு வேறு வழியில்லை.**



Photo Source : www.news360.lk

பொலிஸ் மா அதிபர் ஜனாதிபதியைச் சந்தித்த போது

## செய்வதற்கு இணங்கிய போதும் செய்யாது விட்டமையால் நாட்டைப் பிளவுபடுத்தலும்

# 13வது அரசியலமைப்புத் திருத்தமும்

**1983 இல் வெடித்த யுத்தத்தை தடுத்து நிறுத்துவது அன்று பிரதான பிரச்சினையாக இருந்தது. மீண்டும் யுத்தம் ஏற்படாது தடுப்பதே அதன் பின்பு பிரச்சினையாக இருக்கிறது. 2009 இல் யுத்தம் ஓய்ந்தது. அதற்குப் பதிலாக நடைபெறுவது யாது? யுத்தத்தை உருவாக்கிய அரசியலை தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்வதற்காக "யுத்த பீதியை" ஏற்படுத்துவதாகும். மொத்த தமிழ் மக்களை "புலிகள்" என சித்தரிப்பதாகும். வடக்கின் தேர்தல், "சிங்கத்திற்கும் புலிக்குமிடையிலான ஒரு போட்டியாகவே பிற்போக்குவாத ஊடகங்கள் பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளன.**



**சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா**

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அரசியல் ஆயுதமாக இனவாதம் பயன்படுத்தப்பட்ட ஒரு நாட்டில் தொடர்ந்தும அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக அதே ஆயுதம் பயன்படுத்தப்படுகிறது. 1983 இல் வெடித்த யுத்தத்தை தடுத்து நிறுத்துவது அன்று பிரதான பிரச்சினையாக இருந்தது. 2009 இல் யுத்தம் ஓய்ந்தது. மீண்டும் யுத்தம் ஏற்படாது தடுப்பதே அதன் பின்பு பிரச்சினையாக இருக்கிறது. அதற்குப் பதிலாக நடைபெறுவது யாது? யுத்தத்தை உருவாக்கிய அரசியலை தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்வதற்காக "யுத்த பீதியை" ஏற்படுத்துவதாகும். மொத்த தமிழ் மக்களை "புலிகள்" என சித்தரிப்பதாகும். வடக்கின் தேர்தல், "சிங்கத்திற்கும் புலிக்குமிடையிலான ஒரு போட்டியாகவே பிற்போக்குவாத ஊடகங்கள் பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளன.

### பொலிஸ் அதிகாரங்கள்

**வடமாகாண சபைக்கு 13வது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரங்களை வழங்குதல் பற்றி சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியில் ஓர் அச்சத்தை மூட்டியுள்ளனர். "பொலிஸ்என்றதும் மக்களுக்கு ஏற்படும் பயம் இங்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. எமது பொலிஸ் தமது அதிகாரத்தை மக்களைத் துன்புறுத்தவும் இடைஞ்சலை உண்டுபன்னவும் பயன்படுத்துவது ஒரு நீண்டகால அனுபவமாகும். ஆகவே அவ் அதிகாரம் "பொலிசுக்கு" கிடைக்கப் பெற்றால் இலகுவாக கிளர்ச்சி செய்யவும் முடியுமென்ற சந்தேகம் அக் கருத்திலிருந்து புலப்படுகிறது.** அது அவ்வாறெனில் யாது செய்ய வேண்டும்? இனவாத உணர்வில் சட்டத்தை மழுங்கடிக்கச் செய்வதற்குப் பதிலாக முழு நாட்டிலும் அந் நிலைமையிலிருந்து பொலிசை விடுவிப்பதாகும். இராணுவத்தினரைப் போன்று ஆயுதப் பயிற்சி மற்றும் ஆயுதப் பாவனையை வழங்குவதற்குப் பதிலாக அதனை ஒரு சிவில் படையாக மாற்றுவதாகும். **தற்போது பொலிஸ்**

**மாகாணப் பொலிசுக்கு ஆயுதப் பயன்பாட்டுக்கான அதிகாரம் கிடைக்கப்பெறல் மக்களிடையே பயத்தினை ஏற்படுத்தப் பிரயோகிக்கப்படும் மற்றைய விடயமாகும். "பொலிஸின் ஆயுதப் பயங்கரவாதம்" ஒன்பது மாகாணங்களுக்கும் பொதுவானவையாகும். ஆயினும் அது வடக்கிலும் கிழக்கிலும் சட்டத்தினையும் மீறி அமுலாக்கப்படுகிறது. ஆயினும் மாகாண சபையொன்றின் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பான அனைத்துப் பிரமாணங்களும் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினாலேயே வகுக்கப்படுகின்றன.**

**எதனைச் செய்துகொண்டிருக்கிறது? அரசியல்வாதிகளைப் பாதுகாப்பதும் அவர்களது கட்டளையின் பிரகாரம் மக்களைத் துன்புறுத்துவதும் ஆகும். இந்நிலைமையில் பொலிஸார் செயற்படுவதனால் குற்றச் செயல்களைத் தடுப்பது இன்று பலவீனப்படவில்லையா? மக்கள் சேவைக்கு மாத்திரம் பொலிஸாரை ஒதுக்குதல் வேண்டும்.**

**அரசியலமைப்பிற்கான 17வது திருத்தத்தின் கீழ் பொலிஸ் ஆணைக் குழுவொன்றின் மூலம் பொலிஸ் படைக்கு ஏற்புடைய விதிகள், கட்டளைகள் மற்றும் செயல்முறை ஒழுங்கு விதிகள் என்பவற்றை ஏற்படுத்த வேண்டும். 17வது திருத்தம் அகற்றப்பட்டு தற்போது 18 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்படுவதனால் பொலிஸ் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது**

**அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது உப அட்டவணையில் பொலிஸ் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள, மாகாண பொலிசுக்கு உரித்தாகாத விடயங்கள் பின்வருமாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. "தேசிய பாதுகாப்பு, தேசிய பந்தோபஸ்து ஏதேனுமொரு ஆயுதப்படை அல்லது சிவில் அதிகாரத்திற்கு உதவுவதற்கு இலங்கை அரச கட்டுப்பாட்டிலுள்ள வேறேதும் ஒரு படையினைப் பயன்படுத்துவதும்" (மேற்கொள்ள முடியாது) மேற் குறிப்பிட்ட விடயங்கள் முறையாக அமுல்படுத்தப்படுமாயின் வடக்கில் பொலிஸ் பற்றி ஏன் பயப்பட வேண்டும். இது தொடர்பா எழுப்புகின்ற ஒரேயொரு தீவிரவாத தர்க்கம் யாதெனில், "வடக்கிலுள்ள அனைவரும் புலிகளே அப்போது பொலிஸ் உருவாவதும் புலிகளிலிருந்தாகும். எவ் வகையிலும் புலியை நம்ப முடியாது" என்பதாகும்.**

மாகாணப் பொலிசுக்கு ஆயுதப் பயன்பாட்டுக்கான அதிகாரம் கிடைக்கப்பெறல் மக்களிடையே பயத்தினை ஏற்படுத்தப் பிரயோகிக்கப்படும் மற்றைய விடயமாகும். "பொலிஸின் ஆயுதப் பயங்கரவாதம்" ஒன்பது மாகாணங்களுக்கும் பொதுவானவையாகும். ஆயினும் அது வடக்கிலும் கிழக்கிலும் சட்டத்தினையும் மீறி அமுலாக்கப்படுகிறது. ஆயினும் மாகாண சபையொன்றின் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பான அனைத்துப் பிரமாணங்களும் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினாலேயே வகுக்கப்படுகின்றன.

ஒன்பதாம் உப அட்டவணையின் 1 ஆவது பின்னிணைப்பில் மாகாணப் பொலிஸின் ஆயுதங்கள் தொடர்பாக இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"தேசிய பிரிவிற்கான சுடுகலன்கள், வெடிப் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் தன்மை, அளவு என்பன தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படல் வேண்டும். மாகாணப் பிரிவுக்கான அப்பொருட்கள் மாகாண பொலிஸ் ஆணைக் குழுவிடம் வினவப்பட்டு தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் முறையாக இடம்பெறுமாயின் "ஆயுத பலம்" மங்கிப் போன ஒரு பயமாகும். 1 ஆம் பின்னிணைப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது

"ஏதேனுமொரு மாவட்டத்தில் தேசியப் பிரிவு அலகுகளில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் நிருவாகத்தின் கீழ் செயற்படல் வேண்டும். இருப்பினும் அவசர நிலைமையின் கீழ் ஜனாதிபதி அதிகாரங்களைத் தனதாக்கிக் கொள்ளலாம். தேசியப் பிரிவு அலகுகளின் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே கலைக்கப்படாவிடின் 30 நாட்களுக்குள் செயல்வலுப் பெறல் இடை நிறுத்தப்படும்"

இதற்கு மேலதிகமாக அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஐ உறுப்புரையின் மூலம் இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. "நிருவாகம் செயலிழத்தல்" எனும் நிலையில் : (1) அவ்வாறு ஏதேனுமொரு மாவட்டத்தில் நிருவாகம் செயலிழந்துள்ளதாக ஆளுநரின் மூலமோ அல்லது வேறு வகையில் ஜனாதிபதிக்குத் தெரியவரின்

(1) அ) அதன் அனைத்து அதிகாரங்களையும் அல்லது ஒரு பகுதியை தனதாக்கிக் கொள்ளலாம்.

ஆ) பாராளுமன்றத்தின் கீழ் கொண்டு வரலாம்.

இ) அதற்காக ஏனைய கட்டளைகளை இட முடியும்.

ஆயினும் நீதிமன்றமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஓர் அதிகாரத்தை அவ்வாறு செய்ய முடியாது.

(2) பின்னர் அவ் ஆணைகளை அகற்றுதல் அல்லது மாற்றுதல் மேற்கொள்ளப்படல் முடியும்

(3) அவ் அனைத்து பிரகடனங்களும் 14 நாட்களுக்குள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாவிடின் தன்னிச்சையாகவே செயலிழக்கும்

(4) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டாலும் அது இரண்டு மாதங்களில் முடிவுக்கு வரும்.

மேற்குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கைகள் முறையாக இடம்பெறாவிடின் அச்சம் உருவாகலாம்.

**காணி அதிகாரங்கள்**

மாகாண சபையொன்றின் காணி விடயமானது மாகாண சபைப் பட்டியலின் (18) 11ஆம் பின்னிணைப்பு என புறம்பாக விவரிக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு:

காணி மற்றும் காணிகளில் குடியமர்த்துதல் : அரச காணிகள் குடியரசுக்கு சொந்தமாக காணப்படுகிறது. அரசியலமைப்பின் 33 (ஈ) உறுப்புரைக்கு ஏற்பவும் எழுதப்பட்ட சட்டத்திற்கு ஏற்பவும் ஜனாதிபதிக்கு காணிகளை விடுவிக்கலாம்.

கீழ் குறிப்பிடப்பட்டவாறு காணி, மாகாண சபைக்குட்பட்ட ஒரு விடயமாகும். அரச காணிகள் ஒதுக்கிய அல்லது ஒருங்கியை நிரல் விடயமாக அரசாங்கத்தின் தேவைகளுக்காக மாகாண சபையிடம் வினவப்பட்டு அரச காணிகள் அரசாங்கத்தினால் பயன்படுத்தப்பட முடியும்.

மாகாண சபைகளுக்குத் தேவையான காணிகளை நியதிச் சட்டங்களுக்கு ஏற்ப பயன்படுத்துதல் வேண்டும்.

மாகாண சபைகளுக்குத் தேவையான காணிகள் வழங்கப்படல் வேண்டும்.

மாகாண சபைகள் அக் காணிகளை நியதிச் சட்டங்களுக்கு ஏற்ப பயன்படுத்துதல் வேண்டும்.

மாகாணத்தின் காணிக் கையகப்படுத்தல் மாகாண சபையின் ஆலோசனையின் கீழ் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2. மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்தி நடவடிக்கைகள்

மேற்படி கருத்திட்டங்கள் - அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் ஆற்று நீரைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்பில் அரசாங்கத்திடம் பொறுப்பு ஒப்படைக்கப்படும்.

கொள்கைகளுக்குப் பொருந்துகின்ற நியமத் தரங்களை மாகாண சபையிடம் வினவி அரசாங்கம் தீர்மானிக்கும்.

காணித் துண்டுகளைப் பெற்றுக் கொள்பவர்களைத் தெரிவு செய்யும் முறைமைகள் குறிப்பிடப்பட்டவாறு அமைதல் வேண்டும்.

கருத்திட்டங்களின் காணிப் பகிர்வு இன விகிதாசாரத்திற்கு ஏற்ப அமைதல் வேண்டும். தனது பங்கினைப் பெற்றுக் கொள்ளாத நபர்கள் ஏனைய கருத்திட்டங்களிலிருந்து காணிகளைப் பெற்றுக்கொள்ள உரித்துடையோராவர். அவ்வந்த கருத்திட்டங்களில் காணித்துண்டுகள் பகிரப்படல் சனத்தொகைப் பரம்பல் வடிவம் மாற்றமடையாதவாறு அமைதல் வேண்டும்.

கருத்திட்ட நிருவாகம் மற்றும் முகாமை என்பன அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3. தேசிய காணி ஆணைக்குழு

தேசிய காணி ஆணைக்குழுவில் மாகாண சபைப் பிரதிநிதிகள் அங்கம் வகித்தல் வேண்டும். தொழிநுட்ப செயலகமொன்று காணப்படல் வேண்டும்.

காணிப் பாவனை தொடர்பான தேசிய கொள்கை தொழில்நுட்ப காரணிகளினடிப்படையில் அமைதல் வேண்டும்.

காணி ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட தேசியக் கொள்கை தொடர்பான முறையான அவதானத்துடன் மாகாண சபை அதிகாரங்களை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

**"தேசிய பிரிவிற்கான சுடுகலன்கள், வெடிப் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் தன்மை, அளவு என்பன தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படல் வேண்டும். மாகாணப் பிரிவுக்கான அப்பொருட்கள் மாகாண பொலிஸ் ஆணைக் குழுவிடம் வினவப்பட்டு தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.**

**இந்திய அரசியல் மற்றும் மாகாண சபைகளின் உள்ளடக்கம் என்று பார்க்கையில் அது ஒரு மூட நம்பிக்கையாகும். இலங்கைக்குள் தனி நாடொன்று உருவாவதைத் தடுப்பதே இந்தியாவின் அரசியலாக காணப்பட்டது. மாகாண சபையின் உள்ளடக்கமானது இந்தியாவினால் உருவாக்கப்பட்ட ஒன்றல்ல.**

மேற்குறிப்பிடப்பட்ட மாகாண காணிப் பாவனை தொடர்பான கொள்கைகளின் நியமங்கள் மற்றும் பாவனைகள் உரியவாறு இடம்பெறுவதிலுள்ள தவறு யாது ? அது அவ்வாறு இடம்பெறுவதற்கு **தேசிய காணிக் கொள்கையொன்று இருத்தல் வேண்டும். அவ்வாறான ஒன்று 1948 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இல்லை. அமைச்சர்களுக்கும் அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அதிகாரம் படைத்தவர்களுக்கும். அவர்களது ஆதரவாளர்களுக்கும் தாம் நினைத்தவாறு காணிகளைப் பயன்படுத்தப்படுகின்றன. சுவீகரித்துக்கொள்ள முடியும். தற்போது கூட வடக்கில் காணிகள் அவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன. மேற்குறிப்பிடப்பட்ட ஜனநாயகவாதத் தரங்களுக்கமைய அவை இடம்பெறத் துவங்குமாயின் நினைத்த இடங்களிலெல்லாம் உல்லாசப் பயண விடுதிகள், வணிக நிலையங்கள் என்பவற்றை உருவாக்க முடியாது. சட்டத்திற்கமைய மேற்கொள்ளப்படல் வேண்டும்**. காணி அதிகாரங்களுக்கு எதிரானவர்கள் மத்தியில் தமக்கு ஏதோவொன்று கிடைக்காமல் போகும் என்ற பயம் அல்லது தமக்குக் கிடைக்காத ஒன்று தமிழ் மக்களுக்கு கிடைக்கிறது என்ற பொறாமையே காணப்படுகிறது. அதற்குப் புறம்பாக பலர் இனவாத நியமங்களுக்கமைய தமிழ் மக்களுக்கு அவ்வாறானதொரு வசதி இருக்கக் கூடாது என நினைப்பதாகும். நடைமுறையில் இம் மனோ நிலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தானா 27 ஆண்டுகள் தொடர்ந்த நாசகார யுத்தத்திற்கு தேவைப்பட்ட ஒரு பிரபாகரன் உருவாகினார்? தொடர்ந்தும் வினை விதைத்தால் வினையும் தினை விதைத்தால் திணையும் கிடைப்பது உறுதியாகும்.

**மாகாண சபை முறைமை இந்தியாவினால் இலங்கை மீது பலவந்தமாக சுமத்தப்பட்டதொன்றா?**

மேலோட்டமாகப் பார்த்தால் அது அவ்வாறு தான். ஆயினும் இந்திய அரசியல் மற்றும் மாகாண சபைகளின் உள்ளடக்கம் என்று பார்க்கையில் அது ஒரு மூட நம்பிக்கையாகும். இலங்கைக்குள் தனி நாடொன்று உருவாவதைத் தடுப்பதே இந்தியாவின் அரசியலாக காணப்பட்டது. மாகாண சபையின் உள்ளடக்கமானது இந்தியாவினால் உருவாக்கப்பட்ட ஒன்றல்ல. அது உலகில் பெருமளவிலான மக்களை நிருவகிக்கும் அதிகாரத்தைப் பகிர்வதன் மூலம் நிருவாகம் செய்யும் முறைமைக்கு ஏற்ப இலங்கையின் அரசியல்வாதிகளினால் நீண்டகாலமாக விருத்தி செய்யப்பட்ட ஒன்றாகும். ஆரம்பத்தில் திரு. பண்டாரநாயக்கா 1926 இலும் மலையகப் பிரபுக்கள் 1927 இலும் இக்கருத்தினைக் கூறியிருந்தனர். 1957ஆம் ஆண்டு டட்லி செல்வநாயகம் ஒப்பந்தத்தினதும் உள்ளடக்கமும் அதுவாகவே காணப்பட்டது. நீண்டகாலமாக நிலவி வந்த கருத்தினை செயற்படுத்துவதற்கு இந்தியா பலவந்தத்தைப் பிரயோகித்தது. ஜனநாயக ரீதியான அக் கருத்தினை அமுல்படுத்தாமையே பலவந்தத்திற்கு அடிப்படையாக அமைந்தது. அதிலுள்ள தவறு யாதெனில் பலவந்தமேயன்றி உள்ளடக்கம் அல்ல. தொடர்ந்தும் அக் கருத்தினை அமுல்படுத்தாது விடுவதனால் அப்பலவந்தம் வேறு ஒரு விதத்திலாவது இடம்பெறுவது உறுதி. அன்று இந்தியா மாத்திரமே அதில் தலையிட்டது. இன்று உலகின் பல நாடுகள் அதைச் செயற்படுத்தும் நிலை வரை முன்னேற்றமடையச் செய்தது தற்போதைய அரசாங்கமாகும். அன்று பிரபாகரன் கூறியவையே அதன் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பிரசித்தி பெற்ற வெளியீட்டில் (2003) அது பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“தமிழ் சிங்கள மக்களுக்கிடையிலான உறவின் வரலாறு மீறப்பட்ட வாக்குறுதிகளினாலும், காலத்திற்குக் காலம் ஆட்சி செய்த இலங்கை அரசாங்கங்களுக்கும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்குமிடையில் கலப்பற்ற விதத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் ஒரு தலைப்பட்சமாக மீறப்பட்ட சம்பவங்களினால் நிறைந்தது தொடர்பான புரிதல்களினாலும்,

ஒன்றன் பின் ஒன்றாக அதிகார பீடமேறிய இலங்கையின் அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு எதிரான ஓரங்காட்டல், அரச வன்முறை, அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்ட வன்முறை என்பவற்றை அமுல்படுத்தியமையை மனதில் இருத்தியும்”

இன்றும் கூட மேலே குறிப்பிட்ட அதே விடயத்தைத் தானா அமுல்படுத்துகிறார்கள்? தொடர்ச்சியாக ராஜதந்திர தீர்வொன்றுக்குப் பதிலாக இனங்களுக்கிடையே நம்பிக்கையின்மை, முரண்பாடுகள் என்பவற்றை வளர்த்தல் மற்றும் அக் கருத்துக்கள், செயற்பாடுகள் என்பவற்றை சட்டமாக்குதல் மாத்திரமே செயற்படுத்தப்படுகிறது. "13வது திருத்தம் தேவையற்றது" என்று கூறுபவர்கள் இனங்களுக்கிடையே ஒற்றுமையினையும் நல்லிணக்கத்தினையும் ஏற்படுத்துவதற்கு யுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் பற்றி எதுவும் கூறவில்லை.

**நடைபெறக்கூடியது எது?**

அன்று இலங்கைக்குள்ளேயே தீர்த்து வைக்க முடியுமாயிருந்த பிரச்சினை இன்று சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது. அன்று பிரபாகரன் உட்பட எல்.ரீ.ரீ.ஈ மட்டும் பாடுபட்ட நோக்கத்திற்காக இன்று சர்வதேச தலையீடு வரை வளர்ந்துள்ளது. ஆகவே அன்று ஆயுதப் போராட்டத்தின் மூலம் தீர்க்க முடியுமென்று பிழையாக முன்னெடுத்த செயற்பாடு, சரியான முறையில் ஒடுக்கப்பட்டது. இன்று பிழையான செயற்பாடு புறந்தள்ளப்பட்டு அன்றைய நோக்கம் மாத்திரம் சர்வதேசமயமாகியுள்ளது. அரசாங்கம், ஸ்ரீ.ல.சு.க. ஜே.வி.பி (ம.வி.மு) உள்ளிட்ட இனவாதிகளின் பதில் குறிகள் மற்றும் சிந்தனைகள் என்பவற்றின் காரணமாக அந் நோக்கத்திற்கு உலக அளவில் பலம் கிடைக்கப் பெற்று யுத்தமொன்று இன்றியே நாட்டைப் பிரித்துக்கொடுக்கும் நிலைமை உருவாகி வருகிறது. புலி மந்திரத்தை ஜெபித்தவாறு நாட்டில் அடக்கு முறையினை முன்னெடுப்பதன் மூலம் சர்வதேச அழுத்தங்களை ஒழிக்க முடியாது. உண்மையில் மேற்குறிப்பிடப்பட்ட அரசியல் வாதிகளே நாட்டைப் பிரிக்கின்றனர்.

**தற்போதைய நிலைமையினைப் பற்றி அரசாங்கம் மோப்பம் பிடித்துள்ளதென்பது தெளிவாகிறது. ஆகவே தாமதித்தாவது ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்வது சிறந்ததாகும். அதாவது கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையில் இணைக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தினுள் மேலும் 50 பரிந்துரைகளை சேர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டமை பொருத்தமான ஒரு நடவடிக்கையாகும். அதற்கமைய திருகோணமலையில் 5 மாணவர்கள் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக எட்டுப் பேர் கைது செய்யப்பட்டனர் என கூறப்பட்டது. அது மற்றுமோர் போலி நாடகமல்ல வெனின் அது நாட்டுக்கு நன்மையாகும். 13 ஏ தொடர்பான "அவசர வரைவு" பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படாமையின் மூலம் வெட்கப்பட்டாவது ஒரு அடி பின் வாங்கப்பட்டுள்ளது.**

எவ்வாறாயினும் பொலிஸ் அதிகாரங்களை வழங்காமைக்கான காரணத்தை அரசாங்கம் கட்டாயம் சமர்ப்பிக்கும். பொலிஸ் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளமையினால் அது பாதுகாப்பு விடயத்தின் கீழ் மத்திய அரசுக்குரியதொன்றாகும் எனக் கூறலாம்.

எதைக் கூறினாலும் செய்தாலும் நல்லிணக்கமின்றி நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது. நல்லிணக்கத்திற்காக பல நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அதற்கான மிகச் சிறந்த உதாரணமொன்றை தென்னாபிரிக்காவிலிருந்து எடுக்கலாம். அதாவது, 27 ஆண்டுகள் வெள்ளையரின் ஆட்சியின் மூலம் சிறையிடப்பட்டிருந்த நெல்சன் மண்டேலா சர்வதேச அழுத்தத்தின் காரணமாக விடுதலை பெற்றதன் பின்னர் முதலாவது தென்னாபிரிக்கா அரசாங்கம் அமைக்கப்பட்டது. அம் முக்கியமான சந்தர்ப்பத்தில் அவசரமாக இயற்றப்பட்ட இரண்டு தேசிய கீதங்கள் இசைக்கப்பட்டமையானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும். ஒன்று ஆங்கில மொழியில் வெள்ளை மனிதர்களினால் இசைக்கப்பட்டது. மற்றையது தேசிய மொழியொன்றில் கறுப்பின மனிதர்களினால் இசைக்கப்பட்டது.

இந்த உன்னத செயற்பாட்டை விட சிறந்த நடவடிக்கையை அச் சந்தர்ப்பத்தில் பிரதிபலித்திருக்க முடியுமா? தேசிய கீதத்தைப் பற்றி இதுவரை எமக்கு சரியானதொரு கருத்து கிடையாது. இனவாதிகள் "தேசிய கீதத்தைக்" கூட இனவாத கீதமாக மாற்றியுள்ளனர்.

**எதைக் கூறினாலும் செய்தாலும் நல்லிணக்கமின்றி நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது. நல்லிணக்கத்திற்காக பல நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அதற்கான மிகச் சிறந்த உதாரணமொன்றை தென்னாபிரிக்காவிலிருந்து எடுக்கலாம். பெற்றுக்கொள்ளலாம். அதாவது, 27 ஆண்டுகள் வெள்ளையரின் ஆட்சியின் மூலம் சிறையிடப்பட்டிருந்த நெல்சன் மண்டேலா சர்வதேச அழுத்தத்தின் காரணமாக விடுதலை பெற்றதன் பின்னர் முதலாவது தென்னாபிரிக்கா அரசாங்கம் அமைக்கப்பட்டது. அம் முக்கியமான சந்தர்ப்பத்தில் அவசரமாக இயற்றப்பட்ட இரண்டு தேசிய கீதங்கள் இசைக்கப்பட்டமையானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும். ஒன்று ஆங்கில மொழியில் வெள்ளை மனிதர்களினால் இசைக்கப்பட்டது. மற்றையது தேசிய மொழியொன்றில் கறுப்பின மனிதர்களினால் இசைக்கப்பட்டது.**





இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி அவர்களும் ஜனாதிபதி திரு. ஜே.ஆர் ஜயவர்தன அவர்களும் இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட போது (1987 யூலை 29)

# 13வது திருத்தத்திற்கு கொன்பியுசியஸ்ஸிடமிருந்து ஒரு படிப்பினை

இச் சந்தர்ப்பத்தில் 13வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் பற்றி எழுப்பப்பட்டுள்ள போலியான மற்றும் செயற்கையான வாதத்தைப் பற்றி சிந்திக்கையில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் சீனாவில் வாழ்ந்த தத்துவ ஞானியும் மதத் தலைவருமான கொன்பியுசியெஸ் அவர்களுக்கும் அவரது சீடர்களுக்குமிடையே நடைபெற்ற ஒரு உரையாடல் நினைவிற்கு வருகிறது. குறித்த உரையாடலில் **“ஏன் நாம் மனிதர்கள் ஆகிறோம் ? என்ற கேள்வியை சீடர்கள் அவரிடம் வினவினார்கள். அக்கேள்விக்கான பதிலைக் கூறும் படி கொன்பியுசியஸ் தனது சீடர்களையே பணித்தார். “மொழியொன்றைக் கதைப்பதனாலேயே நாம் மனிதர்களாகுகிறோம்” என ஒரு சீடர் பதிலளித்தார். “நாம் வீடு வாசல்களை நிர்மாணித்து வாகனாதிகளைப் பயன்படுத்துவதனால்” என மற்றுமொருவர் கூறினார். மனிதர்களின் போலியான பாசாங்கின் காரணமாக என இன்னொருவர் கூறினார். அவ்வாறே மனிதரிடத்தில் நிலவும் பொறாமை, வஞ்சகம், இறுமாப்பு, பொய்மை மற்றும் பேராசை என்பவற்றின் காரணமாகவே நாம் மனிதர்களாகுகிறோம் என இன்னும் சிலர் கூறினார்கள். இவைகளொன்றுமல்ல என கொன்பியுசியஸ் கூறிய போது அக் கேள்விக்கான பதிலை அவரிடமே சீடர்கள் கேட்டனர். நீங்கள் கேட்டது பிழையான கேள்வியாகும். என அவர் கூறினார். என்ன காரணங்களினால் மனிதர்களாகுகிறார்கள் என விளங்க வேண்டுமாயின் நாம் ஏன் மனிதத்தன்மையற்றவர்களாக இருக்கிறோம்? என்றே கேள்வியையே கேட்டிருக்க வேண்டும். எனக் கூறினார்.**

**பேராசிரியர் ஜயந்த செனவிரத்ன**



**தம்மிடமிருந்து திருடப்பட்ட அந்த சுய கௌரவத்தை மீண்டும் திருப்பித் தருமாறு தமிழ் மக்கள் கோருகின்றனர் என்பதே இவ் உரையாடலிருந்து தெளிவாகிறது. திருடப்பட்ட அவ் அபிமானத்தைத் திருப்பிப் பெற்றுத் தருமாறு தமிழ் மக்கள் கோருகின்றனர். யார் அதனைத் திருடினொர்கள்? அது மீண்டும் வினவப்பட வேண்டிய ஒரு கேள்வி அல்ல என்பதை நான் அறிவேன். மனச்சாட்சியுள்ள எவராலும் அதனைப் புரிந்துகொள்ள முடியும். தமிழ் மக்களின் பௌதீக ரீதியான நல்லிருப்பு என்பது ஏதோ ஒரு வகையில் உயிரைப் பாதுகாத்து வாழ்வது அல்லவெனினும் வடக்கு மக்கள் அவ்வாறு வாழ்வதற்கு வற்புறுத்தப்பட்டுள்ளனர்.**

**13வது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டு மையப்படுத்தப்பட்ட ஆட்சியில் அதிகாரப் பகிர்வு அம்சம் சேர்க்கப்பட்ட போது, பரஸ்பர விரோதத் தன்மையொன்று காணப்பட்ட போதும் இலங்கை அரசியலுக்கு அது ஒரு புதிய அனுபவமாகக் காணப்பட்டது.**

சுய கௌரவம் (Dignity) இன்னொருவரிடமிருந்து திருடப்படும் போதே நாம் மனிதத் தன்மையற்றவர்களாக மாறுகின்றோம் என அவ்வுரையாடலின் போது கொன்பியுசியஸ் விளக்கினார்கள். ஒருவரது அபிமானத்தைத் திருடுவதென்பது மனிதத்தன்மையினைத் திருடுவதாகும். தனிமனித அபிமானத்தின் இரண்டு பக்கங்கள் உள்ளன. பௌதீக ரீதியான நல்லிருப்பும் ஆன்மீக ரீதியான நல்லிருப்புமே அவையாகும். பௌதீக நல்லிருப்பு என்பது ஒருவரது வாழ்வைக் கொண்டு செல்வதற்குத் தேவையான அடிப்படைத் தேவைகளாகும். அதாவது உணவு வகைகள், வீடுவாசல் மற்றும் பாதுகாப்பு என்பனவாகும். ஆன்மீக நல்லிருப்பு என்பது தான் விரும்பும் ஒரு மதத்தைப் பின்பற்றுவதற்கும் கலாசாரத்தைப் பின்பற்றுவதற்கும் உள்ள உரிமையினை அனுபவிக்கும் சுதந்திரம் மற்றும் சிந்தனைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பனவாகும்.

தம்மிடமிருந்து திருடப்பட்ட அந்த சுய கௌரவத்தை மீண்டும் திருப்பித் தருமாறு தமிழ் மக்கள் கோருகின்றனர் என்பதே இவ் உரையாடலிருந்து தெளிவாகிறது. திருடப்பட்ட அவ் அபிமானத்தைத் திருப்பிப் பெற்றுத் தருமாறு தமிழ் மக்கள் கோருகின்றனர். யார் அதனைத் திருடினொர்கள்? அது மீண்டும் வினவப்பட வேண்டிய ஒரு கேள்வி அல்ல என்பதை நான் அறிவேன். மனச்சாட்சியுள்ள எவராலும் அதனைப் புரிந்துகொள்ள முடியும். தமிழ் மக்களின் பௌதீக ரீதியான நல்லிருப்பு என்பது ஏதோ ஒரு வகையில் உயிரைப் பாதுகாத்து வாழ்வது அல்லவெனிலும் வடக்கு மக்கள் அவ்வாறு வாழ்வதற்கு வற்புறுத்தப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும் தமது ஆன்மீக ரீதியான நல்லிருப்பினை எப்படியாவது பாதுகாப்பதற்காக முடிவே இல்லாத போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். "நாம் அனைவரும் எத்தகையவொரு பாதாளத்தில் விழுந்த போதும் ஒரு சிலர் வானத்து நட்சத்திரங்களை பார்த்த வண்ணமிருப்பார்கள்" என ஒஸ்கா வைட்ஸ் கூறியுள்ளார். (We are all in the gutters, some of us are looking at the stars) மனிதர்கள் வசமுள்ள எவராலும் தடுக்க முடியாத சிந்திப்பதற்கும் கனவு காண்பதற்குமுள்ள சக்தியைப் பற்றியே அவர் அவ்வாறு கூறியிருக்கலாம். ஆகக் குறைந்தது வளமான எதிர்காலமொன்றை எதிர்பார்க்க முடியுமாயின் உடல் ரீதியாகவும், மனோரீதியாகவும் இன்று அனுபவிக்க நேர்ந்துள்ள துன்பங்களை ஒருவரால் பொறுத்துக் கொள்ள முடியும். ஆயினும் வடக்கின் தமிழ் மக்களுக்கு அவ்வாறு செய்யக்கூடிய ஒரு நிலைமை காணப்படுமாயின் ஆகக் குறைந்தது அது 13வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் அமுலாவது மாத்திரமே ஆகும்.

**1987 ஆம் ஆண்டில் இரண்டாவது குடியரசு அரசியலமைப்புச் சட்டத்திற்கு 13வது திருத்தம் கொண்டுவரப்பட்ட போது தமிழ் மக்களின் பௌதீக மற்றும் ஆன்மீக நல்லிருப்பு என்பவற்றுக்காக மேற்கொள்ளக் கூடியதாகவிருந்த "அரசியல் தீர்வு" அதுவாகக் காணப்பட்டதனாலேயே நாம் அதற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கினோம். அத் திருத்தத்தில் எவ்வளவு தான் குறைபாடுகள் காணப்பட்ட போதும் அது இனப் பிரச்சினைத் தீர்வுக்காக மேற்கொள்ளக்கூடியதாக இருந்த தைரியமானதும் சாதகமானதுமான ஒரு நடவடிக்கையாக இருந்ததனால் அதனை ஆதரித்தோம். இந்தியாவின் தேவையின் நிமித்தம் அத் தீர்வு கொண்டுவரப்பட்டது என்பதில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. இலங்கை அரசியல்வாதிகளினால் இப் பிரச்சினைக்கு தமக்கே உரித்தான முறையில் தீர்வொன்றை வழங்க இயலாமையின் பின்னணியில் அவ்வாறான ஒரு தலையீட்டின் மூலமாகவேனும் தீர்வொன்றும் கிடைக்கப்பெறல் என்னைப் பொறுத்தமட்டில் மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும். அது மட்டுமன்றி இத்தலையீட்டின் காரணமாகவே இப்பிரச்சினை தொடர்பாக வேறு விதமாக சிந்திக்கவும் செயற்படவும் எமது நாட்டு அரசியல்வாதிகளுக்கு மட்டுமன்றி மக்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மனிதர்களின் உரிமைகள் தொடர்பாக இவ்வாறான ஒரு பிரச்சினைக்கு சர்வதேசத்தின் அழுத்தமின்றி அரசியல் தீர்வொன்றைப் பெற்றுத் தந்த எந்தவொரு நாடும் உலகத்தில் இல்லை. அது இன்றும் கூட செல்லுபடியான ஒரு காரணியாகும்.** பெரிதும் மையப்படுத்தப்பட்டதும் சர்வாதிகார ஆட்சிக்குப் பாதையமைக்க வழிவகுப்பதுமான சக்திவாய்ந்த ஜனாதிபதியைக் கொண்ட ஒரு அரசியலமைப்புக் கட்டமைப்பிற்குள் 13வது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டு மையப்படுத்தப்பட்ட ஆட்சியில் அதிகாரப் பகிர்வு அம்சம் சேர்க்கப்பட்ட போது, பரஸ்பர விரோதத் தன்மையொன்று காணப்பட்ட போதும் இலங்கை அரசியலுக்கு அது ஒரு புதிய அனுபவமாகக் காணப்பட்டது. அத் திருத்தத்தின் பின்னர் பதவிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களும் அதிகாரப் பகிர்வு மற்றும் தமிழ் மக்களை அடக்குவதற்குத் தேவையான பலம் பொருந்திய ஆயுதமாக ஒருங்கியை பட்டியலையே பயன்படுத்தியது என்பதை நாம் அறிவோம். இவ் அரசாங்கம் அதிகாரப் பகிர்வை ஏற்றுக்கொள்ளாத ஒரு அரசாங்கமாகும். ஆகவே மாகாண விடயங்களோ அல்லது இணைந்த விடயங்களோ அவர்களுக்கு 13வது திருத்தத்தை அமுல்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்துவதற்கு அன்று பிரேமதாச அரசாங்கம் பின்பற்றிய அரசியல் உபாயங்களை விடவும் பாரதூரமான விதத்தில் திருத்தத்தின் உள்ளடக்கத்தின்

சட்ட ரீதியான கட்டமைப்பினால் பயனடைய தற்போதைய அரசாங்கம் திறமை பெற்றுள்ளது என்பதனை நாம் அறிவோம். அதுமட்டுமன்றி அதிகாரத்தைப் பகிர்தல் என்பது நாகரீகமான ஒரு அரசியல் செயற்பாடு என சமூகமயப்படுத்தப்பட்ட கலாசாரத்தை பின்னோக்கி நகர்த்தி அதனை ஒரு தகாத வார்த்தையாக சமூகமயப்படுத்தும் ஒரு முயற்சியிலும் அரசாங்கம் இறங்கியுள்ளது. அதுமட்டுமன்றி பிரேமதாச வடிவில் அமைந்த இந்திய எதிர்ப்பினைத் தோற்றுவிக்கும் செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச் செயற்திட்டங்களுள் மல்வத்து அஸ்கிரி தேரர்களும் சிக்கிக் கொண்டுள்ளமை பெரிதும் கவலைக்குரிய விடயமாகும். அன்று பிரேமதாசவின் இந்திய எதிர்ப்பின் முன்னே பிராந்தியத்தில் அதன் உதவிக்கு பாக்கிஸ்தான் மட்டுமே இருந்த போதும் தற்போதைய அரசாங்கம் அதற்கு சீனாவையும் இணைத்துக்கொண்டுள்ளது.

சுதந்திரமடைந்த நாள் முதல் இன்று வரை பதவி வகித்த அரசாங்கங்கள் நிறைவேற்று அதிகாரத்தைப் பலப்படுத்துவதற்கே செயற்பட்டனவே நிறைவேற்று அதிகாரத்தைப் பகிரும் நேர்மையான முயற்சியை மேற்கொள்ள வில்லையென்பதை பிரத்தியேகமாகக் குறிப்பிட வேண்டியதில்லை. பாராளுமன்றத்தின் இறைமை காணப்பட்ட காலத்திலும் நிறைவேற்று அதிகாரத்தைப் பலப்படுத்தும் உபாயங்களில் ஈடுபட்டதுடன் 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு அதன் உச்சக் கட்டமாகக் காணப்பட்டது. ஆயினும் 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பிற்கு நிறைவேற்று ஜனாதிபதிப் பதவி முறை அறிமுகப்படுத்தப்படல் மற்றும் 1978 இன் 13 ஆவது திருத்தம் என்பவற்றினைத் தொடர்ந்து பாராளுமன்ற இறைமை என்ற கோட்பாடு இல்லாதொழிந்தது. அவ்வாறே அரசியலமைப்பிற்குச் சேர்க்கப்பட்ட 18ஆவது திருத்தத்தைத் தொடர்ந்து நிறைவேற்று அதிகாரம் உச்சிக்கே சென்றுவிட்டதனை எடுத்துக்காட்டியது. பாராளுமன்றம் இன்று நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு கேலிக்கூத்து ஆகும். இவ்வாறான ஒரு நிலைமையிலும் கூட **13வது திருத்தம் என்பது இன்றும் சிறுபான்மையினருக்கு இருக்கின்ற அரசியலமைப்பிற்கு அமைவான ஒரேயொரு பாதுகாப்பாகும். பிரதேச சுயாட்சிக்கான தமிழ் மக்களின் கோரிக்கையினைத் திருப்திப்படுத்த மிகக் குறைந்தளவு சாத்தியத்தினையே அது கொண்டுள்ள போதும் தற்போதைய சூழ்நிலையில் அவர்களது பௌதீக மற்றும் ஆன்மீக நல்லிருப்பிற்கு ஓரளவேனும் வழிவகுக்கின்ற தீர்வு அதுவாகும்.**
அத் திருத்தம் அரசியலமைப்பிலிருந்து அகற்றப்படுமாயின் சிங்கள - பௌத்த இன ரீதியான ஆதிக்கத்தினை உச்சத்திற்கே எடுத்துச் செல்வதே இடம்பெறும். அந்த இனரீதியான ஆதிக்கமே நாட்டினை யுத்தமொன்றிற்கு இட்டுச் சென்றது என்பதனை சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. அதனால் உருவாகிய யுத்தத்தின் காரணமாக சமூகத்தில் விதைக்கப்பட்ட மிலேச்சத்தனத்திலிருந்து மக்கள் விடுபட முடியாமல் உள்ளது. வடக்கு மக்கள் இன்று சொல்லொனாத் துன்பங்களில் சிக்கித் தவிக்கின்றனர். அவர்களது பொருளதார சமூக மற்றும் உளரீதியான பாதிப்புக்கள் இவ்வளவுதான் எனக் குறிப்பிட்டுக் கூற முடியாது. இதனைத் தொடர்ந்து இலங்கையின் மக்கள் சமூகம் பண்பாட்டு ரீதியில் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றமை மிகப் பயங்கரமான ஒரு நிலைமையாகும். போருக்குப் பின்னரான சமூகத்தில் விசேடமாக அரசாங்கத்திற்கு யுத்த எதிர்ப்பொன்று இல்லாத ஒரு சூழ்நிலையில் அனைத்து இனங்களையும் ஒற்றுமைப்படுத்தி அவர்கள் அனைவரும் விரும்புகின்றவாறு அரசியல் வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சி மேற்கொள்ளல் வேண்டும். இச் சந்தர்ப்பத்தில் 13வது திருத்தத்தைப் பூரணமாக அமுல்படுத்துவதன் மூலம் மட்டுமே அரசாங்கம் தமிழ் மக்களின் மனதினை ஓரளவுக்கேனும் மீண்டும் கவர்ந்துகொள்ள முடியும். அவர்கள் கேட்பதும் அதுவே. அத் திருத்தத்தினை மாற்றியமைக்க (குறைக்க) முயற்சிப்பதென்பது மீண்டும் நாடு இருண்ட எதிர்காலத்தை நோக்கிப் பயணம் செய்வதாகும். அத் திருத்தத்தை இல்லாதொழிப்பது மீண்டும் பிரிவினைவாதிகளின் அபிலாசைகளுக்கு வாய்ப்பளிப்பதாகும். கொன்பியுசியஸ் அவர்களது வார்த்தைகளில் கூறுவதாயின் ஒரு நாட்டில் வாழும் அனைவரதும் நம்பிக்கை ஆட்சியாளருக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரமே அங்கு உறுதியான நிலைமை ஏற்படும். அவ்வாறான ஒரு நம்பிக்கை கிடைக்கப்பெறும் பட்சத்தில் பிராந்திய ரீதியிலும் பயமுறுத்தல்கள் எதுவுமின்றி நாட்டை நிர்வகிக்கலாம். மக்களுக்கு "சுதந்திரம்" வழங்குகின்ற போதே நம்பிக்கையினைக் கட்டியெழுப்பலாம். சுதந்திரமானது இராணுவத்தினால் நிருவகிக்கப்படுகின்ற ஒரு சமூகத்தில் மக்கள் பயம், பீதி என்பவற்றுடனேயே இரு வகையான இராணுவ அடக்குமுறைக்குட்பட்டிருந்ததை மறக்க முடியாது. அதனை முடிவுக்கு கொண்டு வர வேண்டிய காலம் உருவாகியுள்ளது. அவர்களது பௌதீக மற்றும் ஆன்மீக தற்றுணிபு என்பன மீண்டும் வழங்கப்படல் வேண்டும். அது அரசாங்கத்தின் முற்றுமுழுதான நல்லிருப்பிற்கு காரணமாயமையும். 13 ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை பூரணமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் அதனைச் செய்ய முடியுமென எண்ணுகிறேன்.

**13வது திருத்தத்தை அமுல்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்துவதற்கு அன்று பிரேமதாச அரசாங்கம் பின்பற்றிய அரசியல் உபாயங்களை விடவும் பாரதூரமான விதத்தில் திருத்தத்தின் உள்ளடக்கத்தின் சட்ட ரீதியான கட்டமைப்பினால் பயனடைய தற்போதைய அரசாங்கம் திறமை பெற்றுள்ளது என்பதனை நாம் அறிவோம். அதுமட்டுமன்றி அதிகாரத்தைப் பகிர்தல் என்பது நாகரீகமான ஒரு அரசியல் செயற்பாடு என சமூகமயப்படுத்தப்பட்ட கலாசாரத்தை பின்னோக்கி நகர்த்தி அதனை ஒரு தகாத வார்த்தையாக சமூகமயப்படுத்தும் ஒரு முயற்சியிலும் அரசாங்கம் இறங்கியுள்ளது.**



Photo source: berunews.wordpress.com

# 13வது அரசியல் அமைப்புத் திருத்தமும் கிழக்கு மாகாண முஸ்லிம்களும்

> **கிழக்கு மகாணத்தைத் தவிர்ந்த எந்தவொரு மாகாண சபையிலாவது முஸ்லிம் அமைச்சரொருவரைக் கண்டுகொள்ள முடியாது. ஆகவே முஸ்லிம்களும் மாகாணசபையும் பற்றி ஆராய்வராயின் அது கிழக்கு மாகாணத்தையே முக்கியபத்துவப்படுத்துகின்றதை மறுக்க முடியாது.**



மொஹமட் ஃபஸ்லான்
கொழும்புப் பல்கலைக் கழகம்

13வது அரசியலமைப்புத் திருத்தம்,மாகாண சபை அதிகாரங்கள், மாகாண சபை தேர்தல்கள் இலங்கை அரசியலில் மீண்டும் சூடு பிடிக்கஆரம்பித்துள்ளன. இவ்விதமான காலகட்டத்தில் சிறுபான்மை இனமாகிய முஸ்லிம்களின் மாகாண சபை அரசியல் பற்றி நோக்குவதாகவே இக்கட்டுரை காணப்படுகின்றது. குறிப்பாக இலங்கையிலுள்ள மாகாண சபைகளை எடுத்துக் கொண்டால், கிழக்கு மாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் முஸ்லிம்களுடைய செல்வாக்கு இல்லையென்றே கூறலாம். கிழக்கு மகாணத்தைத் தவிர்ந்த எந்தவொரு மாகாண சபையிலாவது முஸ்லிம் அமைச்சரொருவரைக் கண்டுகொள்ள முடியாது. ஆகவே முஸ்லிம்களும் மாகாண சபையும் பற்றி ஆராய்வராயின் அது கிழக்கு மாகாணத்தையே முக்கியத்துவப்படுத்துகின்றதை மறுக்க முடியாது.

1987.07.29 ஆம் திகதி இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் உருவாக்கப்பட்டது. வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களுக்குஅரசியல் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமை 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் முக்கிய அம்சமாகும். இலங்கை - இந்திய ஒப்பந்தப்படி மாகாண சபைகளை உருவாக்குதல். மாணாகங்களை ஒன்றிணைத்தல்,மாகாண சபைகளுக்கான தேர்தல்கள், கிழக்கு மாகாணத்தில் உத்தேச மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு, அரச கரும மொழிச்சட்டங்கள் போன்ற விடயங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கையில் முஸ்லிம்கள் இரண்டாவது சிறுபான்மையினராக வாழ்கின்றார்கள். இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார் 9% முஸ்லிம்களாவர். கிழக்கு மாகாணத்தில் மொத்த சனத்தொகையில் 32% முஸ்லிம்களாவர். கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டே முஸ்லிம்களுடைய அரசியல் 1988 ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்படுகின்றது. குறிப்பாக அஷ்ரப் தலைமையில் உருவாக்கப்பட்ட முஸ்லிம்களுக்கென்ற தனியானதொரு அரசியல் பிரவேசம், கிழக்கு மாகாணத்தில் இருந்தே தோற்றம் பெற்றது.



**இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார் 9% கிழக்கு மாணத்தில் மொத்த சனத்தொகையில் 32% முஸ்லிம்களாவர். கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டே முஸ்லிம்களுடைய அரசியல் 1988 ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்படுகின்றது. குறிப்பாக அஷ்ரப் தலைமையில் உருவாக்கப்பட்ட முஸ்லிம்களுக்கென்ற தனியானதொரு அரசியல் பிரவேசம், கிழக்கு மாகாணத்தில் இருந்தே தோற்றம் பெற்றது.**

1988 ஆம் ஆண்டு வடமாகாணத்துடன் கிழக்கு மாகாணம் ஒன்றிணைக்கப்பட்டு, வடக்கு கிழக்கு மாகாணத்துக்கான தேர்தல் இடம் பெற்றது. கிழக்கு மாகாணத்தில் 33% பெரும்பான்மையைக் கொண்ட முஸ்லிம்கள் வடக்கு கிழக்கு இணைப்புடன் அரசியல் நிர்க்கதிக்கு ஆளாகினர். இதன் பின்னர் கிழக்கு மாகாணத்தில் ஆங்காங்கே தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே கலவரங்கள் ஏற்பட்டமையும் இந்திய இராணுவம் அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையும் முஸ்லிம்களுக்கு மேலும் ஏமாற்றத்தை அளித்தது.

முஸ்லிம்களைப் பொருத்தமட்டில், அவர்கள் அதிகாரப் பகிர்வில் அதிகளவு ஆர்வம் காட்டாவிட்டாலும், ஆரம்பகால மாகாண சபை முறையானது பெரும் ஏமாற்றத்தையே அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தது. கிழக்கு மாகாணத்ததை தமக்கு ஒரு அரசியல் தளமாக்க வேண்டுமென்ற முஸ்லிம் அரசியல் எதிர்பார்ப்புக்கு, ஜே. ஆர் ஜயவர்தனாவின் நிறைவேற்று அதிகாரம் பெரும் ஏமாற்றத்தை அளித்தது. அதாவது வடக்கு கிழக்கு மாகாணம் ஒன்றிணைந்த தேர்தலில் சிறுபான்மை தமிழ் மக்களின் எதிர்பார்ப்பையும் முஸ்லிம்களின் எதிர்பார்ப்பையும் குழிதோண்டிப் புதைத்தது. இத்தேர்தலினை தமிழீழ விடுதலைபுலிகள் கூட எதிர்த்தனர். இந்திய இராணுவத்தின் அனுசரணைப் பெற்றோரும் ஜே.ஆர். ஜயவர்தன அரசாங்க பிரதிநிதிகளுமே வடக்கு கிழக்கு மாகாண சபையில் நியமிக்கப்பட்டனர்.

**மாகாண சபை ஆரம்பமே முஸ்லிம்களுக்கு ஏமாற்றத்தையே அளித்தது. நாட்டில் பின்னர் ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளினால் வடக்கு கிழக்கு மாகாண சபைகள் இயங்கவில்லை. எவ்வாறாயினும் வடக்கு கிழக்கு தற்காலிக இணைப்பு முஸ்லிம்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் 2006 ஆம் ஆண்டுவரை அமுலில் இருந்தது. 2006 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் வடக்கு கிழக்கு மாகாண சபைகள் தன் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன.**

அதன் பின்னர் 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது கிழக்குமாகாண சபைத் தேர்தலில் 52% வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றது. இத்தேர்தலில் வெற்றி பெற்ற விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளியான சிவநேசத்துறை சந்திரகாந்தன் (பிள்ளையான்) முதலமைச்சராகப் பதவி ஏற்றார். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு தேர்தலில் வெற்றி பெறமுடியாமல் போய்விட்டது. அத்துடன் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட ஹிஸ்புல்லாவின் முதலமைச்சர் கனவும் கைக்கூடவில்லை. எனவே இரண்டாவது தடவையாகவும் முஸ்லிம்கள் மாகாண சபை முறையில் ஏமாற்றம் அடைந்ததை இது எடுத்துக்காட்டுகின்றது.

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7ஆசனங்களைப் பெற்று, 14 ஆசனங்களைப் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து கிழக்கு மாகாண சபை ஆட்சியை அமைத்தது. இதன் போது முதன்முதலாக முஸ்லிம் ஒருவர் கிழக்கு மாகாணசபையில் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக வரவேண்டும் என்ற இலக்கை மையமாக வைத்தே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டது. தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரம், ஹலால் பிரச்சினை முஸ்லிம்களுக்கு எதிரான பொதுபலசேனாவின் நடவடிக்கைகளை மையமாக வைத்து அரசாங்கத்திற்கு எதிராகத் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு மீண்டும் அரசாங்கத்துடன் இணைந்து கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைத்ததானது கிழக்கு மாகாண முஸ்லிம்களை மேலும் ஏமாற்றத்துக்குள்ளாக்கியது. தேர்தல் முடிவில் இலங்கை தமிழரசுக் கட்சி 11ஆசனங்களைபெற்றாலும் ஆட்சி அமைக்கக் கூடிய பலம் அதற்கு இருக்கவில்லை. சிறுபான்மை மக்களின் பலம் கொண்ட கிழக்கு மாகாண சபையை உருவாக்க இருந்த சந்தர்ப்பத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இல்லாதொழித்தது. தங்களுடைய அமைச்சுப் பதவிகளையும் ஏனைய வரப்பிரசாதங்களையும் பாதுகாத்துக் கொள்ளும் சுயநல அரசியலை முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தி இருந்தது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் தற்போதைய கிழக்கு மாகாணசபையில் முஸ்லிம்களுக்கு அமைச்சுப் பொறுப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. இதனால் முஸ்லிம் பிரதேசங்களில் அபிவிருத்தி ஏற்பட ஆரம்பித்துள்ளதை மறுக்க முடியாது. ஆனாலும், கிழக்கு மாகாணசபையின் ஆளுனரின் அதிகாரங்களைக் குறைத்து மதிப்பிடமுடியாது. ஏனெனில் ஜனாதிபதியினுடைய அதிகாரங்களை

நேரடியாக பிரயோகிக்கக்கூடிய ஒருவாராக ஆளுனர் காணப்படுகின்றார். இதனால் தான் கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் தங்களுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் எனஅண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

தற்போது வடமாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் 13 ஆவதுஅரசியல் சீர்த்திருத்தம் பற்றி மீண்டும் பேசப்படுகின்றது. 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொலீஸ், காணி மற்றும் மாகாணங்கள் ஒன்றிணைதல் ஆகியஅதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் அல்லது மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற யோசனை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. ஏனெனில் எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு வெற்றி பெற்றால் இவ் அதிகாரங்கள் சிறுபான்மைத் தமிழ் மக்கள் கைகளில் போய்விடக் கூடாது என சிங்களக் கடும் போக்குக் கட்சிகளும் எதிர்பார்க்கின்றனர். 13ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்திற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இத்தெரிவுக்குழுவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கான பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. ஏனெனில் மு.கா இந்த 13 ஆவது அரசியலமைப்புத்திருத்தத்தை நீக்குவதையிட்டு தங்களது எதிர்ப்பை தெரிவிக்கின்றமையாகும்.

**கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியோர் தமிழ் மக்கள் கோரிய அதிகாரப் பகிர்வு முறையை ஒருபோதும் கோரியதில்லை. விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளின் போது, தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டால் முஸ்லிம்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்ற தொனியிலேயே முஸ்லிம் காங்கிரஸின் அதிகாரப் பரவலாக்கம் பற்றிய போராட்டம் காணப்பட்டதேயொழிய முஸ்லிம்களுக்கென்ற தனியான அதிகாரப் பகிர்வைக் கோரி போராடவில்லை எனலாம். 1990 களில் விடுதலைப் புலிகளினால் கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம்.**

எனினும் இலங்கை வரலாற்றில் முதன்முறையாக, மாகாண சபைகளின் அதிகாரங்கள் குறைக்கப்படுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளமையை, இலங்கைச் சிறுபான்மை மக்களைப் பொறுத்தமட்டில் வரவேற்கத் தக்க விடயமாகும். கிழக்கு மாகாணசபை மூலம் கிழக்கு முஸ்லிம்கள் அனுபவிக்கும் அரசியல் மற்றும் பொருளாதார நன்மைகளை இழந்துவிடக் கூடாது என்பதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நோக்காகும். மாறாக தமிழ் மக்களின் அதிகாரப் பரவலாக்கப் போராட்டத்துக்கு இதனை ஒப்பிட முடியாது. தமிழ் மக்களுடைய அதிகாரப் பரவலாக்கம் பற்றிய போராட்டம் "உளவியல் தேவையாகும்" (psychological need). அதனை இலகுவாகத் தீர்க்க முடியாது. ஆனால் முஸ்லிம்களுடைய அதிகாரப்பரவலாக்கம் பற்றிய போராட்டம் "பொருள்மைய தேவையாகும்" (material need). இதனைச் சில பொருளாதார வளங்களை வழங்குவதன் மூலம் தீர்க்கலாம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஏனைய முஸ்லிம் அரசியல் வாதிகள் பட்டம் பதவிகளுடன் தமது போராட்டங்களை முடக்கிக் கொள்வது இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

13வது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபைமுறையில், குறிப்பாகக் கிழக்கு மாகாண சபையில், 2012 ஆம் ஆண்டிற்குப் பின்னரே முஸ்லிம்கள் உண்மையாக ஆட்சி அதிகாரம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். ஆகவே மாகாண சபை முறையில் அதிகாரங்கள் குறைக்கப்படுவதை கிழக்கை மையமாகக் கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பதில் எவ்விதமான ஆச்சரியமும் இல்லை.



**முஸ்லிம்களைப் பொருத்தமட்டில், அவர்கள் அதிகாரப் பகிர்வில் அதிகளவு ஆர்வம் காட்டாவிட்டாலும், ஆரம்பகால மாகாணசபை முறையானது பெரும் ஏமாற்றத்தையே அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தது. கிழக்கு மாகாணத்ததை தமக்கு ஒரு அரசியல் தளமாக்க வேண்டுமென்ற முஸ்லிம் அரசியல் எதிர்பார்ப்பானது, ஜே. ஆர் ஜயவர்தனாவின் நிறைவேற்று அதிகாரம் பெரும் ஏமாற்றத்தை அளித்தது. அதாவது வடக்கு கிழக்கு மாகாணம் ஒன்றிணைந்த தேர்தலில் சிறுபான்மை தமிழ் மக்களின் எதிர்பார்ப்பையும் முஸ்லிம்களின் எதிர்பார்ப்பையும் குழிதோண்டி புதைத்தது.**



Photo Source: www.lavaplace.com

# தமிழ் சமூகம் இழைத்துள்ள தவறுகள் அதிகம்

“

**13ஆவது திருத்தத்தின் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் அது அறிமுகப்படுத்தப்பட முன்னரும், பின்னரும் எந்தவொரு வேறுபாடுமின்றி மத்திய அரசு குறித்த அதிகாரங்களை பயன்படுத்துவதும், வழங்கப்பட்டிருந்த சில அதிகாரங்கள் கூட மீளவும் பெறப்பட்டுள்ளதென்பதும் மிகத் தெளிவு. அதிகாரங்களை பகிர்ந்து 13ஆவது திருத்தத்தினூடாகவாவது தீர்வினை எதிர்பார்த்த சட்டகமாக அடையாளப்படுத்த முடியாது.**

”

**பேராசிரியர்**
**கீதபொன்கலன்**



13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் இனப்பிரச்சனைக்கு பொருத்தமான அரசியல் தீர்வு வழங்குவதற்கு போதுமான அரசியல் பங்களிப்பு அல்ல.

ஒற்றையாட்சி முறையினுள்ளேயே LLRC பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டியுள்ளது. இந்த ஒற்றையாட்சி முறைமையினுள் சிறுபான்மை இனக்குழுக்களுக்குரிய போதுமானளவு அரசியல் அதிகாரப் பகிர்வை ஒருபோதும் மேற்கொள்ள முடியாது. 13ஆவது திருத்தத்தின் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் அது அறிமுகப்படுத்தப்பட முன்னரும், பின்னரும் எந்தவொரு வேறுபாடுமின்றி மத்திய அரசு குறித்த அதிகாரங்களை பயன்படுத்துவதும், வழங்கப்பட்டிருந்த சில அதிகாரங்கள் கூட மீளவும் பெறப்பட்டுள்ளதென்பதும் மிகத் தெளிவு. அதிகாரங்களை பகிர்ந்து 13ஆவது திருத்தத்தினூடாகவாவது தீர்வினை எதிர்பார்த்த சட்டகமாக அதனை அடையாளப்படுத்த முடியாது. அதிகார பகிர்வு செய்யப்படும் போது இன, மொழி சமூகங்கள் சிறிதாக இருந்தாலும்கூட அவற்றிற்கு அதிகாரங்களை உரியவாறு பகிந்தளிக்க நடவடிக்கை எடுப்பது கவனமெடுக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். தமக்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி தமது அபிவிருத்தித் தேவைகளை அடைந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு சிறுபான்மை இன சமூகத்துக்கு கிடைக்காமை இதிலுள்ள மிக மோசமான குறைபாடாகும்.

**இங்கே மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் விரிவான அதிகாரப் பகிர்வுக்கான வாய்ப்பிருக்கும் போதுகூட அதனை கவனத்திலெடுக்காமல் செயற்படும் போக்கு தென்பகுதி அரசியல் அதிகாரமுள்ளோரிடம் பிரபலமடைந்துள்ளமையாகும். இந்த கருத்தை நாம் உட்பட இன்னும் பலர் எப்போதும் கூறிவந்துள்ளதுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் தனியரசு (Separate State) கோரி போரிட்டுக் கொண்டிருந்தபோது கூட நாம் சமஷ்டி முறைக்காக (Federalism) தொடர்ச்சியாக குரல் கொடுத்தோம்.**

**முடிவடைந்த போரில் சொல்ல முடியாதளவு பாதிப்புக்குள்ளானது தமிழ் சமூகமே. அதற்கமைய அந்த சமூகத்தின் தலைவர்கள் செய்தது சரியா, பிழையா என பார்ப்பதனை விடவும்**



**இந்த நாட்டிலுள்ள அரசியல் பிரச்சினையின் ஓர் யதார்த்தம் என்னவென்றால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் உண்மையான நல்லிணக்கத்தை இந்நாட்டில் நிறுவ முடியாது என்பதாகும். தமது அரசியல் அபிலாசைகள், அபிவிருத்தி வாய்ப்புக்களுடன் இணைந்ததாக இந்த அரசு எதனையும் தமக்கு வழங்காது எனும் முற்தீர்ப்புடனேயே வடக்குத் தமிழர்கள் இருக்கின்றனர்.**

**தவறிழைக்கப்பட்ட இடங்களை சீர்செய்யக்கூடிய புதிய அரசியல் வடிவமே மிகவும் முக்கியமானது. பிரச்சினைகள், வன்முறைகள் நிறைந்த சமூகப் பின்னணியில் அனைவரும் ஈடுபட்ட அரசியல் செயற்பாடுகளின் தவறுகளைக் (Mistakes) கண்டுகொள்ள வேண்டும். இன்னொரு பக்கம் தமது சமூகத்தின் அரசியல் விருப்பங்களை சரியாகப் பயன்படுத்தக்கூடியளவு வாய்ப்பு தமிழ் அரசியல் தலைவர்களுக்கு கிடைத்ததா என்பது சந்தேகத்துக்குரியது. வடக்கு கிழக்கில் முதல் தடவையாக நிறுவப்பட்ட மாகாண சபையில் கூட இருந்த இந்திய அழுத்தம் மற்றும் இலங்கை மத்திய அரசின் உதாசீனம் காரணமாக அதன் பிரதிநிதிகள் எதனையும் செய்யக்கூடிய சூழல் இருக்கவில்லை. அதனால் அதன் முதலமைச்சரான வரதராஜப்பெருமாள் தன்னாட்சி அலகினை பிரகடனப்படுத்தினார். அவர் பிரகடனப்படுத்தியது போன்றே அதனை நியாயப்படுத்தக்கூடிய பின்னணிக்கு அது இடமளிக்கவில்லை. அதனால் உடனடியாக நாட்டைவிட்டு தப்பியோடினார்.**

## ஒற்றையாட்சி முறைமையில் சிறுபான்மை இன உரிமைகள்

இந்த ஒற்றையாட்சி முறைமையினுள் சிறுபான்மை இன உரிமைகள், குறிப்பாக அரசியல் சுதந்திரம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு மிக சொற்பமே. தமிழ் மக்களின் மனநிலையானது ஒற்றையாட்சி முறையை ஆதரிக்காததாகும். தமக்கு அவ்வளவு நட்பான முறையல்ல என்றே ஒற்றையாட்சியை நோக்குகின்றனர். அதற்கமைய தனியரசு மற்றும் ஒற்றையாட்சி முறைமைகளுக்கிடையிலான ஏதாவது அதிகாரப் பகிர்வு முறையொன்றை இதற்கு பதிலீடு செய்யவேண்டுமென்பதே எனது பார்வை. இருப்பினும் தற்போதுள்ள அரசியல் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வதற்க்கும் தமிழ் அரசியல் கட்சிகள் அக்கறை எடுக்க வேண்டும். **பொலீஸ், காணி அதிகாரங்கள் நீக்கப்படுமாயின் தாம் வட மாகாணசபைக்கு போட்டியிடுவதில்லை என தமிழ் அரசியல் கட்சிகள் அண்மையில் கூறியுள்ளன. அவ்வாறான பின்னணியில்கூட தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிட வேண்டும். இருக்கும் அரசியல் முறைமையினுள் ஏதாவது நலனை பெற்றுக்கொள்ள முடியுமாயின் அது அரசியல் பங்களிப்பை காட்டுவது மட்டுமே. இது மிகவும் குறைந்த மட்டத்திலான அதிகாரப் பகிர்வு அரசியல் வாய்ப்பாகும். அது இருக்கும் பிரச்சனைக்கு தீர்வாகாது என்ற போதிலும் கடும் போக்காளர்களின் விமர்சனங்களுக்குள்ளாகலாம். அதனால் இருக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.** இந்த நாட்டிலுள்ள அரசியல் பிரச்சினையின் ஓர் யதார்த்தம் என்னவென்றால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் உண்மையான நல்லிணக்கத்தை இந்நாட்டில் நிறுவ முடியாது என்பதாகும். தமது அரசியல் அபிலாசைகள், அபிவிருத்தி வாய்ப்புக்களுடன் இணைந்ததாக இந்த அரசு எதனையும் தமக்கு வழங்காது எனும் முற்தீர்ப்புடனேயே வடக்குத் தமிழர்கள் இருக்கின்றனர். அந்த மனநிலையை மாற்றுவதாயின் அரசாங்கத்தின் வழிமுறைகளை மாற்ற வேண்டும். **தமிழீழ விடுதலைப் புலிகள் மிகவும் இயங்குதிறனுடன் இருந்த காலத்தில் தெற்கின் அரசியல் தலைமைகள் ஓரளவு மட்டத்திலான அதிகாரப் பகிர்வுக்கு செல்லக்கூடாதென்று சிந்தனை செய்தார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் அதனை பயன்படுத்தி தனியரசு நோக்கிச் செல்லும் இலக்கை அடையலாமெனும் சந்தேகமே அதற்குக் காரணம். இருப்பினும் தமிழீழ விடுதலைப் புலிகள் தோல்வியடைந்துள்ள பின்னணியில் தொடர்ந்தும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கூட மீள பெறுவதற்குக் முயற்சிப்பதைப் புரிந்து கொள்வது கடினம். தற்போது அவர்கள் இந்த முறைமைக்கு பழக்கப்பட்டுவிட்டனர். தனியரசை நோக்கிச் செல்வதற்கு போதுமானளவுக்காவது அவர்கள் முன்வருவார்கள் என நான் நினைக்கவில்லை. இந்நாட்டின் சம்பவங்கள் எப்போதும் சர்வதேசத்துக்குக் கொண்டு செல்லப்படுவதனை பார்க்கும்போது, உள்நாட்டில் இடம்பெறும் அநியாயங்களுக்கு உள்நாட்டில் தீர்வு இல்லாதபோது அவ்வாறு இடம்பெறலாம். இருப்பினும் அதனை ஒரு வழக்கமாக மேற்கொள்வதன் மூலம் உண்மையான நல்லிணக்கத்துக்கு வாய்ப்புக் கிடைப்பது சிரமமானது. மறுபுறம் தெற்கின் சகவாழ்வு தொடர்பில் எவ்வளவு சொன்னாலும் அதுபற்றிய உண்மையான தேவை இருக்கவில்லை.** தெற்கில் நல்லிணக்கம் என்பது இன்னுமொரு கவர்ச்சிகரமான வசனம் மட்டுமே. அதற்காக தெற்கு வடக்குக்கு ஓரளவு வாய்ப்பளிக்க வேண்டும். வடமாகாண சபை நிறுவப்படுவதற்க்கு எதிராக தெற்கு மிகவும் பலமாக குரலெழுப்புகிறது. இருப்பினும் அவ்வாறான நிலையிலாவது பிரதேச ரீதியிலான அதிகாரத்துடனான தமிழ் அரசியல் வாதிகளை உருவாக்கிய பின்னர் அவர்கள் மேலும் தேசிய அரசியலுக்கு கவர்ந்திழுக்கப்படுவார்கள். அதன்போது ஓரளவு அதிகார சட்டகம் உருவாக்கப்படுவதன் மூலம் அதனோடிணைந்த உண்மையிலேயே

அதிகாரத்துக்கு விருப்பமுடைய அரசியல் போட்டிநிலை உருவாதல் இதனூடாக பெரும்பாலும் இடம்பெறும். அதற்கமைய வடக்குக்கு மாகாண சபையை வழங்கும் தீர்மானம் தெற்கின் அரசியல் தந்திரோபாயம் எனவும் விளக்கமளிக்கலாம். தொடர்ந்தும் ஒரே இலங்கை இனமாக செயற்படும்போது அனைத்து சமூகத்தினரினதும் இணைப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்த தந்திரோபாயம் காரணமாகும்.

**தெற்கு எதனை கொடுக்காவிட்டாலும் வடக்கில் பிரச்சனையான நிலை ஏற்பட இடமில்லை. தமிழ் சமூகம் போதுமானளவுக்கு பிரச்சனைகளுக்கு ஆட்பட்டிருப்பதே அதற்கு காரணம். எனது பாடசாலை காலத்தில் யாழ்ப்பாண இளம் போராளி அமைப்புகளின் முகாம்களுக்கருகில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் குழுமி நிற்பதனை கண்டுள்ளேன். அவற்றுடன் இணைந்து கொழும்பு அரசுக்கெதிராக போரிடும் தேவை அக்காலத்தில் இருந்தது. இறுதியில் அதன் மறுபக்கமே நடைபெற்றது. போரிடத் தேவையான இளம் உறுப்பினர்களை தேடிப்பிடிப்பது சிரமமானதற்குக் காரணம் அது தொடர்பான தேவை தமிழ் இளைஞர்களிடம் இருக்காமை யாகும். அதாவது தொடர்ந்தும் அரசியல் ரீதியில் சிரமப்படுவதாகும்.** யாராவது மிகச் சிலர் ஆயுதம் தூக்கி ஏதாவது எதிர்ப்பைக் காட்டலாம். தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு காலத்தில் இயல்பாகவே பெரும் ஒத்துழைப்பை தமிழ் மக்களிடமிருந்து பெற்று வளர்ந்த காலமும் இருந்தது. அவ்வாறான சம்பவம் மீண்டும் குறுகிய காலத்தில் ஏற்படாது. இருப்பினும் 15-20 ஆண்டுகளுக்கப்பால் என்ன நடக்கும் என்று கூற முடியாது. வடக்கு தமிழ் மக்களின் மனநிலை கொழும்பு அரசின் அரசியல் முறைக்கு எதிரானதாக இருந்தாலும் அதனை வன்முறைப் போக்கில் வெளிப்படுத்த அவர்கள் தயாராக இல்லை.

## தமிழ் மக்களின் அடிப்படை எதிர்பார்ப்பு

**தமிழ் மக்கள் மற்றும் ஏனைய இனச் சமூகங்களின் உண்மையான தேவை ஒன்றாக வாழ்வதே தவிர தனியாக வாழ்வதல்ல தனியாக இருப்பதற்க்கு அரசியல் அதிகாரத்தை கோருவதற்குப் பதிலாக முழு சமூகத்தினதும் பகுதியாக இருப்பதற்கு அரசியல் அதிகாரத்தை பெறுவது இங்கே முக்கியமானதாகும். இயல்பாக தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தற்போதுள்ள முறைமையில் அரசியல் சுதந்திரம் வழங்கும் பாரதூரமான கொடுக்கல் வாங்கலே இன்று அவர்களுக்கு எஞ்சியுள்ளது. அரசாங்கம் எப்போதுமே தமிழ் அரசியலை பாராட்டுவதனை விடவும் அதனை கணக்கெடுக்காமலிருக்கும் போக்கே கூடுதலானது. தேசிய அரசியலால் தற்போது தமிழ் அரசியல்வாதிகளுக்கு எந்தவொரு இடமும் ஒதுக்கப்பட்டிருப்பதாக நான் நினைக்கவில்லை. லக்ஸ்மன் கதிர்காமருக்கு கிடைக்காமல் போன வாய்ப்பு அதாவது பிரதமராக முன்செல்லும் வாய்ப்பு வேறு எவருக்கும் கிடைக்குமென நினைக்க முடியாது. அதனால் பிரதேச அரசியலில் தமது உணர்வுகளை தயார்ப்படுத்துதல் இந்நேரத்தில் மிகவும் பொருத்தமானது.**

## இந்தியத் தலையீடு

இந்திய அழுத்தத்தை ஆராய்ந்து பார்த்தால் 1980 தசாப்தத்தைப்போன்று அழுத்தம் கொடுக்கக்கூடிய இயலுமை இந்தியாவுக்கு இல்லை. வரலாற்றில் இந்தியா இனப்பிரச்சனை ஊடாகவே 2009 இல் யுத்தம் ஓய்ந்தது. அவ்வாறு அழுத்தம் கொடுத்தது. அந்தப் பிரச்சனையின் தாக்கம் தமது நாட்டுக்கும் உள்ளது எனும் அடிப்படையிலேயே அழுத்தம் கொடுத்தது. ஆனால் தற்போது வன்முறை மோதல் இந்நாட்டில் இல்லை. அரசியல் அகதிகளின் புலம்பெயர்வு, கெரில்லா வீரர்களின் பங்களிப்பு காரணமாக ஓரளவு நியாயமான உரிமையை அப்போது பெற்றுக்கொண்டது. போர் முடிந்த உடனேயே இந்தியாவின் கோரிக்கையாக (நிபந்தனை) அது இருந்தது. அதிகாரப் பகிர்வை உரியவாறு விரைவுபடுத்த வேண்டும் என்பதேயாகும். நான்கு வருடங்கள் கடந்தும் அது நிறைவேற்றப்படவில்லை. முன்னர் கூறிய அதிகாரத்தை இலங்கைமீது பிரயோகிக்கும் இயலுமை தற்போது இந்தியாவுக்கு இல்லை. ஜெனீவாவில் இந்தியாவின் குரலும், பொதுநலவாய மாநாட்டுக்கு வராமலிருப்பதும் தற்காலிக பிரச்சனைகளாகும். அதனால் இலங்கை இந்தியாவிடம் ஓரளவு மென்போக்கை காட்டும். இருப்பினும் இலங்கையை பாதுகாப்பதற்காக முன்னிற்கும் நாடுகளின் எண்ணிக்கை அதிகம். சீனா மட்டுமன்றி இன்னும் பல நாடுகள் உள்ளன.

தமிழ்நாட்டில் எந்தவொரு அழுத்தமும் இல்லையென்று நான் நினைக்கவில்லை. இருப்பினும் அது பலமானதல்ல. தமது உள்நாட்டு அரசியல் போக்கை சர்வதேச அரசியலில் அருகிலுள்ள நாடுகளுடனுள்ள நட்புறவை சீர்குலைக்கக்கூடியளவுக்கு இந்தியா முட்டாள் அல்ல. இந்தியாவுக்கு முன்னால் நாம் பலவீனமானவர்களென நினைத்தாலும் எம்மை விடவும், அவர்களுக்கு எம்மை



**2002 ஆண்டில் சமஷ்டி முறைக்கான வாய்ப்பு தொடர்பில் அக்கறை எடுக்கக்கூடிய சிறந்த வாய்ப்பு கிடைத்தது. இருப்பினும் அது கை நழுவி விட்டது. சிங்கள சமூகத்தை விடவும் தமிழ் சமூகத்தினர் அதிகமான தவறுகளை விட்டதாகவே நான் நினைக்கிறேன். அது தமிழ் அரசியலின் ஓர் மையப் பகுதியாகும். எப்போதும் தவறுகள் ஏற்படுகின்றன.**



**தமிழ் புலம்பெயர்ந்தோர் தனியான ஈழ அரசுக்காக வேலை செய்வது தற்போதைய அரசியல் யதார்த்தத்துக்கு முரணானதாகும். அவ்வாறுகூறும் தமிழ் புலம்பெயர்ந்தோரின் அனுசரணையையோ, நல்லெண்ணத்தையோ பெற்றுக் கொள்ளக்கூடிய ஆக்கபூர்வமான செயற்திட்டம் எதுவும் அரசிடமில்லை. அவர்களது அரசியல் கருத்துக்களை அவர்கள் புறம்பாக வைத்துக்கொள்வதற்கு இடமளித்து அவர்களது பங்களிப்பை வெற்றிக்கொள்வது தொடர்பில் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கே புலம்பெயர்ந்தோரை விடவும் முக்கியமானது தமிழ் அரசியல் தலைவர்களே என்பதனை நீங்கள் மறந்து விடக்கூடாது.**

தேவைப்படுகிறது. எரிபொருள், வாகன விற்பனை உட்பட பல துறைகளில் இந்தியாவுக்கு இலங்கை சந்தை முக்கியமானது.

இலங்கை பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்தாலும் வாகன ஏற்றுமதி போன்றவற்றுக்கு இப்போதும் இலங்கை இந்தியாவுக்கு சிறந்த வர்த்தக கூட்டாளியாகும்.

1980 தசாப்தத்தில் கொழும்பு டில்லியில் தங்கி வாழ்ந்தது. தற்போது கொழும்பின் மாற்றத்தின் ஊடாக டில்லி உருவாக்கப்படுகிறது. (இலங்கை தொடர்பான பிரச்சனையில்) இரண்டாவது **தமிழ்நாட்டின் அரசியலை சிறப்பாக கையாளும் கலையில் டில்லி கைதேர்ந்துள்ளது. அதன் வெளிவிவகார அமைச்சரின் இலங்கைக்கு எதிரான கடும் பேச்சுக்கள் போன்றவற்றால் எப்போதும் டில்லி தமிழ் நாட்டை திருப்திப்படுத்துகிறது. தற்காலிகமாக சந்தோசப்படுத்துகிறது. சிவசங்கர் மேனன் போன்ற இந்திய ஆலோசகர்கள் இலங்கைக்கு வந்து, இலங்கை பிரச்சனைக்கு இந்நாட்டிலுள்ள நிலைமைக்கேற்ப தீர்வு காண வேண்டுமென கூறுவார்கள். யதார்த்தமும் அதுவே.**

## பாராளுமன்றத் தெரிவுக்குழு

வரலாற்றில் நியமிக்கப்பட்ட குழுக்களைப் பார்க்கும்போது பாராளுமன்றத் தெரிவு குழுவானது மிகவும் வினைதிறனானதாகும். முன்னைய குழுக்களில் பல்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ள பல்வேறு நபர்கள் இருந்தார்கள். தற்போது அரசாங்கத்தில் ஒரே முறையில் சிந்திக்கும் ஒரேமாதிரியான விருப்பத்தை கொண்ட குழுவொன்று இருக்கிறது. குழுவென்ற ரீதியில் பன்மைத்துவத்துக்கு இடமளித்தல் என்பது இல்லாமற்போகும் இடமாக உள்ளது.

தமிழர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் வன்முறைக்குப் பலியானார்கள். நானும் இந்த சேதத்துக்குள்ளான சமூகத்தின் உறுப்பினராவேன். மேதாவது வருத்தம் தெரிவிப்பதாயின் மறுபக்கத்தில் எப்போதும் வாய்ப்பு ஏற்படும் சாத்தியங்கள் கூடுதலானது. எமது இயலுமைக்கேற்ப மோதலில் ஈடுபட்ட தரப்பினரிடையே உண்மையான நல்லிணக்கத்துக்காக ஓரளவு பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதனால் தான் தமிழ் பிரஜை என்ற ரீதியில் முழு மக்களிடம் மன்னிப்புக் கோருவதாக LLRC ஆணைக்குழுவின் முன்னிலையில் கூறினேன்.

தமிழ் புலம்பெயர்ந்தோர் தனியான ஈழ அரசுக்காக வேலை செய்வது தற்போதைய அரசியல் யதார்த்தத்துக்கு முரணானதாகும். அவ்வாறுகூறும் தமிழ் புலம்பெயர்ந்தோரின் அனுசரணையையோ, நல்லெண்ணத்தையோ பெற்றுக் கொள்ளக்கூடிய ஆக்கபூர்வமான செயற்திட்டம் எதுவும் அரசிடமில்லை. அவர்களது அரசியல் கருத்துக்களை அவர்கள் புறம்பாக வைத்துக்கொள்வதற்கு இடமளித்து அவர்களது பங்களிப்பை வெற்றிக்கொள்வது தொடர்பில் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கே புலம்பெயர்ந்தோரை விடவும் முக்கியமானது தமிழ் அரசியல் தலைவர்களே என்பதனை நீங்கள் மறந்து விடக்கூடாது. அவர்களது ஒத்திசைவு இல்லாமல் புலம்பெயர்ந்தோர் தலையீடு செய்ய முடியாது. அதற்கமைய தற்போதுள்ள தொடர்பை வைத்துக்கொள்ளக்கூடாதென்று நான் பார்க்கவில்லை.

**போர்நிலவியபோது சமாதானத்துக்காக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கிடைத்த வாய்ப்புக்களை தவறவிட்டது அவர்களுக்கேற்பட்ட தவறாகும். எந்தவொரு ஆயுதமேந்திய நபரினுள்ளும் அதற்கே உரித்தான வரையறை உள்ளது. எனது புரிதலுக்கமைய இலங்கையில் தனிநாடொன்றை உருவாக்குவதற்க்கு சர்வதேச ரீதியில் எந்தவொரு அனுசரணையும் கிடைக்காது. சில சந்தர்ப்பவாத தலையீடுகள் இருந்தபோதிலும் அவற்றை உத்தியோகபூர்வமான தனிநாட்டுக்கான தலையீடாக பார்க்கக்கூடாது.**

2002 ஆண்டில் சமஸ்டி முறைக்கான வாய்ப்பு தொடர்பில் அக்கறை எடுக்கக்கூடிய சிறந்த வாய்ப்பு கிடைத்தது. இருப்பினும் அது கை நழுவி விட்டது. சிங்கள சமூகத்தை விடவும் தமிழ் சமூகத்தினர் அதிகமான தவறுகளை விட்டதாகவே நான் நினைக்கிறேன். அது தமிழ் அரசியலின் ஓர் மையப் பகுதியாகும். எப்போதும் தவறுகள் ஏற்படுகின்றன.

13இற்க்கு அப்பால் சென்ற அதிகாரப் பகிர்வை பெறுவதற்காக சிறுபான்மை இனக் கட்சிகளிடையே ஒருங்கிணைப்பை உருவாக்கும் முயற்சிகள் எதுவுமில்லை. ஆரம்பத்திலிருந்தே முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் பின்பற்றிய கொள்கைக்கமைய உள்நாட்டு தேவைப்பாடுகளுடன் இணைந்ததாக கொழும்புடன் மிகவும் நெருக்கமான உறவு கட்டியெழுப்பப்பட்டது. இருப்பினும் இது தமிழ் அரசியல்வாதிகளுக்குப் பழக்கமில்லை. வேறு மாற்று அரசியல் தந்திரோபாயங்களை (Strategy) விடவும் அதுபோன்ற கூட்டமைப்பு தொடர்பாக நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

**2009 ஆம் ஆண்டு ஜெனீவாவின் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை முன் வைத்த தொலை நோக்கற்ற "வெற்றிகரமான பிரேரணை" என அறிமுகப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் வெளிநாட்டமைச்சராக எமது லக்ஷ்மன் கதிர்காமர் இருந்திருந்தால் குறித்த பிரேரணை வெளிவராமல் இருந்திருக்கும். அவரது கூரிய அறிவு இலங்கையை எமது எதிரிகள் அவர்களது சாதகத்திற்கு காரணமாயமையும் வகையில் சூழ்ச்சிகளில் சிக்க வைப்பதிலிருந்து தடுத்திருக்கும்.**




Photo source: www.dbsjeyaraj.com

திரு. லக்ஷ்மன் கதிர்காமர்

# வெளியுறவுக் கொள்கை, ஜெனீவா பிரேரணை மற்றும் நாட்டின் எதிர்காலம்

பலரையும் சோகத்தில் ஆழ்த்திவிட்டு மரணத்தைத் தழுவிய லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களினால் முன்னெடுக்கப்பட்ட இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் வெற்றிகள் தொடர்பான நினைவுகள் என் மனதில் மங்காது காணப்படுகின்றன.

2009 ஆம் ஆண்டு ஜெனீவாவின் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை முன் வைத்த தொலை நோக்கற்ற தூர சிந்தனையற்ற "வெற்றிகரமான பிரேரணை" என அறிமுகப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் வெளிநாட்டமைச்சராக எமது லக்ஷ்மன் கதிர்காமர் இருந்திருந்தால் குறித்த பிரேரணை வெளிவராமல் இருந்திருக்கும் அவரது கூரிய அறிவு இலங்கையை எமது எதிரிகள் அவர்களது சாதகத்திற்கு காரணமாயமையும் வகையில் சூழ்ச்சிகளில் சிக்க வைப்பதிலிருந்து தடுத்திருக்கும். 1984 மற்றும் 1987 ஆம் ஆண்டுகளில் ஜெனீவா கூட்டத்தொடரில் கலந்துகொண்ட இலங்கையின் பிரதிநிதிகள் "தமது தந்திரோபாய ரீதியான மற்றும் தொழில்சார் அரசியல் ராஜதந்திர அறிவைப் பயன்படுத்தி எதிரான பிரேரணைகளை மென்மையானதாக மாற்றினார்கள். 1987 முதல் 2000 ஆம் ஆண்டு வரை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் பேரவை என்பவற்றின் விவாதங்களில் இலங்கை தொடர்பாக குறிப்பிடப்பட்ட போதும் எந்தவொரு அமைப்பும் நமக்கெதிராக எந்தவித பிரேரணையும் அங்கீகரிக்கவில்லை. நாம் இங்கு 1987 ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் இந்தியாவிடமிருந்து எமக்குக் கிடைக்கப்பெற்ற அரசியல் ராஜதந்திர உதவியைப் போற்ற வேண்டும். ஆனால், 2009 இல் என்ன நடந்தது?



**திஸ்ஸ ஜயதிலக்க**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
ஐக்கிய அமெரிக்க இலங்கை
ஃபுல்பிரைட் ஆணைக்குழு

"எதிரிடையான ஒரு பிரேரணையினை மிகவும் மென்மையான ஒரு பிரேரணையாக மாற்றுவதற்கு "அமைதியான அரசியல் தந்திரத் திறமையினைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக நாம் எமது அனைத்து பலத்தினையும் பயன்படுத்தி எதிரான ஒரு பிரேரணையைச் சமர்ப்பித்தோம்.

**எமது அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தம் வாக்குறுதியயும் அர்த்தமுள்ள விதமாக இவ் வெற்றிகரமான பிரேரணையில் "உள்ளடக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டின் இவ் வெற்றிகரமான பிரேரணையின்" உள்ளடக்கம் 2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஐ.நா.ம.உ. பேரவையினால் எமக்கெதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளில் பெரும்பாலும் மீண்டும் தாண்டவமாடத் தொடங்கியுள்ளது.**

அங்கு விமர்சகர்களினால் வெற்றிகரமான ஒரு பிரேரணை எனப் பெயர் சூட்டப்பட்ட அப்பிரேரணை ஐ.நா.ம.உ. பேரவையில் பிரிக்கப்பட்ட ஒரு வாக்கெடுப்பு மூலம் (ஆதரவாக 29 நாடுகளும் எதிராக 12 நாடுகளும் 06 நாடுகள் வாக்களிக்காமலும் இருந்தன) நிறைவேற்றப்பட்டது. எமது அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தம் வாக்குறுதியயும் அர்த்தமுள்ள விதமாக இவ் வெற்றிகரமான பிரேரணையில் "உள்ளடக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டின் இவ் வெற்றிகரமான பிரேரணையின்" உள்ளடக்கம் 2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஐ.நா.ம.உ. பேரவையினால் எமக்கெதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளில் பெரும்பாலும் மீண்டும் தாண்டவமாடத் தொடங்கியுள்ளது.

ஆரம்ப காலங்களில் வழி தவறிச் சென்றமையால் இலங்கைப் போராளிகளுக்கு வழங்கிய உதவிகளைப் புறக்கணித்துவிட்டு இந்தியா மட்டுமே அனைத்து வல்லரசுகளுக்கிடையிலும் ஆரம்பத்திலிருந்தே இலங்கையில் தனி நாடு உருவாக்குவதற்கு நிபந்தனையின்றி எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. முக்கியமான இப் பிரச்சினை தொடர்பாக தற்போது இந்தியாவிற்கு இரண்டாவது சிந்தனையொன்று இருப்பதாகத் தோன்றுகிறது.

2009 ஆம் ஆண்டுக்குப் பின் நாம் எதிர்நோக்கியுள்ள பேரழிவிற்கு காரணம் ஐக்கிய அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, இந்தியா / தமிழ்நாடு அல்லது வேறு நாடுகளா? ஏனைய வெளி நபர்களா ? அல்லது யுத்தத்திற்குப் பின்னரான ஆண்டுகளில் ஆசியாவின் அற்புதம் காரணமாக ஏற்பட்டுள்ள அபாக்கியம் நிறைந்த நிலைமைக்கான காரணம் எமக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற வெளிநபர்களின் உறுதியற்ற கொள்கைகளா? அவ்வாறில்லாவிட்டால் எமது கொடிய எதிரி நாமே என்று இலங்கையின் உறுதியற்ற கொள்கைகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் எமக்கு தீங்கு விளைவித்துள்ளது எனக் கூறுவது சரியன்றோ?

நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கமையவும் எமது அரசியலமைப்புச் சட்ட ஒழுங்கு விதிகளின் கீழும் எமது அரசாங்கம் எமது நாட்டு பிரஜைகளை சமமாக மதிக்கின்றது என நேர்மையாக எம்மால் கூற முடியுமா? சட்டத்தின் முன் நாம் அனைவரும் சமமானவர்களா? அவ்வாறில்லாவிடின் சிலர் "மற்றவர்களை விட சமமானவர்களா ? இலங்கை அரசாங்கம் இனங்களையும் மதங்களையும் கருத்திற்கொள்ளாது அனைத்து இலங்கைப் பிரஜைகளையும் ஒரே விதமாகக் கருதுகிறது என எம்மால் நேர்மையாகக் கூற முடியுமா? எமது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் எமது அனைத்து சமயங்களுக்கும் சம அந்தஸ்து கிடைக்கப் பெறுகிறதா? இலங்கையரான நாம் எமது கண்களிலுள்ள தென்னம் பராலையைப் பார்ப்பதற்குப் பதிலாக மற்றவர்களின் கண்களிலுள்ள தேங்காய்த் துரும்பைப் பார்ப்பதில் திறமைசாலிகள் என்பது தெரிகிறது! நாம் எமது சர்வதேசப் பங்காளிகளுக்கும் சகாக்களுக்கும் நம் நாட்டு மக்களுக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் வாக்குறுதியளிப்பது மற்றொரு சந்தர்ப்பத்தில் அவற்றை மீறுவதற்காக மட்டுமே. விசேடமாக, சிறிய நாட்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைக்கு அவ்வாறான ஒரு நேர்மையற்ற தன்மையினூடாகவும் ஏமாற்றுவதினூடாகவும் அழியாது நிலைத்திருக்க முடியுமா?

**வெளிநாடுகள் எமது நாட்டின் தேசிய இறைமைக்கு மதிப்பளிப்பதில்லையெனவும், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாத கொள்கையினை சில நாடுகள் கடைப்பிடிப்பதில்லை எனவும், அரசை, பாதுகாக்கின்றவர்கள் கூக்குரலிடுகின்றனர். இறைமை மற்றும் நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமையானது உண்மையில் ஐக்கிய நாடுகளின் சமவாயத்தில் காணப்படுகின்ற மிக முக்கியமான கோட்பாடுகளாகும். எவ்வாறாயினும் இறைமையானது முன்பு எவ்வாறு இருந்த போதும் அது தொடர்ந்தும் எதிர்பாராத (முழுமையான) ஒரு பெறுமதியினைக் கொண்டதல்ல. இறைமை என்பது மக்களே அன்றி அரசு அல்ல. இது எப்போதும் மனதிற் கொள்ள வேண்டிய பிரதான ஒரு விடயமாகும்.**

2009 மே மாதம் தொடக்கம் எமது வரையறுக்கப்பட்ட செயற்பாடு மற்றும் செயற்பாடின்மை என்பன மூலம் நல்லிணக்கத்திற்கான எமது முயற்சிகள் நெகிழ்வுத் தன்மையுடைய மனப்பாங்கினையே நாம் காட்டியுள்ளோம் என்பது தெளிவாகிறது. ஆகவே, நாம் எமது நண்பர்களினதும் எதிரிகளினதும் ஒரே விதமான எதிர்ப்பினை வரவழைத்துள்ளோம். தமிழ் நாட்டில் இலங்கைக்கும் இலங்கை மக்களுக்கும் எதிராக இன்று ஏற்பட்டுள்ள எதிர்ப்புகள் ஆரம்பமாவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை இந்நாட்டின் அதிகாரப் பகிர்வு பிரச்சினையுடன் தீங்கான ஒரு விளையாட்டில் ஈடுபட்டிருந்தது. இந்த நாட்டுப் பிரஜைகளான நாம் அறிந்து வைத்துள்ளவாறு இலங்கையின் தற்போதைய அரசாங்கத்தின் முக்கியமான

ஓர் உறுப்பினர் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினை அமுல்படுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

புனர்வாழ்வும் புனர் நிர்மாணமும் தொடர்பான துறைகளில் இலங்கை எவ்வாறான ஒரு முன்னேற்றத்தை எய்தியுள்ளது? இங்கு வகை கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை ஒன்றாக கலத்தல் பயனற்றது போன்றே புனர்நிர்மானம் புனர்வாழ்வு என்பவற்றை ஒன்றாகக் கலத்தலும் பயனற்றது என நான் எண்ணுகிறேன். இறுதிக் கணிப்பீட்டின் படி புனர் நிர்மாணம், புனர்வாழ்வு, வகை கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பன உண்மையில் ஒன்றோடொன்று இணைந்தவையாகும். சந்தேகமின்றி இத் நான்கு செயற்பாடுகளிலும் வகை கூறல் என்பதே உற்சாகமிழக்கக் கூடியதும் சவால்மிக்கதுமான செயற்பாடாகும். வகை கூறலை நோக்குமிடத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக்கு விமர்சகர்கள் இலங்கை தொடர்பாக சமநிலையற்ற விதத்தில் காலூ ன்றியிருப்பதாக நான் கருதுகின்றேன். இறந்தகாலத் தவறுகளிலிருந்து உருவாகும் குழிகளைத் தவிர்த்துக்கொள்வதற்கு எமக்கு உதவி புரியும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்வதை விடுத்து எம்மை அதற்குள் சிறைப்படுத்தி விடக் கூடாது.

மானுட மற்றும் செயன்முறை ஆகிய இரு வகையினதும் காரணங்களினால் புனர் நிர்மாணம் இலங்கை தொடர்பாக முன்னுரிமை வகிக்கிறது. யுத்தத்தினால் அழிவடைந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மிகவும் அவசரமான மீண்டும் கட்டியெழுப்புதல் வலுக்கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். இச் செயற்பாட்டின் போது பிரதேசத்தைச் சேர்ந்த மக்களும் அவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் அந் நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகப் பொருத்தமாகும். இந்நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக வடமாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கு திட்டமிட்டு அது பற்றி அறிவிக்கப்பட்டமை சரியான திசையை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஒரு நகர்வாகும். இத் தேர்தல் சுதந்திரமானதும் நியாயமானதுமான ஒரு தேர்தலாக அமையுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

புனர்வாழ்வு முன்னணியில் பல விடயங்களை அடைந்து கொள்ள முடியுமாக இருந்த போதிலும் மேலும் பல விடயங்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது. நிலக்கன்னி வெடிகளை அகற்றுதல், எல்ரீரீஈ சிறுவர் படைவீரர்களுக்கான கவனிப்புக்கள் மற்றும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள எல்ரீரீஈ உறுப்பினர்கள் சிலரை விடுதலை செய்தல் என்பன வரவேற்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகும். என்பதுடன் இதுவரையில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பாராட்டப்படல் வேண்டும். உண்மையிலேயே கடினமானாலும் கூட முன்னால் சிரேஷ்ட எல்ரீரீஈ உறுப்பினர்களுள் சிலரை நீதிமன்றத்தின் முன் நிறுத்துவது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள செயலாற்றுதல் வேண்டும். யுத்தரம் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த போதும் காணாமற் போனதாக அல்லது இறந்து போனதாக நம்பப்படும் நபர்களை இதுவரை எம்மால் அடையாளங் காண முடியாதுள்ளது. இது நாம் இயலுமான வரை வேகமாகவும் மனிதாபிமான ரீதியாகவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய மிக முக்கியமான ஒரு துறையாகும். இதன் மூலம் அவர்களது கிட்டிய உறவினர்களை அவர்கள் இழந்த உணர்வினை இல்லாதொழிக்கக்கூடியதாயிருக்கும். நாம் ஒன்றில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு எதிராக அரசாங்கத்திற்கெதிராகச் செயற்பட்ட குற்றத்தின் கீழ் குற்றச்சாட்டு விதிக்கப்படல் வேண்டும். அல்லது சிறையிடுவதற்குப் போதிய சாட்சிகள் இல்லாத போது அவர்களை விடுதலை செய்தல் வேண்டும்.

யுத்தத்தின் பேரழிவினால் அழிந்து போன எமது மக்களுக்கு உதவி செய்வது பற்றி நாம் சிந்திப்பதாயின், புனர்வாழ்வு பற்றிய சிக்கலான இத்துறை தொடர்பாக பொறுப்புடனும் தாமதமின்றியும் தலையிடுவது அவசியமாகக் காணப்படுகிறது. தமது பிள்ளைகளுள் சிலர் இறந்துள்ளார்களா அல்லது உயிர் வாழ்கின்றார்களா என அறிந்து கொள்ளுவது பெற்றோரது தேவையாகவுள்ளது. அவர்களது கணவர்களுக்கும் மனைவியர்களுக்கும் தமது மனைவி அல்லது கணவர் இறந்துள்ளாரா? அல்லது உயிர் வாழ்கின்றாரா? என அறிய அவாவாகவுள்ளனர். அவ்வாறே உறவினர்கள் அவர்களது உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோரிடையே எத்தனை பேர் உயிர் தப்பியுள்ளனர் ? எத்தனை பேர் மரணமடைந்துள்ளனர் எனத் தெரிந்துகொள்ளத் தேவையாக உள்ளனர்.

**நல்லிணக்கம் தொடர்பான முன்னணியில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றமானது மிக மந்தமானதாகும். தென்றல் காற்று தழுவிக்கொள்வது போன்று தேசிய நல்லிணக்கத்தினை ஒரே நாளில் ஏற்படுத்த**

**இந்தியா மட்டுமே அனைத்து வல்லரசுகளுக்கிடையிலும் ஆரம்பத்திலிருந்தே இலங்கையில் தனி நாடு உருவாக்குவதற்கு நிபந்தனையின்றி எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. முக்கியமான இப் பிரச்சினை தொடர்பாக தற்போது இந்தியாவிற்கு இரண்டாவது சிந்தனையொன்று இருப்பதாகத் தோன்றுகிறது.**



**தமிழ் நாட்டில் இலங்கைக்கும் இலங்கை மக்களுக்கும் எதிராக இன்று ஏற்பட்டுள்ள எதிர்ப்புகள் ஆரம்பமாவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை இந்நாட்டின் அதிகாரப் பகிர்வு பிரச்சினையுடன் தீங்கான ஒரு விளையாட்டில் ஈடுபட்டிருந்தது. இந்த நாட்டுப் பிரஜைகளான நாம் அறிந்து வைத்துள்ளவாறு இலங்கையின் தற்போதைய அரசாங்கத்தின் முக்கியமான ஓர் உறுப்பினர் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினை அமுல்படுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.**

**முடியுமென்று எவரும் எதிர்பார்க்கவில்லை! ஆயினும் யுத்தத்தின் சுமார் 4 வருடங்கள் கடந்ததன் பின், நல்லிணக்கத்திற்கு வழி வகுக்கும் நீண்டகாலத்தில் குணப்படுத்தும் அச் செயன்முறையின் துவக்கமாவது ஆக்க குறைந்தது ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்தது. இலங்கை தொடர்பாக எழுதியுள்ள பெரும்பாலான எழுத்தாளர்கள் வரையறையின்றி சுட்டிக்காட்டியுள்ளதற்கு ஏற்ப கற்ற பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பிரதான பரிந்துரைகள் கூட இதுவரை செயற்படுத்தப்படவில்லை.**

ஆகவே ஜெனீவாவிலிருந்து ஏனைய இடங்களிலிருந்தும் எழுகின்ற அழுத்தங்களைப் பற்றி நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. நல்லிணக்கத்திற்காக உள்நாட்டில் உருவாக்கப்பட்ட ஒரு பொறிமுறையை ஏற்படுத்தலை புறக்கணித்தமையினாலேயே இவ் அழுத்தம் மேலெழுகிறது. அதற்கான ஒரு சூத்திரத்தை தயாரித்துக்கொள்வதற்காக இலங்கை " காலத்தையும் அவகாசத்தையும்" கேட்டுக்கொண்டதுடன் அக் கோரிக்கைக்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. சர்வகட்சி பிரதிநிதிகள் குழு போல் அன்றி கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு சிரமப்பட்டு பக்கச்சார்பற்ற பரிந்துரைகளைத் தயாரித்தது. தற்போது இப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்குப் பதிலாக பழங்கதைகளில் வரும் ஒலிவர் ட்விஸ்ட் போன்று அரசாங்கம் மேலதிகமாகக் கேட்கிறது. பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு மேலதிக "காலத்தையும் அவகாசத்தையும் கோருகிறது.

நாம் அடிப்படைவாதத்தினடிப்படையில் செயற்படுவதற்கும் எமது சர்வதேச பங்காளிகளுக்கு நாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் தொடர்ந்தும் தவறியமையின் காரணமாக எழுகின்ற அண்மைக்கால வெளியுறவுக் கொள்கை சரிவடைதலானது எமது வெளிநாட்டு உறவுகளில் (அமைச்சர் பீரிஸின் வாசகங்கள் இங்கு வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்படுகிறது) "உடன்பாடற்ற" கருத்து முரண்பாடு மற்றும் வன்முறை என்பவற்றுக்கான உந்துதலாக உள்ளதென நான் கூறுகிறேன். தாமதித்தேனும் இவ் இறுதிக் கட்டத்தில் கூட 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின் நாம் விழுந்திருந்த மிகப் பெரும் ராஜதந்திர அசௌகரித்திலிருந்து மீள்வதற்கு நாம் திறமை பெற்றுள்ளோம். இம் முயற்சியை ஒரு தேசிய முன்னுரிமையாகக் கருத வேண்டியுள்ளதுடன் அது அரசாங்கத்திடமோ அல்லது அரசியல்வாதிகளிடமோ மாத்திரம் ஒப்படைக்கப்பட வேண்டிய ஒரு காரியமல்ல.

நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையும் அதன் உள்நாட்டு கொள்கைகளும் ஒன்றோடொன்று இணைந்ததாக காணப்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவின் செனட் சபை உறுப்பினர் லிண்ட்சே கிரஹம் உறுதியாக அவதானித்துள்ளவாறு "வெளியுறவுக் கொள்கையினுள் முதலீடு செய்வது தேசிய பாதுகாப்பு தொடர்பான ஒரு காப்புறுதியாகும்." **பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் வெளியுறவுக் கொள்கை ஏற்படுத்தியிருந்த சமநிலை தொடர்பான கோட்பாடு எமது தற்போதைய வெளிநாட்டுக் கொள்கையில் இல்லாமை தெளிவாகத் தெரிகிறது. ஜனாதிபதி ஜயவர்தன அவரது பதவிக் காலத்தின் போது தனக்கு முன்னிருந்தவர் பின்பற்றிய சமநிலையான வெளிநாட்டுக் கொள்கையிலிருந்து மூடத்தனமாக விலகிச் சென்றார். தெட்டத் தெளிவான இவ் இயலாமையின் காரணமாக அவரும் அவரது அரசாங்கம் மட்டுமன்றி முழு இலங்கையும் அதன் விளைவினை எதிர்கொண்டது.** அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் எமது வெளிநாட்டுக் கொள்கையில் குறித்த தேர்ச்சிமிக்க சமநிலையினை மீள நிறுவிய போதிலும் அவரை கண்மூடித்தனமாகப் பின்தொடர்ந்த மனித ஜந்துக்கள் "யதார்த்தவாத" சமநிலையற்ற தன்மைக்காக அதனை கைவிட்டனர். சமநிலையான மற்றும் தேர்ச்சி மிக்க வெளிநாட்டு கொள்கை தொடர்பான எமது பின்னடைவினால் உருவாகின்ற பாதக விளைவுகளையே நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். தற்போதைய எமது அரசாங்கம் சமநிலையற்ற வெளிநாட்டுக் கொள்கையை தொடர்ந்தும் பின்பற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாயின் 1980 களைப் போன்று மற்றுமொரு தடவை முழு இலங்கையும் துன்பங்களைச் சந்திக்க நேரிடும். அரசாங்கங்கள் வந்து போகலாம். ஆனாலும் இலங்கை முன்னோக்கிப் பயணம் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே அண்மைக் காலமாக இலங்கை மூழ்கியுள்ள அபாயகரமான நிலைமையிலிருந்து மீள உதவுவதற்கு இலங்கையர்களான எம் அனைவருக்கும் ஒரு முக்கியமான வகிபாகம் காணப்படுகிறது. தேவையான போது எழுந்து நிற்பதற்கு நாம் காட்டும் அசமந்தப் போக்கு **இலங்கையை சிக்கல் மிக்கதும் முரண்பாடுடையதுமான ஒரு சதுப்பு நிலத்தின், ஆழத்திற்கே இட்டுச் செல்வதற்கு வழிவகுக்கும். இலங்கையின் வாழ்க்கைச் சக்கரத்தின் 21 ஆவது நூற்றாண்டின் ஒரு தேசமாக மாற்றுவதற்காக செயலாற்றுவதற்கான காலம் தற்போது உருவாகியுள்ளது.**





Photo source :www.newsfirst.lk / madawalanews.com

அஸ்கிரி மற்றும் மல்வத்து தேரர்கள்

# மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்வது

## பற்றிய மகாநாயக்க தேரர்களது கருத்து யாது?



**மெதகம தம்மா நந்த தேரர்**
கண்டி அஸ்கிரிய மகா விஹாரையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்.

30 ஆண்டுகாலம் எமது தாய்நாட்டில் ஆயுத பலத்தைக் கொண்டு முன்னெடுத்துச் செல்லப்பட்ட பிரவினைவாதத்தை ஒழித்தமை தொடர்பாக இலங்கை வாழ் அனைத்து மக்களதும் நன்றிகள் தற்போதைய அரசுக்கு கிடைக்க வேண்டுமென்பதில் மாற்றுக்கருத்து எதுவும் கிடையாது. நாட்டில் நிலவிய பயங்கரவாத யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர தற்போதைய அரசாங்கம் திறமை பெற்ற போதிலும் சர்வதேச ரீதியில் செயற்படும் பிரவினைவாத யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர இதுவரை முடியாது போயுள்ளது. பல்வேறு திட்டங்கள் மூலம் புலிப் பயங்கரவாதத்திற்கு ஆதரவு வழங்கிய நாடுகளை வழிக்குக் கொண்டுவர எமது அரசாங்கம் தவறியுள்ளது. அந்த நாடுகளே நாடுகடந்த தமிழ் பிரிவினை வாதிகளுக்கும் நாட்டில் உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகளுக்கும் செயற்பாட்டுப் பலத்தை வழங்குகின்றன. தமது நோக்கங்களை எந்த வகையிலும் கைவிடாததன் காரணமாகவே முதலாளித்துவ நாடுகள் பொருளாதாரம், அரசியல், சமய மற்றும் கலாசாரம் என்பவற்றில் ஊடுறுவுகின்றனர்.

வெளிப்படையாக சமாதானத்தைப் பற்றிக் கதைத்தாலும் எமது நாட்டின் மீது தலையிடும் அந்நாடுகள் எமது நாட்டில் சமாதானத்தை எதிர்பார்க்கவில்லை. சமாதானத்திற்குப் பதிலாக நாட்டின் யுத்தத்திற்கு எண்ணெய் வார்க்கின்றனர். பயங்கரவாதம் முடிவடைந்த போதும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கும் வடமாகாண சபையை அமைப்பதற்கு எமது அரசாங்கத்தினை வற்புறுத்துவதற்குக் காரணம் அந் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காகும். சிங்கள, தமிழ், மற்றும் பறங்கியர் என அனைவரையும் ஒன்றிணைந்த இலங்கையை உருவாக்குகின்ற அதே நேரம் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் இனரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் சட்டவிதிகள்,ஈழம் மற்றும் சுயட்சி உரிமைகள் என்பவற்றைப் பெற்றுக் கொடுக்கும் பேராட்டத்தினை மேற்குலக நாடுகள் தொடர்ந்தும் அமுல்படுத்தி வருகின்றன. இந் நிலைமையினைப் புரிந்து கொண்டதனால் தான் சர்வதேசத்தின் தேவைகளுக்கு கீழ்ப்படிய

வேண்டாமென பௌத்த தேரர்களும் தேசப்பற்றுள்ள சிங்கள மக்களும் அரசாங்கத்தை வற்புறுத்துகின்றனர்.

இதுவரை பதவி வகித்த அரசாங்கங்களை விட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் நாட்டின் ஒருமைப்பாடு தொடர்பாக ஓரளவிற்கேனும் நாட்டில் பெரும்பான்மையினரின் குரலுக்கு செவி சாய்ப்பதாகத் தெரிகிறது. ஆயினும் அந் நிலைப்பாட்டினைத் தொடர்ந்தும் பேண முடியுமா எனக் கூற முடியாது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. நாட்டின் பொருளாதாரம் வெளிநாட்டுதவிகள் மற்றும் கடன்களில் தங்கியிருப்பது முதலாவது காரணியாகும். புலிப் பயங்கரவாதம் நிலவிய காலங்களில் சர்வதேச என்.ஜீ.ஓக்களின் நிதியைப் பெற்று போலியான பாத யாத்திரைகளை மேற்கொண்ட, புலிகளுக்கு ஆதரவாக இருந்த இழிவான அரசியல்வாதிகளும் மக்கள் பலம் குன்றிய இடதுசாரிகள் சிலரும் அரசாங்கத்தில் இருந்து கொண்டு ஜனாதிபதியின் தலைமையிலான அரசாங்கத்திற்கு நெருக்கடிகளைக் கொடுப்பது இரண்டாவது காரணியாகும். மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பயங்கரவாதத்திற்கெதிராக யுத்தம் மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் அதற்கு ஊக்கமளித்த சிங்கள மக்களுக்கு தீவிரவாத இனவாத முத்திரை குத்திய குறித்த குழுக்கள் யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டதன் பின் மனிதாபிமான யுத்த வெற்றியின் பங்காளர்களாக தம்மை அடையாளங் காட்டினார்கள். 13 ஆவது திருத்தத்திற்கமைய எதிர்காலத்தில் வட மாகாண சபை உருவாக்கப்படும் போது காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதால் ஏற்படுகின்ற நெருக்கடிகள் பற்றிக் கதைக்கும் தேரர்கள் தேசப்பற்றுள்ள நபர்கள் மற்றும் நடுநிலை செயற்பாடு கொண்ட புத்திஜீவிகள் ஆகியோருக்கு இனவாத மற்றும் தீவிரவாத முத்திரையைப் பதிப்பதற்கு அவர்கள் மீண்டும் முன்வந்துள்ளனர்.

> **இதுவரை பதவி வகித்த அரசாங்கங்களை விட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் அரசாங்கம் நாட்டின் ஒருமைப்பாடு தொடர்பாக ஓரளவிற்கேனும் நாட்டில் பெரும்பான்மையினரின் குரலுக்கு செவி சாய்ப்பதாகத் தெரிகிறது. ஆயினும் அந் நிலைப்பாட்டினைத் தொடர்ந்தும் பேண முடியுமா எனக் கூற முடியாது.**

நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதிற்கு கவனஞ் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக சிங்கள மற்றும் பௌத்த சமூகத்தின் பொறுப்பு வாய்ந்த தேரர்கள் பயங்கரவாத மோதல்கள் நடைபெற்ற சந்தர்ப்பம் முதல் காலத்திற்குக் காலம் மேற்படி ஆபத்துக்களை சுட்டிக் காட்டினார்கள். நாட்டிற்கு தீங்கு விளைவிக்கும் ஒன்றினை பௌத்த தேரர்கள் உட்பட நாட்டு மக்கள் எதிர்ப்பதானது அரசாங்கத்தற்கோ அல்லது ஒரு இனத்திற்கு விரோதமான ஒரு எதிர்ப்பு அன்றி தாய் நாட்டின் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கையாகும். அதனை ஏதேனுமொரு இனப் பிரிவினருக்கு எதிரான ஒன்றாக சித்தரித்துக் காட்டுவது ஒரு துரோகச் செயலாகும். **நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக பௌத்த தேரர்கள் உட்பட சிங்களவர்கள் விடுக்கும் குரல்களை புறக்கணிக்கும் ஒரு தன்மை கடந்த காலங்கள் பூராக எமது ஆட்சியாளர்களிடம் காணப்பட்டது. தற்போதைய ஆட்சியின் கீழ் அது ஓரளவிற்கேனும் மாற்றமடைந்திருக்கிறது.**

திரு. ஜே.ஆர் ஜயவர்தன அவர்களின் அரசாங்கம் 1984 ல் ஐந்து தமிழ் இயக்கங்களை மாத்திரம் இணைத்துக்கொண்டு வட்டமேசை மாநாட்டை ஆரம்பித்தது. சிங்கள மக்களை ஓரங்கட்டுவது நியாயமற்றது என சுட்டிக் காட்டியதன் பின்பே சிங்கள இயக்கங்களுக்கும் எமது மகாநாயக்க தேரர்களுக்கும் அதில் பங்குபற்ற சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. 1987ல் ஒருதலைப்பட்சமாகவே இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆகவே, அது பாரிய அழிவிற்குக் காரணமாயமைந்தது. வெளிசக்திகள் தமது தேவைகளுக்கேற்ப **எமது நாட்டின் எதிர்காலம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு நடுநிலைக் கொள்கைகளையுடைய சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய எந்தவொரு குழுவும் அனுமதி வழங்கப் போவதில்லை. பதவிமோகம் பிடித்த குறுகிய நோக்கமுடையவர்கள் மாத்திரமே அதனை விரும்புவார்கள். இதுதான் வரலாறு பூராகவும் இடம்பெற்றுள்ளது.**

பௌத்த தேரர்களின் கருத்துக்களைப் புறந்தள்ளி விட்டு 1995 ஆகஸ் மாதம் 03 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி அதிகாரப் பகிர்வு தொடர்பான தீர்வுத் திட்டத்தை சமர்ப்பித்தார். சிங்களவர்கள் அடிமைகளாக்க வேண்டாம் எனவும் எதிர்கால சந்ததியினருக்கும் ஒற்றையாட்சியின் கீழ் வாழ்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் எனவும் அஸ்கிரி மகாநாயக்க தேரர் அன்று அது பற்றிக் குறிப்பிட்டார். “இலங்கையின் புராதன” மேன்மையான சிங்கள பௌத்த மக்களின் மரபுரிமை, மூப்புநிலை மற்றும் தனித்துவம் என்பவற்றைப் பாதுகாத்து ஏனைய அனைத்து இலங்கையர்களுக்கும் நியாயம் கிடைக்கின்றவாறு சமத்துவம் மிக்க ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே மகாநாயக்க தேரர்களின் வேண்டுகோளாகும். (திவயின 1995 பெப்ரவரி 04) அரசியல் தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் 1995 ஆம் ஆண்டு ஜீலை 25 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய மற்றும் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றக் கூடாத விடயங்கள் என்பன பற்றிக் குறிப்பிட்டிருந்தனர். 1 அரசு, 2 ஒற்றையாட்சி, 3 மக்களின் இறைமை, 4 இறைமையைப் பிரயோகித்தல், 5 குடியரசின் ஆள்புலன், 6. தேசியக் கொடி 7 தேசிய கீதம் 8, தேசிய தினம் ஆகியன தொடர்பான பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்ற தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டாமென அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி அக் கோரிக்கைகளைக் கவனத்திற் கொள்ளாது எவ்வாறான

தடைகள் வந்தாலும் அரசியல் தீர்வினை வழங்குவதாகக் கூறிச் செயற்பட்டார். அத் தீர்வுத் திட்டம் தோல்வியில் முடிந்தது. அதி வணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரர்களின் கருத்தினைப் பெறாமல் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அவர் புதிய ஒரு அரசியலமைப்புச் சட்டத்தைச் சமர்ப்பித்து மீண்டும் முன்னைய தவறினைப் புரிந்தார். அரசியலமைப்புச் சட்டத்தைத் தோற்கடிக்க தெருக்களில் செத்து மடியும் வரை எதிர்ப்பினைத் தெரிவிப்பதாக அதி வணக்கத்திற்குரிய அஸ்கிரி மகாநாயக்க தேரர் அவர்கள் கூறினார். ஆவ் அரசியலமைப்பின் மூலப் பிரதியில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமையளிக்கப்படல் என்ற பிரிவும் விடுபட்டிருந்தது. தேரர்களுக்கு நிறைவேற்று அதிகாரம் இல்லையென சில அமைச்சர்கள் அன்று வெற்றுப்பேச்சுக்கள் பேசினாலும் தேரர்களின் எதிர்ப்பின் முன் உத்தேச அரசியலமைப்பு பின்னோக்கித்தள்ளப்பட்டது. ஆரம்பத்தில் அதற்கு ஆதரவாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தேரர்களின் கருத்தினை அனுசரித்து பாராளுமன்றத்தில் அரசியலமைப்பிற்கு தீ வைத்தனர். நாட்டின் ஒருமைப்பாடு சமாதானம் என்ற விடயங்களின் போது தேரர்களின் கருத்திற்கு செவிசாய்க்கப்பட்டல் வேண்டும் என்பதே இதன் மூலம் உறுதிசெய்யப்படுகிறது.

**“வடமாகாண சபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவது தொடர்பாக மகாநாயக்க தேரர்களினதும் பௌத்த இயக்கங்களினதும் எதிர்ப்பு தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளன. அதனை புறந்தள்ளி நடவடிக்கை மேற்கொள்வது அரசியல் ரீதியாக அரசாங்கத்திற்கு உகந்ததல்ல. அரசாங்கம் மேற்குறிப்பிடப்பட்ட குழுக்களுக்கு இசைவதா? ஆல்லது சிவில் சமூகத்தின் அதிகாரத்தைக் கொண்டுள்ள குழுக்களின் கருத்துக்களுக்கு கட்டுப்படுவதா? எனத் தீர்மானிக்க வேண்டும். மாகாண சபைகளுக்கப் பதிலாக இணைவதற்கான அதிகாரமற்ற மாவட்ட சபைகளை நிறுவுவதன் மூலம் அரசியல் அதிகாரத்தைப் பகிர்தல் வேண்டும். அவ்வாறு இனங்களை அடிப்படையாகக் கொண்டு அதிகாரம் பகிரப்படல் கூடாது. அன்று போலவே இன்றும் மகா நாயக்க தேரர்களின் கருத்து இதுவாகும்.**

1984 ஆம் ஆண்டின் வட்டமேசைக் கலந்துரையாடலின் போது தமிழர்களது மட்டுமன்றி அனைத்து இனங்களினதும் குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டதற்கு திரு. ஏ. அமர்தலிங்கம் தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார். அதி வணக்கத்திற்குரிய பளிப்பான ஸ்ரீ சந்தானந்த தேரர், மடிகே பஞ்ஞாசீஹ தேரர், வல்பொல ராஹூல தேரர் ஆகியோர் சிங்களவர்களுக்கு நேர்ந்துள்ள அநீதிகளைச் சுட்டிக்காட்டி அவர்களது அவலங்களை சமர்ப்பித்தனர். தரிசு நிலச் சட்டத்தின் கீழ் **மலைநாட்டுச்** சிங்களவர்களுக்கும் அன்று நிகழ்ந்த அநீதிகளையும் சுட்டிக் காட்டினார்கள். தெற்கின் இளைஞர்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதியின காரணமாகவே இரண்டு தடவைகள் கிளர்ந்தெழுந்தனர். அவை எதிர்காலத்தில் மீண்டும் இடம் பெறலாம். சமாதானத்திற்கான **தீர்வினைக் காணும் போது தமிழ் இனத்தைப் பற்றி** மட்டும் சிந்திப்பது தவறாகும். உலகின் ஏனைய சுதந்திர குடியரசுகள் போலவே நமக்கும் சுயகௌரவமும் சுயமதிப்பும் உள்ளது. எந்தவிதமான ஒரு வெளிநாட்டு சக்திக்கும் நம்மைப் பயமுறுத்த முடியாது. சுய மரியாதையுடன் செத்து மடிய நாங்களும் தயார். கோழையாக வாழ்வதை விட யுத்தத்தில் இறந்து போவதே மேல் என நாயக்க தேரர்கள் சுட்டிக் காட்டினர்.

> **13 ஆவது திருத்தத்திற்கமைய எதிர்காலத்தில் வட மாகாண சபை உருவாக்கப்படும் போது காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதால் ஏற்படுகின்ற நெருக்கடிகள் பற்றிக் கதைக்கும் தேரர்கள் தேசப்பற்றுள்ள நபர்கள் மற்றும் நடுநிலை செயற்பாடு கொண்ட புத்திஜீவிகள் ஆகியோருக்கு இனவாத மற்றும் தீவிரவாத முத்திரையைப் பதிப்பதற்கு அவர்கள் மீண்டும் முன்வந்துள்ளனர்.**

அதன்போது திரு. ஆமிர்தலிங்கம் இந்த வயது முதிர்ந்த தேரர்கள் என்ன கூறுகிறார்கள்? எனவும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை மட்டும் இங்கு பேசுவது போதுமானது எனவும் மிகுந்த கோபத்துடன் அதி வணக்கத்திற்குரிய மகாநாயக்கர்களைத் திட்டினார். ஆதற்கு எதிர்ப்புத் தெரிவித்து திரு. தினேஷ் குணவர்தன திரு. காமினி ஈரிய கொல்ல உட்பட அனைத்து பௌத்தப் பிரதிநிதிகளும் வட்டமேசையிலிருந்து வெளியேறினர். மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்க அரச சபைகள் எனப் பெயரிட்டு விரும்பின் இணையும் அதிகாரத்தைக் கொண்ட அதிகாரத்தைப் பகிர்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி வட்டமேசைக் கலந்துரையாடலின்போது யோசனை தெரிவித்தது. அரச சபைகள் என்பது பாரதூரமானது. ஆகவே தேசிய மட்டத்தில் பிரிப்பதற்காக உப அரச சபை என்ற சொல்லை இட்டு மாவட்ட அபிவிருத்தி சபை முறைமையின் கீழ் அதிகாரத்தைப் பகிரவும். அவற்றுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் கலந்துரையாடப்படல் வேண்டும். என்பது வணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனையாகும். ஒற்றையாட்சியிலிருந்து ஒரு அங்குலம் பூமியைக் கூடத் துண்டாடி சுயாட்சிக்காக எவருக்கும் கொடுப்பதற்கு நாம் தயார் இல்லை என அதி வணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரர்கள் உறுதியாக வலியுறுத்தியுள்ளனர். மகாநாயக்கர்கள் உட்பட பெரும்பான்மை மக்களது இன்றைய கருத்தும் அதுவே.

நாட்டில் நெருக்கடி நிலைமைகள் ஏற்படுவதைத்தவிப்பதற்கு அரச தலைவர்கள் அவ்வப்போது வணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து நாட்டு நிலைமைகள் பற்றியும் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் தெளிவு படுத்துவர். ஆயினும் அச் சந்தர்ப்பத்தில் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் உரியவாறு மக்களிடத்தில் செல்லவில்லை சுனாமி கூட்டிணைப்பு பொறிமுறை என்ற பெயரில்

ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் அதன் காரசாரத்தைக் குறைத்து சுனாமி நிவாரணச் சபை என்ற பெயரில் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலிருந்து இரண்டு மீட்டர் காணித்துண்டு ஒன்று தேரர்கள் உட்பட பெரும்பான்மை மக்களின் எதிர்ப்பினையும் பொருட்படுத்தாது ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது.

அரச பாதுகாப்பு தொடர்பாக வடக்கு கிழக்கு கடற்பரப்பின் முக்கியத்துவம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச இன உள்ளடக்கம், பிரிவினைவாதிகள் பலவந்தமாக பிடித்து வைத்திருந்த பூமியின் அளவு மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பூமி மற்றும் அதிகாரம் என்பன பற்றி சிந்திக்கும் போது முழு நாட்டையும் ஏமாற்றி சுனாமியின் நிவாரண சபை என்ற ரகசிய ஆவணத்தின் மூலம் முன்னாள் ஜனாதிபதி எமது தாய்நாட்டின் ஒரு பகுதியை பயங்கரவாதிகளுக்கு தாரைவார்த்ததை நாம் மறக்கக்கூடாது. பதவி மோகம் கொண்டு வீண்பேச்சு பேசும் அரசியல் வாதிகள் எதைப் பேசினாலும் நாட்டுக்கும் இனத்திற்கும் பௌத்த மதத்திற்கும் பாதிப்பு ஏற்படுவதை அறிந்த தேரர்கள் உட்பட சிங்கள மக்கள் எதிர்க்காலத்தில் எற்படப்போகும் அழிவினை உணர்ந்ததனால் அதற்கெதிராக கிளர்ந்தெழுந்தனர்.

> “
> **முன்னாள் ஜனாதிபதி அக் கோரிக்கைகளைக் கவனத்திற் கொள்ளாது எவ்வாறான தடைகள் வந்தாலும் அரசியல் தீர்வினை வழங்குவதாகக் கூறிச் செயற்பட்டார். அத் தீர்வுத் திட்டம் தோல்வியில் முடிந்தது. அதி வணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரர்களின் கருத்தினைப் பெறாமல் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அவர் புதிய ஒரு அரசியலமைப்புச் சட்டத்தைச் சமர்ப்பித்து மீண்டும் முன்னைய தவறினைப் புரிந்தார்.**
> ”


1987 அம் ஆண்டின் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டமையால் தமிழ் முஸ்லிம் மக்களிடையேயும் பிளவு ஏற்பட்டது. உயிரைப் பாதுகாக்க தப்பியோடிய முஸ்லிம்களின் காணிகள் பயங்கரவாதிகளினால் கைப்பற்றப்படல், அவர்களது வயல் நிலங்களுக்காக பயங்கரவாதிகள் கப்பம் பெற்றுக் கொள்ளல் என்பன காரணமாக முஸ்லிம்கள் கோபப்பட்டனர். வடக்குக் கிழக்கினை தமிழர்கள் வாழும் பூமியென மட்டும் குறிப்பிடப்பட்டவை முஸ்லிம்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதியாகவே கருதினார்கள். வடக்குக் கிழக்கு புணர்வாழ்வு நடவடிக்கைகளை பொறுப்பேற்ற அரசியல் வாதிகள் தமது தரப்பினருக்கு மட்டும் அனுசரணை வழங்குதல் தமிழ் மக்களின் அதிருப்திக்கு காரணமாய் அமைந்தது. இக் கோபதாபங்களை இல்லாதொழிக்க நினைத்த புலிகள் இயக்கம் 1988 ஆம் ஆண்டில் முஸ்லிம் ஐக்கிய மக்கள் முன்னணியுடன் கலந்துரையாடலொன்றை நடாத்தி ஒரு ஒப்பந்தத்தை செய்தனர். தீவிரவாத உரிமைகளை ஏற்றுக்கொண்டே அவ் ஒப்பந்தத்தின் பிரிவுகள் தயார் செய்யப்பட்டன.

**சில தீவிரவாத முஸ்லிம் அரசியல்வாதிகள் வடக்கு கிழக்கு மாகாண மக்களை சீற்றமடையச் செய்து தமது வாக்குகளுக்காக ஒரு அடிப்படையினை சரிசெய்துகொள்ளவே பெரும்பாலும் முயற்சிசெய்தனர். சுதந்திரமான இத் தாய்நாட்டின் அனைத்தின மக்களுடன் சகல வாழ்வுடன் வாழ்வதே தமிழ் முஸ்லிம் மக்களின் தேவையாகும். ஆயினும் அவர்களை வழிநடத்த பதவி மோகம் படைத்த அரசியல் வாதிகள் முயற்சிகள் மேற்கொள்வர். மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுமாயின் தெளிவாகவே வடக்கு கிழக்கு சிங்களவர்கள் எதிர்காலத்தில் அபாயகரமான நிலைமையொன்றை எதிர்கொள்வது நிச்சயம். போலியான சமாதான ஒப்பந்தத்தின் கீழ் வடக்கில் பயணம் மேற்கொண்ட மக்களிடம் கட்டணம் அறவிட்டது ஞாபகம் உள்ளது. அனுமதி இன்றி அப் பிரதேசங்ககளுக்கு செல்ல இயலாது போகும். தனி நாட்டிற்கு பாதை வகுக்கும் நெருக்கடியான நிலைமைகளுக்கு சமாதானத்தை விரும்பும் அனைவரும் எதிாப்புத் தெரிவித்தல் வேண்டும்.**

வடக்கு மாகாண சபையை அமைக்கும் செயற்பாடு தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. மாகாண சபையின் கீழ் காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில் உள்ள பாதிப்புக்கள் பற்றி போதியளவு விளக்கங்கள் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நாடு பூராகப் கறுப்புக் கொடி தூக்கி நிகழ்த்தப்பட்ட போராட்டத்தின் மத்தியில் பலாத்காரமாக கையொப்பமிட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் 13 வது அரசியலமைப்புத் திருத்தத்தில் மாகாண சபை மட்டுமே தற்போது எஞ்சியுள்ளது.

வடமாகாண சபைக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது தொடர்பாக மகாநாயக்க தேரர்களும் பௌத்த அமைப்புக்களும் தமது எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர். அரசாங்கம் அதனை புரக்கணித்து செயற்படுவது அரசியல் ரீதியாக சௌகரியமானதல்ல. அரசாங்கம் மேற்குறிப்பிடப்பட்ட குழுக்களுக்கு இசைவதா? ஆல்லது சிவில் சமூகத்தின் அதிகாரத்தைக் கொண்டுள்ள குழுக்களின் கருத்துக்கு அடிபணிவதா? என முடிவு செய்யப்பட வேண்டியுள்ளது. மாகாண சபைக்குப் பதிலாக இணையவும் ஒன்றிணையவும் அதிகாரமற்ற மாவட்ட சபைகளை ஏற்படுத்துவதன் மூலம் அரசு அதிகாரத்தை பகிர்தல் வேண்டும். அவ்வாறே அதிகார பகிர்வு இனங்களை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படக் கூடாது என்பதே அன்றும் இன்றும் மகாநாயக்க தேரர்களின் கருத்தாக அமைகின்றது. ஆரம்பம் முதலே எதிர்ப்பு தெரிவித்த மாகாண சபை முறைமைக்குப் பதிலாக கிராமிய அரசு அல்லது இந்தியாவின் பஞ்சாயத்து முறைமையின் கீழ் அதிகாரப் பகிர்வு தொடர்பாக அரசாங்கம் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

**நன்றி : திவயின பத்திரிகை**




# உலக நிலையை கருத்திலெடுத்தே
# அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்

மாதுளுவாவே சோபித தேரர்

**இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கெதிராக கடும் எதிர்ப்பைக் காட்டிய உங்களது நிலைப்பாட்டில் தற்போது ஓரளவு மாற்றத்தைக் காண்கிறோம். இதற்குத் தாக்கம் செலுத்திய ஏதும் காரணம் உள்ளதா?**

அக்காலத்திலிருந்த சூழலில் அதனை பலவந்தமானது என அடையாளப்படுத்தினோம். மக்களுக்காக முன்னிற்க்கும்போது அவ்வாறான முறைகளுக்கு எதிர்ப்பு காட்டுவது எமது பொறுப்பாகும். ஏனெனில் அது நாட்டின் எதிர்காலத்துக்கு முக்கியமான தாக்கம் செலுத்தியமை ஆகும். இருப்பினும் அது நாட்டின் அதியுயர் சட்டத்தின் மையப்பகுதியாகிவிட்டது. அதற்க்கு எதிரான அனைத்து அரசியல் கட்சிகளும் அதில் பங்காளராகி இம்முறையை முன்கொண்டு செய்வதற்காக பங்களிப்பு வழங்கவேண்டிய காலமிது. அப்படியாயின் வேரூன்றிப்போன அரசியல் முறைமையைப் பிடிங்கி எறிவோமென்று அடிப்படையற்ற முறையில் கூச்சலிடுவதனை விடவும், இந்த மொத்த முறையிலுமுள்ள தன்மையை விளங்கிக்கொண்டு அதற்க்குத் தீர்வு காண்பதையே நாம் செய்ய வேண்டும். அவ்வாறு பங்களிப்பு செய்வதனால் எமது நாட்டை முன்கொண்டு செல்வதற்கு

பங்காளராயிருந்தோம் என்ற ஆத்ம திருப்தி கிடைக்கும். எவரிடமும் ஆலோசிக்காமலே இது இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டது. தற்போது அது சட்டமாக உள்ளது. அதற்கமைய நீண்டகாலமாக அது அமுலிலுள்ளது. அதுமட்டுமல்ல தற்போதுள்ள அதிகாரங்களுடன் நிற்காமல் 13க்கு மேலதிகமாக அதிகாரங்களை வழுங்குவதாக ஒரு தடவை ஜனாதிபதி கூறினார். எனவே இப்போது இது தொடர்பாக மிகவும் விரிவாகவும். ஆழமாகவும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இக்காலத்தில் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இது மிக முக்கியமானது. அனைத்து கட்சிகளும் ஒன்றுசேர்ந்து தீர்மானம் எடுப்பது மிகவும் முக்கியமானது. 13ஆவது திருத்தம் 1978இல் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பின் ஒரு பகுதியொன்றாகும். அங்குமிங்கும் உதிரிப்பாகங்களை மாற்றுவதனைவிட புதிய அரசியல் யாப்பொன்றுக்காக அனைவரினதும் விருப்பத்தை பெற்றுக்கொள்வதே தற்போது முக்கியமானது. பதின்மூன்றாம் திருத்தத்தை அகற்றிவிட்டால் மட்டும் இந்த அரசியலமைப்பு மிகச்சிறந்ததாகிவிடும் என்று நினைக்கவேண்டாம். அதனைவிடவும் உடனடியாக அகற்றவேண்டிய ஏராளமான பகுதிகள் இந்த அரசியலமைப்பில் உள்ளன. அது பாவனையிலிருந்து அகற்றப்பட்ட மோட்டார் வாகனத்தைப் போன்றது. உதிரிப்பாகங்களை மாற்றி பாவனைக்கு எடுத்தால்கூட நீண்டகாலம் பாவிக்காது நடுவழியில் நிற்கும். எனவேதான் பதின்மூன்றாம் திருத்தத்தையோ, வேறு திருத்தத்தையோ, பிரிவுகளையோ அரசியலமைப்பிலிருந்து நீக்குவதனைவிடவும், இது பரந்த மக்கள் விவாதத்திற்குரிய விடயமென்பதே எமது நிலைப்பாடாகும். இதனை வடக்கு தேர்தல் காலத்தில் தொடங்கலாம். இதுபோன்றதொரு நேரத்தில் இது மிகவும் தேவையான ஒன்றெனவே நான் நினைக்கிறேன்.

**வடக்கு தேர்தலுக்கு அனைத்தும் தயாரென்பது தெரிகிறது. நீண்டகாலத்துக்குப் பின்னர் வடக்குக்கு கிடைக்கும் இந்த வாய்ப்பைப்பற்றிய தங்களது கருத்து?**


வடக்கு தேர்தல் என்றாவதொருநாள் வைக்கப்பட வேண்டியது தானே. அதுவும் இலங்கையின் ஒரு பகுதியே. ஜனநாயகம் நாட்டில் அனைவருக்கும் ஒரே சமமாக அமுல்படுத்தப்பட வேண்டும். அவ்வாறில்லாதவிடத்தில் எல்லையற்ற பிரச்சனைகள் மேலெழும். வடக்கில் நடைபெறும் தேர்தலை சாட்டாக வைத்துக்கொண்டு நடைபெறும் இந்த எதிர்ப்புக்கள் காரணமாக வடக்கு எமது நாட்டின் பகுதியொன்றில்லையா என சிலவேளை கருதப்படும்.

**தங்களினதும், வேறு சிலரினதும் தலைமையில் வெளியிடப்பட்ட அரசியலமைப்பு வரைபு தொடர்பில் சமூகத்தின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறான ஒன்றை வெளியிடுவதற்கு காரணமான நோக்கமென்ன?**

முதலில் ஒன்றைக் கூற வேண்டும். பெரும்பாலானோர் கூறுவது போன்று மிக அவசரமாக அறிமுகப்படுத்தப்பட்டதொன்றல்ல. இது தொடர்பான பல்வேறு கலந்துரையாடல்கள். முயற்சிகள் ஊடாகவே இது வெளியிடப்பட்டது. அடுத்த விடயம் எமது அரசியல் யாப்பை அறிமுகப்படுத்தியபோது எவ்வளவு எதிர்ப்புக்கள் இருந்தன? இதிலுள்ள சர்வதிகார அடையாளங்களுக்கு அன்றிலிருந்து இன்றுவரை பலர் எதிர்ப்பு தெரிவித்தாலும் அவ்வாறான எதிர்ப்புகள் தவறின்றி ஆவணப்படுத்த முடியாமற் போனது. இது அறிமுகப்படுத்தப்பட்டபோதே சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் இதனை எதிர்த்து பெரிய அழுத்தம் கொடுத்தார். சொற்களில் வேறான விளக்கங்களுடன் அரசியல்வாதிகளான கொல்வின், என்.எம் போன்றோர் இது தொடர்பாக கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர். ஆகவே இதற்க்கு பின்னணியிலிருந்த சக்தி என்ன என்பது இதன்மூலம் தெளிவாகிறது. உங்களுக்கு தெரிந்திருக்கும் இதன் மூலகர்த்தாவான ஏ.ஜே. வில்சன் அவர்கள் கூட இதன் தவறான பயன்பாட்டினால் சர்வாதிகாரம் ஏற்படலாமென பிற்காலத்தில் கூறினார். அதுமட்டுமல்ல அதிகாரத்துக்கு வருவதற்கு மக்கள் விடுதலை முன்னணியினரின் உதவி சந்திரிக்கா அம்மையாருக்கு தேவைப்பட்டது. நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதாக அவர்களுக்கு கவர்ச்சிகரமான வாக்குறுதியை வழங்கினார். “பித்தலாட்டமான அரசியலமைப்பு” என்று அவர்தான் கூறினார். 2005 மகிந்த சிந்தனை, 2010 மகிந்த சிந்தனை தொலைநோக்கு எனும் விஞ்ஞாபனங்களிலும், சரத் பொன்சேகாவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் நிறைவேற்று ஜனாதிபதி முறை அகற்றப்பட வேண்டுமென கூறப்பட்டிருந்தது. எனவே அவதானிக்கப்பட்ட கடந்த பல தசாப்தங்களில் செயற்பட்ட முறை மிகவும் பயங்கரமானது. அதற்கமைய பதவியில் இருக்கும் ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கோ, நீதிமன்றத்துக்கோ. அரசியலமைப்பு சபைக்கோ வகைப்பொறுப்புக் கூறத் தேவையில்லை. அவருக்கு எதிராக



**பதின்மூன்றாம் திருத்தத்தை அகற்றிவிட்டால் மட்டும் இந்த அரசியலமைப்பு மிகச்சிறந்ததாகிவிடும் என்று நினைக்கவேண்டாம். அதனைவிடவும் உடனடியாக அகற்றவேண்டிய ஏராளமான பகுதிகள் இந்த அரசியலமைப்பில் உள்ளன.**



**வடக்கு தேர்தல் என்றாவதொருநாள் வைக்கப்பட வேண்டியது தானே. அதுவும் இலங்கையின் ஒரு பகுதியே. ஜனநாயகம் நாட்டில் அனைவருக்கும் ஒரே சமமாக அமுல்படுத்தப்பட வேண்டும். அவ்வாறில்லாதவிடத்தில் எல்லையற்ற பிரச்சனைகள் மேலெழும். வடக்கில் நடைபெறும் தேர்தலை சாட்டாக வைத்துக்கொண்டு நடைபெறும் இந்த எதிர்ப்புக்கள் காரணமாக வடக்கு எமது நாட்டின் பகுதியொன்றில்லையா ? என சிலவேளை கருதப்படும்.**

வழக்கு தாக்கல் செய்ய முடியாது. அது போதாதென்று அவர் சட்டமா அதிபர் திணைக்களத்தையும் பொறுப்பேற்றுள்ளார். இப்போது பாருங்கள் இந்த நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய அதீத விகாரமான அதிகாரம் கீழ்நோக்கியும் சென்றுவிட்டது. நிறைவேற்று அதிகாரத்தினூடாக பொலீஸ்துறைகூட அரசியல் மயப்படுத்தப்பட்டுவிட்டது. அதனால் தங்காலை, அக்குரஸ்ஸ பிரதேச சபைத் தலைவர்கள் அடங்கலாக உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள் கூட நாட்டில் காட்டுச்சட்டம் இருப்பது போன்றே செயற்படுகின்றனர். அரசியல் பொலீசுக்கு எதனையும் செய்யமுடியாது. பொலீஸ் ஆணைக்குழு இல்லை. எமது சட்டமா அதிபர்கள் எவ்வளவுதூரம் குற்றவாளிகளுடன் நட்பாக இருக்கிறார்களென்று கூறுவதாயின் அவர்களுக்கிருக்கும் கொலைக்குற்றச்சாட்டுக்களை ஒரே இரவில் நீக்குகின்றனர். உங்களுக்கு ஞாபகமிருக்கும் அண்மையில் சமசமாஜ கட்சியின் கட்சி மாநாட்டில் சபாநாயகர் உரையாற்றும் போது நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்க வேண்டியது இன்றியமையாதது எனக் கூறியிருந்தார். 20 மில்லியன் மக்களில் யாருக்கு இது தேவையென்று கூறுங்கள். ஐ.தே.க கூட தற்போது புதிய வரைபை அறிமுகப்படுத்தத் தயாராகிறது.

**ஐ.தே.க.வுக்கு இப்போது இன்னுமொரு கோசமே அது. தாமே அறிமுகப்படுத்திய அரசியலமைப்புக்கு மாற்றொன்றையே அவர்கள் முன்வைக்கிறார்கள். இதனால் புதிய அரசியலமைப்பிலுள்ள தேவைப்பாடுகள் தொடர்பிலான நம்பகத்தன்மை பாதிக்கப்படாதா? இதற்குப் பின்னால் அரசியல் தேவைகளே காரணமாக உள்ளன என்று சிலர் கூறலாம்?**

மிகவும் எளிமையானது. இதற்காக உண்மையான மக்கள் ஆணையை பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனையோரிடமுள்ள பலம் தொடர்பில் நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. மக்கள் இறைமை எமக்குரியது. எமது முயற்சி தொடர்பாக நாம் அனைவருக்கும் வெளிப்படையாகக் கூறியுள்ளோம். இந்த கோசத்தை எழுப்பிக்கொண்டுதானே தற்போதைய ஜனாதிபதி கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்கு பாதயாத்திரை சென்றார். அனைவரும் ஒத்துழைப்பு நல்கக்கூடிய திறந்த வாய்ப்பு இதுவென நான் நினைக்கிறேன்.

**தாங்கள் இந்த அரசியலமைப்பு வரைபை ஏனைய சிறுபான்மை இனக் கட்சிகளுக்கு வழங்கினீர்களா? அவர்களது பிரதிபலிப்பு எவ்வாறானது?**

ஆம். நாம் அவர்களில் பலரை சந்தித்தோம். அவர்களது நல்ல பிரதிபலிப்பு இருந்தது. அதற்கு மேலதிகமாக முஸ்லிம், தமிழ் இன சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக நாம் இரண்டு துணை ஜனாதிபதி பதவிகளை உருவாக்கியுள்ளோம். அந்த அரசியல் தலைவர்கள் நல்ல தெளிவுடன் இருக்கிறார்களென நான் நினைக்கிறேன். அவர்களுக்கும் கௌரவமான வாய்ப்பை வழங்குவதே எமது நிலைப்பாடு.

**இந்தப் புதிய அரசியலமைப்பு வரைபு மூலம் நாட்டின் நல்லாட்சியை கட்டியெழுப்புவதற்கு கூடுதலான பங்கு வழங்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. நாட்டிலுள்ள அரசியல் பிரச்சனையை தீர்ப்பதற்காக அவ்வளவு கவனம் இதில் இல்லையே?**

பதினேழாவது திருத்தத்தை மீண்டும் நிறுவினால் பெரும்பாலான பிரச்சனைகளுக்கு பதில் கிடைக்கும் என்பதே எனது கருத்து. அதற்குரிய ஆணைக்குழுக்கள் இயங்கும்போது நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் மிகவும் நியாயமான வாய்ப்பு கிடைக்கும். இப்போது பாருங்கள் சோல்பரி அரசியலமைப்பிலிருந்து 1978 வரைக்கும் மிகவும் பிற்போக்கான, மக்கள் பங்களிப்பில்லாத அரசியலமைப்புகளின் செயற்பாடுகள்தான் இலங்கையில் இருந்தன. இந்த வரைபுக்கும் அதே நிலைமை ஏற்படுவது குறித்து நாம் விருப்பமில்லை. எதிர்காலத்தில் கிடைக்கும் பயன்மிகு பிரதிபலிப்புகளூடாக இதனை மேலும் மெருகூட்டுவதே எமது எதிர்பார்ப்பு.

**இந்திய - இலங்கை ஒப்பந்தம் அறிமுகப்படுத்தப்பட்டபோது தாங்கள் அதற்கு ஓரளவு எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும் தற்போது அதுபோன்ற எதிர்ப்புக்குப் பதிலாக அரசியலமைப்பு திருத்தத்துக்காக முன்வந்துள்ளீர்கள். இந்த மாற்றம் ஏன்?**

பிள்ளையொன்று பிறந்த பின்னர் அதனை சாகடிக்க முடியாது. அப்பிள்ளையிடம் ஏதாவது குறைபாடு இருப்பின் நாம் அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு முயற்சிப்பதனையே செய்ய வேண்டும். நாங்கள் தனிமையான நாடொன்றில் வாழவில்லை. இந்தியாவுடன் இருந்த இராஜதந்திர தொடர்புகளின் பெறுபேறே இது. அது நல்லதோ கெட்டதோ நாம் பரந்த பார்வையுடன் எதையாவது செய்ய வேண்டும். சொந்த விருப்பத்துக்கமைய விடயங்களை அரச மட்டத்தில் நீக்கம் செய்ய முடியுமா? அது நாமே உலகுக்கு வழங்கும் தவறான முன்மாதிரியாகும்.

**இந்த அரசியலமைப்பு வரைபு அறிமுகப்படுத்தல் அதிகாரத்துக்குவரும் மேலுமொரு வழியென நோக்குபவர்களும் பார்ப்பவர்களும் இல்லாமல் இல்லைத்தானே?**

நல்லதை செய்தாலும் சிலருக்கு சேறுபூசவே தோன்றும். அதற்கு பதிலளிக்கும் நேரம் வீணடிக்கப்படும். நாம் இந்த வரைபை அனைத்துத் தரப்பினருக்கும் வழங்கினோம். இது ஒரு கட்சிக்கோ, குழுவுக்கோ, நபருக்கோ மட்டுப்படுத்தப்படவில்லை. இதற்கான சிறந்த பிரதிபலப்பை பெறுவதற்கு நாம் இறுதி நேரம் வரை முயற்சியெடுப்போம். முடியாவிட்டால் 120 நாட்களுக்குள் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதில் வெற்றிபெறக்கூடிய பொது வேட்பாளரை பிரேரிக்க வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறாயின் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்து செய்யும் ஜனாதிபதி வேட்பாளருக்கே நாம் ஒத்துழைப்பு வழங்க முயற்சிப்போம். இறுதித் தீர்மானம் மக்களுடையது.

**பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பிலான இந்தியாவின் பிரதிபலிப்பு தொடர்பில் அதிகமானோர் விழிப்புடன் உள்ளனர். அது எல்லைதாண்டியது என நினைப்போரும் உள்ளனர்.**

சிரமப்பட்டாவது நாம் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உடன்படிக்கையின் இன்னொரு பலமான தரப்பு இந்தியாவாகும். இது இருதரப்பு உடன்படிக்கையாகும். எமது இராஜதந்திர செயற்பாடுகளில் பெரும்பாலானவை இவ்வாறான உடன்படிக்கைகளூடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. சர்வதேச சட்டங்களுக்கமைய கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தை ஒரு தரப்பு முடிவுறுத்துவது இலகுவான விடயமென நான் நினைக்கவில்லை. அம்மையார் (சிறிமாவோ பண்டாரநாயக்க) அளவுக்கு இந்நாட்டின் வெளிநாட்டு கொள்கையை நிலையாக பேணிச் சென்ற தலைவரை நான் சந்திக்கவில்லை. அவர் பிரதமர் சாஸ்திரியுடன் உடன்படிக்கை செய்யும்போது எதிர்க்கட்சி தலைவரான டட்லியுடன் பேசினார். பிரேமதாஸ அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தவறாகக் கதைத்தார். இந்திரா காந்தி போன்ற தலைவர்கள் அதனை அங்கீகரிக்கவில்லை. ஜயவர்த்தன அவர்கள்கூட அமெரிக்க சார்பானவரென்றே காட்டினார். எனவே நாம் குழப்பமடையாமல் இருப்பது முக்கியமானது.

**இந்நாட்டிலுள்ள பெரும்பாலான பிரச்சனைகளில் பிக்குகளின் தலையீடு விவாதத்துக்குரியது. இந்நாட்டிலுள்ள அரசியல் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு வழங்குவதும் மிகவும் சவாலான விடயமே. இங்கே பௌத்த மதகுருவுக்குரிய பணிப்பொறுப்பு என்ன?**

அதிகாரப் பகிர்வு தேவையானது என்பதில் விவாதத்துக்கு இடமில்லை. அதனை மத, சாதி அடிப்படையில் செய்யக்கூடாது. நிர்வாக அலகு ரீதியாகவே மேற்கொள்ள வேண்டும். அது உலகில் செயற்படுத்தப்படும் முறைமையாகும். மத்திய அரசு திட்டமிடும்போது நிர்வாக அலகுகள் எனப்படும் குட்டி அரசாங்கங்கள் தமக்குப் பொருத்தமானவாறு அதனை அமுல்படுத்த முடியும். காலனித்துவவாதிகளின் திட்டமிடலுக்கமைய பிரிக்கப்பட்ட நிர்வாக முறையையே நாம் இப்போதும் தூக்கிவைத்துக் கொண்டுள்ளோம். எந்தவொரு ஆக்கபூர்வமான செயற்திட்டத்தை மேற்கொள்வதாகத் தெரியவில்லை. இலங்கையில் அமைச்சுக்கள் பகிரப்பட்டுள்ள முறையைப் பாருங்கள். எவ்வளவு அறியாமை. முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி மிகவும் விஞ்ஞானரீதியாக அமைச்சுப் பதவிகளை 25 ஆக குறைத்து ஓரளவு பகிர்வைச் செய்தார். இந்த அனைத்து துறைகளிலும் உண்மையான மாற்றம். புனரமைப்பு தேவையானது என்பது உங்களுக்குப் புரியும்.


அடுத்த விடயம் நீங்கள் கேட்ட கேள்விக்கு நான் தரக்கூடிய பதிலானது பிக்குவின் வரையறையை புரிந்துகொள்ள வேண்டும்.

நான் துறவி எனும் விடயம் எப்போதும் மனதிலிருக்க வேண்டும். நாங்கள் ஏனையோரிடமிருந்து விலகிநிற்க முயற்சிக்கக்கூடாது. பிறருடன் இணைந்து தொடர்ந்தும் வாழ வேண்டும். ஒன்றாக இருந்தால் பெரும் பயணம் மேற்கொள்ள முடியுமென்பதனை எம்மவர்கள் ஞாபகம் வைத்திருக்க வேண்டும். சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களே எமக்கு வெசாக் விடுமுறையை அக்காலத்தில் பெற்றுக் கொடுத்தார். ஏன் நாம் அதனை நினைத்துப் பார்ப்பதில்லை.

**புதிய அரசியலமைப்பு வரைவு தொடர்பிலான தங்களது எதிர்பார்ப்பு?**

ஜனாதிபதி ஜயவர்த்தன அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான தவறை சீர்செய்து இலங்கையில் அவதரித்த சிறப்பான அரசத் தலைவராக வரலாற்றில் இடம்பெறுவதற்கு மகிந்த ராஜபக்ஷ அவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கொள்வாரென நாம் எதிர்பார்க்கிறோம். இதற்கு தேவையானது மக்கள் நேயமுள்ள அரசியல் குறிக்கோள் மட்டுமே. எந்த அரசியல் தலைமை மூலம் இந்த சிறப்பான குணாம்சம் வெளிப்படுமென பெரும் எதிர்பார்ப்புடன் இருக்கிறோம்.

**குறிப்பு : மஞ்சுள கஜநாயக்க**



**2005 மகிந்த சிந்தனை, 2010 மகிந்த சிந்தனை தொலைநோக்கு எனும் விஞ்ஞாபனங்களிலும், சரத் பொன்சேகாவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் நிறைவேற்று ஜனாதிபதி முறை அகற்றப்பட வேண்டுமென கூறப்பட்டிருந்தது. எனவே அவதானிக்கப்பட்ட கடந்த பல தசாப்தங்களில் செயற்பட்ட முறை மிகவும் பயங்கரமானது.**



Photo Source: www.picsearch.com

# வடக்கிற்கு அதிகாரங்களைக் கோருவது நியாயமானதே

முன்னாள் ஜனாதிபதி
***சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க***

**13 ஆவது அரசியலமைப்புச் சட்டம் இலங்கையில் அதுவரை இருந்த ஒற்றையாட்சிக் கட்டமைப்பினை விரிவான அதிகாரப் பகிர்வுக் கட்டமைப்பிற்கும் கொண்டு சென்றது. மக்களது கருத்து எதுவாக இருந்தாலும் நீங்கள் அச் சந்தர்ப்பத்திலும் விஜயகுமாரதுங்க அவர்களுடன் அதற்கு சார்பாக இருந்தீர்கள். இது பற்றி இன்று நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கும் அனைத்து இனங்களுக்கிடையிலும் மக்கள் குழுக்களுக்கிடையிலும் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கும் வலுவடையச் செய்வதற்கும் 13 ஆவது திருத்தம் போன்ற ஒன்று அத்தியவசியமாகும். சிறுபாண்மையினர்கள் வாழுகின்ற ஏனைய நாடுகளிலும் அவர்களுக்கு ஏதாவதொரு காரணத்திற்காக குறைவாகக் கவனிக்கப்படுகிறார்கள். எனக் கருதப்படுமாயின் தனிநாட்டுக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சிலா் தனிநாடு வரைக்கும் செல்லவில்லை. சில நாடுகளில் விரிவான அதிகாரப் பகிர்வொன்றினைக் (Federalism) கோருகின்றனர். ஏதோ ஒரு விதத்தில் அதிகாரப் பகிர்வு மூலம் அல்லது சமஷ்டி அரசியலமைப்புச் சட்டத்தினூடாக அல்லது குறைவான அதிகாரங்களுடனோ அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட்ட இடங்களில் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. ஆபிரிக்காவிலும் இந்தியாவிலும் மேலும் ஏராளமான உதாரணங்களைக் கூறலாம். இந்தியாவில் 28 மாநிலங்கள் உள்ளன. இந்தியா சுதந்திரம் பெற்றவுடனேயே சமஷ்டி ஆட்சி முறையொன்று ஏற்படுத்தப்படாதிருப்பின், அந்தந்த மாகாணங்களில் வாழ்கின்ற பலதரப்பட்ட இனத்தவர்களுக்கு தத்தமது நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு அதிகாரங்கள் வழங்கப்படாதிருப்பின் தற்போது இந்தியா துண்டாடப்பட்ட ஒரு நாடாக இருந்திருக்கும்.

நாட்டின் ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் பிளவு ஏற்படாது, நாடு இரண்டாகப் பிரிவதைத் தடுப்பதற்கு 13 ஆவது திருத்தம் நல்லதொரு தீர்வு என நான் கருதுகின்றேன்.

எனது ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட “அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டைப் பிளவுபடுத்தாமலிருப்போம்” எனும் முன்மாதிரி இற்றைக்கும் பொருந்தும். இது பற்றிய அறிவில்லாத மனிதர்கள் தீவிரவாதக் கருத்துக்களைக் கூறி கோசமெழுப்பத் தொடங்கினார்கள். ஆவ்வாறு கூறும்



**நாட்டின் ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் பிளவு ஏற்படாது, நாடு இரண்டாகப் பிரிவதைத் தடுப்பதற்கு 13 ஆவது திருத்தம் நல்லதொரு தீர்வு என நான் கருதுகின்றேன்.**

பிக்குகளும் பிக்குகள் அல்லாதவர்களில் எத்தனை பேர் பல்கலைக்கழகம் ஒன்றின் அருகில் கூட சென்றிருப்பார்கள்? நான் அவ்வாறு கூறுவதற்குக் காரணம் பல்கலைக்கழகம் செல்வதென்பது பெரிய ஒரு விடயம் என்பதற்கு அல்ல.

சற்று அதிகமாக கல்வி பயின்றுள்ளவர்களுக்கு நன்கு வாசித்து விளக்கிக் கொள்ள முடியும். அரசாங்கத்தின் சில தலைவர்களுக்கும் இது பொருந்தும். அரசியல் இலாபங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்குமாக, மக்கள் அதிகாரம் தொடர்பாக வெறுப்படைந்துள்ள ஒரு சந்தர்ப்பத்தில் இனவாதத்தைத் தூண்டி தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு தந்திரமாகவே நான் இதைக் காண்கின்றேன். இந்தியாவைப் போன்று இலங்கையிலும் சமஷ்டி முறைமையொன்று ஏற்படுத்தப்படுமாயின் இந்த நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தலாம். மிகப் பெரிய அளவில் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து சமஷ்டி முறைமையொன்றை வழங்கத் தேவையில்லை. குறைந்தாலும் முதிர்ச்சியைக் கொண்டுள்ள ஒரு நாடு செய்ய வேண்டிய ஆகக் குறைந்த செயல் 13 ஆவது திருத்தம் என்பதை நான் கூற விரும்புகிறேன்.

எனது ஆட்சிக் காலத்தில் 13இற்கும் அப்பால் சென்ற அதிகாரப் பகிர்வு பற்றி யோசனை தெரிவிக்கப்பட்டது. அப்போது இந்த நாட்டில் யுத்தமொன்று காணப்பட்டது. எனக்கு வெறுமனே பொய் பேசுவதற்கோ முளைக்கோளாறு காரணமாகவோ புதியதொரு அரசியலமைப்பை உருவாக்கும் தேவை உருவாகவில்லை. தற்போது இடம்பெற்றுள்ளதனைப்போல் நானும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்திருக்கலாம். 1994 ஆம் ஆண்டு என அரசாங்கம் பதவிக்கு வந்தபோது வடக்கின் 5 மாவட்டங்களினதும் கட்டுப்பாடு எல்.ரீ.ரீ.ஈ யிடமே காணப்பட்டது. பிரபாகரன் யாழ்ப்பாணம் கச்சேரியிலிருந்து அனைத்து அரச அதிகாரிகளுக்கும் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தார். அரசனைப் போன்று 5 அல்லது 6 இராணுவ முகாம்கள் மட்டுமே அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தன. பலாலி, காங்கேசன்துறை, முல்லைத்தீவு சிலாவத்துறை, வவுனியா, மன்னார் ஆகிய இராணுவ முகாம்கள் மாத்திரமே அவ்வாறு வரையறுக்கப்பட்டிருந்தன. பலாலியிலிருந்த எமது படைவீரர்களுக்கு உப்புத் தன்மை காரணமாக குடிநீர் குடிக்க முடியாது. அவர்களுக்கு குடிப்பதற்கு நீர் தேவைப்படும் போது வெளியில் அமைந்துள்ள கிணற்றிற்குச் செல்ல பிரபாகரனுடன் தொலைபேசியில் கதைக்க அனுமதி பெற்றனர். அவரிடம் அனுமதி பெற்றே பலாலியிலிருந்து வெளியே செல்ல வேண்டியிருந்தது. மக்கள் கட்சியில் இருந்துகொண்டு விஜேபோன்றோர் எமக்கு இவற்றை அறிவித்தார்கள். அந்த முகாம்களில் இரண்டு நாட்கள் இருந்தோம். ஆகவே எப்படியோ அந்நிலைமையிலிருந்து முழு வடக்கினையும் மீட்டெடுப்பதற்கு நான் தலைமை தாங்கினேன். எல்.ரீ.ரீ.ஈ யினரின் கட்டுப்பாட்டிலிருந்து 75% புவியியல் பிரதேசத்தை விடுவித்தோம். முதல் இரண்டு ஆண்டுகளில் அதிகாரப் பகிர்வு மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்போமென நாம் பதவியேற்றவுடனேயே எல்.ரீ.ரீ.ஈ இனருக்குக் கூறினோம். பிரபாகரன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு 8 மாதங்களில் பின் அதனைப் புறந்தள்ளி விட்டு சென்று விட்டார். எதுவித காரணமும் இன்றி பின்னர் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. யுத்தமென்றால் யுத்தம் சமாதானமொன்றால் சமாதானம் என்று நான் கூறினேன். நாமும் யுத்தம் புரிந்தோம்.

அவர் யுத்தத்தை ஆரம்பித்து 8 மாதங்கள் செல்லும்போது நாம் யாழ்ப்பாண குடாநாடு முழுவதையும் கைப்பற்றினோம். நான் மட்டும் தனியாக அதைச் செய்யவில்லை. அனுருத்தரத்வத்த முன்னாள் எனது பிரதி அமைச்சர், அப்போது பதவி வகித்த இராணுவத் தளபதிகள் ஆகியோர் திறமையாக பணி புரிந்தனர். அச்சந்தர்ப்பத்தில் அனைத்து படைவீரர்களையும் ஒன்று திரட்டி ஒரு திட்டத்திற்கமைய பணியாற்றினோம். நான் தான் நிதி சேகரித்தேன். முடியுமான அளவு களவுகளைக் கட்டுப்படுத்தினேன். இறுதியாக மகிந்த ராஜபக்ஷவுக்கு அரசாங்கத்தை ஒப்படைக்கும் போது முழு வடக்கிலும் 25% மட்டுமே விடுவிக்கப்பட வேண்டியிருந்தது. முல்லைத்தீவுக்கும் கிளிநொச்சிக்கும் அண்மித்த பிரதேசங்களே அவை ஆகும்.

இவர்கள் தீவிரமாக முன்னேறிச் சென்று பெற்றுக்கொண்டதை ஏன் என்னால் பெற முடியவில்லை என என்னிடம் பலர் கேட்டார்கள். இந்த 25% ஐ எடுக்கச் சென்றிருந்தால் இது தான் அன்றும் நடந்திருக்கும். அதாவது இரண்டு அல்லது மூன்று இலட்சம் அப்பாவி மக்களைக் கொலை செய்ய வேண்டியிருந்திருக்கும். பிரபாகரன் செய்த கீழ்தரமான செயல் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து நாம் எல்.ரீ.ரீ.ஈ ஐ விரட்டியடித்த போது யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்து சுமார் 5 இலட்சம் மக்களைப் பிரபாகரன் பலவந்தமாக துப்பாக்கி முனையில் வெளியே எடுத்துச் சென்றார். அது தான் கெரில்லா தந்திரோபாயம் சுற்றிவர பொது மக்கள் சூழந்திருந்தால் இராணுவம் கொலை செய்யத் துணியாது என்ற நம்பிக்கையே அதற்கான காரணம். அவர்கள் முல்லைத்தீவில் சென்று குடியேற முன்னர் இவர்களை மீண்டும் (அதுவும் எனது திட்டமே) யாழ்ப்பாணத்திற்கு வரவழைக்க

வேண்டுமென்று நான் கூறினேன். பிரபாகரனின் பக்கத்தில் வைக்க முடியாதென்று கூறிய போது அவர்கள் பயங்கரவாதிகள் என்று இராணுவத்தினர் கூறினார்கள். புயங்கரவாதிகளானாலும் அவர்கள் எனது மக்கள் என நான் கூறினேன். பயங்கரவாதிகளை நல்ல பிரஜைகளாக்குவதே எனது நோக்கம். பிரபாகரனைத் தனிமைப்படுத்தி ஏதாவது செய்யவே இலக்கு வைக்கப்பட்டது. எம்மால் அவரைக் காப்பாற்ற முடியாதென்று எமக்குத் தெரியும். அவர் ஒரு போதும் மாறமாட்டார். ஆகவே பிரபாகரனைத் தனிமைப்படுத்த வேண்டுமாயின் நாம் இந்த மக்களை காப்பாற்ற வேண்டும். அவர்களில் பெரும்பாலானோர் சிவில் மக்கள் ஆவர். பலவந்தமாக பிரபாகரன் அவர்களைப் பயன்படுத்தினர். மக்கள் பயங்கரவாதிகளல்ல. எப்படியோ நான் அந்த "லவ்ட் ஹெஜஸ்" என்ற பெரிய ஒலிவாங்கிகளை அனுப்பினேன். இராணுவம் மீது மக்கள் நம்பிக்கை வைத்தனர். ஆயினும் ஒரு பகுதியினர் விரும்பவில்லை. அவற்றை இராணுவத்தினர் நின்ற எல்லைகளுக்கு வழங்கினேன். மக்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, காடுகளில் போக இடமின்றி மரங்களின் மேல் இருந்தார்கள். முடிந்தளவு அறிவித்தல் கொடுத்தோம். ஆகாயமார்க்கமாக துண்டுப் பிரசுரங்களைப் போட்டோம். மீண்டும் வாருங்கள் நாம் உங்களுக்கு எதுவும் செய்யமாட்டோம். நாம் உங்களைப் பரிசோதிப்பது (12:01) உங்களிடம் ஆயுதம் உள்ளதா என அறிவதற்கு மாத்திரமே. எமக்கு வேறொன்றும் தேவையில்லை. அந்தநேரம் தற்போது இவர்கள் கேட்பது போல் ID காட் கேட்க முடியாது தானே. தப்பியோடியவர்களிடம் எவ்வாறு ID காட் கேட்பது? ஐந்து இலட்சம் பேரில் சுமார் மூன்று இலட்சம் பேர்வரை மீண்டும் வந்தார்கள். அவர்களை நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக குடியமர்த்தினோம். புலர் அவர்களுக்கிருந்த வீடுகளுக்குச் சென்றனர். நாங்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற மேற்கொண்ட யுத்தத்தின் காரணமாக பலரது வீடுகள் அழிவடைந்தன. அதை மீளக் கட்டுவதற்கு எமக்கு இது போன்று மூன்று வருடங்கள் செல்லவில்லை. நான் உடனே நிதி வழங்கினேன். சர்வதேச ரீதியாகவும் எமக்கு நன்றாக உதவிகள் கிடைத்தன. நாம் அதனை மக்களுக்கு வழங்கி வீடுகளைக்கட்டிக் கொள்ளச் சொன்னோம். எமக்கு பொருட்கள் இருக்கவில்லை. காணப்பட்ட சீமெந்து போன்றவைகளை இயன்ற வரை நாங்கள் அதனை கப்பல்களில் ஏற்றி அனுப்பினோம் எப்படியோ பிரபாகரன் பலாத்காரமாக ஒன்றரை இலட்சம் மக்களை தடுத்து வைத்துக் கொண்டார். அவர்களின் சிலர் சுயவிருப்பத்திலேயே இருந்தார்கள். இந்த ஒன்றரை இலட்சம் மக்கள் தான் பிரபாகரனும் எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களும் ஒழித்துக் கொண்டிருந்த குகைகளைச் (மாளிகை போன்ற) சுற்றி இருந்தனர். சுற்றிவர இரண்டு மூன்று வலயங்களை அமைத்திருந்தனர். அது போலவே வீடுகளைக் கட்டி அதில் மக்களை குடியமர்த்தினார்கள். அவ் அனைத்து மக்களையும் கொன்றுவிட்டுத்தான் இத் தலைவர்களை பிடிக்க வேண்டியேற்பட்டது. அதனால் தான் நான் தொடர்ந்தும் பேச்சு வார்த்தைக்கு வருமாறு (கத்தோலிக்க) பிஷொப்மாரியிடம் செய்தி அனுப்பினேன். அவர்களுடன் நெருங்கிய உறவு காணப்பட்டது. அப்படியும் வரவில்லை.

அதன் பின் சர்வதேச ரீதியாக நோர்வேயினை வரவழைத்து அவர்களையும் அனுப்பினோம். இறுதியில் ரனில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தில் சிறிது இணக்கம் காணப்பட்டது. பின்னர் மீண்டும் எனது அரசாங்கம் வந்த போது ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

எல்.ரீ.ரீ.ஈ இலங்கை அரசாங்கமொன்றுடன் மிகச் சிறந்த கைச்சாத்திட்ட சிறந்த ஒப்பந்தம் அதுவென நான் நினைக்கிறேன். அது மிகவும் முன்னே சென்ற ஒரு ஒப்பந்தமாகும். அதைச் சரியாக நடைமுறைப்படுத்த இடமளித்திருந்தால் எம்மால் பெருமளவு இப் பிரச்சினையைத் தீர்த்து இருக்கலாம்.

**சுனாமி நிகழ்ந்ததன் பின்னர் எல்.ரீ.ரீ.ஈ இற்கு எதுவுமே செய்ய முடியாமலிருந்த நேரத்தில் தமக்கு நேரடியாக நிதி வழங்குமாறு கோரி உலகின் நாலா பக்கங்களுக்கும் சென்றார்கள். சுந்திரிக்காவின் அரசாங்கம் யுத்தத்தை நிறுத்த உங்களுக்கு அழைப்பு விடுக்கிறது என்பதால் அவ்வாறு செய்யத் தேவையில்லையென அனைத்து நாடுகளும் அவ் வேளையில் தெரிவித்தன. யுத்தத்தை நிறுத்துங்கள், நாம் அரசுக்கு நிதி வழங்குகிறோம். அவர்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். இதனால் அவர்களும் அச் சந்தர்ப்பத்தில் சிறந்ததொரு தீர்மானத்தை எடுத்தார்கள். நாம் சொல்லமலேயே பின்பு எல்.ரீ.ரீ.ஈ வந்து நாம் பேச்சுவார்த்தை நடாத்துவோம் என்று சொன்னார்கள். நாம் ஒன்றாக செயலாற்றுவோம், இதனை மீளக் கட்டியெழுப்புவோம் என்றும் கூறினார்கள்.**

பின்னர் எனது சமாதான செயலகத்தைச் சேர்ந்த ஜயந்த தனபால உட்பட ஒரு குழுவினரும் பிரபாகரன் அனுப்பிய புலித்தேவன் உள்ளிட்ட சிலரும் பேச்சுவார்த்தைகளை நடாத்தி நாம் இதற்கு ஒப்பமிட்டோம். முதல் தடவையாக "இலங்கை அரசாங்கம்" என எல்.ரீ.ரீ.ஈ ஏற்றுக் கொண்டனர். கொழும்பு அரசாங்கம், வடக்கு அரசாங்கம் எனத்தான் இதுவரை கூறி வந்தார்கள். அதன் பின் முதல் தடவையாக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து அங்கத்துவத்தைப் பெற்று குழுக்களில் ஒன்றாக இருந்து தீர்மானங்களை எடுத்து அத் தீர்மானங்களை அமுல்படுத்த இணங்கினார்கள். அதாவது



**இவர்கள் தீவிரமாக முன்னேறிச் சென்று பெற்றுக்கொண்டதை ஏன் என்னால் பெற முடியவில்லை என என்னிடம் பலர் கேட்டார்கள். இந்த 25% ஐ எடுக்கச் சென்றிருந்தால் இது தான் அன்றும் நடந்திருக்கும். அதாவது இரண்டு அல்லது மூன்று இலட்சம் அப்பாவி மக்களைக் கொலை செய்ய வேண்டியிருந்திருக்கும்.**



**எல்.ரீ.ரீ.ஈ யினரின் கட்டுப்பாட்டிலிருந்து 75% புவியியல் பிரதேசத்தை விடுவித்தோம். முதல் இரண்டு ஆண்டுகளில் அதிகாரப் பகிர்வு மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்போமென நாம் பதவியேற்றவுடனேயே எல். ரீ.ரீ.ஈ இனருக்குக் கூறினோம். பிரபாகரன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு 8 மாதங்களில் பின் அதனைப் புறந்தள்ளி விட்டு சென்று விட்டார். எதுவித காரணமும் இன்றி பின்னர் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. யுத்தமென்றால் யுத்தம் சமாதானமொன்றால் சமாதானம் என்று நான் கூறினேன். நாமும் யுத்தம் புரிந்தோம்.**

புனரமைப்பு மற்றும் மீளக்கட்டியெழுப்புதல் என்பன தொடர்பாகவாகும்.

அதன் பின் உண்மையிலேயே நடந்ததென்னவெனில் மகிந்த ராஜபக்ஷ சரத் சில்வாவுடன் இரகசிய ஒப்பந்தம் மேற்கொண்டதாகும். இதனைத் தோற்கடிக்க வேண்டும் என அவர் பிரதம நீதியரசருக்குக் கூறினார்.

ஆகவே அத் தீர்ப்பை வழங்கினார். ஆதன் பின் மூன்று மாதங்களுக்குப் பின் மற்றைய தீர்ப்பு வழுங்கப்பட்டது. உண்மையில் நிவாரணப் பொறிமுறையை அவர் முற்றுமுழுதாக தூக்கி எறிய வில்லை. ஆயினும் அதிலிருந்த நல்ல பகுதி சட்டத்திற்கு முரணானது எனக் கூறி அகற்றப்பட்டது. அப்படியாயின் இது நமக்குத் தேவையில்லையென அதன் பின்பு எல்.ரீ.ரீ.ஈ யினர் கூறினார்கள்.

ஆயினும் ஜனாதிபதி அதிகாரங்கள் எனக்கிருப்பதனால் சரத் சில்வாவுக்கு என்னை கூட்டிலடைக்க முடியாதென்பதால் பயப்பட வேண்டாம் என நான் கூறினேன். குறிப்பிட்ட பகுதிகள் நீக்கப்படவில்லை எனக் கருதி தான் அனைத்து கட்டளைகளுக்கும் ஒப்பமிட்டுத் தருவேன் என்றும் அவற்றை அமுல்படுத்தத் தயார் என்றும் அவற்றை நாம் மேற்கொள்வோம் என்றும் இது தொடர்பாக என்னை நம்புமாறும் நான் கூறினேன்.

அதன்போது எல்.ரீ.ரீ.ஈ எதுவுமே பதில் கூறவில்லை. அவதானித்துக் கொண்டிருந்தனர். அதன் பின் எனக்கு வீட்டுக்குப் போகச் சொன்னார்கள் பின்னர் காரியம் அத்துடன் நிறைவுபெற்றது. அவை சரத்சில்வாவின் நடவடிக்கை என்று கூறலாம். மகிந்த ராஜபக்ஷ தான் அதைச் செய்தார் என்று கூறினால் உங்கள் CPA யை நீங்கள் மூட நேரிடும். இதனை பொதுமக்கள் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்.

13ஆவது திருத்தம் பற்றி தற்போது பெரிதாய்க் கதைக்கிறார்கள். உங்களுடைய கேள்விகளுக்கான தெளிவான பதில் கிடைத்திருக்குமென நான் நினைக்கிறேன். எந்த வகையிலும் 13 ஆவது திருத்தத்தினால் நாடு இரண்டாகப் பிரியாது.

**இரண்டாகப் பிரியப் போகும் நாட்டை ஒன்றுபடுத்தலாம். தமக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தமிழ் மக்கள் கூறுகின்றனர். எவ்வகையான அநீதி நடந்ததாவென சிலர் வினவுகின்றனர். அநீதி நடைபெற்றுள்ளது. நான் இந்நாட்டு அரச சேவையில் பணிபுரிந்துள்ளேன் தற்போது எனக்கு தகாத வார்த்தைகளால் திட்ட ஆரம்பிப்பார்கள். எனக்கு குண்டு வைக்கவும் இடமுண்டு. ஆயினும் உண்மையைப் பேச வேண்டும். விவசாய அமைச்சின் காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் நான் அரசாங்க அதிகாரியாக 5 ஆண்டுகள் பணி புரிந்துள்ளேன்.**

அன்று காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் சுமார் 500 நபர்கள் பணி புரிந்தார்கள். ஒரு தமிழர் கூட இருக்கவில்லை. பின்பு எனது பிரிவுக்கு கணக்காளர் ஒருவர் தேவைப்பட்டார். நாம் அப்பதவிக்காக மேற்கொண்ட நேர்முகப் பரீட்சையிலிருந்து சிறந்த தகைமையுள்ள பாராளுமன்றத்தில் சேவையாற்றிய ஒருவரைத் தெரிவு செய்தோம்.

அப்போது எனது பிரதான அதிகாரிகள் ஓடி வந்து மெடம் ஏன் தமிழர் ஒருவரை தெரிவு செய்தீர்கள் எனக் கேட்டனர். அப்பபோது தமிழர் பிரச்சினையொன்று ஏற்பட்டிருக்கவில்லை (73 ஆம் ஆண்டு) இவ்வாறான ஒரு நிலைமை அனைத்து அரச அலுவலகங்களிலும் உருவாக்கியிருந்தது. பின்னர் இப் பிரச்சினை தொடர்பாக நான் தேடத் தொடங்கினேன்.

நான் எனக்குத் தேவைப்படுகின்ற தகைமை உள்ளவரைத்தான் தேர்ந்தெடுத்தேன். அப்போது நான் ஒரு மாக்சிஸ்ட் எனது மாக்சிஸ சிந்தனையுடன் திணைக்களங்களில் தலையிட்டு தேடத் தொடங்கினேன். மிகக் குறைவாகவே தமிழர்கள் காணப்பட்டனர்.

**மாகாண சபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதனால் பாரிய பிரச்சினைகள் எழுவதாக பாதுகாப்புச் செயலாளர் உட்பட பலர் கூறுகின்றனர். இதற்கு ஏதும் அடிப்படை உண்டா?**

பாதுகாப்புச் செயலாளர் இதுபற்றிக் கற்கவில்லை. மிகச் சமீபத்திலேயே அதிகாரப் பகிர்வு பற்றி கேள்விப்பட்டிருப்பார். ஒவ்வொருவரது பெயர்களைக் குறிப்பிட வேண்டிய தேவையில்லை. அரசாங்கத்தின் கற்றறிந்த பல அமைச்சர்கள் அது அவ்வாறல்ல எனப் பதிலளித்துள்ளார்கள் அல்லவா?

எனது கருத்தும் அதுவே. அது பற்றி நன்றாக பத்திரிகைகளிலும் கருத்துக்கள் வெளிவந்தன. அந் நபர்களுக்கு வேறு நபர்களை ஈடுபடுத்தி திட்டித் தீர்த்ததும் இந்த அரசாங்கம் தான்.

ஆனாலும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதாகக் கூறிவிட்டு தெற்கில் வந்து தாக்குவதற்கு அதிகாரமில்லை தானே.

அவர்களது நடவடிக்கைகளை நிருவகிக்கின்ற பொலிஸ் அதிகாரங்கள் மட்டும் தான்

அவர்களுக்கு வழங்கப்படும். (பிரதி பொலிஸ் மா அதிபர் வடக்கிலிருந்து) நேரடியாக மத்திய அரசின் பொலிஸ் மா அதிபராகத்தான் இங்கு வருவார். வடக்கினை நிருவகிக்கும் பொலிஸ் முதல்வராக அவர்தான் இருப்பார். இங்குள்ள பொலிஸ் மா அதிபரே இற்கு தான் முழுப்பொறுப்பையும் ஏற்பார். எனவே அவர்கள் அஞ்சுவது போல நடக்குமா?

நடைமுறையினை நாம் பார்ப்போம். அவ்வாறானதொன்று இலங்கையில் நடைபெற்றுள்ளதால், அதைச் செய்வதாயின் எல்.ரீ.ரீ.ஈ தான் செய்துள்ளது. இராணுவத்தினைப் பயன்படுத்தி எல். ரீ.ரீ.ஈ. தாக்குதலை நடத்தவில்லை. அங்கு தமக்கென பிரத்தியேகமாக இராணுவமென்றை உருவாக்கித்தான் தாக்கினார்கள். நாம் கவனமாக இருக்க வேண்டுமென்பது உண்மை தான். ஆயினும் நாம் அதனைச் சரியாக ஆய்வு செய்வோமாயின் சில நாடுகளில் தொகையாகச் செல்வது போல் பொலிசிலிருந்தோ இராணுவத்திலிருந்தோ ஒருவர் கூட எல்.ரீ.ரீ.ஈ உடன் இணைந்து கொள்ளவில்லை அல்லவா?

சிரியாவில் இராணுவத்தினர் அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சியாளர்களுடன் வகைதொகையினர் செல்கின்றனர். இலங்கையில் ஒரு போதும் அவ்வாறு நடக்கவில்லை.

**நான் சொல்வதும் பொலிஸ் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுத்தான் வழங்க வேண்டும். வடக்கிற்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப் பட்டால் அன்றாடம் நடைபெறும் களவு, கொள்ளை, ஊழல் போன்ற குற்றச் செயல்கள் பற்றியே பொலிஸ் நடவடிக்கை மேற்கொள்ளும்.**

எமது சிங்களவர்கள் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்குச் சென்று அவர்களைத் தாக்கி தீயிட்டுக் கொளுத்தி வீடுகளை எரிக்கும் போதும் அடித்து நொறுக்கி வெட்டி கொலை செய்யும் போதும் அவர்கள் அஞ்சுவதில் நியாயமில்லையா? தற்போது சமாதானம் உருவாகியுள்ள சூழலிலும் பாதுகாப்புப் பிரிவுகளுடன் தொடர்பான சிலர் தமிழ் விதவைப் பெண்கள் மீது பாலியல் பலாத்காரம் புரிகின்றனர். யுத்தம் முடிவடைந்து ஒரு வருடம் கழிகின்ற போதே 13,14,15 வயதுடைய பெரும்பாலான சிறுமிகள் கருவுற்றிருந்தார்கள்.

அதனால், இவ்வாறான குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக எங்களது ஆட்களைப் போட்டு எமக்குள் ஒரு பொலிசை உருவாக்க வேண்டும் என்று சொல்வது அநீதியா?

பிரதி பொலிஸ் மா அதிபரின் கட்டளைப்படியே அவர்கள் மேற்பார்வை செய்யப்படுவார்கள். அப்போது பழைய எல்.ரீ.ரீ.ஈ இனர்கள் சிலரை ஆட்சேர்க்க இவர்களுக்குத் தேவைப்படும். அது நன்றாக ஆராய்ந்து சிந்தித்து மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அப்போது ஆட்சேர்க்கும் போதே கட்டுப்பாடு ஒன்று ஏற்படும். வடக்கின் அனைத்து இடங்களிலும் இராணுவம் உள்ளது. உண்மையில் சிவில் நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களே பொலிசார். போலிசாரை யுத்தத்திற்குப் பயன்படுத்துவோம் என எனது ஆட்சியின் போது அமைச்சர் ரத்வத்த அவர்கள் என்னுடன் வாதிட்டார். நான் அதை மறுத்தேன். பல வருடங்கள் இவ்வாறு மறுத்தன் பின்பு இறுதியில் நான் அனுமதியளித்தேன். பின்னர் ஏற்கனவே இருக்காத ஊழல் பொலிசிலும் புகுந்தது. இதன் காரணமாக கடந்த காலங்களில் இடம்பெற்றவற்றை தற்போது உவமானமாகக் கொள்ள முடியாது. எல்.ரீ.ரீ.ஈ இயக்கமாக உருவாகி பாரிய யுத்தமொன்றைச் செய்யும் நிலைமைக்கு வளர்ச்சியடைந்த வேளையில் வடக்கில் இராணுவம் இருக்கவில்லை. எனவே இவர்களால் சுதந்திரமாக ஒன்று சேர முடிந்தது. வடக்கில் பொலிஸ் நிலையங்கள் மிகச் சிறிய அளவில் காணப்பட்டதுடன் பொலிஸ் அதிகாரிகள் ஒரு சிலரே அங்கு இருந்தனர். முறையாக ஆயுதங்கள் கூட வழங்கப்படவில்லை.

தற்போது உலகத்திலேயே உள்ள மிகச் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் (பெரும்பாலானவை நான் வரவழைத்து வழங்கியவை) சகிதம் முப்படைகளின் முகாம்கள் எல்லா இடங்களிலும் இருக்கும் போது வட மாகாண சபைக்குப் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டாலும் எவ்வாறு அவர்கள் தாக்குவார்கள்? யார் மறுத்தாலும் நான் சவால் விடுகிறேன். 83 ஆம் ஆண்டு கறுப்பு ஜீலை இடம் பெறவில்லையென்று கூற முடியுமா? 58 ஆம் ஆண்டில் தமிழ் மக்களைத் தாக்கவில்லை எனக் கூற முடியுமா? யுத்தம் முடிவடைந்த பின் சிறைப்பிடித்த சிவிலியன்களான மக்களுக்கு இவ் அரசாங்கம் பல்வேறு இன்னல்களைக் கொடுக்கவில்லையெனக் கூற முடியுமா?

ஆகவே அம் மக்கள் தமது பிரதிநிதிகளை சனநாயக முறையில் தெரிவு செய்ய, மாகாண சபைகள் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தின் கீழ் குறைந்தது எம்மைப் பாதுகாக்கின்ற எம்மைத் தாக்காத ஒரு பொலிசை நாம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறுவது நியாயமில்லையா? ஆயினும் முன்பு கூறியவாறே அப் பொலிசும் நிருவகிக்கப்படும். தேவையாயின் நான் மகிந்த ராஜபக்ஷவுக்கு அந்த நிருவகிக்கும் முறையினையும் திட்டத்தையும் வழங்கத் தயார்.



**எல்.ரீ.ரீ.ஈ யினரின் கட்டுப்பாட்டிலிருந்து 75% புவியியல் பிரதேசத்தை விடுவித்தோம். முதல் இரண்டு ஆண்டுகளில் அதிகாரப் பகிர்வு மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்போமென நாம் பதவியேற்றவுடனேயே எல். ரீ.ரீ.ஈ இனருக்குக் கூறினோம். பிரபாகரன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு 8 மாதங்களில் பின் அதனைப் புறந்தள்ளி விட்டு சென்று விட்டார். எதுவித காரணமும் இன்றி பின்னர் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. யுத்தமென்றால் யுத்தம் சமாதானமொன்றால் சமாதானம் என்று நான் கூறினேன். நாமும் யுத்தம் புரிந்தோம்.**


Photo Source: www.picsearch.com

**நீங்கள் பதவியிலிருந்த 10 ஆண்டுகளின் போது மாகாண சபைகளை வலுப்பெறச் செய்வதற்காக காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்க வில்லையென்ற குற்றச்சாட்டு இருக்கிறது.**

சிங்கள மக்கள் கேட்காமலேயே மாகாண சபை முறை கொண்டுவரப்பட்டதே அதற்கான காரணமாகும். சிங்கள மக்கள் கேட்காமலேயே மாகாண சபைகள் பலவந்தமாக கொண்டுவரப்பட்டன என தற்போது பொதுபல சேனா, ஜாதிகஹெல உறுமய ஆகிய இரு தீவிரவாதக் கட்சிகளும் இலங்கை சுதந்திரக் கட்சியிலுள்ள சில தீவிர வாதிகளும் கூறுகின்றார்கள். எனவே, மாகாண சபைகள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டுமென்றும் கூறுகிறார்கள். விமல் வீரவன்ச போன்றோரும் அவ்வாறே கூறுகிறார்கள்.

அதில் ஒருவிதமான உண்மையும் உள்ளது. சிங்கள மக்கள் கேட்காமலேயே இது முழு நாட்டிற்கும் வழங்கப்பட்டது. அவ்வாறு அதைக் கொடுத்துவிட்டு வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டிற்கும் ஒரு சதத்தையேனும் வழங்காததுதான் ஜே.ஆர். ஜயவர்தன செய்த மிகக் கேவலமான செயல்.

பின்னர் அதனை அழிப்பதற்கான எஞ்சிய வேலைகளைப் பிரபாகரன் செய்து முடித்தார். வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாகக் தான் உண்மையிலேயே மாகாண சபைகள் 13வது திருத்தத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. அவ்வாறு செய்வதாயின் ஏனைய மாகாண சபைகளுக்கும் வழங்குவது சிறந்தது. அதிகாரத்தைப் பகிர்வது மேலும் சிறந்தது என்பதனால் தான் அது அவ்வாறு வழங்கப்பட்டது.

**எனது அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இன்றி ஏனைய மாகாணங்களுக்குப் போலியாக எல்லா அதிகாரங்களையும் வழங்கி வடக்கு கிழக்கிற்கு எதுவுமே வழங்காமல் வைத்திருப்பது நியாயமற்றது. அது தான் பிரதான காரணம்.எப்போதாவது வடக்கு கிழக்கில் யுத்தத்தை நிறுத்தி மீண்டும் அதிகாரப் பகிர்வொன்றை மேற்கொண்டால் அது அனைவருக்கும் நல்லது என அதனால் தான் நான் கூறினேன். நடைபெற வேண்டிய இடத்தில் வழங்காமல் ஏனையவர்களுக்கு மட்டும் வழங்குவதில் அர்த்தமில்லை.**

அதிகாரப் பகிர்வு என்ற கலாசார சமூகமயப்படுத்தப்பட்ட நியதிச்சட்டங்கள் தான் மாகாண சபைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். நியதிச்சட்டங்களைத் தயாரித்தல் விசேடமாக வடமேல் மாகாணத்தில் ஏனைய மாகாணங்களை விடவும் முன்னணியில் உள்ளது. இக் காரணத்தினால் அபிவிருத்தி என்ற விடயம் கிராமத்துக்கு கொண்டு செல்வது அபிவிருத்தி என்ற ஜனநாயக உரிமை மாகாண மக்களுக்கு கிடைக்கிறது என்ற காரணி இதன் மூலம் மேலெழத் துவங்கியது.



அவர்களது நடவடிக்கைகளை நிருவகிக்கின்ற பொலிஸ் அதிகாரங்கள் மட்டும் தான் அவர்களுக்கு வழங்கப்படும். [பிரதி பொலிஸ் மா அதிபர் வடக்கிலிருந்து] நேரடியாக மத்திய அரசின் பொலிஸ் மா அதிபராகத் தான் இங்கு வருவார். வடக்கினை நிருவகிக்கும் பொலிஸ் முதல்வராக அவர்தான் இருப்பார். இங்குள்ள பொலிஸ் மா அதிபர் இற்கு தான் முழுப்பொறுப்பையும் ஏற்பார். எனவே அவர்கள் அஞ்சுவது போல நடக்குமா?

ஆனாலும் நடைமுறைப்படுத்துவதற்குரிய பெரும்பாலான புதிய அதிகாரங்கள் மாகாண சபைகளிடம் காணப்பட்டன. கல்வி, சுகாதாரம் என்பன தொடர்பாக அவர்கள் பாரியளவில் பணியாற்றினார்கள்.

இன்னும் பல விடயங்களை நான் கூற வேண்டியுள்ளது. தேசிய பாடசாலைகள் என்ற விடயம் UNP ஆரம்பித்து வைத்த ஒன்றாகும். முந்திய அரசாங்கத்தில் பதவி வகித்த பெரும்பாலான அமைச்சர்கள் சுகாதார, கல்வி அமைச்சர்கள் அவர்களது அதிகாரங்களை அதிகரித்துத் தருமாறு எந்நேரமும் கோரினார்கள். மாகாண சபைகளின் கீழ் காணப்பட்ட பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வர அமைச்சரவைக்கு யோசனை தெரிவித்தனர். இவை அனைத்தையும் நான் நிராகரித்தேன். நான் ஒரு போதும் அவற்றிற்கு இடமளிக்கவில்லை.

மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத விடயங்கள் சிலவற்றைப் புதிதாக மாகாண சபைகளுக்கு வழங்குவதற்கு சட்டங்களைக் கொண்டுவருவதற்கு நான் இடமளிக்கவில்லை.

**இலங்கையின் ஆரம்ப அதிகாரப் பகிர்வுக்கான சட்டங்களைக் மாகாண சபைகளின் அதிகாரத்தைக் கூட வழங்கப்படாது மாகாண சபைத் தேர்தல்களை நடாத்தப் போகின்றனர். இந்தியாவும் அயல் நாடுகளும் நம்முடன் கோபித்துக் கொள்ளும் நிலையில் உள்ளன. இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள் எவ்வாறான ஒரு நல்லிணக்கத்தைப் பிரேரிக்கின்றீர்கள்?**

வேறு ஒரு தீர்வினை நான் காணவில்லை. பதவியிலுள்ள அரசாங்கத்தின் மூளை தெளிவடைய வேண்டும். அவ்வாறு மூளையை தெளிவடையச் செய்யும் இப் பிரச்சினை யாது? இப் பிரச்சனைக்கு, அடிப்படையான, விடயங்களைப் புரிந்துகொண்டு, அதனைக் கற்றறிந்து, அதன் பின் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ். இந்நாட்டில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் தாம் தெளிவாகவே ஏதோவொரு மட்டத்திற்கு தமது நடவடிக்கைகளை நிருவாகம் செய்வதற்கான உரிமை அவர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டவைகள் நீங்கும் போது இவைகளும் தானாகவே நீங்கும். இந்த நாட்டு தமிழ் மக்களுடன் இந்தியாவின சில பிரிவுகளைச் சேர்ந்த தமிழ் மக்களுடனான சகோரத்துவம் நிலவுகிறது.

குறைந்த பட்சம் தற்போதாவது இலங்கைவாழ் தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை வழங்குமாறு அவர்கள் கூறுகின்றனர். இலங்கை அரசாங்கம் அதிகாரங்களை வழங்கினால் இந்திய தமிழ் மக்களிடையே நிலவுகின்ற கோபதாபம் முடிவடையும். இந்திய அரசாங்கத்தின் மனக்குறை யாது? ஏன் 13 ஆவது திருத்தத்தை வழங்க முடியாதென்பதே அவர்களது கேள்வி ஆகும்.

**இந்த 13 ஆவது அரசியலமைப்பினை வலுவடையச் செய்யவும் மேலும் அதிகாரப் பகிர்வை வழங்கவும் எல்எல்ஆர்சீ (LLRC) ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது. யுத்தத்தின் பின் ஏற்படுத்தப்பட்ட எல்எல்ஆர்சீ ஆணைக்குழுவின் எந்தவித பரிந்துரைகளும் அமுல்படுத்தப்படாத ஒரு நிலைமையே உள்ளது. இது பற்றி உங்களுடைய கருத்து யாது?**

அதை மகிந்த ராஜபக்ஷவிடம் தான் கேட்க வேண்டும். அது அவரால் நியமிக்கப்பட்ட ஓர் ஆணைக்குழுவாகும். அது வெறும் பகிடிக்காக உருவாக்கப்படவில்லை. மக்களின் நிதியினை விரயமாக்கி ஆணைக்குழுவினை உருவாக்கினால் அதனை நடைமுறைப்படுத்தத் தானே வேண்டும். அதை நடைமுறைப்படுத்துவது பற்றி ஜனாதிபதி அறிந்திருக்க வேண்டும்.

**17ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை இல்லாதொழித்து 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் போது 13 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் அதிகாரங்கள் எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியமானது என்பது பற்றி உங்களது கருத்து என்ன?**

17 தேவை எனவும் 18 இல்லாதொழிக்கப்பட வேண்டுமெனவும் நான் கூறுகிறேன். 17 ஐக் கொண்டுவந்தது நான் தான். இவர்களைப் போல் நான் போலியாக ஆணைக் குழுக்களை நியமிக்கவில்லை. பலரது கருத்துக்களைப் பெற்று ஆழமாகச் சிந்தித்துத் தான் நாம் அதைக் கொண்டு வந்தோம்.

**13ஆவது திருத்தமும் 17 ஆவது திருத்தமும் சமாந்தரமாகச் சென்றால் சாதகமான முடிவினைப் பெற்றுக் கொள்ளலாம் என நீங்கள் கருதுகிறீர்களா?**

சரியாகச் சொன்னீர்கள். அது அவ்வாறு தான் நடக்கும்.



**எமது சிங்களவர்கள் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்குச் சென்று அவர்களைத் தாக்கி தீயிட்டுக் கொளுத்தி வீடுகளை எரிக்கும் போதும் அடித்து நொறுக்கி வெட்டி கொலை செய்யும் போதும் அவர்கள் அஞ்சுவதில் நியாயமில்லையா? தற்போது சமாதானம் உருவாகியுள்ள சூழலிலும் பாதுகாப்புப் பிரிவுகளுடன் தொடர்பான சிலர் தமிழ் விதவைப் பெண்கள் மீது பாலியல் பலாத்காரம் புரிகின்றனர். யுத்தம் முடிவடைந்து ஒரு வருடம் கழிகின்ற போதே 13"14"15 வயதுடைய பெரும்பாலான சிறுமிகள் கருவுற்றிருந்தார்கள்.**

**அதனால், இவ்வாறான குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக எங்களது ஆட்களைப் போட்டு எமக்குள் ஒரு பொலிசை உருவாக்க வேண்டும் என்று சொல்வது அநீதியா?**

**இலங்கையிலுள்ள தற்போதைய அரசியல் கட்சிகளில் ஜனநாயகம் உண்டு என நீங்கள் நினைக்கிறீர்களா? இலங்கை சுதந்திரக் கட்சி ஒரு ஜனநாயக அரசியல் கட்சியா?**

ஆம் இன்று வரை இலங்கை சுதந்திரக் கட்சி ஜனநாயகக் கட்சியே சுதந்திர இலங்கையில் காணப்பட்ட காணப்படுகின்ற ஆகக் கூடுதலான ஜனநாயகத்தையுடைய கட்சி இலங்கை சுதந்திரக் கட்சி என நான் எனது பகிரங்க கலந்துரையாடல்களிலும் பகிரங்க மேடைகளிலும் கூறியுள்ளேன். கோள்கையினடிப்படையில் ஒரு போதும் ஆட்களைக் கொலை செய்யாத (எமக்குச் சாதகமான முறையில்) ஒரு கட்சி எமது கட்சி. ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ் மக்களைக் கொன்றார்கள். நாம் ஒரு போதும் அவ்வாறு செய்யவில்லை.

இலங்கையின் மாக்சிஸ கட்சிகளிரண்டும் கூட அவ்வாறு செய்யவில்லை. கம்யூனிஸ்ட் நாடுகளில் முன்னொரு காலத்தில் அவ்வாறான விடயங்கள் இடம்பெற்றன. ஆனால், எமது நாட்டில் அவ்வாறு நடைபெறவில்லை. அது உண்மையாகும்.

தமிழ் கட்சிகளும் எல்.ரீ.ரீ.ஈ இயக்கமும் மனிதர்களை கொலை செய்துள்ளனர். எமது கட்சியில் எந்நேரமும் மிகவும் ஜனநாயக முறையிலேயே அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். இரண்டாண்டுகளுக்கொரு முறைதான் கட்சியின் தலைவர் கூட தெரிவு செய்யப்பட்டார். நானும் எனது அம்மாவும் அப்பாவும் 62 வருடங்கள் கட்சியின் தலைமைப் பதவியை வகித்தோம். என்று இரண்டாண்டுகளுக்கொரு முறை அல்லது மூன்றாண்டுகளுக்கு ஒரு தடவை யாப்பிற்கு ஏற்ப வாக்கெடுப்பு மூலமே தலைவர் தெரிவு செய்யப்பட்டார். தற்போது கட்சியில் அந்த ஜனநாயகம் பெயரளவிலேயே உள்ளது. ஆனால் போலியாக வாக்கெடுப்பு நடாத்துகிறார்கள் மக்களை மிரட்டுகிறார்கள். கட்சியின் யாப்பில் தற்போது அந்த ஜனநாயகம் பெயரளவில் மடடுமே காணப்படுகிறது. ஆயினும் நடைமுறைப்படுத்த விடுவதில்லை. எமது நாடும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஏற்ப ஜனநாயக நாடு எனக் கூறுகிறார்கள். ஆனாலும் ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்த விடுவதில்லை அல்லவா? வேள்ளை வேன், மிரட்டுதல், பயமுறுத்துதல், கொலை என்பன நிலவுகிறது. ஆவ்வாறு கட்சிக்குள்ளும் இவை நடைபெறத் துவங்குகிறது. புதவிக்கு வந்தவுடனேயே என்னுடன் கதைக்க வேண்டாம் என அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஜனாதிபதி அச்சுறுத்தினர். தற்போது அவர்கள் என்னைக் கண்டவுடன் பயந்து ஒழிந்து விடுகிறார்கள். ஆனாலும் இரகசியமாகக் கதைக்கிறார்கள். கதைத்தவர்களை வரவழைத்து ஏசியிருக்கிறார். மங்கள சமரவீர இதற்கு ஒரு சிறந்த உதாரணம்.

**கிராமத்திலுள்ள கட்சி அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றிணைந்தே தொகுதியின் அதிகாரக் குழு உருவாகிறது. தொகுதியின் அதிகாரக்குழு விரும்புகின்றவர்கள் தான் தேர்தல் அபேட்சகராக நியமனம் பெறுவார். தற்போது இரு கட்சிகளும் கீழ் மட்டத்திலிருந்தே மேல்நோக்கி பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்குப் பதிலாக கட்சித் தலைவர் அல்லது கட்சித் தலைவி விரும்பும் நபர்கள் தொகுதி ஏற்பாட்டாளர்களாக நிறுத்தப்படுகிறார்க்ள. அதன்போது உள்ளக ஜனநாயகம், தமது கட்சி அங்கத்தவர்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் உரிமை என்பன இரண்டு கட்சிகளிலும் இல்லாதொழிக்கப்படுகிறது. ஜனநாயகக் கட்டமைப்பு ஒன்று காணப்பட்டால் இதனை விடவும் வெற்றியளிக்குமல்லவா?**

சட்டரீதியாக இலங்கை சுதந்திர கட்சிக்குள் குறித்த அக் கட்டமைப்பு காணப்படுகிறது எனது கடசியில் 62 ஆண்டு காலம் தலைவர்களாக இருந்த போது நாம் தலையீடுகளை மேற்கொள்ளவில்லை. சில ஏற்பாட்டாளர்கள் அவர்களது தொகுதிகளில் அதைச் செய்தார்கள். பெரும்பான்மையானவர்கள் கிளைச்சங்கங்களில் இருந்தே தெரிவாகினர். அனைவரும் அழைக்கப்பட்டு அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

நான் கட்சியின் தலைவியாக இருக்கும் வரை கட்சியின் கிளைகளில் உத்தியோகத்தர்களை நியமிக்கப்படுவது ஜனநாயக ரீதியாக இடம் பெற்றது.

ஜனநாயகம் வலுவடையும் பட்சத்தில் கடசியின் தலைமைத்துவத்திற்கு எதுவுமே கூற முடியாது. கட்சித் தலைமைக்கும் ஜனநாயக ரீதியாக உரிமை உண்டு. எவர் சார்பிலாவது தேர்ந்தெடுக்கப்பட இரு சாராருக்கும் உரிமை உண்டு. எவர் சிறந்தவரோ அவருக்கு மக்கள் வாக்களிப்பர். (96 ஆம் ஆண்டு ஜூன் வரைக்கும் கட்சியின் யாப்பு இதுவாகும்)

ஜனநாயக ரீதியிலான கலாசாரமொன்று ஏற்படுத்தப்பட்டால் இவ் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும். இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் இதே பிரச்சினை காணப்படுகிறது நிச்சயமாக ஜனநாயக முறைமை விருத்தி செய்யப்பட வேண்டும் என்பது உண்மையே.

# மாகாண சபைகள் வெள்ளை யானை என்பது நியாயமற்றது

அமைச்சர், பேராசிரியர்
***திஸ்ஸ விதாரண***

**வட மாகாண சபைத் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டதும் மாகாணசபை முறைமைக்கும் பொதுவாக 13 வது அரசியலமைப்பு திருத்தத்துக்கெதிராகவும் நாடுமுழுவதும் ஆர்ப்பாட்டங்களைக் காணமுடிகிறது. 1987 இலிருந்த எதிர்ப்புக்கும் தற்போதுள்ள எதிர்ப்புக்கும் ஏதாவது வேறுபாடுகள் உள்ளனவா?**

1987 இன்பின்னர் நீண்டகாலம் கடந்து விட்டது. எமக்கு இது தொடர்பில் பெரும் அனுபவம் உள்ளது. அன்றைய எதிர்ப்புக்கு அடிப்படை இருந்தது. காரணம் அதற்கிருந்த இந்தியாவின் நேரடி தலையீடாகும். அன்று இந்திய-இலங்கை ஒப்பந்தம் அறிமுகப்படுத்தப்பட்ட முறை தொடர்பில் இன்றும் எமது தெளிவான எதிர்ப்பு உள்ளது. ஆனால் அதன் மூலம் பேச முயற்சித்த பிரச்சனை மற்றும் அதற்கு வழங்கிய தீர்வு தொடர்பில் எம்மிடம் பாராட்டே உள்ளது. இவ்வாறான அதிகாரப்பகிர்வு முறைமை தொடர்பாகவுள்ள எதிர்ப்புக்கான அடிப்படை என்ன என்பதனைக்கூட என்னால் புரிந்துகொள்ள முடியாதுள்ளது. 1927 காலப்பகுதியில் S.W.R.D.பண்டாரநாயக்க அவர்கள் அனைத்து பிரஜைகளுக்கும் சமமான உரிமைகளை பாதுகாப்பதாயின் கீழ் மட்டத்தில் அதிகாரம் பகிரப்பட வேண்டுமென முன்மொழிந்தார். அவர் உண்மையிலேயே நாம் எண்ணுவதை விடவும் அப்பால் சென்று இதனை நோக்கினார். தற்போதுள்ள மாகாண சபைகளுக்கும் அப்பால் சென்று அதிகாரம் பகிரப்பட்ட அலகுகளைக் கொண்டமைந்த கூட்டாட்சி அரசியலமைப்பையே அவர் முன்மொழிந்தார். ஆரம்பத்திலிருந்தே தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்காக இது தேவையான நடவடிக்கையென (அதிகாரப்பகிர்வு) பெரும்பாலானோர் கருதியதனையே இதன்மூலம் காணமுடிகிறது. இதனை கூடுதலானோர் ஏற்றுக்கொண்டதுடன் “அதிகாரப்பகிர்வு அலகு” தொடர்பில் சில கருத்து வேறுபாடுகள் இருந்தது. அலகுகள் பெரியது



Photo source : vimeo.com

என்பதனால் மாவட்ட மட்டத்துக்குச் செல்ல வேண்டுமென சிலர் நினைத்தார்கள். இன்னும் சிலர் மாகாண மட்டத்தில் அதிகாரம் பகிரப்பட வேண்டுமென முன்மொழிந்தார்கள். இக்கருத்து வேறுபாடுகளுக்கிடையில் 1983 இல் தமிழ் மக்களுக்கெதிராக இனவாதத்தைத் தூண்டி மோசமான அனர்த்தம் ஏற்படுத்தப்பட்டது. உண்மையிலேயே எமது நாடு மோசமான நிலையிலிருந்தபோது இந்தியா தலையீடு செய்தது. இனப்பிரச்சனை தொடர்பான கலந்துரையாடல் நீண்டகாலமாக நடந்தது. அப்போது ஜே.ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதி அதற்கு ஏதாவது செய்யவேண்டுமெனும் நிலைப்பாட்டுக்கு வந்தார். அதன்போது இந்தியாவுடன் உடன்படுவதைத் தவிர வேறு மாற்றுத்தீர்வு இருக்கவில்லை. இந்திய -இலங்கை ஒப்பந்தத்தினூடாக நன்மை கிடைக்கவில்லையென்று எவராலும் வாதிட முடியுமென்று நான் நினைக்கவில்லை. அக்காலத்தில் இளம் ஆயுத குழுக்களாகப் பிரபலமடைந்திருந்த ஈரோஸ், புளொட், E.P.R.L.F, E.P.D.P போன்ற குழுக்கள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினூடாக ஏற்பட்ட வாய்ப்பினாலேயே ஜனநாயக வழிக்கு வந்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும் ஜனநாயக வழிக்கு வராமல் தொடர்ச்சியாக தமது ஆயுதப் போராட்டத்தை முன்கொண்டு சென்றனர். அந்தப் போராட்டமும் தற்போது முடிவடைந்துள்ளது. கடந்த காலத்தின் கசப்பான அனுபவத்தைப் பெற்ற அனைத்து தரப்பிற்குமுரிய தமிழ் மக்கள் இந்த நாட்டின் பிரஜைகளாக ஓர் இலங்கையராக செயற்படத் தயாராக உள்ள நேரமிது.

மாகாண சபை தேர்தல் இங்கே சிறப்பானதொரு வாய்ப்பாகும். அப்படியாயின் இத்தேர்தலுக்கும் பொதுவான அதிகாரப்பகிர்விற்கும் எதிர்ப்பு தெரிவிப்பதன் மூலம் நாம் மீண்டும் பின்நோக்கி செல்வதனைத்தவிர அம் முயற்சியை முற்போக்கானதாக நான் பார்க்கவில்லை. மாகாண சபைகளை வெள்ளை யானையென்று கூறி வாதிடுவதும் தர்க்கரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. உண்மையிலேயே மொத்த மாகாணசபைச் செலவிலிருந்து 7% செலவு மட்டுமே நிர்வாக மற்றும் அரசியல் அதிகாரிகளுக்கான செலவாக இருக்கிறது. எஞ்சிய 93% த்தையும் கட்டாயமாக மாகாண மக்களுக்காக செலவிட வேண்டிய தேவைகளுக்காகவே செலவிடப்படுகிறது. அதற்கு மேலதிகமாக யட்டியாந்தோட்டை போன்ற கொழும்புக்கு வெளியேயுள்ள பகுதியை என்னால் உதாரணமாகக் காட்ட முடியும். அதன் அரசியல் அதிகார சபையின் தலைவர் நானே. அதனால் அப்பகுதியின் அபிவிருத்தி தொடர்பில் எனக்கு பரந்த அறிவுள்ளது. எனது மாமனாரான என்.எம். பெரேரா அவர்களால் அப்பிரதேசம் அபிவிருத்தி அடைந்ததன் பின்னர் அதன் அபிவிருத்திகள் சீர்குலைந்தன. ஆனால் மாகாண சபை முறைமையூடாக அங்கு பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதனை நாம் காண்கிறோம். தாம் தேர்தலில் தோல்வி அடைந்து விடுவோமோ என்று பயந்தாவது மாகாண சபைப் பிரதிநிதிகள் இப்பிரதேசங்களுக்கு சேவையாற்றுவதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அத்துடன் அலுவலர்களின் ஆணவத்தினால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு மாகாணசபை பிரதி நிதிகளூடாக ஓரளவு சேவை கிட்டியது என்பது வெளிப்படையானது.

**ஆனால் மேலுமொரு தரப்பினர் மாகாணசபை முறைமையூடாக செய்யக்கூடிய சேவைகளை நிர்வாக பன்முகப்படுத்தலூடாக மேற்கொள்ளலாமென வாதிடுகின்றனரே?**

அந்த முறைமையின் நன்மை தீமைகளை பரீட்சித்துப் பார்த்துள்ளோம். மக்களுக்கு பணியாற்றினாலும், பணியாற்றாவிட்டாலும் அரச அலுவலர்களின் வேலை இல்லாமல் போகாது. பதவி இல்லாமல் போகும் ஆபத்து ஓரளவுக்கு மாகாணசபை பிரதிநிதிகளுக்கு உள்ளது.

**அவ்வாறாயின் எதிர்ப்பின் அடிப்படைதான் என்ன?**

இங்கே பிற்போக்கான அரசியல் நோக்கம் உள்ளது. மக்களிடத்தில் வீண் பயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த துரதிர்ஷ்டமான நிலை தொடர்பாக சிறந்த விளக்கம் எமக்கு கிடைத்துள்ளது. சர்வ கட்சிப் பிரதிநிதிகள் மாநாட்டினூடாக 127 கூட்டங்கள் மூலம் 17 அரசியல் கட்சிகள் ஒன்றுசேர்ந்து பேச்சுவார்த்தை நடாத்தின. பின்னர் 13 கட்சிகள் ஒன்றுசேர்ந்து ஒரு நிலைப்பாட்டுக்கு வந்தது. இந்த முறைமையிலுள்ள சிற்சில குறைபாடுகளை சீராக்கி மேலும் முன்னோக்கிப் பயணிக்கலாம் என்பது எமக்கு தெளிவாகிறது. நான் சிறந்த உதாரணம் ஒன்றை உங்களுக்குக் காட்டுகின்றேன். ஏற்கனவே, 13வது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரமும் உள்ளடங்குகிறது. அனைத்து மாகாணங்களுக்கும் அதற்குரிய பொலிஸ் அதிகாரங்களை அமுல்படுத்தவதாயின் அதற்குரிய நியதிச் சட்டங்களைத் தயாரிக்க வேண்டும் ஆனால் எமக்கு ஒரு விடயம் தெளிவானது. அனைத்து மாகாணசபைகளிலும் பொலிஸ் ஆணைக்குழு இருப்பது தேவையற்றதெனவும் பொலிஸ் ஆணைக்குழு

**இனப்பிரச்சனை தொடர்பான கலந்துரையாடல் நீண்டகாலமாக நடந்தது. அப்போது ஜே.ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதி அதற்கு ஏதாவது செய்யவேண்டுமெனும் நிலைப்பாட்டுக்கு வந்தார். அதன்போது இந்தியாவுடன் உடன்படுவதைத் தவிர வேறு மாற்றுத்தீர்வு இருக்கவில்லை. இந்திய –இலங்கை ஒப்பந்தத்தினூடாக நன்மை கிடைக்கவில்லையென்று எவராலும் வாதிட முடியுமென்று நான் நினைக்கவில்லை. அக்காலத்தில் இளம் ஆயுத குழுக்களாகப் பிரபலமடைந்திருந்த ஈரோஸ், புளொட், E.P.R.L.F, E.P.D.P போன்ற குழுக்கள் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தினூடாக ஏற்பட்ட வாய்ப்பினாலேயே ஜனநாயக வழிக்கு வந்தன.**

**சர்வ கட்சிப் பிரதிநிதிகள் மாநாட்டினூடாக 127 கூட்டங்கள் மூலம் 17 அரசியல் கட்சிகள் ஒன்றுசேர்ந்து பேச்சுவார்த்தை நடாத்தின. பின்னர் 13 கட்சிகள் ஒன்றுசேர்ந்து ஒரு நிலைப்பாட்டுக்கு வந்தது. இந்த முறைமையிலுள்ள சிற்சில குறைபாடுகளை சீராக்கி மேலும் முன்னோக்கிப் பயணிக்கலாம் என்பது எமக்கு தெளிவாகிறது. நான் சிறந்த உதாரணம் ஒன்றை உங்களுக்குக் காட்டுகின்றேன். ஏற்கனவே, 13வது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரமும் உள்ளடங்குகிறது. அனைத்து மாகாணங்களுக்கும் அதற்குரிய பொலிஸ் அதிகாரங்களை அமுல்படுத்தவதாயின் அதற்குரிய நியதிச் சட்டங்களைத் தயாரிக்க வேண்டும்**

(தேசிய பொலிஸ் ஆணைக்குழு) இருப்பது போதுமானதென்பது தெளிவானது. நாம் அவ்வாறான நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளை எடுத்து இலகுபடுத்துவதற்காக முயற்சிக்கும்போதே இப்படியான அடிப்படையற்ற எதிர்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. எல்லாருக்கம் தெரிந்தது போன்றே மாகாண சபை முறைமைக்குரிய 13வது திருத்தத்தினூடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மூன்று அதிகாரப்பட்டியல்கள் உள்ளன. மாகாண, ஒதுக்கிய, ஒருங்கியை என்றவாறு மாகாணசபை முறைமைக்குரிய பெரும்பாலான நடவடிக்கைகள் இந்த ஒருங்கியைப் பட்டியல் காரணமாகவே சீர்குலைகின்றன. என்பது எமது அவதானிப்புக்கள் மூலம் உறுதி செய்யப்பட்டது. மத்திய அரசு மாகாணசபை ஆகிய இரண்டும் ஒன்றாக பயன்படுத்த கூடியதென்பதனால் நிச்சயமற்ற தன்மைகாணப்படுவதே அதற்குக் காரணமாகும். நீங்கள் ஒரு விடயத்தை மறக்கக்கூடாது. இந்த அதிகாரப்பகிர்வு முறைமை ஒற்றையாட்சி கட்டமைப்புக் கமையவே இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான அதிகாரப்பகிர்வு செயற் பாட்டின்போது அதாவது ஒற்றையாட்சி முறையில் எப்போதும் திட்டமிடல் அதிகாரம் (Planing Power) மத்திய அரசிடம் இருப்பதுடன் மாகாணசபைகளிடம் இரண்டாம் நிலை அதிகாரம் (Subsidiary Power) இருக்கும். இவ்வாறான நிலையில் இந்த அதிகாரப்பகிர்வு சட்டத்திற்கமைய மத்திய அரசு மாகாண சபைகளை கட்டுப்படுத்தலாம். அதன்படி வீண் பயமே ஏற்படுத்தப்பட்டிருப்பது என்பது தெளிவாகிறது.

**தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்தால் தற்போதுள்ள அதிகாரங்கள் பிரிவினை நோக்கிய பயணத்துக்கு ஏதுவாக அமையும் இருப்பினும் இது தொடர்பாக கருத்து என்பது சில அரசியல் வாதிகளின் குற்றச்சாட்டாக இருக்கிறது**

உண்மையிலேயே எம்மிடம் ஓரளவு அவதானிப்புடனான சுய புரிந்துணர்வு இருக்கவேண்டும். தற்போதுள்ள அரசியல் பின்னணி தொடர்பாக எனக்கு இயலுமான எல்லா சந்தர்ப்பத்திலும் வடக்கு மக்கள் தொடர்பான பிரச்சனைகள் பற்றி கதைக்க முயற்சிப்பதுண்டு. அண்மையில் எனக்கு வாய்ப்பு கிடைத்தது. Jaffna forum இல் நடைபெற்ற விவாதத்தில் பங்குபற்றினேன். அது யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தொழில்வாண்மையாளர்களின் மற்றும் செயற்பாட்டாளர்கள் அடங்கிய புத்திஜீவிகள் அமைப்பாகும். அங்கே அவர்கள் நாட்டின் ஏனைய பிரஜைகளைப் போன்றே சமமான உரிமைகளை அனுபவித்துக்கொண்டு ஒரே நாட்டில் வாழ்வதற்கு அவர்களுக்குள்ள விருப்பத்தை மீண்டும் மீண்டும் கூற முயற்சித்தனர். பிரிவினை வாதத்தை கதைத்தால் இச்சபையை ஜனாதிபதியால் கலைத்துவிட முடியும். குருதி தோய்ந்த கடந்தகாலத்தை மறந்து சமமான குடிமக்களாக அமைதியான அரசியல் ஓட்டத்தில் நுழையும் அவர்களை பிரிவினைவாதத்தின் பங்காளர்களென்று கூறுவது மிகவும் கீழ்த்தரமான அரசியல் தந்திரமாகும்.

**இருப்பினும் முதலாவது வடகிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் தனியான ஈழ அரசைப் பிரகடனம் செய்ததனூடாக அவ்வாறான கருத்து உறுதிப்படுத்தப்படுகிறது அல்லவா?**

அந்த கருத்தின் மூலகர்த்தாவான வரதராஜப் பெருமாள் அவர்களை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும். அதுமட்டுமல்ல அந்தச் சம்பவம் தொடர்பில் அவருடன் கருத்துப் பரிமாற்றமும் செய்துள்ளேன். தான் அவ்வாறு செய்வதற்கான அதிகாரம் 13ஆவது திருத்தத்தினூடாக இருக்கவில்லை என்று தெரிந்துவைத்திருந்ததாக அவர் என்னிடம் தெளிவாகக் கூறினார். ஆனால் தனது மாகாணசபை முன்மொழியும் எந்தவொரு அபிவிருத்தி திட்டத்துக்கும் மத்திய அரசின் நிதியொதுக்கீடு வழுங்காத நிலையில் வேறு எதனையும் செய்யமுடியாத நிலையே தனக்கு இருந்ததாக அவர் கூறினார். தன்னுள் ஏற்பட்ட விரக்தியை வெளிப்படுத்தும் ஓர் உத்தியே அதுவாகும். அதனைவிடவும் எந்தவொரு அதிகாரமும் இல்லாத சபையின் உண்மை நிலையை குறியீட்டு ரீதியாக உலகுக்கு வெளிப்படுத்துவதை அவர் எதிர்பார்த்திருக்கலாம்.

**நீங்களும் உள்ளடங்கலாக முக்கியமான சில அமைச்சர்கள் 13 வது திருத்தத்தை மீண்டும் மாற்றும் அரசின் முயற்சிக்கு எதிராக அணிதிரள்வதை நாம் கண்டோம். இது கூட்டமைப்பு அரசின் கட்சிப்பொறுப்பை மீறுவது ஆகாதா?**

உண்மையில் இது கட்சி ஒப்பந்தத்தை மீறுதலாகாது. மேலும் மேலும் மகிந்த சிந்தனையை இறுகப்பிடிப்பதாகும். நீங்கள் அதனை வாசியுங்கள். இந் நாட்டிலுள்ள பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலமாக தீர்வு வழங்குவதாக அதில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் தான் சர்வ கட்சிக்குழு (APRC) ஆரம்பிக்கப்பட்டது. நான் அதன் தலைவர் ஆனேன். APRC

செயற்பாட்டைத் தொடர்ந்து முன்கொண்டு செல்லவேண்டுமென்பதே எமது பொதுவான முன்மொழிவாகும். ஆனால் அது அவ்வாறு நடக்கவில்லை. தற்போது நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழுக்கூட உருவாக்கப்பட வேண்டுமென்று நாமே APRC ஊடாக முன்மொழிந்திருந்தோம்.

**இருப்பினும் அவ்வாறு நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவில் கூட உங்களது பிரதிநிதித்துவம் இல்லை அல்லவா?**

எனக்கும் அது தொடர்பில் பெரும் ஆச்சரியம்தான். இது தொடர்பாக அரசாங்கம் நடாத்திய ஊடக சந்திப்பின்போது சர்வகட்சிக் குழுவை முன்கொண்டு செல்வதாயின் அனைவரினதும் ஒத்துழைப்பு தேவை எனவும் அதன்படி அத்துடன் இணைந்துகொள்ளுமாறு அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுப்பதாகவும் தெளிவாகக் கூறப்பட்டது. இவ்வாறான அரசியல் எதிர்காலத்தைக்கூட அர்ப்பணிப்பு செய்துள்ளோம். அதேபோன்று சமசமாஜக் கட்சி இடதுசாரி கட்சி என்றரீதியில் இந்த நாட்டின் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு வழங்க வேண்டுமெனும் நிலைப்பாட்டில் மாற்றம் செய்யவில்லை. அதற்கும் மேலாக நான் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் (APRC) தலைவராக இருக்கிறேன். அப்படியான பின்னணியில் நான் அதில் இல்லாதிருப்பது தொடர்பில் ஆச்சரியப்படுவதனைத்தவிர செய்வதற்கு வேறொன்றுமில்லை. அதுமட்டுமல்ல 08 பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநித்துவம் செய்யும், இந்நாட்டின் பிரதான இனமொன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் இதில் இல்லை. அதுவும் பெரும் அதிசயமான நிலைமைதான்.

**இந்த நிலைமையை பொதுமக்களான நாம் எவ்வாறு விளங்கிக்கொள்வது? இது அதிகாரத்தை பகிர்ந்தளிக்காமலிருப்பதற்கான அறிகுறியா?**

அனைத்து கருத்துக்களையும் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டுமெனும் நிலைப்பாட்டை கைவிட்டு தமது கருத்துக்களை மட்டும் முன்கொண்டுவர வேண்டும் எனும் பயங்கரமான நிலைக்கு இதன் மூலகர்த்தாக்கள் வந்திருப்பதாக எனக்குத் தெரிகிறது. அதன் பெறுபேற்றை அனுபவிக்க அவர்கள் தயாராக இருக்க வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் விடுதலை முன்னணி போன்ற அரசியல் கட்சிகள் ஏற்கனவே தமது பிரதிநித்துவத்தை வழங்குவது தொடர்பாக தெளிவின்றி உள்ளனர். இக்குழுவின் முழுமையற்ற பிரதிநிதித்துவமே அக்குழப்பத்துக்குக் காரணமென நினைக்கிறேன். இதன்போது பாராளுமன்ற சம்பிரதாயம் கூட மீறப்பட்டுள்ளது. இதுபோன்ற தேசிய மட்டத்திலான பிரச்சனை தொடர்பாக கதைக்கும்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளுக்கும் வாய்ப்பு வழங்குவது பாராளுமன்ற சம்பிரதாயமாகும். எடுத்துக்காட்டாக தேர்தல் முறை திருத்தம் செய்தலுக்காக அமைக்கப்பட்ட தினேஸ் குணவர்த்தன குழுவில் நானும் உறுப்பினராக உள்ளேன். அக்குழுகூட APRC ஊடாக முன்வைக்கப்பட்ட முன்மொழிவே. ஏனைய APRC உறுப்பினர்களின் விருப்புக்கமையவே நான் குறித்த தேர்தல் குழுவில் பிரதிநிதித்துவம் செய்தேன். இதனை உண்மையான பாராளுமன்ற தெரிவுக்குழுவாக எவரும் ஏற்றுக் கொள்வார்களென நான் நினைக்கவில்லை. அது வெறுமனே அரசின் வேலை மட்டுமே. இந்த நிலையில் எப்படி தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவது. இதனை திருத்தம் செய்வதற்கான அறிவு விரைவாக அரசுக்கு ஏற்படவேண்டுமென நான் பிரார்த்திக்கிறேன். ஆகக் குறைந்தது APRC யிலிருந்த முறைமை, கட்டமைப்பையாவது இதனுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும் தற்போதைய கட்டாய தேவை என்பதனை கூறாமல் இருக்க முடியாது.

**13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பாக நீங்கள் எழுப்பும் எதிர்ப்பை தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லமுடியுமென நீங்கள் கருதுகிறீர்களா? 18ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு எதிராகவும் பலர் வெளிப்படுத்திய எதிர்ப்பு இறுதியில் அவர்களும் அதற்கு கையுயர்த்துவதுடனே முடிவடைந்தது.**

இது தொடர்பில் எமக்கு பெரும் நம்பிக்கை உள்ளது. நாடு பற்றிய உணர்வு இருக்குமாயின் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டியது மிக முக்கியமானதாகும். நாம் பொறுமையாக நட்புணர்வுடன் செயற்பட வேண்டும். மீண்டும் நாட்டில் அழிவு ஏற்படாதிருக்க வேண்டுமெனின் இப்போது நாமனைவரும் கைகோர்த்துக்கொள்ள வேண்டும். இந்த செயற்பாட்டை பின்தள்ளும் நோக்கமெதுவும் எம்மிடமில்லை. இருப்பினும் ஒரு விடயத்தை இங்கே ஞாபகப்படுத்த வேண்டும். அடுத்த வருடம் தமிழ் நாட்டில் தேர்தல் நடாத்தப்பட உள்ளது. சில புலம்பெயர் தமிழர்கள் கடும் இனவாதிகள். அவர்களை தமக்கேற்றவாறு பயன்படுத்துவதற்கு காலனித்துவவாதிகள் பெரும் முயற்சியிலீடுபடுகின்றனர். எனவே அவர்களுக்கு ஆயுதம் (வாய்ப்பு)

**பிரிவினை வாதத்தை கதைத்தால் இச்சபையை ஜனாதிபதியால் கலைத்துவிட முடியும். குருதி தோய்ந்த கடந்தகாலத்தை மறந்து சமமான குடிமக்களாக அமைதியான அரசியல் ஓட்டத்தில் நுழையும் அவர்களை பிரிவினைவாதத்தின் பங்காளர்களென்று கூறுவது மிகவும் கீழ்த்தரமான அரசியல் தந்திரமாகும்.**

**நான் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் (APRC) தலைவராக இருக்கிறேன். அப்படியான பின்னணியில் நான் அதில் இல்லாதிருப்பது தொடர்பில் ஆச்சரியப்படுவதனைத்தவிர செய்வதற்கு வேறொன்றுமில்லை. அதுமட்டுமல்ல 08 பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநித்துவம் செய்யும், இந்நாட்டின் பிரதான இனமொன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் இதில் இல்லை. அதுவும் பெரும் அதிசயமான நிலைமைதான்.**

வழங்குவதற்க்கு நாம் அவசரப்படக்கூடாது. நாமும் இந்த அரசியல் யதார்த்தத்தை அறிந்துதான் இந்த எதிர்ப்பைக் காட்டுகிறோம்.

**நீங்கள் APRC நடவடிக்கையின் இறுதியில் தனியான பரிந்துரைகளை திஸ்ஸ விதாரண முன்மொழிவுகள் எனும் பெயரில் சமா்ப்பித்தீர்கள். ஏனைய இனங்களை பிரதிநித்துவப்படுத்தக்கூடியவாறு துணை ஜனாதிபதி பதவி உருவாக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகார பகிர்வு மற்றும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கிடையிலுள்ள தொடா்பை நீங்கள் எப்படி பாா்க்கிறீா்கள்?**

இது தொடா்பாக ஒரே நிலைபாடே எம்மத்தியிலுள்ளது. நிறைவேற்று ஜனாதிபதி பதவிக்கெதிராக மிகப்பாரிய ஆா்ப்பாட்டத்தை முதற்தடவையாக எமது கட்சியே ஒழுங்கு செய்தது. தோழர் என். எம். பெரேரா அது தொடா்பாக சிறப்பான பகுப்பாய்வை வெளியிட்டாா். பிரித்தானிய முறையை பின்தள்ளி அமெரிக்க முறையை கடுமையாகக் கட்டிப்பிடிப்பதன் ஆபத்தை அவா் நீண்டகாலத்துக்கு முன்னரே கண்டுகொண்டாா். இந்த முறைமையை இல்லாதொழிக்க வேண்டும். அவ்வாறு நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குதல், நாட்டின் நல்லாட்சியை கட்டியெழுப்புவதற்கும், நியாயமான பிரதிநிதித்துவத்தை அனைத்து சமூகங்களுக்கு வழங்குவதற்கான அடிப்படையும் ஏற்படும்.

**இருப்பினும் தமது பிரச்சனைகளுக்கு தீா்வு பெறுவதற்க்கு இலகுவான வழி நிறைவேற்று ஜனாதிபதி பதவி நிலைத்திருப்பதே என்பது இலங்கை தொழிலாளா் காங்கிரஸ் போன்ற கட்சிகளின் நிலைப்பாடு.**

சந்தா்ப்பத்துக்கேற்றவாறு அவா்கள் சிலவற்றை கூறினாலும், நாட்டின் பெரும்பாலானோா் நிறைவேற்று ஜனாதிபதி பதவியை இல்லாமல் செய்யவேண்டுமென்பதனை ஏற்றுக்கொள் வாா்கள் என்றே நினைக்கிறேன். கொழும்பிலுள்ள ஒரு நபரிடம் அனைத்து அதிகாரங்களும் குவிந்திருப்பதே இம்முறைமையின் ஒரேயொரு பெறுபேறாகும். பிரதேச மட்டத்தில் அதிகாரப் பகிா்வின்போது மாகாண சபை முறையை பலப்படுத்த வேண்டுமென்றே APRC யினதும் இறுதி நிலைப்பாடாக இருந்தது. அக்காலத்தில் மக்கள் விடுதலை முன்னணி கூறிய கொழும்புக்குப் பால் கிராமத்துக்கு கெக்கரிக்காய் எனும் கொள்கையை இல்லாமற் செய்வதாயின் நிறைவேற்று ஜனாதிபதிமுறைக்கு ஆலவட்டம் பிடிப்பதால் அதைச் செய்ய முடியாது.

**அப்படியாயின் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இரத்துசெய்வதற்காக பல்வேறு கட்சிகள், முன்னணிகள், அமைப்புக்களால் கொண்டுவரப்படும் பிரேரணைகளுக்கு உங்களதும் உங்களது கட்சியினதும் ஒத்துழைப்பு கிடைக்குமா?**

இதில் இரண்டு பக்கங்கள் உள்ளன. ஒன்று இம்முறைக்கெதிராக மக்கள் மத்தியிலுள்ள எதிா்ப்பு. அடுத்தது அதனை சாட்டாக வைத்து ஆட்சிக்கு வரும் சந்தா்ப்பவாத அரசியல். இதனை இரத்து செய்வதற்க்கு சந்திரிக்கா பண்டாரநாயக்க போன்றே மகிந்த சிந்தனையிலும் சபதமிடப்பட்டது. சோபித தேரா் எடுக்கும் முயற்சி உண்மையானதாகவே நான் பாா்க்கிறேன். இருப்பினும் எனது தனிப்பட்ட கருத்து என்னவென்றால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச்செய்து உண்மையான இராஜதந்திரியின் பாத்திரத்தினூடாக வரலாற்றில் இடம்பெறும் மிகச் சிறந்த வாய்ப்பு மகிந்த ராஜபக்ஷ அவா்களுக்கு உள்ளதென்பதே. அவா் அதனை இப்போதாவது நிறைவேற்றுவாரென பெரும் எதிா்பாா்ப்புடன் பாா்த்துக்கொண்டிருக்கிறோம்.

**LLRC பரிந்துரை மூலம் இந்நாட்டின் அரசியல் கட்டமைப்பானது கீழ்மட்டத்திலான (பிரதேச மட்டத்தில்) அதிகாரப்பகிா்வு செய்யப்பட வேண்டுமென கருத்து வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறான முற்போக்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான தயாா்படுத்தல்கூட நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசிடம் இல்லைத்தானே?**

இதுதான் பிரச்சனை. என்னதானிருந்தாலும் நாம் புத்திசாலித்தனமாக செயற்பட்டால் நல்ல பெறுபேறு எமக்கு கிடைக்குமென்றே நான் நினைக்கிறேன். இல்லாவிட்டால் பாதகமான விளைவு ஏற்படும் என்பதனாலேயே எமது வரையறையினுள் நாம் உயா்ந்தபட்சமாக அதற்கு அழுத்தம் கொடுக்க தயாராகவுள்ளோம். நாம் தண்ணீரை வீசும்போது குழந்தையும் வீசுவது போன்றே அரசாங்கம் நடந்துகொள்கிறது. ஊடக பொறுப்பு நினைத்துபாா்க்க முடியாதளவுக்கு தரம் குறைந்துபோயுள்ளது. எமது முயற்சி நாட்டின் எதிா்காலத்துக்கானதேயன்றி பிற்போக்கான அரசியல் நிகழ்ச்சி நிரலை செயற்படுத்துவதற்க்கானதல்ல என்பதனை அனைவரும் புரிந்துகொள் வேண்டும்.

குறிப்பு :
**மஞ்சுள கஜனாயக்க**



Photo source : www.ep.gov.lk

# புற்றுக்குள் இருப்பது என்னவென்று தெரியாமல் புற்றுக்கு பயப்படுவது போன்றதே 13 பயம்

**மாகாண சபை முறைமை மற்றும் பொதுவில் 13ஆவது அரசியலமைப்புக்கெதிராக தற்போது ஏற்பட்டுள்ள எதிர்ப்பை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

அக்காலத்தில் இந்தியா - இலங்கை ஒப்பந்தத்துக்கெதிராக பயங்கரமான நிலமையே இலங்கையில் நிலவியது. மாகாண சபைத் தேர்தலில் முதலில் வாக்களிக்கும் ஐந்து பேருக்கு மரணம் என ஜே.வி.பி அறிவித்தது. அதனை விடவும் அன்றும் இன்றும் இருந்த எதிர்ப்புகள் அதிகமாகும். இன்றுள்ள எதிர்ப்பு திடீரென ஏற்பட்டதென கூற நான் விரும்பவில்லை. இது தொடர்பான விவாதம் சமூகத்தில் தொடர்ச்சியாகவே இருந்தது. ஆனால் இன்றுள்ள யதார்த்தத்தை நாம் முக்கியமாக கவனிக்க வேண்டும். இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் இந்தியாவின் சிற்சில விருப்பங்கள் இருந்த போதிலும், இன்றுள்ள எதிர்ப்பை நியாயப்படுத்தும் வாதங்களுடன் என்னால் ஒத்துப்போக முடியாது. அடுத்து கவனிக்க வேண்டிய விடயம் இந்தியாவின் செல்வாக்கினால் ஏற்படுத்தப்பட்டதனால் நிராகரிக்க வேண்டுமென்பது. இது மிகவும் நகைச்சுவையானது. எமது முழு அரசியல் வரலாறும் வெளிநாட்டு செல்வாக்குடனான நிலைமையாகும். 1833 இலிருந்து 1978 வரையிலும், அதற்குப் பின்னரும் ஏற்பட்ட அனைத்து அரசியல் சீர்திருத்தங்களுக்கும் பின்னால் இருந்தது இந்த அரசியல் மயமாக்கப்பட்ட முறைதவறிய பிறப்புக்களே அன்றி வேறெவருமா? கனவான் அரசியல் கலாச்சாரத்தை பிறப்பிக்கக்கூடிய கருப்பை ஒரு காலத்திலும் இருக்காத பின்னணியில் இந்திய இலங்கை ஒப்பந்ததைத திட்டித்தீர்ப்பது கேவலமான ஒரு அரசியல் என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும். உண்மையிலேயே

**விமலவீர திஸாநாயக்க**
கல்வி அமைச்சர்
கிழக்கு மாகாண சபை

**அக்காலத்தில் இந்தியா – இலங்கை ஒப்பந்தத்துக்கெதிராக பயங்கரமான நிலமையே இலங்கையில் நிலவியது. மாகாண சபைத் தேர்தலில் முதலில் வாக்களிக்கும் ஐந்து பேருக்கு மரணம் என ஜே. வி. பி அறிவித்தது. அதனை விடவும் அன்றும் இன்றும் இருந்த எதிர்ப்புகள் அதிகமாகும். இன்றுள்ள எதிர்ப்பு திடீரென ஏற்பட்டதென கூற நான் விரும்பவில்லை.**

இந்நாட்டில் உண்மையான சமூக அரசியல் தோற்றம் பெறக்கூடிய அரசியல் கலாச் சாரத்தை மீளமைப்பதற்க்காக அனைவரும் இணைவதே இன்று இடம்பெற்றிருக்க வேண்டும். இந்த அரசியல் யதார்த்தை பின்தள்ளி சில்லறைத்தனமான தனது அனுதாபிகள் கூட்டத்தை சந்தோசப்படுத்தும் முயற்சியில் ஈடுபட ஜாதிக்க கெல உறுமய உட்பட இன்னும் சில கட்சிகள் தீர்மானித்துள்ளன. அதன்படி அவர்கள் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு எதிரான எதிர்ப்பானது மிகவும் தனது அனுதாபிகள் கூட்டத்தை என்பதைக் கூறியாக வேண்டும்.

**இனமுரண்பாட்டு சிக்கலில் மிகவும் முக்கியமான மாகாணத்தின் காணி அமைச்சராக நீங்கள் இருக்கிறீர்கள். தேர்தல் மூலம் மீண்டும் தொடக்கப்படவுள்ள வடமாகாண சபைக்கு காணி, பொலீஸ் அதிகாரம் வழங்குதல் தொடர்பிலான உரையாடல் மிகவும் சூடானது. அது ஈழத்துக்கு பாதை அமைக்குமென்பது சிலரின் கருத்து.**

தற்போது நாம் கேட்கும் அரசியல் தேவதைக் கதைகளில் மிகவும் நகைச்சுவையானதே அது. யாராவதொருவர் குற்றமிழைத்துவிட்டு ஏதாவதொரு மாகாணத்துக்கு தப்பிச் சென்றால் அவரை ஒருபோதும் பிடிக்க முடியாதெனவும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் அந்த மாகாணத்தின் விருப்பு முக்கியமானதெனவும் அண்மையில் சில ஊடகங்களில் பார்த்தேன். ஹெல உறுமய உட்பட்ட சில கட்சிகள் எழுப்பும் வாதம் எவ்வளவு பிற்போக்கானது என்பது இனிமேல் உங்களுக்கு தெரியவரும்.

13ஆவது திருத்தத்துக்கமைய குறித்த மாகாண பொலீசுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் நியமனம் அடிப்படையில் தேசிய பொலீஸ் ஆணைக்குழுவினாலேயே மேற்கொள்ளப்படும். அதிலுள்ள பெரும்பாலானோர் ஜனாதிபதியின் பிரதிநிதிகளாகவே கருதப்படலாம். அவ்வாறாயின் அவர்கள் தமது ஜனாதிபதியின் விருப்பத்துக்கு மாறாக செயற்படுவார்களென என்னால் நினைக்க முடியாது. அடுத்த விடயம் மாகாணசபை ஆரம்பத்தில் நிறுவப்பட்ட வடகிழக்கு மாகாண சபையின் முழு நிர்வாகமும் இந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் இருவரின் விருப்பத்துக்கமையவே மேற்கொள்ளப்பட்டது. ஜே.ஆர்.ஜயவர்த்தனா, ஆர். பிரேமதாஸ ஆகியோரே அவர்கள். அப்போது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக கூறப்பட்ட வரதராஜப் பெருமாள் சம்பவத்தில் ஜனாதிபதி தனது தற்துணிபு மூலம் பாதுகாப்புப் படைகளை ஈடுபடுத்தி அங்கு ஏற்பட்ட குழப்பத்தை அடக்கினார். இது ஓர் மாயாஜால அதிகார பகிர்வு. எப்போதும் சிங்கள அரசுகள் அசுர கரங்களால் அனைத்து அதிகாரங்களையும் வைத்துக்கொண்டிருப்பதை தவிர நடுநிலையான கொள்கையுடன் தீர்வை வழங்குவதனை நாம் காணவில்லை. எடுத்துக்காட்டாக கிழக்கு மாகாண சபையை நினைத்துப் பாருங்கள். மக்கள் இறைமையினால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருக்கும்போது ஆளுனர் கைவைக்காத ஏதாயினும் இந்த மாகாணத்தில் இருக்கிறதா? இதனை நாயின் வேலையை கழுதை செய்வதென்று கூறுவது அவரை அவமானப்படுத்துவதற்காகவல்ல உண்மையை வெளிப்படுத்துத்துவதற்க்காகவே என்பதனைக் கவனிக்க வேண்டும். அவர் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் பிரதிநிதியாக அவர் உருவாக்கிய வல்லமையினாலேயே இதனைச் செய்கிறார். அவ்வாறின்றி அலவி மௌலானா போன்றோ இதற்கு முன்னர் மேல்மாகாணத்திலிருந்த பெருமைக்குரிய ஆளுனர்கள் போன்று மக்கள் இறைமைக்கு தலைசாய்த்து மாகாண நிர்வாகத்துக்கு ஒத்துழைத்து புகழ்மிக்க ஆளுனராக வரலாற்றில் இணையும் ஆர்வம் அவருக்கில்லை. இதே நிலை வடக்கிலும் ஏற்படுமானால் ஏற்படக்கூடிய நிலையை நீங்களே ஊகித்துக் கொள்வது முக்கியமானது.

**நீங்கள் கிழக்கு மாகாண காணி, கல்வி அமைச்சர் அதற்குரிய பிரேரணைகள் போன்றவற்றை நிறைவேற்றிக் கொள்வதன் மூலம் விடயத்துக்குரிய அதிகாரங்களை பயன்படுத்துவதற்கு உங்களுக்கிருக்கும் தடைகள் எவை?**

கிழக்கு மாகாணசபைக்கு பெருமையுடன் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாக நாம் தீர்க்கவேண்டியிருந்த பல பிரச்சனைகள் இருந்தன. பல சவால்கள். அவை கட்டுப்படுத்தப்படும்போது ஓரளவு காலம் கடந்துவிடுகிறது. உண்மையிலேயே காணி நியதிச் சட்டத்தை தயாரிப்பதற்குக்கூட தேவையான காலம் எமக்கு பிரச்சனையானது. இருப்பினும் எமக்குரிய அதிகாரம் மற்றும் வரையறைக்குள் நடவடிக்கை எடுப்பதற்கு ஆளுனர் தலையிடுவது எனது தனித்துவத்துக்கும், மொத்த

கிழக்குமாகாணததுக்கும் அழிவாகவே நான் பார்க்கிறேன். கருத்து மோதல்களால் தோற்றுவிக்கப்படும் பொதுக் கொள்கை மூலம் சிறந்த ஜனநாயகத்தை எதிர்பார்த்த நாம் மக்களது விருப்பம் எனும் பெருமையை மூடிவைத்துவிட்டு முன்னாள் படையதிகாரியின் அடிப்படையற்ற அகங்காரத்துக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. மிக அண்மையில் இடம்பெற்ற சம்பவம் லாகுகல பகுதியில் பாடசாலை ஒன்றை திறந்தமையாகும். தமது பிள்ளைகளுக்கு பொருத்தமான கல்வியை வழுங்கவேண்டியது அவர்களது உரிமை என்பது போலவே கல்வி அமைச்சர் எனும் ரீதியில் எனது பொறுப்பாகும். தற்போதுள்ள நிலையில் இப்பிரதேசத்தில் 35% வீதத்திற்குக் குறைந்த பிள்ளைகளே பாடசாலைக்கு செல்கின்றனர். பொருத்தமான ஆரம்ப பாடசாலை பல மைல்களுக்கப்பால் அமைந்துள்ளது. பாடசாலை வாகனத்துக்கு 1200/- ரூபா செலுத்த வேண்டும். வரட்சிக்கும், காட்டு யானைக்கும் முகம் கொடுத்து இரவை மரணப்பயத்துடன் கழிக்கும் இந்த அப்பாவி மனிதர்களால் அவ்வாறு பாடசாலை வாகனத்துக்கு பெருந்தொகைப் பணத்தைச் செலுத்த முடியுமா? எனவே நான் லாகுகல பாடசாலைக்கு செல்லாத அப்பாவி பிள்ளைகள் கல்வி கற்பதற்காகச் சிறிய ஆரம்ப பாடசாலையை ஆரம்பித்தேன். கிழக்கு மாகாண ஆளுனர் என்ன செய்தார் தெரியுமா? உடனடியாக அதனை மூடிவிட்டார். தற்போது அந்த பிள்ளைகளின் சீர்குலைந்துபோன கல்விக்கு பொறுப்பு கூற வேண்டியது உண்மையான மக்கள் பிரதிநிதியான நானா? நல்லிணக்க அரசியலின் தொடக்கத்தை எடுக்க வேண்டிய மாகாண ஆளுனரா? இந்த மோசமான யதார்த்தத்தை தெரிந்துகொள்ளாமல் அதிகாரம் அரசியலமைப்பில் உள்ளது என்பதற்க்காக ஈழம் உருவாகுமென கூச்சலிடுவது சிறு பிள்ளைத்தனமானது. சிறப்பாக வேடுவ மக்களினதும் விசேட அன்புக்குரிய என்னைப் போன்ற சிங்கள அமைச்சருக்குக் கூட இப்படி நடக்குமாயின் வேறு மாகாணங்களுக்கு அதிகாரத்தை பகிர்வது பற்றி எதனைக் கதைப்பது?

**நீங்கள் கூறுவதுபோல தமக்குரிய அதிகாரத்தைக்கூட செயற்படுத்த முடியாதாயின் உண்மையில் மாகாண சபை தேவைதானா? வேறு மாற்று தீர்வுக்கு செல்ல முடியாதா?**


இங்கே வெளிப்படுவது மாகாண சபை முறைமையின் இயலாமை அல்ல. தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலின் வெளிப்பாடே. அப்படியில்லாவிட்டால் மேல் மாகாணத்திலோ, வேறொரு மாகாணத்திலோ உள்ள கல்வியமைச்சரால் முடியுமாக இருப்பது ஏன் எமக்கு மட்டும் முடியாதிருக்கிறது. எனும் பிரச்சனைக்கே தீர்வு காண வேண்டும். எனக்கு கீழுள்ள அலுவலர்கள் ஆளுனர்களின் உத்தரவுக்கமையவே செயற்படுவார்களாயின், பின்தங்கிய பிரதேச பாடசாலையொன்றில் 5 ஆண்டுகளாக நிலவும் விஞ்ஞான ஆசிரியரின் வெற்றிடத்தை என்னால் நிரப்ப முடியவில்லையாயின் அதற்குக் காரணம் 13ஆவது திருத்தம அல்ல. மக்களின் உணர்வுகளை புரிந்துகொள்ள முடியாத ஆளுனரே காரணம். இவ்வாறான சின்னச் சின்ன விடயங்களில் ஜனாதிபதி மாற்றத்தை ஏற்படுத்தலாம். அப்படி செய்யப்பட்டால் எதிர்பார்க்கும் சேவையை நிறைவேற்றுவதில் தடையிருக்காது.

**மாகாண சபைகளுக்கெதிரான எதிர்ப்புடன் இணைந்ததாக ஏனைய இனங்களுக்கெதிராக செயற்படும் போக்கும் வெளிப்படுகிறது. இந்நிலையை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

“நாம் பரீட்சையில் சித்தியடைந்தாலும் வாழ்க்கையில் தோல்வியடைந்து விட்டோம்” என்று. நான் எப்போதும் எவருக்கும் கூறி வருகிறேன். அந்த வாழ்க்கையில் தோற்றவர்களே இனங்களுக்கெதிராகத் தூண்டிவிடும் செயற்பாட்டின் பின்னணியில் உள்ளனர். அனைத்து உயிர்களுக்காகவும் பெரும் கருணையை போதித்த புத்தபெருமான் மூலமாக மட்டுமே உயிர்வதை செய்தல் பாவமென போதிப்பதை நீங்கள் கேள்வி பட்டுள்ளீர்களா? அவ்வளவு வதைக்கப்பட்டு பன்றி கொல்லப்படுவதற்கு எதிராக ஏன் வீதிக்கு இறங்கவில்லை. முஸ்லிம் மக்கள் பன்றி சாப்பிடாமையே அதற்குரிய காரணமாகும். சிறுபான்மை இனங்களின் அதிகாரத்தை இயன்றளவு பறித்தெடுப்பதுடன், முஸ்லிம்களுக்கெதிராக எதிர்ப்பை தூண்டி விடுவதாயின் ஹெல உறுமய, பொதுபல சேனா போன்றவற்றின் தலைவர்களின் பரம்பரைகூட முன்னேறிவிடும். இந்த எளிய யதார்த்தத்தை விளங்கிக்கொண்டு உண்மையான அரசியல் கலாசாரத்துக்குத் தேவையான அறிவு அனைவருக்கும் கிடைக்கும் வரைக்கும் நாம் சந்திக்க வேண்டியது பாரிய இழப்பாக இருக்கும்.

குறிப்பு
**மஞ்சுளா கஜனாயக்க**

**உண்மையிலேயே காணி நியதிச் சட்டத்தை தயாரிப்பதற்குக்கூட தேவையான காலம் எமக்கு பிரச்சனையானது. இருப்பினும் எமக்குரிய அதிகாரம் மற்றும் வரையறைக்குள் நடவடிக்கை எடுப்பதற்கு ஆளுனர் தலையிடுவது எனது தனித்துவத்துக்கும், மொத்த கிழக்குமாகாணததுக்கும் அழிவாகவே நான் பார்க்கிறேன்.**




> **"அச் சந்தர்ப்பத்தில் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ம.வி.மு. கற்றுத் தந்த பாடங்களின் முதலாவது பாடம்" இந்திய தேச விஸ்தரிப்புவாதமாகும் அதன் மூலம் இந்திய எதிர்ப்பினை விட தமிழ் எதிர்ப்பே சமூகத்தில் பிரபல்யடைந்தது. "பொம்பாய் வெங்காயம்" "பெரிய வெங்காயமாக மாற்றமடைந்ததே ஒரேயொரு இந்திய எதிர்ப்பாகும்."**

# தேசியப் பிரச்சினையும் ம.வி.மு (ஜே.வி.பி) யோசனைகளும்

சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா

"தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு நுழைவாயில்" எனும் பெயரில் மக்கள் விடுதலை முன்னணி தனது யோசனைகளைத் தெரிவித்துள்ளது. இது வரை கண்ணுக்கெட்டாத தொலைவில் உள்ள சோஷலிசத்தின் மூலம் தீர்வொன்றின் மீது நம்பிக்கை வைத்து தற்போதைய நிலைமை தொடர்பான யோசனைகளைத் தெரிவிப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

"தேசிய பிரச்சினையை இனங்காணல்" எனும் இவ் வெளியீட்டின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "1957 ல் கைச்சாத்திட்ட பண்டாரநாயக்க – செல்வநாயகம் ஒப்பந்தம் முதல் 1966 இன் டட்லி – செல்வநாயகம் ஒப்பந்தம், 1976 இன் ஜே.ஆர். - அமிர்தலிங்கம் இரகசிய ஒப்பந்தம், 1987ல் ராஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தம், 2002 ரனில் - பிரபாகரன் ஒப்பந்தம் ஆகிய அனைத்து ஒப்பந்தங்களும் தேசியப் பிரச்சினையை சிக்கல்படுத்தியதே தவிர, அதனை மீண்டும் மீண்டும் அதிகரிக்கச் செய்ததே தவிர, இனக்கலவரங்கள் முதல் இனவாத யுத்தம் வரை பிரச்சினையை அதிகரிக்கச் செய்ததே தவிர, அதனைத் தீர்க்கவில்லை"

அவ் ஒப்பந்தங்கள் தோல்வியடைந்தற்கான காரணங்களைக் கண்டறியாமல் அதன் பின்னர் ஏற்பட்ட நிகழ்வுகளை மட்டும் பார்ப்பதனூடாகவே இவ்வாறான ஒரு முடிவிற்கு வர முடியும். மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பிக்கப்பட்ட கால கட்டங்களில் 1957 மற்றும் 1966 ஆகிய இரண்டு ஒப்பந்தங்களும் அப்போதிருந்த அரசாங்கங்களினால் ஒருதலைப் பட்சமாக மீறப்பட்டிருந்தது. தெற்கில் காணப்பட்ட இனவாதச் சிந்தனைகள் அதற்குக் காரணமாயமைந்தன என்பது தெளிவாகிறது. எச் சந்தர்ப்பத்தில் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ம.வி.மு. கற்றுத் தந்த பாடங்களின் முதலாவது பாடம்" இந்திய தேச விஸ்தரிப்புவாதமாகும் அதன் மூலம் இந்திய எதிர்ப்பினை விட தமிழ் எதிர்ப்பே சமூகத்தில் பிரபல்யடைந்தது. "பொம்பாய் வெங்காயம்" "பெரிய வெங்காயமாக மாற்றமடைந்ததே ஒரேயொரு இந்திய எதிர்ப்பாகும்.

இந்திய மற்றும் தமிழ் எதிர்ப்பினால் பிரச்சினை அதிகரித்ததே ஒழிய தீர்வு கிடைக்கவில்லை. இனி அன்று அவ்வாறெனின் இன்று மாறியிருப்பின் அதில் எதுவித தவறும் கிடையாது. அதனை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றம் நம்பிக்கையைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

முன்னுரையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது "தேசியப் பிரச்சினைக்கு உண்மையிலேயே

தீர்வுகாண முடியுமான சோஷலிச சமூக மாற்றமொன்றுக்காகப் போராடுகின்ற அதே சமயம் மறுசீரமைப்பினை வென்றெடுப்பதற்காகப் போராடுவதாகும்". இதனை உறுதிப்படுத்துவதற்காக முன்பிருந்த இரு ஆண்டுகளுக்குள்ளும் இருந்து கொண்டு பெற்றுக்கொண்டவைகளையும் விட அனைத்து இனங்களும் இழந்தவைகள் தான் எவ்வளவு? அவ்வாறான, தவறுகளை ஏற்றுக்கொண்டு புதிய ஒரு செயன்முறை நோக்கி நகர்வதில் எதுவிதத் தடையுமில்லை. ஆயினும் அவ்வாறான ஒரு நகர்வினை மேற்கொண்டுள்ளதாக வெறும் அச்சிடப்பட்ட எழுத்துக்களினால் மட்டும் விளங்க வைக்க முடியாது. எதிர்கால நடவடிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்படுமிடத்து மக்களது நம்பிக்கையினை வென்றெடுக்க முடியும்.

**"வடக்கு கிழக்கு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை அடையாளங் காண்பதன் மூலம் இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைகள் பற்றி குறிப்பிடப்படும் விடயங்கள் மிக முக்கியமானதாகும். ஆயினும் அவை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட "கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கையின் 8 ஆம் அத்தியாயத்திலும் 9 ஆவது அத்தியாயத்திலும் 9.104 தொடக்கம் 9.108 வரை காட்டப்பட்டுள்ள பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குச் சமமானதாகும்.**

**"யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களது பிரச்சினைகள்" என்பதன் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் 9.86, 9.92 மற்றும் 9.96 ஆகிய பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

**"வடக்கில் சிவில் நிருவாகம் மற்றும் ஜனநாயகத்தை நிலை நாட்டாமை" என்ற தலைப்பின் கீழ் உள்ள விடயங்கள் கற்றுக் கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் 9.202 முதல் 9.217 வரை மிகவும் விரிவான விபரங்கள் பரிந்துரைகள் சகிதம் குறிப்பிடப்பட்டுள்ளது.**


**அவ்வாறே "காணிப் பிரச்சினைகள்" தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகள் 9..121 முதல் 9.152 வரை காட்டப்பட்டுள்ளன. அப் பரிந்துரைகள் விரிவான சாட்சிகள் மற்றும் கற்றலுக்கான அடிப்படையாகக் கொண்டு ஒன்று திரட்டப்பட்டுள்ளதுடன் சனநாயகத்தையும் நல்லிணக்கத்தையும் உறுதி செய்வது அத்தியவசியமாகும். ஜே.வி.பி. வெளியீட்டில் அது பற்றி குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அவ்வளவு பூரணத்துவம் பெறவில்லை.**

**"மொழிப் பிரச்சினை" பற்றி காட்டப்பட்டுள்ள விடயங்கள் ஆணைக்குழுவின் 9.238 தொடக்கம் 9.250 வரையான பரிந்துரைகளில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் ஒரு மீள் வெளியீடு போன்று உள்ளது.**

மக்கள் சபையினை ஏற்படுத்தும் யோசனையே ஜே.வி.பி. யோசனைத் திட்டத்தில் உள்ள ஒரு வித்தியாசமான அம்சமாகும். அதுவும் தமிழ் மக்களின் ஒத்துழைப்பினைப் பெறுதலும் நடைமுறைச் சாத்தியமுமாக உள்ள சந்தர்ப்பங்களில் மட்டுமே பிராந்திய சபைகள், மாகாண சபைகளை விடவும் வித்தியாசமானதெனக் கூற முடியும். பெரும்பாலான தென் பகுதிக் கட்சிகள் முன்வைக்கும் யோசனைகள் இந்தியாவினைப் போன்றே மேலேயிருந்து சுமத்துகின்ற யோசனைகளே தவிர, தமிழ் மக்களின் விருப்பத்தின் மூலம் பெறும் வேலைத்திட்டமொன்று இன்றி நடைபெறுவனவாகும். அவ்வாறு விருப்பத்தினைப் பெற நல்லிணக்கம் அத்தியாவசியமாகும். அதன் பொருட்டு தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள கற்றபாடங்கள் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மிக முக்கியமாகும். அப் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தலும் மக்களுக்கு அறிவூட்டலும் எந்தவொரு கட்சியினாலும் மேற்கொள்ளப்பட முடியுமான ஓர் உன்னதப் பணியாகும். அப் பரிந்துரைகளை மீண்டும் தமது யோசனைகளாகக் காட்டுவதில் தவறில்லை. ஆயினும் அது பற்றி குறிப்பிடப்படுவதனால் தனது களங்கமற்ற தன்மை தொடர்பான நம்பிக்கை உறுதி செய்யப்படும்.

யுத்தம் சட்டங்களும் சர்வதேச ஒப்பந்தங்களும் மீறப்படவில்லையென்பதற்கான ஒரு பரிந்துரையே கற்ற பாடங்கள் பற்றிய ஆணைக்குழுவிடமிருந்து அரசாங்கத்திற்குத் தேவைப்பட்டது. அவை பெற்றுக் கொள்ளப்பட்டன. கைவிடப்பட்ட அப் பரிந்துரைகளினாலேயே ஜெனிவாப் பிரேரணைகள் உருவாகின, ஆயினும் ஆணைக்குழுவின் ஏனைய பரிந்துரைகள் உயர்வாக மதிக்கப்படல் வேண்டும். அப் பரிந்துரைகள் வேறு வசனங்களில் கூறப்படுவதில் தவறில்லை.

இங்கு ஜே.வி.பி. அவ்வாறான யோசனைகளைச் சமர்ப்பிதற்கு அவர்களை மாற்றிக் கொண்டமையே நாம் அவர்களை மதிப்பதற்குரிய காரணமாகும். தனது கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் இதே கருத்தினைக் கொண்டிருப்பதனாலும் சமூக விமர்சனங்களினாலும் அவ்வாறு மாற்றடைதலானது சரியான பாதையில் செல்வதற்கு திறமையுள்ளது என்பதைக் காட்டுவதாகும். அத் திறமை வெளிக்காட்டப்பட்டிருக்குமாயின் ஏனையவர்களது கருத்துக்களுக்குப் பதிலாக தனக்கே உரித்தான ஆட்கள் வெளியிடப்படுவதில் சந்தேகமில்லை. எமது நாட்டிலுள்ள இரண்டு பிரதான கட்சிகளும் அரசியல் குற்றங்களின் அடையாளமாக மாறியுள்ள இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திலும் கூட பொதுமக்கள் தனது பிரதிநிதியாக தெரிவு செய்யாமைக்கான காரணம் அவர்களுக்கே உரித்தான பலவீனங்கள் காரணமாகத்தானா?




**மக்கள் சபையினை ஏற்படுத்தும் யோசனையே ஜே.வி.பி. யோசனைத் திட்டத்தில் உள்ள ஒரு வித்தியாசமான அம்சமாகும். அதுவும் தமிழ் மக்களின் ஒத்துழைப்பினைப் பெறுதலும் நடைமுறைச் சாத்தியமுமாக உள்ள சந்தர்ப்பங்களில் மட்டுமே பிராந்திய சபைகள், மாகாண சபைகளை விடவும் வித்தியாசமானதெனக் கூற முடியும். பெரும்பாலான தென் பகுதிக் கட்சிகள் முன்வைக்கும் யோசனைகள் இந்தியாவினைப் போன்றே மேலேயிருந்து சுமத்துகின்ற யோசனைகளே தவிர, தமிழ் மக்களின் விருப்பத்தின் மூலம் பெறும் வேலைத்திட்டமொன்று இன்றி நடைபெறுவனவாகும். அவ்வாறு விருப்பத்தினைப் பெற நல்லினக்கம் அத்தியாவசியமாகும்.**

”




Photo source : www.demotix.com

# பொலிஸ் அதிகாரங்களும்

## 13 வது அரசியல் அமைப்புச் சட்டமும்

கலாநிதி
ஜயம்பதி விக்கிரமரத்ன



வடமாகாண சபைத் தேர்தலை எதிர்நோக்கியுள்ள சந்தர்ப்பத்தில் மாகாணசபை அதிகாரங்கள் தொடர்பான உரையாடல்கள் உயிர்பெற்றுள்ளது காணக்கிடைக்கிறது. இவ்வாறு இது பெரும் வாதத்திற்கு உட்படுத்தப்படல் மிகச் சிறந்த ஒரு பண்பாக நோக்கப்படுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் தினமும் செவிமடுப்பதற்கும் பார்ப்பதற்கும் கிடைப்பது மாகாண சபை அல்லது பொதுவாக எமது அரசியல் அமைப்பின் மற்றுமொரு பகுதியான 13வது திருத்தத்திற்கு எதிரான தர்க்க ரீதியாக உறுதிசெய்ய முடியாத விடயங்கள் என்பதே இதற்குரிய காரணமாகும்.

மத்திய அரசிற்கும் மாகாணங்களுக்குமிடையே மிகத் தெளிவாக அதிகாரங்கள் பகிரப்பட்டமையே 13 வது திருத்தத்தின் காணப்படுகின்ற மிக முக்கியமான குறைப்பாடென்பதே எனது கருத்தாகும். இக் குறைபாடுகளை குறைப்பதற்கு இதனோடு தொடர்பான ஒருங்கியைப் பட்டியல் (Concurrent List) அதாவது மாகாண சபையினாலும் மத்திய அரசாங்கத்தினாலும் பொதுவாக பயன்படுத்தப்படகூடிய அதிகாரங்கள் தொடர்பான பட்டியலை அதிலிருந்து அகற்றுமாறு நாம் முன்பிருந்தே யோசனை தெரிவித்துள்ளோம். ஆயினும் சர்வகட்சி மாநாட்டு யோசனைகள் போன்ற பயனுள்ள செயற்பாடுகள் செயலிழப்பதன் மூலம் அவ்வாறான யோசனைகளும் பயனற்றுப் போயுள்ளதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. 13 வது திருத்தத்தின் எவ்வாறான குறைபாடுகள் இருந்தபோதும் அது இந்நாட்டின் இனப்பிரச்சினை தீர்வுக்கான உத்தேசத்தீர்வுத் திட்டத்தின் மிகவும் பயனுள்ள செயற்பாடு என்பதில் விவாதத்திற்கிடமில்லை. இன்று வடக்கின் மாகாண சபைத் தேர்தலை மையமாகக் கொண்டு அதற்கெதிரான பல முயற்சிகள் தெற்கில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மாகாண சபைகளுக்குரிய பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாகவே சிலர் தமது பலத்த எதிர்ப்பினைத் தெரிவிக்கின்றனர். உண்மையில் அவ்வாறான ஒரு பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டபோதும் பொலிஸ் என்ற சொல்லைக் கூட பாவிப்பது பிழையானதெனக் கூறுவது பொருத்தமாகும். அது சட்டத்தின் இருப்புடன் தொடர்பான அதிகாரங்கள் என்பதாக 13 வது திருத்தத்தின் முதலாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டின் பொலிஸ் ஆணைக்குழு சட்டத்திற்கமைய பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப்படாதமையையும் அதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைக்கப்பெறாமையையுமே இதுவரை பொலிஸ் அதிகாரங்கள் நடைமுறை படுத்தப்படாதமைக்கான காரணங்களாகும்.

**மத்திய அரசிற்கும் மாகாணங்களுக்குமிடையே மிகத் தெளிவாக அதிகாரங்கள் பகிரப்பட்டமையே 13 வது திருத்தத்தின் காணப்படுகின்ற மிக முக்கியமான குறைப்பாடென்பதே எனது கருத்தாகும். இக் குறைபாடுகளை குறைப்பதற்கு இதனோடு தொடர்பான ஒருங்கியைப் பட்டியல் (Concurrent List) அதாவது மாகாண சபையினாலும் மத்திய அரசாங்கத்தினாலும் பொதுவாக பயன்படுத்தப்படகூடிய அதிகாரங்கள் தொடர்பான பட்டியலை அதிலிருந்து அகற்றுமாறு நாம் முன்பிருந்தே யோசனை தெரிவித்துள்ளோம்.**

பொலிஸ் அதிகாரங்கள் மத்திய அரசிடமே காணப்பட வேண்டிய ஒன்று என மக்களிடத்தில் எடுத்துக் கூறப்பட்டாலும் சர்வதேச நிலைமை இதற்கு முற்றிலும் மாறுபட்டது எனக் கூறலாம். உதாரணமாக **பல நாடுகளில் பொலிஸ் அதிகாரங்கள் என்பது மத்திய அரசு மாநில ரீதியான நிர்வாக அலகின் மூலம் செயற்படுத்தப்படும் ஓர் அதிகாரமன்றி அதனிலும் கீழ் மட்டத்தில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் செயற்படுத்தப்படுகின்ற ஓர் அதிகாரமாகும். கனடாவில் பொலிஸ் அதிகாரங்கள் (Muncipal Police) என அழைக்கப்படும் நகர நிர்வாக அதிகார சபையின் மட்டத்திலான நிறுவனத்திற்குரியதாக இருப்பதுடன், சுவிற்சர்லாந்திலும் கென்ரன் எனப்படும் சிறு நிர்வாக அலகுகளிலும் கீழுள்ள பிரதேச மட்டத்திலான மிகவும் சிறிய நிர்வாக அலகுகளுக்கு அதன் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவில் அனைத்து பொலிஸ் அதிகாரங்களும் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டு மத்திய அரசு மத்திய புலனாய்வு பணியகத்தினூடாக (CIB) மத்திய அரசுடன் தொடர்பான புலனாய்வுகளை மேற்கொள்கிறதனைக் காணலாம்.** இவ் அனைத்து நாடுகளிலும் பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் இன்றி ஏனைய அனைத்து அதிகாரங்களும் ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்படுதலை காணலாம். அவ்வாறு ஒத்துழைப்புடன் செயற்படுகின்ற அதே நேரம் தமது தனித்துவத்தை பாதுகாத்து ஒரு தரப்பினர் மற்றைய தரப்பினரை முன் தேவையற்ற விதத்தில் நம்பகத்தன்மையுடன் செயற்படாதிருப்பதற்குரிய ஆரோக்கியமான அரசியல் கலாசாரம் ஒன்றை கட்டியெழுப்பப்பட்டுள்ளதனையும் அவதானிக்க முடியும். இவ்வாறானதொரு பின்னணியில் மிகவும் பயங்கரமான ஒரு போலியான பயம் இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளது என்பதனை கூறாமலிருக்கமுடியாது அதற்கேற்ப மாகாண பொலிஸ் தமது அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தலாம் எனவும் ஆகவே அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசிடம் இருக்க வேண்டும் எனவும் இதனை விமர்சிக்கும் பலர் மக்களை நம்ப வைத்துள்ள பாரதூரமான ஒரு பொய்மையாகும். இது எவ்வாறான ஒரு வேடிக்கை என ஒரு தர்க்கமாக நாம் ஏற்றுக்கொள்வோமாயின் மத்திய அரசின் நேரடியான கட்டளைகளை பெறுகின்ற பொலிஸ் அப்பாவிகளைப் போன்ற ஒரு நம்பிக்கை வகிக்கின்றன என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நீங்களும் நானும் அனுபவ ரீதியாக தெளிவாகக் கண்டுள்ளவாறு சுதந்திரத்திற்கு பின் இந்த நாட்டில் செயற்படுத்தப்பட்ட அனைத்து அரசாங்கங்களினூடாகவும் பொலிசார் தமது அதிகாரத்தைப் பல தடவைகள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தியுள்ளதுடன் சந்தேகநபர் என ஊகிக்கப்பட்ட அப்பாவி பிரசை ஒருவரை துன்புறுத்துவது தொடக்கம் எதிர்கட்சிகளின் அரசியல் செயற்பாடுகளில் சட்டவிரோதமாக (தமது அதிகாரத்தையும் மிஞ்சி செயற்படல்) அடக்குவதுவரை, அதிகாரத்தை முறையற்ற விதத்தில் செயற்படுத்துவதற்கு இலங்கை பொலிஸ் திறமை பெற்றுள்ளது. அனைத்து அரசாங்கங்களின் கீழும் இடம் பெற்றுள்ள குறித்த இம் முறைக்கேடான நிலைமைகளின் கீழ் மத்திய அரசாங்கம் நிருவகிக்கும் பொலிசை தேவதூதர்களைப் போன்று நோக்குவது என்னைப் பொறுத்தளவில் புரிந்துகொள்ள முடியாத ஒரு விடயமாகும். இதனை மேலும் விளங்குவதாயின் சில மாகாண சபைகள் மத்திய அரசாங்க முறைமையினை விடவும் மக்கள் நேயத்துடனும் சட்டம் அமைதிக்கு ஏற்பவும் செயற்படும் என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும். **அண்மையில் சரத் பொன்சேக்காவிற்கு சார்பான மக்கள் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் கலந்துகொண்ட ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கடுமையாக தாக்கப்பட்டு அவர்களினது மனித உரிமைகள் மீறப்படுகின்ற விதமாகப் பொலிஸ ார்செயற்பட்டனர். அச் சந்தர்ப்பத்தில் தென்மாகாண சபைக்கு பொலிஸ்அதிகாரங்கள் இருந்ததால் அவ்வாறான ஒரு பாரதூரமான நிலைமை தோன்றியிருக்காது என்பதே எனது கருத்தாகும். முந்திய அரசாங்கத்தினால் ஆணையிடப்பட்ட போதும் தனது மாகாண மக்களை அல்லது தனது மாகாணத்திற்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர்களைத் தாக்குவதற்கு இந்த மாகாணத்தின் முதலமைச்சரான திரு. ஷான் விஜேலால் அவர்கள் ஆணையிடுவார் என நான் ஒருபோதும் கருதவில்லை. அதனடிப்படையில் மாகாண சபைகள் பொலிஸ் அதிகாரங்களை செயற்படுத்துவதற்கு எதிரான ஜே.வி.பி. உள்ளிட்ட அரசியல் கட்சிகள் எமது தலைகளை உடைக்கவும் எமது கூட்டங்களை அடக்கவும் தேவையான அதிகாரங்களை மத்திய அரசாங்கமே வைத்துக்கொள்ளட்டும் எனக் கூற இடமுண்டு என நாம் ஊகிக்கலாம்.**

13வது திருத்தத்திற்கு அமைவாக மாகாணப் பொலிஸ் ஏற்படுத்தப்பட்டாலும் அது இலங்கையின் தேசிய பொலிசுடன் இணைந்த ஒரு பொலிஸ் அலகே ஒழிய வேறொன்றுமில்லை. அதன் பிரதான அதிகாரி பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் என்பதுடன் குறித்த பொலிஸ் அலகின் நடவடிக்கைகளின் நிர்வாகம் மாகாண சபைகளினூடாக மேற்கொள்ளப்படும். ஏனைய விடயம் யாதெனில் தேசிய பொலிசும் குறித்த மாகாணத்திற்குள்ளேயே தங்கியிருக்கும் என்பதுடன் (11) பதினொரு குற்றச் செயல்கள் தொடர்பாக அவர்களே பணியாற்றுவார்கள் என்பதாகும். அரசாங்கத்திற்கெதிராக மேற்கொள்ளப்படும் குற்றங்கள் அதில் முதலாவதாகும். இது மிகவும் விரிவாண ஒரு அர்த்தத்தினை கொண்டிருப்பதுடன் தேசிய பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கும் அல்லது அத்தியாவசிய சேவைகளை செயற்படுத்துவதற்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஏதேனுமொரு தவறினைப் புரிதல் இதில் எட்டாவது தவறாகும்.

குறித்த உப அட்டவணைக்கு ஏற்ப இம் மாகாண பொலிஸ் அலகிற்குள்ள அதிகாரங்கள் எல்லை

மீறிய ஒன்று அல்ல என்பதுடன் அது குறைக்கப்படும் என பொருள் கொள்ளக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது. ஆகவே இங்கு மத்திய அரசுக்கு பாரியளவிலான ஒரு கட்டுப்பாட்டைப் பேணிச் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றதென்பது தெளிவான ஒரு விடயமாகும். முன்னைய விடயம் யாதெனில் அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசாங்கம் வசமே காணப்படல் வேண்டுமென்ற இந்நாட்டு அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப யதார்த்தமாகாது என்பது இதன் தீவிர விமர்சகர்ளுக்குப் புரியாமலிருப்பது மிக ஆச்சரியமான ஒரு விடயமாகும்.

அவர்களது வாதம் உண்மையானதென நாம் சற்று சிந்திப்போமாயின் அதாவது பொலிஸ் அதிகாரங்களினூடாக ஏதேனுமொரு பாதக நிலைமை உருவாகும் சந்தர்ப்பத்தில் அதனைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மத்திய அரசிடம் காணப்படுவது மட்டுமன்றி அரசியலமைப்புத் திருத்தமொன்றுக்குச் செல்லக் கூடிய அவகாசமும் காணப்படுகிறது. ஆயினும் அவ்வாறான ஓர் அபாயம் இந்நிலைமைகளின் கீழ் ஏற்படும் என ஊகிக்க முடியாது.

**அண்மையில் பீஹார் மாநிலத்தில் புத்தகயா மீது பயங்கரவாதத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக சிலர் மத்திய அரசிடம் பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமையின் காரணமாக அது இடம் பெற்றது எனக் கூறினாலும் அது பொலிசாரின் திறமையின்மை அல்லது சரியான முறையில் புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப் பெறாமை தொடர்பான ஒரு பிரச்சினையே அன்றி அவர்களது வரைவிளக்கணத்திற்கு ஏற்ப பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பான ஒரு பிரச்சினை அல்ல. அவ் வாதத்தினை நாம் ஏற்றுக் கொள்வோமாயின் ஸ்ரீ மகா போதி, ஸ்ரீ தலதா மாளிகை, காத்தான்குடி முஸ்லிம் பள்ளிவாசல் என்பவற்றின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படும் போது குறித்த பொலிஸ் அதிகாரங்கள் யார் வசம் காணப்பட்டது? என அவர்களிடம் நாம் திருப்பிக் கேட்க வேண்டியுள்ளது.** ஸ்ரீ மகா போதி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது இந் நாட்டில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. அன்று போய் இன்றும் குறித்த அதிகாரங்கள் பொலிசாரிடம் காணப்பட்ட போதும் அனைத்து நிகழ்வுகளையும் கட்டுப்படுத்துவதற்கு அல்லது அடக்குவதற்கு எந்தவொரு பொலிசினாலும் முடியாது என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி அவர்கள் தனது தேவையின் நிமித்ததம் எந்தவொரு மாகாணத்திலும் சுற்றுப் பயணம் மேற்கொள்ள (உத்தியோக பூர்வ நடவடிக்கைகளுக்காக) முடியாது என்பதும் இப் பொய்ப் பிரச்சாரங்களிலுள்ள மற்றுமொரு பாரதூரமான பொய் என்பதனைக் கூறி வைக்க வேண்டும்.

சிலர் இதற்கு நல்லதொரு உதாரணத்தை எடுத்துக் கூற ஆரம்பித்துள்ளனர். அதாவது ஒரு முறை சோனியா காந்தி அம்மையாருக்கு உத்தர் பிரதேஷின் ஏதோ ஒரு ஆரம்ப வைபவத்திற்குச் செல்வதற்கு அதன் முதலமைச்சர் அனுமதியளிக்கவில்லை என்பதாகும். அண்மையில் நான் அங்கு சென்றிருந்த போது குறித்த விடயம் பற்றி ஆர்வம் காரணமாக அதன் முதலமைச்சரது அப்போதைய செயலாளரைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டேன். அவரது கூற்றுப்படி இடம்பெற்றவை யாதெனில் முதலமைச்சர் மாயாவதீ தலைமையிலான மாகாண அரசு தாம் செலவு செய்து நிர்மாணித்த புகையிரத நிலையமொன்றுக்குச்சமமான ஒரு கட்டிடத்தை ஆரம்பித்து வைப்பதற்கு மத்திய அரசாங்கத்தின் சார்பில் சோனியா காந்தி சமூகமளிக்கவிருந்த போதும் அரசியல் ரீதியான பிரச்சினையொன்றின் காரணமாக அப் பயணத்திற்கு முதலமைச்சர் தனது எதிர்ப்பினை வெளிக்காட்டியுள்ளார். குறித்த காணி மாநில அரசினால் மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படாமலேயே இதில் செல்வாக்குச் செலுத்தியது மிகப் பிரதான காரணி ஆகும். சோனியா காந்திக்கு அதனை ஆரம்பித்து வைக்க தேவைப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்ட போது எமக்குரிய ஒரு காணியில் எமது செலவில் இவ்வாறான ஒன்றை ஆரம்பித்து வைப்பதற்கு மத்திய அரசாங்கம் திடீரென வருகை தருவது மக்களின் எதிர்ப்பிற்குக் காரணமாயமையுமென்பதால் தற்காலிகமாக அப் பயணத்தை நிறுத்துமாறு முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். இதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள மற்றைய விடயம் யாதெனில் அது தீபாவளிக் கொண்டாட்ட காலம் என்பதால் பொதுவாக பொலிசார் பொதுமக்கள் கூட்டங்களைத் தடை செய்தல் ஆகும். மாநில அரசு அன்றி அதன் நீதவான் நீதிமன்றமும் அவ்வாறான ஒரு தடையினை விதித்திருத்ததனையும் முதலமைச்சர் தனக்கு சாதகமாக ஆக்கிக் கொண்டார். ஆயினும் பின்பு சோனியா காந்தி அம்மையார் அங்கு சென்றுள்ளதுடன் இது மாகாண மற்றும் மத்திய அரசாங்கம் என்பவற்றுக்கிடையிலான அதிகாரங்கள் சம்பந்தமான பிரச்சினைகள் என்பதை விட கட்சி அரசியல் ரீதியான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய ஒரு நிலையாகும். இந்தியா சுதந்திரம் பெற்று 6 தசாப்த கால எல்லையினுள் நடைபெற்ற இவ்வாறான ஒரு தனிப்பட்ட சிறிய நிகழ்வினை அடிப்படையாக கொண்டு கருத்து வெளியிடும் அளவிற்கு சிலர் வங்கரோத்து நிலையினை அடைந்துள்ளமை நகைப்புக்குரிய ஒரு விடயமாகும். ஆயினும் மேல் மட்டத்திலுள்ள அரசியல்வாதிகள் கூட இவ்வாறான நிகழ்வுகளை மீண்டும் மீண்டும் மேடைகளில் கூறி பொதுமக்களை வழிதவறி அழைத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்வதே மிகவும் பயங்கரமான செயலாகும்.

**இம் மாகாண பொலிஸ் அலகிற்குள்ள அதிகாரங்கள் எல்லை மீறிய ஒன்று அல்ல என்பதுடன் அது குறைக்கப்படும் என பொருள் கொள்ளக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது. ஆகவே இங்கு மத்திய அரசுக்கு பாரியளவிலான ஒரு கட்டுப்பாட்டைப் பேணிச் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றதென்பது தெளிவான ஒரு விடயமாகும். முன்னைய விடயம் யாதெனில் அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசாங்கம் வசமே காணப்படல் வேண்டுமென்ற இந்நாட்டு அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப யதார்த்தமாகாது என்பது இதன் தீவிர விமர்சகர்ளுக்குப் புரியாமலிருப்பது மிக ஆச்சரியமான ஒரு விடயமாகும்.**




Photo source : www.aljazeera.com

# தாழ்வுச்சிக்கல் காரணமாகவே இந்தியாவுக்கு பயப்படுகின்றனர்

சிரேஷ்ட சட்டத்தரணி
**எஸ்.எல். குணசேகர**



**வடமாகாணசபைத் தேர்தலுக்கு திகதி அறிவிக்கப்பட்டவுடன் 13 வது திருத்தத்துக்கெதிரான எதிர்ப்பு எழுந்தது. தாழ்வுச்சிக்கல் காரணமாகவே இந்தியாவுக்கு பயப்படுகின்றனர். அதில் தீமை உள்ளது. இவ்வாறு எதிர்ப்பு காட்டும்போது தமிழ் பிற்போக்குவாதிகள் அதனை அவர்களுக்கு எதிரான சிங்கள ஆதிக்கத்தின் விரிவாக்கம் என அர்த்தம் கற்பிப்பார்கள். நாட்டின் அரசியலமைப்பை பார்க்கும்போது அது மக்களுக்கு நன்மை அளிக்கின்றதா இல்லையா என்பது பற்றி கவனிக்கவேண்டும். இந்த பொருத்தப்பாட்டை ஆராயும்போது நாமெழுப்பும் வாதம் தொடர்பாக தமிழ் பிற்போக்குவாதிகள் எழுப்பும் குற்றச் சாட்டுக்கள் போலியானவை என மீண்டும் மீண்டும் கூறவேண்டியதில்லை. தற்போது அது தொடர்பில் பார்க்கும்போது மக்களுக்கு மாகாணசபையினூடாக எந்தவொரு நன்மையும் ஏற்படவில்லையென்பது தெரிகிறது. மாகாண சபை இல்லையென்றால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு என்னவென்று சிந்திப்பது முக்கியமானதாகும்.**

மாகாணசபைகள் இருந்தாலும் அதன் பெரும்பாலான தீர்மானங்கள் ஜனாதிபதியாலேயே எடுக்கப்படுகின்றன. ஏதாவதொரு மாகாண சபையை கலைப்பதற்க்குரிய தீர்மானத்தை முதலமைச்சரின் ஆலோசனைக்கமைய ஆளுனர் அறிவிக்க வேண்டும். ஆனால் உண்மையில் என்ன நடக்கிறது? ஜனாதிபதியே அதனைத் தீர்மானிக்கிறார். அவர் உண்மையிலேயே தலைவராவார். அரசியல் கட்சிகளை பலப்படுத்துவதனைத் தவிர வேறெதுவும் இந்த 13 ஆவது திருத்தம்மூலம் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெளிவாகிறது. அதன் நிதி விரயத்தை எமது நாடு தாங்கிக்கொள்ள முடியாது. நாட்டின் வேறு துறைகளிலும் ஓரளவு விரயம் ஏற்படுகிறது. மாகாணசபைகளுடாகவே மிகவும் பாதிப்பு ஏற்படுகிறது. அண்மையில் வடமத்திய மாகாணசபை உறுப்பினர்களின் வெளிநாட்டு சுற்றுலா ஜனாதிபதியின் தலையீட்டால் நிறுத்தப்பட்டது. மேல், தென் மாகாணசபைகள் அதனை முன்னரே மேற்கொண்டிருந்தன. இவ்வாறு சுற்றுலா

சென்றாலும் அவர்கள் சிறு அளவிலாவது நாட்டின் அபிவிருத்திக்கு ஏதாவது சேர்க்கின்றனரா? இது வெறுமனே தனிநபர்களை திருப்திப்படுத்துவதாக மாத்திரமே அமைகிறது.

அதற்கமைய எமது எதிர்ப்பு மக்களை சுரண்டித்தின்னும் முறைக்கெதிரானதே தவிர தமிழ்மக்களுக்கெதிரானதல்ல. முக்கிய இரு கட்சிகளினதும் பண்பே இது. மக்களை சுரண்டக்கூடிய விடயங்களில் ஐ.தே.கவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து விடுவார்கள். அந்த இரு கட்சிகளிலும் மிகச்சிறு தொகையினரே அதற்கு எதிராக இருப்பார்கள். அவர்களுக்கு மக்களின் கௌரவம் கிட்டவேண்டும். எனவே 13 வது திருத்தத்தை ரத்துச்செய்தே ஆக வேண்டும். இதனால் எந்தவொரு நன்மையும் கிடைக்கவில்லையாயின் இதனை தொடர்ந்தும் பாதுகாப்பதில் அர்த்தமில்லை.

நாம் மீண்டும் கிராம சபை முறைக்கு செல்லவேண்டுமென்பதே எனது முன் மொழிவாகும். கிராமங்களில் நல்ல நபர்களுக்கு வாய்ப்பளிக்கவேண்டும். அவர்கள் நிர்வாகத்தில் பங்கேற்கவேண்டும். கட்சியோ, சுயாதீன உறுப்பினரோ ஒரே சமமாக கருதப்பட வேண்டும். பேரம்பேசும் முறையில் வாக்கெடுப்பு ஊடாக முன்வந்து மக்களுக்கு சேவையாற்ற வாய்ப்பளிக்க வேண்டும். அதன் பின்னர் கிராமமொன்றில் அபிவிருத்தி திட்டமேதும் இருப்பின் அதன் திட்டமிடல், அமுல்படுத்தல் இந்த கிராம சபைப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டும். புளத் சிங்களத் தொகுதியில் பத்து கிராம சபைகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அந்தக்கிராம சபைகளின் பிரதிநிதிகள் தமது உறுப்பினரைத் தெரிவு செய்ய வாய்ப்பளிக்கப்படவேண்டும். அப்போது பாராளுமன்றத்தில் முழு புளத்சிங்கள தொகுதியும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருக்கும். கிராம சபைப் பிரதிநிதிகள் மக்களால் தெரிவு செய்யப்படுவதனால் அவர்கள் உறுப்பினர்களை தெரிவு செய்யப்படக்கூடியதாக இருப்பதுடன் முழுப்பாராளுமன்றத்திலும் தெளிவான மக்கள் பிரதிநிதித்துவம் அப்போதிருக்கும். இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது அரச தலைவரை தெரிவு செய்யும் வாய்ப்பு வழங்கப்படவேண்டும். அப்போது தேர்தலுக்காக செலவிடப்படும் வரையறையில்லாத செலவு நாட்டுக்கு மீதமாகும். 13 வது திருத்தத்தை மேலும் திருத்துவதற்காக எடுக்கும் முயற்சியின்போது கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் இவ்வாறு கூறினார்கள் “எனது கட்சித்தலைவர் கருத்துக்கூறிய பின்னரே எனது கருத்தைக்கூறுவேன்.” என ரவூப் ஹக்கீம் தொடர்பாக கூறப்பட்டது. எடுத்ததற்கெல்லாம் இவ்வாறு கூறும் அறிவற்றவர்களிடம் அதிகாரத்தை வழங்கமுயற்சிப்பதா? அவர்கள் கட்சிகளின் பொம்மைகளே தவிர நேரடியான மக்கள் பிரதிநிதிகள் அல்ல. இன்னொருபுறம் இவ்வாறான ஏதும் அறியாதவரிடம் அதிகாரத்தை வழங்காமல் இருப்பது நல்லதே.

**மக்கள் அதிகமான வாழ்க்கைச் செலவு சுமையால் நசுங்கிக்கொண்டிருக்கும்போது அமைச்சரவையை பராமரித்துக்கொண்டு, அவர்களுக்கு எரிபொருளும் வழங்கி செய்யும் செலவு விரயமில்லையா? இந்தப் பிரதிநிதிகளிடமிருந்து வினைதிறன் கிட்டாது சாதாரண மாகாணசபை பிரதிநிதிக்கும் பாதுகாவலர்கள் இவ்வாறான அமைதியான சூழ்நிலையில் இந்த வீண்விரய பிரதிநிதிகளைப் பராமரிப்பதற்கு பெருமளவு பணத்தை செலவிடுவது குற்றமாகும். மாகாணசபைக்கட்டடிடங்கள், அலுவலகங்களுக்கு செலவிடும் மின்கட்டணங்கள். இரண்டு பேருந்து தரிப்புகளுக்கு அப்பால் செல்வதற்கு கூட காசில்லாத பெரும்பாலான மக்கள் வாழும் நாட்டில் இவ்வாறான சிறு தொகையினரின் வீண்விரயங்களுக்கு மக்கள் பணம் இரையாவதை அங்கீகரிக்கலாமா?**

முதலில் 2/3 அதிகாரத்தை பெற்றுக்கொண்ட முறை தொடர்பில் எனக்கு பிரச்சனை உள்ளது. கரு ஜெயசூரிய உட்பட பெருமளவு ஐ.தே.க. உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கைகளை பலப்படுத்துவதாக கூறிச் செல்லும்போது நான் ஜனாதிபதியை சந்தித்தேன். “ஜனாதிபதியவர்களே அந்த மோசமானவர்களை நீங்கள் அருகில் அழைக்கக்கூடாது எனக் கூறினேன். அவர்கள் தொழில் தேடியே வந்தார்கள். எந்தவொரு தொலைநோக்குமில்லாமல் அரசுடன் இணைந்தவர்கள் 13 வது திருத்தத்தை நீக்குவதற்கு ஒத்துழைப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது.

அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் பிரதிநிதித்துவம் இல்லாமல்

**நாம் மீண்டும் கிராம சபை முறைக்கு செல்லவேண்டுமென்பதே எனது முன் மொழிவாகும். கிராமங்களில் நல்ல நபர்களுக்கு வாய்ப்பளிக்கவேண்டும். அவர்கள் நிர்வாகத்தில் பங்கேற்கவேண்டும். கட்சியோ, சுயாதீன உறுப்பினரோ ஒரே சமமாக கருதப்பட வேண்டும். பேரம்பேசும் முறையில் வாக்கெடுப்பு ஊடாக முன்வந்து மக்களுக்கு சேவையாற்ற வாய்ப்பளிக்க வேண்டும்.**

**தாழ்வுச்சிக்கல் காரணமாக இந்தியாவுடன் முரண்பட பயப்படுகின்றனர். பசில் ராஜபக்ஷ இந்தியாவுக்கு சென்றது தாழ்வுச்சிக்கல் காரணமாக இல்லையா? அந்தப்பயணம் எமது நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களது நலனுக்கு ஏதுவானதா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.**

போனமை தொடர்பில் எதிர்ப்புகள் உண்டு. திஸ்ஸ விதாரண போன்றோரைப் பெரிதாக கவனத்தில் எடுக்கக் கூடாது எனக் கருதுகிறேன். நேரடித்தலைவர்கள் அல்லாத பந்தம் பிடிப்போரின் எதிர்ப்புக்களால் தாக்கமில்லை.

**மாகாணசபை முறையில் நியதிச்சட்டங்களுக்கு ஆளுனரின் அங்கீகாரம் தேவையாகும். இருப்பினும் நியதிச்சட்டத்தை சமர்ப்பிக்கும் எல்லா உரிமையும் மாகாண சபைக்குள்ளது. ஆளுனர் நியதிச்சட்டத்தில் கையெழுத்திடாவிட்டாலும் அதனை அங்கீகரிக்ககூடிய முறைமை உள்ளது. அதற்கு அவ்வளவு அதிகாரமில்லை.**

அரசியலமைப்புக்கமைய அமைச்சரவையின் ஆலோசனைக்கு ஏற்பவே ஆளுனர் செயற்படவேண்டும். அவர்கள் தமது விருப்பத்துக்கமைய பாவிக்கக்கூடிய வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் உள்ளது. அதனைவிட ஆளுனருக்கு பெரும் அதிகாரம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இது இட்டுக்கட்டப்பட்டதே தவிர உண்மையில்லை.

தேசியக் கொள்கை என்று வரும் விடயங்களில் மாகாணசபைகள் கைபோடக்கூடாது. போக்குவரத்து சேவை, டெங்கு ஒழிப்புச் சேவை போன்றவை தேசிய மட்டத்தில் செய்யப்பட வேண்டியவையாகும். டெங்கு நுளம்பு மாகாண எல்லைகளுக்கமைய தாக்குவதில்லை அவை நாடுதழுவிய சேவைகளே அன்றி மாகாணங்களுக்கு வரையறுக்கப்பட்டவையல்ல அதனால் தேசிய மட்டத்தில் திட்டமிடவேண்டும். அதனை தேசிய மட்டத்தில் தயாரித்தால் மாகாணமட்டத்தில் அமுல்படுத்தலாம். கிராம சபை முறையை அறிமுகப்படுத்தினால் இவையனைத்திற்கும் ஓரளவு தீர்வு உண்டு. அமைச்சர்களின் அடிவருடிகளே நாட்டை அழிக்கின்றனர். சதொசவில் கருவாடு நிறுத்த மனிதன் இலங்கையின் உயர் செல்வந்த அரசியல் வாதியாகும்போது அவர் செய்த ஊழல்களை நினைத்துப்பார்க்கலாம்.

**13 வது திருத்தத்தை மாற்றம் செய்வதற்கு எனக்கு முழு சம்மதம். அதுமட்டுமன்றி இதனை முழுமையாக நீக்கவேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதற்கு நாம் ஆரம்பத்தில் எதிர்ப்புத்தெரிவித்தோம். இணைப்பதன் கருத்து சிங்கள, முஸ்லீம் இனத்தவரின் அரசியல் உரிமைகளை இல்லாமல் செய்வதாகும்.**

கடுமையான நீண்டகால போரில் வெற்றிபெற்ற நாம் சர்வதேசத்துக்கு காது கொடுக்கவேண்டியதில்லை. இந்தியா எமது மண்ணை ஆக்கிரமித்தபோது சர்வதேச சமூகம் மௌனமாக இருந்தது. எனவே, அவற்றை கருத்தில் எடுக்கத்தேவையில்லை. அவ்வேளையில் ஜனாதிபதி எந்தப்பொய்யை கூறியிருந்தாலும் தவறில்லை. அவரது பெரும் பொறுப்பாக இருந்தது எதிரிகளிடமிருந்து நாட்டை மீட்டதென்பதே. மேற்கு நாடுகள் எம்மை சுற்றிவளைத்து தாக்குவார்கள். எமது மிகப்பெரும் எதிரி இந்தியாவே. இந்தியா எமது நாட்டுக்கு எதிராக செய்த பிழையான செயற்பாடுகள் எண்ணிக்கையற்றவை. ஜனாதிபதி கூறிய எந்தவொரு பொய்யையும் நிறைவேற்றுவதற்காக சர்வதேசத்திடம் செல்லவேண்டியதில்லை.

தாழ்வுச்சிக்கல் காரணமாக இந்தியாவுடன் முரண்பட பயப்படுகின்றனர். பசில் ராஜபக்ஷ இந்தியாவுக்கு சென்றது தாழ்வுச்சிக்கல் காரணமாக இல்லையா? அந்தப்பயணம் எமது நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களது நலனுக்கு ஏதுவானதா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எம்மிடம் வாக்குறுதி கேட்கும் சர்வதேசம் யார்? குவாண்டனாமோ வதைமுகாமை மூடும் திகதியை நாம் கேட்பதில்லை இது தொடர்பான தெளிவு அரசுக்கு இருக்கவேண்டும்.

பிரச்சனைகளை தீர்ப்பதற்காக எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் பின்னால் இருப்பது பிற்போக்கு சந்தர்ப்ப வாதமே. டட்லி சேன நாயக்கவுக்கு தமிழ் உறுப்பினர்களின் ஒத்துழைப்பை பெறவேண்டிய தேவை இருந்தமை காரணமாகவே டட்லி செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. **காணி வழங்கும்போது முதலில் அந்த மாகாணத் தமிழர்களுக்கும், இரண்டாவதாக ஏனைய மாகாணத்தமிழர்களுக்கும் காணி வழங்க வேண்டும். மூன்றாவதாகவே சிங்களவர்களுக்குக் கிடைக்கும். அது ஒப்பந்தத்தின் ஓர் நிபந்தனை புறக்கோட்டை 2ம் குறுக்கு வீதியில் உள்ள சிவசாமி பதியத்தலாவையில் வசிக்கும் புஞ்சிபண்டாவின் காணியைப்பெற்றுக்கொள்ள உரிமை உள்ளது. எந்தவொரு தீர்வின்**

**மூலமும் நாட்டின் பிரச்சனைக்கு தீர்வு வழங்குவதே எதிர்பார்க்கப்பட்டது. உண்மையில் எமது நாட்டில் இருக்கும் பிரச்சனை குடிமக்கள் அனைவருக்கும் சமவுரிமை கிடைக்காமையே ஆகும். அனைவரும் ஒரே சீரான உரிமைகளை அனுபவிப்பார்களாயின் இந்நாட்டில் தேசிய இனப் பிரச்சனை இருக்காது. ஒவ்வோர் இனத்துக்கும் உள்ள பிரச்சனைகளை பொதுவில் இனப்பிரச்சனையாக அடையாளப்படுத்துவது தவறு பசி அனைவருக்கும் பொதுவானது. பசிக்கு சிங்கள தமிழ் வேறுபாடு கிடையாது.**

இந்நாட்டு குடிமக்களும் சமமாக நடாத்தப்படுவதில்லை. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு ஜனாதிபதியின் மைத்துனரே. அதாவது மனைவியின் சகோதரர். அவரிடமிருந்த வெளிநாட்டுப்பணம் சட்டவிரோதமானது. ஆனால் பொலிசார் அவர் செய்த முறைப்பாட்டை மட்டுமே விசாரித்தனர். காணாமல் போன மணிக்கூட்டைத் தேடுவதற்கே பொலிசார் ஈடுபடுத்தப்பட்டனர். அவருக்கெதிராக வழக்கு தொடரப்படவில்லை. ஆனால் சரத் பொன்சேகாவின் மகளது மாமியாரை நீதிமன்றுக்கு கொண்டுவருவதற்கு பொலிசார் எவ்வளவு முயற்சி எடுத்தார்கள்.? இவை நகைச்சுவையான சம்பவங்களே. ஜனாதிபதியின் சகோதரியின் தோட்டத்தை படமெடுக்கச் சென்ற புகைப்பட கலைஞருக்கெதிராக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு போடப்பட்டது. சட்டத்தின் முன் அனைவரும் சமனென்பது அதன்மூலம் தெரிகிறதா? அரசிலமைப்பின் 12 வது உறுப்புரையை சரியாக அமுல்படுத்துவதாயின் எந்த பிரச்சனையும் இல்லை. சிலர் சட்டத்தின்முன் அதிகாரம் பெறுவதனை அது தடுக்கும். அரசியலமைப்பினால் நாட்டை நிர்வகிக்க முடியாது. சிலர் அதனை சாதகமாக பார்த்தாலும் அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்க்கமுடியாது. வெய்மார் குடியரசு அரசியலமைப்புக்கமையவே ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்தார். அந்தளவு லிபரல் அரசியலமைப்பு உலகில் எங்கும் இருக்கவில்லை. அது மிகவும் அரிய அரசியலமைப்பாகும். எந்தவொரு அரசியலமைப்பிலும் நீக்கவேண்டிய மற்றும் வைத்திருக்க வேண்டிய விடயங்கள் இருக்கும். இந்த அரசியலமைப்பிலுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறை இரண்டுமுறை சிந்திக்காமல் நீக்கப்படவேண்டிய ஒன்றாகும். கட்சித் தலைவர்களால் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் போது சுயாதீனமான உறுப்பினர்கள் மிஞ்சமாட்டார்கள். ஆர்.ஜீ. சேனநாயக்க, தங்கத்துரை, முதியான்சே தென்னக்கோன் போன்றோர் சுயேட்சை உறுப்பினர்களாக சிறப்பான சேவையாற்றினார்கள்.

வடமாகாண சபைத் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணியோ, த.தே.கூட்டமைப்போ எவர் வென்றாலும் வேறுபாடில்லை. ஆனால் த.தே.கூட்டமைப்பு இல்லாத பிரச்சனையை ஏற்படுத்த முயற்சிக்கிறது. தற்போது புனிதர்கள் போல் இருந்தாலும் த.தே.கூட்டமைப்பினர் வடக்கு கிழக்கு தமிழ் மக்களிடத்தில் தமிழர் தாயகமெனும் பிரிவினை வாதத்தைப் போஷித்தார்கள்.

இந்த நாட்டுநிலப்பரப்பின் 33% எமக்குரியதென 12 வீதமானோர் கூறுவது ஆபத்தானதில்லையா? ஐக்கிய கூட்டமைப்பு தேர்தலில் வென்றாலும் நன்மை ஏற்படாது. நாட்டின் நன்மை தொடர்பான பார்வையில் அவர்கள் நோக்குவதில்லை. கட்சியினதும், குடும்பங்களினதும் நலனுக்கான பார்வையே உள்ளது. போர்க்காலத்தில் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் தேசப் பற்றுடன் அனுகினார். சில தீய சக்திகளுக்கு சிறப்பாக முகம் கொடுத்தார். வேறெந்த நாட்டிலுமில்லாத சுதந்திரத்தை எம்மால் ஏற்படுத்த முடிந்தது.

மாகாண சபைகளுக்கெதிரான எதிர்ப்புக்களை தற்போதைய நிலையில் சிலபோ் இனவாதமாகக் காட்ட முயற்சிக்கின்றனர். அதற்கு இனவாத முலாம் பூசப்படுவதனால் அவ்வாறான நிலை ஏற்பட்டிருக்கலாமென்ற சந்தேகம் எழுகிறது. உச்ச நீதிமன்றத்தின் அனைத்து நீதியரசர்களும் தமிழர்களாயினும் தகுதி இருப்பின் நியமிக்க வேண்டும். இன விகிதாசாரத்துக்கமைய தொழில் வழங்க வேண்டுமென்று எம்மால் கூறமுடியாது. சிராணி பண்டாரநாயக்கா அம்மணி தொடர்பான பிரச்சனையை அவருக்கும் ஜனாதிபதிக்கு மிடையிலான பிரச்சனை மட்டுமே என காட்டுவதற்க்கு சிலர் முயற்சியெடுத்தனர். ஆனால் மிகவும் சாதாரண பிரச்சனையே அதிலிருந்தது. அதனை தீர்ப்பதற்கோ, விளக்கமளிப்பதற்க்கோ நியாயமான வாய்ப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்த சம்பவம் கூட பந்தம் பிடிக்கும் அரசியலின் கொடூர முகத்தை எடுத்தது.

**வடமாகாண சபைத் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணியோ, த.தே.கூட்டமைப்போ எவர் வென்றாலும் வேறுபாடில்லை. ஆனால் த.தே.கூட்டமைப்பு இல்லாத பிரச்சனையை ஏற்படுத்த முயற்சிக்கிறது. தற்போது புனிதர்கள் போல் இருந்தாலும் த.தே.கூட்டமைப்பினர் வடக்கு கிழக்கு தமிழ் மக்களிடத்தில் தமிழர் தாயகமெனும் பிரிவினை வாதத்தைப் போஷித்தார்கள்.**




கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜேவிக்ரம, நிர்மாணிக்கப்படும் புதிய வீடமைப்புத் திட்டத்தைப் பார்வையிடுகிறார்.

# வடக்கு தேர்தலுடன் களத்துக்கு வந்துள்ள மூட நம்பிக்கைகள்



**அசங்க வெலிகல**
ஆய்வாளர்,
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கத்தை எதுவென்பதனை பெரும்பாலோனர் மறந்து விட்டனர். கொழும்பு நகரை மையமாகக்கொண்டு பல சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பது மிகவும் தெளிவானது. சிங்கள இனவாதிகளிடம் அதிர்ஷ்டவசமான பண்பொன்று இருப்பதாகவும் அதனோடு இணைந்ததாகக் கூறுவதில் தவறேதுமில்லை. காலத்துக்குக் காலம் தமது இருப்புக்குத் தேவையான தலைப்பொன்று கிடைப்பதே அது. நாட்டின் இறைமை போன்ற ஒருபோதும் அடையமுடியாத உரிமைகளுக்காக முன்நின்றாலும் சிலவேளை அதனை அவமானப்படுத்துவதாக கூறவில்லையாயின் சிங்கள இனவாதிகளுக்கு சிலவற்றை ஞாபகப்படுத்தவேண்டும். அதாவது ஆபிரிக்கக் கண்டத்தை இலக்கியத்தால் மயக்கிப்போட்ட ஃபான்ஸ் கஃப்காவின் இந்திரஜால யதார்த்தத்தைக்கூட தோற்கடிக்கக் கூடியளவு அதிசயமான செய்திக் கதைத்தொடரை இப்போது அவர்கள் உருவாக்கி வருகின்றனர். தற்போது அவர்களுக்கு கிடைத்துள்ள புதிய தலைப்பு வடக்கில் நடாத்தப்படவுள்ள தேர்தலாகும் அத்துடன் பொலீஸ், காணி அதிகாரங்களை வழங்குவதும் அவர்களது கடுமையான எதிர்ப்புக்கு காரணமாக இருப்பதாகவும் தெரிய வருகிறது. நாம் கற்ற அரசியல் விஞ்ஞானத்துக்கமைய மட்டுமன்றி அரசியல் விஞ்ஞானத்தை கற்கும் உயர்தர மாணவன் கூட பதிலளிக்கக்கூடிய வினா வொன்றுக்காக இனவாதிகள் தமது முழு அரசியல் செயற்பாட்டையுமே அர்ப்பணித்துள்ளதாகக் கூறுவது ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல. **அதாவது வடமாகாண சபை நிறுவப்பட்டவுடன் அதனோடு இணைக்கப்பட்டுள்ள காணி, பொலீஸ் அதிகாரங்களும் சேரும்போது அது பிரிவினைவாதத்துக்கு வழிசமைக்கும் என்பதே இனவாதிகளின் வாதம். நான் முன்பு குறிப்பிட்ட இந்திரஜால யதார்த்தம் இங்கேதான் தேவைப்படுகிறது. அதாவது இதனை உறுதி செய்வதற்கு மிகச்சிறந்த கதைக் கருக்கள் பலவற்றை சுவையூட்டி முன்வைத்தல். அதற்காக அரசியல் தேவதை கதையை முடிக்க வேண்டும். இவ்விடயத்தில் உதய கம்மன்பிலவுக்கு சவால்விடக்கூடிய எவராவது**

**இருப்பாராயின் அது சம்பிக்க ரணவக்க அமைச்சரே தவிர வேறு யாருமல்ல. அவரது மிகப் பிந்திய இந்திரஜால கதையுருவாக்கமானது மாகாணசபை தொடர்பான நான்கு மாயைகள் ஆகும். அவர் மிகவும் சிரமப்பட்டு காலத்துக்கு காலம் பொருத்தமில்லாத உதாரணங்களின் உதவியுடன் கூறுவதற்கு முயற்சிக்கும் முழுக் கதைக்கும் நான் முன்னர்கூறிய உயர்தர மாணவனால் கூட பதிலளிக்க முடியும். தற்போதுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி வடக்கில் நடாத்தப்படும் மாகாண சபையானது பிரிவினைவாதத்தை நோக்கிப் பயணிப்பது மிகவும் இலகுவானது எனவும், அது நாட்டின் இறைமையை பாதிக்கும் என்பதே அவரது பிரதான வாதமாகும். அதற்கமைய இந்த வாதத்துக்கு வழங்கக்கூடிய ஒரேயொரு பதிலானது இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்புக்கமைய இந்த நாடு இப்போதும் ஒற்றையாட்சி என்பதும் மாகாணசபை என்பது அதற்கமைய நிறுவப்பட்டுள்ள அலகு மட்டுமே என்பதுமாகும்.**

1978இன் இரண்டாவது குடியரசு யாப்பிலும், அதற்கு முன்னோடியான 1972 குடியரசு யாப்பிலும் இரண்டாவது உறுப்புரையில் இலங்கை குடியரசு ஒற்றையாட்சி அரசு பின்னணியில் இந்நாட்டின் சட்டபூர்வ அரசியலமைப்பு அதிகாரத்துடன் ஏதாவதொரு அரசியல் கட்சியோ / குழுவோ செயற்பட்டாலும் அந்த அதிகாரங்களை அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் வரையறைக்குட்பட்டு பயன்படுத்தலாமே தவிர ஒவ்வொருவர் கற்பனையில் கூறுவதுபோன்று பயங்கர சம்பவம் ஏதும் நடக்காது.

ஆளுனர் தொடர்பாக உதய கம்பன்வில உட்பட இனவாதிகள் எழுப்பும் கதையானது முழுமையான கற்பனையானதே தவிர வேறெதுவுமில்லை. உண்மையிலேயே அவர்கள் காட்டுவதுபோல ஆளுனர் முக்கியமான வேளையில் செயலற்று அதிகாரமற்ற நபராயின் அதிகாரப்பகிர்வு தொடர்பாக நம்பிக்கை வைத்திருக்கும் நாம் மகிழ்ச்சியடைவோமெனத் தயங்காமல் கூற வேண்டும். இருப்பினும் உண்மையிலேயே நடந்திருப்பது என்னவென்றால் அதிகாரப் பகிர்வு அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படை விடயங்களை உதாசீனப்படுத்தி சிற்சில பிற்போக்கான நோக்கங்களுக்காக முன்னிற்கும் ஆளுனர் பதவி உருவாகியுள்ளது என்பதோடும் ஆளுனர் பதவி தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும் போது மட்டும் அரசியலமைப்பின் உறுப்புரையில் உள்ளபடியே பொருள் கொள்ளப்படுவதுடன், புதிதாக வடக்கில் பதவிக்கு வரக்கூடிய அரசியல் கட்சி தொடர்பாக கதைக்கும்போது அரசியலமைப்பு ரீதியான ஏற்பாடுகளுக்கு அப்பால் பயணிக்க முடியுமென்று புரிந்துகொள்ள வேண்டியது இனவாதிகளின் செயற்பாடென்றா அவ்வாறில்லாவிடின் சந்தர்ப்பவாதத்துக்கேயுரிய குணாம்சமாகவா என்பது தொடர்பில் மீண்டும் ஒரு தடவை நினைத்துப்பார்க்க வேண்டியுள்ளது.

நாம் ஒருபோதும் ஆளுனருக்குரிய பாத்திரத்தை நிராகரிக்கவில்லை என்பதனையும் எடுத்துக்காட்ட வேண்டும். இதுபோன்ற ஒற்றையாட்சி முறையில் மத்திய அரசின் பிரதிநிதியாக ஆளுனருக்குரிய உண்மையான பாத்திரமானது மாகாண சபையில் அரசின் கருத்தை பிரதிநிதித்துவம் செய்வதாகும். இருப்பினும் அது மாகாணசபையின் அத்தியாவசிய செயற்பாடுகளில் கைவைத்தல் வரைக்கும் அதிகரிக்குமாயின் அங்கே சில முரண்பாடுகள் உள்ளதாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்று கிழக்கு மாகாணத்தில் நடைபெறுவது என்ன என்பதனை முறையாக ஆராய்ந்து பார்த்தால் இந்த விடயத்தை தெளிவுபடுத்திக் கொள்ளலாம். உண்மையான மக்கள் தேவைக்காக ஆரம்ப பாடசாலையை கல்வி அமைச்சரால் (மாகாண) திறக்கப்பட்ட மறுநாளே அதனை மூடுவதற்கு ஆளுனர் நடவடிக்கை எடுத்தார். மக்கள் இறைமையை குறைத்து மதிப்பிடும் ஆளுனருடன் மக்களுக்கு சேவை செய்யும் சிரமமான அரசியலை பயன்படுத்தி சிவனேசதுரை சந்திரகாந்தனின் தலைமையிலான மாகாண சபை செயற்பட்டது போன்றே அப்துல் மஜீத் தலைமையிலான (அவர் ஐ.ம.சு. கூட்டமைப்பின் ஆயுட்கால உறுப்பினர் என்பதனையும் கவனிக்க வேண்டும்) மாகாண சபையும் அனுபவித்து வருகிறது.

**இன்று அங்கு அமைச்சரவை ஒரு பக்கத்திலும், ஆளுனர் இன்னொரு பக்கத்திலும் இருப்பதே உண்மை நிலையாகும். அவ்வாறான ஆரம்ப பாடசாலையைக் கூட ஆரம்பிப்பதற்கு அதன் கல்வி அமைச்சருக்கு வாய்ப்பு இல்லாதிருப்பது அது பயங்கரவாத தடுப்பு சட்டத்தின்கீழ் கொண்டுவரக் கூடிய தவறென்று பார்ப்பதனாலா? இல்லை. அது வெறுமனே அரசியலமைப்பு ரீதியான, சட்ட ஏற்பாடுகளை தாண்டிச்சென்ற தனிநபர் அகங்காரம் மற்றும் நிறைவேற்று அதிகாரத்தின் வெப்பத்தில் வீழ்ந்துகிடக்கும் தனிநபரின் விருப்பமே.**

**ஆளுனர் தொடர்பாக உதய கம்பன்வில உட்பட இனவாதிகள் எழுப்பும் கதையானது முழுமையான கற்பனையானதே தவிர வேறெதுவுமில்லை.**

**அதாவது வரதராஜப் பெருமான் காலத்துடன் (1990 – 1991 காலப்பகுதி) இன்றைய நிலையை ஒப்பிடுவது போன்று முட்டாள் தனம் வேறேதும் இருக்காது என்பதேயாகும். மத்திய அரசின் அசாதாரணமான அக்கறையின்மை மற்றும் பிரேமதாஸ அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கொண்டிருந்த மிகவும் இரகசியமான தொடர்புகள் காரணமாக விரக்தியடைந்திருந்த வரதராஜப்பெருமான் தனது எதிர்ப்பைக் காட்டும் குறியீட்டு முறையாக ஈழ தேசத்தை பிரகடனப்படுத்தியதாக அக்கால அரசியல் பின்னணி தொடர்பாக அறிந்தவர்களுக்குத் தெரியும்.**

இனவாதிகள் பொலீஸ் அதிகாரம் தொடர்பில் கட்டியெழுப்பும் வாதமும் மிகவும் சுவையானது என்று கூற வேண்டும். அதன் மாயையை ஒரு புறம்தள்ளி பார்ப்பதாயின் பின்னிணைப்பின் (13ஆவது அரசியலமைப்பு திருத்தம்) சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகிய ஆரம்பப் பகுதிக்கு கவனத்தை செலுத்த வேண்டும். பொலீஸ் விடயம் தொடர்பாக மாகாணசபை அட்டவணையில் சட்டம், ஒழுங்கு ஆகிய தலைப்பிலேயே அதன் தெளிவுபடுத்தல் ஆரம்பமாகிறது. அது இவ்வாறு கூறுகிறது.

1. பன்முகபடுத்தப்படும் விடயம் கீழ்காட்டப்படும் முறையில் தெளிவுபடுத்தப்பட வேண்டும். இந்த உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு மாகாணத்தினுள்ளே பொதுமக்கள் சமாதானம் மற்றும் பொலீஸ் அதிகாரங்களை அமுல்படுத்துதல். ஆனால் அதில் கீழ்காட்டப்படும் விடயங்கள் உள்ளடங்கக் கூடாது.

அ) தேசியப் பாதுகாப்பு

ஆ) தேசத்தின் மிகச்சிறந்த பாதுகாப்பு மற்றும்

இ) ஏதாவதொரு ஆயுத படையையோ, சிவில் அதிகாரங்களுக்கு உதவுவதற்காக இலங்கை அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழுள்ள வேறு படைகளை ஈடுபடுத்துதல்.

சிங்கள இனவாதிகள் தமது முழுவகிபங்கை தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய உயர் பாதுகாப்பு ஆகியவற்றுக்காகவே நிலைநிறுத்தியிருப்பது இரகசியமானதல்ல. அப்படியாயின் அது மிகவும் தெளிவாக மாகாண பொலீசுக்குரிய விடயமல்ல என்பது பதின்மூன்றாவது திருத்தத்தில் உள்ளடக் கப்பட்டிருக்கும் போது இந்த அரசியல் கதைசொல்பவர்கள் காட்டும் மாயாஜால நிகழ்ச்சிகளின் அர்த்தம் என்னவென்று கேட்பது மிகவும் முக்கியமானது. இங்கே குறிப்பிடவேண்டிய இன்னொரு முக்கிய விடயமானது பொலீஸ் அதிகாரங்கள் போன்றவற்றை நிராகரிப்பவர்கள் எப்போதும் பொலிசாரை இராணுவ அதிகாரத்துடனான இன்னொரு ஆயுத பிரிவென்ற அர்த்தம் கற்பிக்கின்றனர். சட்டம் மற்றும் சமாதானத்தை பாதுகாப்பதற்காக எந்தவொரு அரசுக்கும், மாகாண அரசுக்கும் ஒத்துழைத்தல், அதன் மூலமாக சிவில் நிர்வாகத்தின் நன்நடத்தையை உறுதிப்படுத்துவதும் பொலீசின் பணிப்பொறுப்பாகும். இருப்பினும் பொலீஸ் தொடர்பாக கதைத்துக்கொண்டு அதற்குரிய விசேட அதிரடிப்படை (அது நாட்டில் நிலவிய அமைதியின்மையை அடிப்படையாகக் கொண்டு மத்திய அரசினால் 80 தசாப்தத்தில் ஆரம்பிக்கப்பட்ட பொலீசின் மிகச்சிறந்த ஆயுத பிரிவாகும்.) போன்ற உதாரணங்களை இழுத்துப் போட்டுக்கொண்டு அர்த்தம் கூற முற்படுவதன்மூலம் பொதுமக்களிடத்தில் பயப்பீதியை உண்டாக்கி உப்பு சிரட்டைக்குள் முதலையை காண்பதற்காக அவர்களை அழைப்பதாகவே தோன்றுகிறது.

அது மட்டுமா? இல்லை. இவ்வாறு இல்லாதவற்றை சோடிப்பதனை தொடர்ச்சியாக மேற்கொண்டு இன்னுமொருவரை களத்துக்கு அழைக்கின்றனர். அதாவது வடக்கு கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமானை இழுக்கின்றனர். அவர் தனியான பொலீஸ் படைப்பிரிவொன்றை தொண்டர் படைப்பிரிவு எனும் பெயரில் உருவாக்கியதாகவும், அதுபோன்றே எந்தவொரு முதலமைச்சரும் செயற்பட முடியுமென்றும் கூறுகின்றனர். இவ்வாறான சிறுபிள்ளைத் தனமான வாதங்களுக்கு பதிலளிப்பது ஒரு வகையில் நேரத்தை வீணடிப்பதாக இருந்தாலும் அறிவுசார் வாசகர்களுக்கு ஒரு விடயத்தை மட்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதாவது வரதராஜப் பெருமான் காலத்துடன் (1990 – 1991 காலப்பகுதி) இன்றைய நிலையை ஒப்பிடுவது போன்று முட்டாள் தனம் வேறேதும் இருக்காது என்பதேயாகும். மத்திய அரசின் அசாதாரணமான அக்கறையின்மை மற்றும் பிரேமதாஸ அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கொண்டிருந்த மிகவும் இரகசியமான தொடர்புகள் காரணமாக விரக்தியடைந்திருந்த வரதராஜப்பெருமான் தனது எதிர்ப்பைக் காட்டும் குறியீட்டு முறையாக ஈழ தேசத்தை பிரகடனப்படுத்தியதாக அக்கால அரசியல் பின்னணி தொடர்பாக அறிந்தவர்களுக்குத் தெரியும். அவர் அவ்வாறு தனிநாட்டை பிரகடனம் செய்தாரே தவிர இந்நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தலான எதனையும் செய்யவில்லை. உண்மையிலேயே அவர் இந்தியாவுக்குத் தப்பியோட முன்னர் இலங்கை அரசுக்கு ஏதாவது எதிர்ப்பு காட்டுவதனையே செய்தார். வடக்கில் த.வி. புலிகளின் பிரச்சனையும், தெற்கில் தேசப்பற்று இயக்கம் மற்றும் (ஜே.வி.பி) அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாதிக்கப்பட்டிருந்த மத்திய அரச பொலீஸ் மற்றும் படையினருக்கு அதனை முறியடிக்க வேண்டிய புரட்சியாக அது இருக்கவில்லை என்பதுடன் நிலமையை ஒரே தடவையில் மத்திய அரசால் சீராக்க இயலுமாக இருந்தது. அக்கால நிலமை தொடர்பாக மதிப்பீடு

செய்வதுடன் தற்போதைய பின்னணிபற்றி நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

போரின் வெற்றியுடன் இந்நாட்டின் படையினர் வடக்கின் மூலை முடுக்கெல்லாம் நிலைகொண்டிருப்பதுடன், தென் ஆசியாவில் மிக உயர்ந்த இராணுவ பரம்பலுடைய வலயமாக வடக்கு மாகாணமே இருக்கிறது. அதற்கு மேலதிகமாக டக்ளஸ் தேவானந்தா கட்சிகளின் ஆயுத வரலாற்றைக் கொண்ட அரசுடன் இணைந்துள்ள கட்சிகளாக வடக்கில் ஓரளவு அதிகாரத்தை வென்றுள்ளன. எமது கற்பனை சரியானதாக இருப்பின் **வடக்குக்கு நியமிக்கப்படும் ஆளுனர் பெரும்பாலும் தற்போது கிழக்கு மாகாண ஆளுனரின் வகிபங்கையே வகிப்பார். அதற்கும் மேலதிகமாக 1990 மற்றும் இன்றைய காலப்பகுதிக்கிடையில் அரசியல் தந்திரோபாயத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் நேரடி பலனையும் மத்திய அரசு வெற்றி கொள்வதில் எந்தவொரு சிரமமும் இல்லை. இவ்வாறான சூழமைவில் தமிழ் தேசிய கூட்டமைப்போ வேறு அதிகாரத்துக்கு வரும் அரசியல் கட்சியோ மத்திய அரசுக்கு சவாலாக இருக்கக்கூடியவாறான பொலிசை உருவாக்க முடியுமென்று பகல் கனவு கண்டு விழித்தெழுந்த கம்பன்பில போன்ற பிரபல அரசியல்வாதிகளைத் தவிர வேறெவரும் கூறமாட்டார்கள்.**

மாகாண சபை தொடர்பான மாயையின் அடிப்படையில் மாயையான சமூகத்தை உருவாக்குவதற்கு உத்தியோகபூர்வமாக வாய்ப்புப் பெற்றுள்ள அரசியல் கதைபுனை வோர்களுக்கு பதிலளிப்பதனை ஒருபக்கம் வைத்துவிட்டு, தற்போதைய யதார்த்தம் தொடர்பாக விளக்கினால் ஒரு விடயம் தெரியவரும். அது ஜனநாயக அரசியலமைப்பைச் சரியாக பயன்படுத்தும் வழக்கம் இதுவரையும் எம்மிடையே இல்லாதிருப்பதாகும். அவ்வாறான அரசவிடயமொன்றின்போது இருதரப்பும் வெற்றிபெறக்கூடிய (Win Win Situation) முடிவை பெறக்கூடியதாக இருந்தபோதிலும் எப்போதும் ஒரு தரப்பு வெற்றிபெற வேண்டு மெனவும், மறுதரப்பு தோல்வியடைய வேண்டுமெனும் நோக்கு (Win - Loose) பரவியிருப்பது எமது நாட்டில் அமுலிலுள்ள ஜனநாயக ஆட்சிக்கேயுரிய குறைபாடாகும். எந்தவொரு மாகாண சபையும் வெற்றிபெறுவதாயின் அதன் ஆளுனருக்கும், அமைச்சரவைக்குமிடையில் சிறந்த உறவு இருக்க வேண்டும். அவ்வாறே இருதரப்பாரும் பயன்படுத்தும் அதிகாரத்தில் ஒழுக்க சமநிலை (Check and balance) போன்ற பண்புகள் இருத்தல் வேண்டும். எந்தவொரு முதலமைச்சரும் ஆளுனரை மீறிச் செயற்படுவதனையும் நாம் அங்கீகரிக்கவில்லை. அதற்குக் காரணம் முழுமையான பதின்மூன்றாவது திருத்த சட்டமுமே மத்திய அரசின் கீழான நிர்வாக அலகாக குறிப்பிட்டிருப்பதாகும். அதன்போது மாகாண ஆளுனரும் மாகாணத்தின் சிறந்த இருப்பை ஒதுக்கிவிட்டு கிழக்கு மாகாணத்தில் இடம்பெறுவது போன்று காலையிலேயே அனைத்து நாளிதழ்களையும் வாசித்து, தமது மாகாணத்துக்குரிய அனைத்து சிறு விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவைக்கு ஆலோசனையும், உத்தரவுகளையும் வழங்க முற்பட்டால் ஏற்படும் நிலைமை என்ன? அதனால் ஜனநாயக நிர்வாகமொன்றில் எந்தவொரு நிர்வாக அலகும் தமது எல்லையை மீறி செயற்படாமலிருப்பதற்கு பார்த்துக்கொள்ளுதல் அதன் நல்லிருப்புக்கு தாக்கம் செலுத்தும் முக்கியமான காரணியாகும் என்பதனை கவனிக்க வேண்டியது முக்கியமானதாகும்.

இறுதியாக தற்போது அரச ஊடகங்களையும், வேறு பல்வேறுவிதமான மூலங்களுக்கம் கவனம் செலுத்தும்போது எவருக்கும் விளங்கும் ஒரு விடயம் உள்ளது. அதாவது வடக்கு தேர்தலில் போட்டியிட முன்வந்திருப்பது தமிழ் தேசிய கூட்டமைப்பு எனும் கட்சியன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே என்பதாகும். மோதலுக்கு பின்னரான காலத்தில் நல்லிணக்க அரசியலை எதிர்பார்த்திருக்கும் முக்கியமான வேளையில் ஜனநாயக போட்டத்தில் தொடர்ச்சியாக செயற்பட்டுவரும் சிறுபான்மை தேசிய கட்சியொன்றுக்கு அவ்வாறு முத்திரை குத்துவதனால் அரசு தற்காலிக நன்மையை பெறமுடியும். இருப்பினும் நீண்டகால ரீதியில் அதனால் நன்மை ஏற்படாது. தமிழ்தேசிய கூட்டமைப்பை இன்னமும் அரசுடன் நெருங்குவதற்க்கான புதிய தந்திரோபாயம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்பதனை சொல்லாமலிருக்க முடியாது. அதன்படி வடக்கு தேர்தலானது வடக்கு, தெற்கு ஜனநாயகரீதியாக தொடர்ந்தும் இரண்டுபட்டு செய்ய முடியாததென்பதும் எமது எதிர்பார்ப்பாகும்.

**எந்தவொரு முதலமைச்சரும் ஆளுனரை மீறி செயற்படுவதனையும் நாம் அங்கீகரிக்கவில்லை. அதற்குக் காரணம் முழுமையான பதின்மூன்றாவது திருத்த சட்டமுமே மத்திய அரசின் கீழான நிர்வாக அலகாக குறிப்பிட்டிருப்பதாகும். அதன்போது மாகாண ஆளுனரும் மாகாணத்தின் சிறந்த இருப்பை ஒதுக்கிவிட்டு கிழக்கு மாகாணத்தில் இடம்பெறுவது போன்று காலையிலேயே அனைத்து நாளிதழ்களையும் வாசித்து, தமது மாகாணத்துக்குரிய அனைத்து சிறு விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவைக்கு ஆலோசனையும், உத்தரவுகளையும் வழங்க முற்பட்டால் ஏற்படும் நிலைமை என்ன?**



Photo source : www.businesstoday.lk/ www.ida.wp.gov.lk/

**வடக்கில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக பலரது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளதெனத் தெறிகிறது. இத் தேர்தலை தேசப்பற்றுள்ளோர் என்ற வகையில் நாம் மிக விசேடமாகவே பார்க்கின்றோம். அதற்குப் பல காரணங்கள் உண்டு. மாகாண சபைகள் மட்டுமன்றி பொதுவாக பதின்மூன்றாவது திருத்தம் முழுவதும் இந் நாட்டில் அமுல்படுத்தப்படுவது நாட்டின் இறைமையினை அபாயத்திற்குட்படுத்துவதாகும் என்பதே எமது கருத்தாகும். அது மட்டுமன்றி இலங்கையில் பிரிவினைவாதத்தை வளர்க்கும் மிக முக்கிய உந்துசக்தியாகும்.**

---

**உதய பிரபாத் கம்மன்பில**
விவசாய - கமநல சேவைகள் அபிவிருத்தி, நீர்ப்பாசன, வாணிப சுற்றாடல் அமைச்சு
மேல் மாகாண சபை

## பிரிவினைவாதத்திற்குத் துணை போகும்

# வடக்கின் தேர்தல்

வடக்கில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக பலரது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளதெனத் தெறிகிறது. இத் தேர்தலை தேசப்பற்றுள்ளோர் என்ற வகையில் நாம் மிக விசேடமாகவே பார்க்கின்றோம். அதற்குப் பல காரணங்கள் உண்டு. மாகாண சபைகள் மட்டுமன்றி பொதுவாக பதின்மூன்றாவது திருத்தம் முழுவதும் இந் நாட்டில் அமுல்படுத்தப்படுவது நாட்டின் இறைமையினை அபாயத்திற்குட்படுத்துவதாகும் என்பதே எமது கருத்தாகும். அது மட்டுமன்றி இலங்கையில் பிரிவினைவாதத்தை வளர்க்கும் மிக முக்கிய உந்துசக்தியாகும். இங்கு யாருக்காவது ஒரு பிரச்சினை உருவாகலாம். அதாவது அவ்வாறான ஒரு அபாயகர நிலைமையின் கீழ் நாம் ஏன் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கு இதற்கு முன் இணங்கினோம்? **2005 ஆம் ஆண்டில் "மகிந்த சிந்தனை" கொள்கைத் திட்டத்தின் மூலம் ஒற்றையாட்சி அமைப்பிற்குள் அதிகாரத்தைப் பகிர்வதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டமையே அவ்வாறு இடம்பெற ஏதுவாயமைந்தது. விசேடமாக மகிந்த சிந்தனை எதிர்கால தொலைநோக்கில் வட மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது.**

புலிப் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டமையைத் தொடர்ந்து முழு நாட்டிலும் அனைத்து



**இவ்வாறான அபிலாஷைகளின் கீழ் வட மாகாண சபை தற்போதுள்ள அதிகாரங்களுடன் தமிழ் தேசிய கூட்டணியின் கைகளுக்குச் செல்வது இந்நாட்டை இரத்தக் களமாக மாற்றக்கூடிய ஒன்று என்பதனை நாம் ஏற்கனவே அறிவோம். அவர்கள் மாகாண சபையை ஏற்படுத்தியவுடனேயே பிரிவினை வாதத்திற்குச் செல்ல மாட்டார்கள். சிங்கள இனவாத சக்திகளின் ஊகங்களைப் பொய்ப்பித்து தெற்கில் பலவீனமான ஒரு அரசாங்கம் வரும் வரை அவர்கள் காலம் கடத்துவார்கள் என்பதே உண்மையாகும். விசேடமாக சமீப காலங்களில் பதவி வகித்த சந்திரிக்கா, ரணில் போன்ற ஒரு அரசாங்கம் வரும் வரை அவர்கள் எதிர்பார்ப்புடன் இருப்பார்கள். சிறுபான்மையினரின் வாக்குகளை மையமாகக் கொண்டே அவ் அரசாங்கங்கள் பதவியில் இருந்தன. இவ் விடயம் தொடர்பான தொலை நோக்கு ஒன்று எம்மிடம் காணப்பட்டதனாலேயே நாம் மாகாண சபை முறைமை ஒழிக்கப்பட வேண்டுமென்ற செய்தியை சமூகமயப்படுத்தினோம்.**

துறைகளிலும் புதியதொரு ஆரம்பம் தொடர்பாக எமக்குள் புதியதொரு எதிர்பார்ப்பு நிலவியதே அதற்கான காரணமாகும். தமிழ் பிரிவினைவாதம் தமது நோக்கங்களை இன்னமும் கைவிடவில்லை என்பதே நாம் காணுகின்ற யதார்த்தமாகும். வன்னியில் நடைபெற்ற யுத்தத்தினை ஐரோப்பா வரை கொண்டு சென்றதனைப் போன்று அதனை வேறு ஒரு திசையில் ராஜதந்திர யுத்தமாக மாற்றுவதற்கு தமிழ் தீவிரவாதிகள் பெரும் முயற்சி மேற்கொண்டனர். அதன் விளைவாக 2011 ஆம் ஆண்டளவில் நிலப் பிரதேசமற்ற தமிழ் தேசமொன்று பலஸ்தீன, திபெத் மாதிரிக்கு அமைய ஏற்படுத்தப்பட்டது.

அது தமிழ் ஈழத்திற்கான அடிப்படையினையும் வழங்கியது. உருத்ரகுமார் அதன் பிரதமராகத் தெரிவானார். இப் பூமியில் இல்லாத ஒன்று என்பதுடன் இலங்கையிலும் காணப்படாத ஒன்று என்ற வகையில் நாம் அதனைக் கருத்திற் கொள்ளவில்லை. எனினும் தமிழ் கூட்டமைப்பின் தலைவர் திரு. ஆர் சம்பந்தன் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சியின் வருடாந்த மாநாட்டின் போது தமிழ் ஈழம் தொடர்பாக அவர்களுக்குள் காணப்படும் அபிலாஷை மாற்றமின்றி காணப்படுவதாக குறிப்பிட்டார். தமிழ் பிரிவினைவாதத்தின் வடிவம் மட்டுமே மாற்றமடைந்துள்ளது என்பதனையே நாம் இதிலிருந்து புரிந்துகொள்ள வேண்டும். எந்தவொரு யுத்தத்தின் போதும் அதனோடு இணைந்ததாக அதன் அரசியல் முன்னணிகள் தோல்வி காண்பது இயற்கையே. ஜேர்மனியில் ஹிட்லர் தோல்வி கண்டதுடன் அதன் பாத் கட்சியின் அரசியலும் அதனைத் தொடர்ந்தும் தோல்வியடைந்தது. அதுமட்டுமன்றி சதாம் ஹுசைனின் மரணத்தின் பின் ஈராக்கில் பாத் கட்சி இன்றும் கூட தடை செய்யப்பட்டுள்ளது. அதே நிலைமை தான் ஆப்கானிஸ்தான் தலைபான் இயக்கத்திற்கும் நேர்ந்தது. மேலும் முபாரக் பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து எகிப்தில் அவருடன் தொடர்புபட்ட அரசியலும் தடை செய்யப்பட்டதை அனைவரும் அறிவர். **ஆயினும் இலங்கையில் எல்.ரீ.ரீ.ஈ இயக்கம் தோல்வியடைந்தாலும் அதன் அரசியல் முன்னணி செயற்பாட்டு நிலையிலுள்ளமை பற்றி நாம் ஆழமாக கருத்திற்கொள்ள வேண்டும். தமிழ் தேசியக் கூட்டணி தமிழ் செல்வத்துக்குப் பதிலாக சர்வதேச சக்திகளிடம் ஆலோசனை பெற்றுக்கொள்வதே இன்றுள்ள ஒரேயொரு வித்தியாசமாகும். இத் தமிழ் பிரிவினைவாதத்தின் அரசியல் துறையே இன்று தமிழ் சமூகத்தின் சனநாயக ரீதியிலான தலைவர்களாக உள்ளனர்.**

## பிரிவினைவாதத்திற்கு துணைபோகும் வட மாகாண சபைத் தேர்தல்

இவ்வாறான அபிலாஷைகளின் கீழ் வட மாகாண சபை தற்போதுள்ள அதிகாரங்களுடன் தமிழ் தேசிய கூட்டணியின் கைகளுக்குச் செல்வது இந்நாட்டை இரத்தக் களமாக மாற்றக்கூடிய ஒன்று என்பதனை நாம் ஏற்கனவே அறிவோம். அவர்கள் மாகாண சபையை ஏற்படுத்தியவுடனேயே பிரிவினை வாதத்திற்குச் செல்ல மாட்டார்கள். சிங்கள இனவாத சக்திகளின் ஊகங்களைப் பொய்ப்பித்து தெற்கில் பலவீனமான ஒரு அரசாங்கம் வரும் வரை அவர்கள் காலம் கடத்துவார்கள் என்பதே உண்மையாகும். விசேடமாக சமீப காலங்களில் பதவி வகித்த சந்திரிக்கா, ரணில் போன்ற ஒரு அரசாங்கம் வரும் வரை அவர்கள் எதிர்பார்ப்புடன் இருப்பார்கள். சிறுபான்மையினரின் வாக்குகளை மையமாகக் கொண்டே அவ் அரசாங்கங்கள் பதவியில் இருந்தன. இவ் விடயம் தொடர்பான தொலை நோக்கு ஒன்று எம்மிடம் காணப்பட்டதனாலேயே நாம் மாகாண சபை முறைமை ஒழிக்கப்பட வேண்டுமென்ற செய்தியை சமூகமயப்படுத்தினோம். அவ்வாறில்லாவிடின் இதில் காணப்படுகின்ற நச்சுத் தன்மையினைக் குறைப்பதற்கு நாம் முயல வேண்டும். ஆகக் குறைந்தது தீர்மானமான 5 விடயங்கள் தொடர்பாக திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென்பதே அவ்வாறு அபாயத்தைக் குறைப்பதற்கு நாம் சமர்ப்பிக்கும் யோசனையாகும். தகுந்த காரணங்களுடன் இவ்வாறு வாதத்திற்குட்படுத்திய போது தீவிரவாதிகள் அதற்கு முற்றிலும் தவறான ஒரு விளக்கத்தினை வழங்கியுள்ளார்கள். அதாவது நாம் வடக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்க்கிறோம் என்பதாகும். அது முற்றிலும் பொய்யாகும் என்பதுடன் எமது தெளிவான வேண்டுகோள் மாகாண சபை முறைமை ஒழிக்கப்படல் வேண்டும் என்பதாகும். அதை நிறைவேற்றுவதில் ஏதும் சிரமம் காணப்படின் பின்வரும் 5 விடயங்கள் தொடர்பாக அதிகாரத்திலுள்ள குறித்த நபர்கள் தமது கவனத்தைச் செலுத்த முடியும். பொலிஸ் காணி ஆகிய அதிகாரங்கள் அகற்றப்படல், மாகாண சபை விடயப்பட்டியலுடன் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு சட்ட வரைவொன்று கொண்டுவரப்படும் சந்தர்ப்பத்தில் சகல மாகாண சபைகளினதும் அங்கீகாரம்

பெற்றபடல் வேண்டும் என்பதற்குப் பதிலாக பெரும்பான்மையான மாகாண சபைகள் என மாற்றப்படல் மற்றும் அவ்வாறு மாகாண சபைக்கு ஆணையிடும் அதிகாரம் இந்தியாவின் அ.அ.சட்டத்திலும் (256.257 பிரிவுகள்) குறிப்பிடப்பட்டுள்ளவாறு தற்போதைய அரசாங்கத்திற்கும் வழங்குதல் ஆகிய விடயங்களே நாம் வலியுறுத்தும் ஐந்தம்ச விடயங்களாகும். இவ் ஐந்து விடயங்களும் நிறைவேற்றப்படாவிடின் தமிழ் பிரிவினைவாதம் மீண்டும் வடக்கினை ஓர் இரத்தக் களமாக மாற்றும் என்பது தெட்டத் தெளிவாகும்.

### அரசாங்கத்தின் பெரும்பான்மை அதிகாரமும் எதிர்கால அபாயமும்

தற்போதைய அரசாங்கத்திடமுள்ள பெரும்பான்மை அதிகாரத்தினைக் கொண்டு குறித்த மாகாண சபைகளை ஏன் ஒழிக்க முடியாது என பலர் அடிக்கடி வினவுகின்றனர். அதற்கான பதிலை வழங்குவதற்கு முன் ஒரு விடயத்தைக் குறிப்பிடல் வேண்டும். அதாவது அபாயகரமான நிலை இன்று அல்லது நாளை அல்ல எதிர்காலத்திலேயே தோன்றும் என்பதாகும். பலவீனமான அரசாங்கமொன்று வரும் வரை காத்திருந்து அதன் பின் பிரிவினைவாதிகள் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம் என்பதே அதற்கான காரணமாகும். நாம் அறிந்த வகையில் விகிதாசார முறைத் தேர்தலின் மூலம் 2/3 பெரும்பான்மை அதிகாரத்தைப் பெறுவது கடினமான ஒரு செயல் என அதனை ஏற்படுத்தியவர்கள் வலியுறுததியுள்ளார்கள். ஆயினும் யுத்த வெற்றியின் பின்னணியில் 144 ஆசனங்களைப் பெற்று அதன் அருகே செல்ல இந்த அரசாங்கம் திறமை பெற்றது. எதிர்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி தமது அரசியல் கட்சியை மாற்றியமைத்ததன் தயவினாலேயே அது மென்மேலும் வலுவடைந்தது. யுத்த வெற்றியே தனது கட்சி மாற்றத்தினை நியாயப்படுத்துவதற்கு சந்தர்ப்பமாக்கிக் கொள்ள அவர்களால் முடிந்தது. பெரும்பான்மை அதிகாரத்தை பிரயோகிப்பதற்கான சந்தர்ப்பமே தற்போது உருவாகியுள்ளது. அது தனியே நாட்டின் எதிர்கால ஸ்திரப்பாட்டிற்காகவே உருவாக்கப்பட்டது என்பதனை கட்டாயம் வலியுறுத்துதல் வேண்டும். பலவீனமான ஆண்டுகளின் பின்னணியின் கீழ் பிரிவினைவாதிகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வார்களாயின் நாம் அனைவருக்கும் ஓலமிட முடியுமே தவிர வேறொன்றுமில்லை.

### மாகாண சபைகள் தொடர்பான மூட நம்பிக்கைகள்

பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக மிகவும் சிக்கலான நிலைமையே காணப்படுகிறது. 1990 ஆம் ஆண்டில் பொலிஸ் ஒழுங்கு விதிகள் விசேட சட்டம் ஜனாதிபதி பிரேமதாச அவர்களினால் அறிமுப்படுத்தப்பட்டது. ஜனாதிபதி அவர்களினால் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும் திகதியே அதன் இரண்டாம் பிரிவு செயற்படுத்தப்படல் வேண்டும். இதுவரை அவ்வாறான ஒன்று இடம்பெறவில்லை. நாம் மறந்த ஒரு விசேட காரணி இங்கே காணப்படுகிறது. அதாவது பொலிஸ் அதிகாரங்கள் என்பது மாகாண சபைக்குரிய ஒரு விடயம் என்பதுடன் அதனோடு தொடர்பான நியதிச்சட்டமொன்றைத் தயாரிப்பதற்கு மாகாண சபை அரசாங்கத்தின் அல்லது வேறெந்த அதிகார நிறுவனங்களின் அங்கீகாரத்தைப் பெறத் தேவையில்லை. அதற்கு ஏற்ப நாளைய தினமேயானாலும் அவ்வாறான ஒரு சட்ட ரீதியான ஏற்பாட்டினூடாக மாகாண சபை பொலிஸ் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்யலாம். அது மட்டுமல்ல. மாகாணப் பொலிசுக்குப் பொறுப்பாக அதன் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவி வகிப்பதுடன் அவர் குறிப்பிட்ட மாகாணத்தின் முதலமைச்சருக்கு மட்டுமே கட்டுப்பட்டிருப்பார். பிரதிப் பொலிஸ் மா அதிபர் முதலமைச்சரின் ஆணைக்குக் கட்டுப்பட்டவராக இருக்க வேண்டுமென்பதே இதன் மூலம் தெளிவாகிறது. தனது பொலிஸ் மா அதிபரிடமன்றி அரசியல்வாதி ஒருவரான முதலமைச்சரின் ஆணையைப் பெறுவதற்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அன்றிலிருந்து நிர்ப்பந்திக்கப்பட்டுவார். இதுவரை அவ்வாறான ஒரு நிலைமை தனது கட்சியின் தலைவரான ஜனாதிபதி அவர்கள் தனது அதிகாரங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் போது அதற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கு முதலமைச்சர்கள் முன் வராமையாகும்.

நாம் ஊகிக்கின்றவாறே பெரும்பாலும் வட மாகாண சபையின் வெற்றி தமிழ் தேசியக் கூட்டணிக்கே கிடைக்கலாம். அவ்வாறான ஒரு சூழ்நிலையில் தமது அதிகாரங்களைக் கோருவதற்கு அவர்கள் முயற்சிக்க மாட்டார்கள் எனக் கருத முடியாது. ஆகவே



**மாகாணப் பொலிசுக்குப் பொறுப்பாக அதன் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவி வகிப்பதுடன் அவர் குறிப்பிட்ட மாகாணத்தின் முதலமைச்சருக்கு மட்டுமே கட்டுப்பட்டிருப்பார். பிரதிப் பொலிஸ் மா அதிபர் முதலமைச்சரின் ஆணைக்குக் கட்டுப்பட்டவராக இருக்க வேண்டுமென்பதே இதன் மூலம் தெளிவாகிறது. தனது பொலிஸ் மா அதிபரிடமன்றி அரசியல்வாதி ஒருவரான முதலமைச்சரின் ஆணையைப் பெறுவதற்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அன்றிலிருந்து நிர்ப்பந்திக்கப்பட்டுவார். இதுவரை அவ்வாறான ஒரு நிலைமை தனது கட்சியின் தலைவரான ஜனாதிபதி அவர்கள் தனது அதிகாரங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் போது அதற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கு முதலமைச்சர்கள் முன் வராமையாகும்.**



**நாம் தைரியமாகவும் சந்தேகமின்றியும் தமிழ் ஈழத்தை முற்றுமுழுதாக நிராகரிக்காதிருப்பின் இன்னும் இந்நாடு தமிழ் பிரிவினைவாதத்தின் சொர்க்க புரியாக மாறியிருக்கும் என்பதனை இங்கு அவசியம் குறிப்பிடல் வேண்டும். ஜாதிக ஹெல உறுமய, பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கமாக கூட்டுச் சேர்ந்த ஆரம்ப கட்டங்களில் தேசிய ரீதியான பொறுப்பு என்ன என்பது பற்றி புரிந்துணர்வுடன் செயற்பட்டுள்ளது. அதற்கேற்ப நமக்கிடையே ஏனைய அனைவரும் எமது பேச்சாளர்களாக மாறியள்ளதனை நாம் காணக்கூடியதாயுள்ளது.**

மத்திய அரசுக்கு சற்றுத் தொலைவில் காணப்படும் குறித்த அதிகாரங்களை நாம் ஓரளவு வரையறுக்க வேண்டும். கவனிக்கப்பட வேண்டிய மற்றைய விடயம் யாதெனில் கல்லில் நாருரித்தல் போன்று மிக அரிதாக நடைபெற முடியுமான பதினொரு விதமான (ii) குற்றங்கள் தொடர்பாக மாத்திரமே மத்திய அரசாங்கத்தின் பொலிஸ் செயற்பட முடியும். நிதி, சர்வதேச இராணுவம் மற்றும் குடிவரவு போன்ற குற்றங்கள் இதற்கு ஏற்புடையதாகும். **அவ்வாறு புதிதாக ஏற்படுத்தப்படும் ஒரு மாகாண சபையில் பொலிசுக்குப் புதிதாக ஆட்சேர்ப்பினையும் அவர்களே மேற்கொள்வர். உங்களையும் என்னையும் பயங்கொள்ளச் செய்யும் பயங்கரமான ஒரு ஞாபகம் இது தொடர்பாக உள்ளது. அதாவது அன்றைய வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் அவர்கள் பொலிஸ் அதிகாரங்கள் என்ற போர்வையில் தொண்டர் பொலிஸ் படை ஒன்றை ஏற்படுத்தியமையும் அதனைத் தொடர்ந்து தமிழ் ஈழ நாடு என்ற ஒன்றை பிரகடனப்படுத்தியமையும் ஆகும். அவ்வாறே ஒரு தலைப்பட்சமாகப் பிரகடணப்படுத்தப்பட்ட தமிழ் ஈழத்திற்கான பின்னணியாகக் காணப்பட்ட இது எங்கு போய் முடிவடையும் என்பதைப் புரிந்துகொள்வது கூட கடினமாகவுள்ளது.**

அடுத்த முக்கிய விடயம் காணி அதிகாரங்களாகும். எந்தவொரு காணிக்குரிய உறுதியை ஜனாதிபதி அவர்களுக்கு மட்டுமே வழங்க முடியும் என்பதனால் அது பற்றிப் பயப்படத் தேவையில்லை என எமது அரசாங்கத்திலுள்ள ஒரு சில அமைச்சர்கள் கூட கருத்துத் தெரிவித்தனர். மேலோட்டமாகப் பார்த்தால் அதில் ஓர் உண்மையும் உள்ளது.

**காணி உரிமையாளர்களைப் பரிந்துரைத்தல் மாகாண சபைகளினால் மேற்கொள்ளப்படுவதுடன் அதனை அங்கீகரித்தல் மட்டுமே ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படுகிறது. பெரும்பாலும் மாகாண சபைகள் காணி வழங்கும் போது காணி உறுதிகள் மூலம் அன்றி வருடாந்த அனுமதிப் பத்திரங்கள் (தற்காலிக) மூலமே காணிகளை வழங்குகிறது. மாகாண சபையே அதனைப் புதுப்பிக்கின்றது.**

உங்களுக்கு ஞாபகமிருக்குமாயின் சிற்சில அபிவிருத்தித் தேவைகளுக்காக கொழும்பு நகரில் காணப்பட்ட ஒரு சில தற்காலிக கட்டிடங்கள் அகற்றப்படும் போது கொழும்பு நகரம் முழுவதும் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதுடன் ஊடகங்கள் அரசாங்கத்தை சங்கடத்திற்குள்ளாக்கும் விதமாக செயற்பட்டன. நாம் வலக்கையால் இறுகப் பிடித்துக்கொண்டுள்ளதை இடக்கையினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதனையே நாம் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. ஆகவே காணி அதிகாரங்கள் என்பது ஜனாதிபதியின் காணி உறுதியின் மூலம் தீர்க்கக்கூடியதொன்றல்ல.

மற்றைய மாயையும் மிகப் பலமாக பலரிடத்தில் வேறூன்றிக் காணப்படுகின்றன. **அதாவது ஆளுநர் பற்றிய விடயமாகும். மாகாண சபை அதிகார வரிசையில் அவர் அதியுயர் பீடத்தில் இருப்பதாகவும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவதனால் அவர் மாகாண சபையில் மிகவும் சத்தியுடைய ஒரு நடிபங்கை வகிப்பதாகவும் இப் பின்னணியில் அவரது நிறைவேற்று அதிகாரம் மாகாண சபையில் முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் அநேகமான சந்தர்ப்பங்களில் கூறப்படுகின்ற ஒரு விடயமாகும். உண்மையில் அது ஓரளவிற்கே உண்மையாகும்.** ஆயினும் உண்மையில் அவர் இந் நாட்டில் 1974 முதல் 1978 வரையான கால எல்லைக்குள் பதவி வகித்த ஜனாதிபதிக்கே நிகராகக் கருதப்படுவாரே தவிர தற்போதுள்ள நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிக்கு அல்ல.

### ஆளுநரின் தற்றுணிபும் மாகாண அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பும்

ஆளுநரின் கையொப்பம் தற்றுணிபுடனாக கையொப்பம் அல்ல என்பதனைக் குறிப்பிடல் வேண்டும். அதனுள் நிறைவேற்று அதிகாரம் காணப்படவில்லை. நியதிச்சட்ட மொன்றாயினும் ஓரளவு தாமதிக்கச் செய்யக் கூடியதாயுள்ள போதும் ஏதேனும் சட்டப் பின்னணியிலேயே அதனை நிறைவேற்றுதல் வேண்டும். உதாரணமாக ஒரு நியதிச்சட்டம் அரசியலமைப்புக்கு ஏற்றதா இல்லையா என்ற விடயம் தொடர்பாக சட்ட ஆலோசனை பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தின் போது அதற்காக நியாயமான ஒரு கால அவகாசம் பெற்றுக் கொள்ளப்பட முடியும். அதற்கு மேல் நடவடிக்கை மேற்கொள்வதாயின் அதனோடு தொடர்பான ஒரு கட்டளையினை மாகாண நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் ஆளுநர் வசமுள்ள சட்ட ஆலோசகரது உதவி எச் சந்தர்ப்பத்திலும் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் சட்மா அதிபரின் ஆலோசனையும் பெற்றுக்கொள்ளப்பட முடியும். **இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயம்**

**யாதெனில் சட்ட ரீதியான அதிகாரமன்றி அரசியல் அதிகாரம் யாரிடம் தங்கியுள்ளது என்பதாகும். சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையார் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் இருந்த சந்தர்ப்பத்திலும் அவர் காற்றுப் போன பலூனைப் போன்ற நிலைமைக்கு ஆளான ஒரு சந்தர்ப்பம் உருவாகியது. அது 2002 -2004 குறுகிய காலப் பகுதியில் நிலவிய திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கத்தின் கீழ் ஆகும்.**

**குறிப்பாக தெற்கினை விடவும் வடக்கில் ஆளுநர் மிக தர்மசங்கடததிற்குட்பட முடியும். நடைமுறை அரசியலில் மாகாண சபைகள் மற்றும் அதற்கு வெளியே ஆகிய இரண்டிலும் அவரது உதவிக்கு எவரும் இருக்கப் போதில்லை என்பதே அதற்கான காரணமாகும். அரசியல் அதிகாரத்தின் கீழ் தனது அதிகாரத்தைப் பரிசோதிப்பதனை விட ரீ.என்.ஏ. போன்ற எதிரிடையான அரசியல் தரப்பினர் முன்னிலையில் வெறும் உத்தியோகபூர்வ அதிகாரத்தினைக் கொண்டு தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பரீட்சித்துப் பார்த்தல் சிறந்த ஒரு முயற்சியாக இருக்க முடியாது.**

### ஜனாதிக ஹெல உறுமயவும் அதன் முன்னோடிப் பணியும்

எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தைத் தோற்கடிக்க முடியாத ஒரு சக்தி என்பதே 2000 ஆம் ஆண்டளவில் இந் நாட்டில் மிக வலுவாகக் காணப்பட்ட ஆளுங் கட்சியினதும் எதிர்கட்சியினதும் மனோபாவமாக இருந்தது. ஆயினும் 2005 ஆம் ஆண்டளவில் எமக்கும் மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தின் மூலம் இந்நாட்டில் ஒற்றையாட்சி முறைமை கட்டியெழுப்பப்பட வேண்டுமென ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் நாம் கூறியவை இன்று மக்கள் முன் யதார்த்தமாகியுள்ளது. வரலாற்று ரீதியாக, தொல்பொருள் ரீதியாக, அரசியல் ரீதியாக அல்லது சட்ட ரீதியாக தமது தனியான தமிழ் தேசம் என்ற நிலைப்பாட்டை மக்கள் முன் நிரூபிக்க முடியாமல் போன பிரிவினைவாத தலைவர்களுக்கு உண்மையான ஒரு சவாலாக ஆரம்பம் முதலே நடவடிக்கை மேற்கொள்ள முடியுமாக இருந்தமையினை ஒரு பாக்கியமாகவே கொள்ள வேண்டும்.

நாம் தைரியமாகவும் சந்தேகமின்றியும் தமிழ் ஈழத்தை முற்றுமுழுதாக நிராகரிக்காதிருப்பின் இன்னும் இந்நாடு தமிழ் பிரிவினைவாதத்தின் சொர்க்க புரியாக மாறியிருக்கும் என்பதனை இங்கு அவசியம் குறிப்பிடல் வேண்டும். ஜாதிக ஹெல உறுமய, பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கமாக கூட்டுச் சேர்ந்த ஆரம்ப கட்டங்களில் தேசிய ரீதியான பொறுப்பு என்ன என்பது பற்றி புரிந்துணர்வுடன் செயற்பட்டுள்ளது. அதற்கேற்ப நமக்கிடையே ஏனைய அனைவரும் எமது பேச்சாளர்களாக மாறியள்ளதனை நாம் காணக்கூடியதாயுள்ளது.

### தமிழ் தேசிய கூட்டமைப்பின் இறுதிச் சந்தர்ப்பம்

திம்பு பேச்சுவார்த்தை உட்பட இது வரை இடம்பெற்ற அனைத்து பிரிவினை வாதிகளின் கோரிக்கைகளைக் கொண்டே பேச்சுவார்த்தைகள் அடிப்படையாக அமைந்தன. ஏதேனுமொரு நியாயமான பின்னணியினை அடிப்படையாகக் கொண்டு அல்ல. ஏதேனுமொரு அழுத்தத்தினைக் கொடுத்து அதன் மூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் தமிழ் பிரிவினைவாதத்திற்கே உரித்தான ஒரு இயல்பாகும். 1958 முதல் 1987 சிங்கள அரசியல் வாதிகள் தமிழ் பிரிவினை வாதிகளின் குறித்த இப் பண்பினை எதிர்கொள்ள நேரிட்டதுடன் அவ் அனைத்து அழுத்தங்களினதும் இறுதி விளைவாக ஏதோவொரு ஒப்பந்தம் உருவாகியுள்ளது.

**குறித்த இந் நிலைமைகளின் கீழ் தமிழ் கூட்டமைப்பிற்கு கிடைத்துள்ள இறுதி சந்தர்ப்பம் பாராளுமன்ற தெரிவுக் குழு எனக் கருத முடியும். நியாயமற்ற கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அன்றி நியாயமான ஒரு பின்னணியில் கோரப்படும் எந்த ஒன்றையும் வழங்க நாம் கட்டுப்பட்டுள்ளோம். தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் இல்லையென எம்மால் கூற முடியாது. அதனை அவர்களே கூற வேண்டும் என்பதுடன் நியாயமானதென அவர்களே நிரூபிக்கவும் வேண்டும். அவ்வாறு நிரூபிப்பதற்கு அவர்களால் முடியுமாயின் தமிழ் ஈழத்தைக் கூட வழங்குவதற்கு நாம் விரும்புகின்றோம். ஆகவே பாராளுமன்ற தெரிவுக் குழு முன்னிலையில் சமூகமளித்து தமது கருத்தினை எம் முன்னிலையில் உறுதிப்படுத்துமாறு நாம் அவர்களுக்குக் கூறுவதுடன் இன்னுமொரு விசேடமான விடயத்தையும் அதனோடு இணைத்தல் வேண்டும். அதாவது வழமை போன்று அடிப்படையற்ற நிபந்தனைகளுடன் மாயையைப் பரப்பி தமது கருத்தினை எமக்கு மத்தியில் நிரூபிக்க வருவதாயின் நாம் அவ்வாறான முயற்சிகளை வெறுக்கின்றோம். அது மட்டுமன்றி அவ்வாறான குறுகிய வாதப் பிரதிவாதங்களுக்கு பதிலளிக்கவும் நாம் தயாராகவுள்ளோம்.** குறித்த பாராளுமன்ற தெரிவுக் குழு தொடர்பான வாதங்களின் போது சிலர் அதில் திஸ்ஸ விதாரண அல்லது ஸ்ரீ.ல.மு.கா. பிரதிநிதித்துவம் இங்கு இல்லாமை ஒரு குறைபாடு என குறிப்பிட்டாக வேண்டும். ஏன் ரஹூப் ஹக்கீம் அதற்கு பொருத்தமற்றவர் என்பது எனக்கும் புரியவில்லை. ஆயினும் அதற்கான பதிலை இ.சு.க. அல்லது அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளரே கூற வேண்டியுள்ளது. அவ்வாறிருப்பினும் திஸ்ஸ விதாரண அவர்கள் இல்லாமை பற்றிக் குறிப்பிட முடியும். அவரது அரசியல் அனுபவம் பற்றி எமக்கு எதுவித பிரச்சினையும் இல்லை. ஆயினும் அரசாங்கம் இடதுசாரிகள் இருவருக்கும் இதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. அது வாசுதேச நாணயக்கார அவர்களும் டியூ குணசேகர ஆகிய இருவரும் ஆவர். ஐ.ம.சு.முன்னணிக்குரிய 16 ஆசனங்கள் தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக் குழுவில் 19 பிரதிநிதிகள் குறிப்பிடப்பட்டுள்ளனர். மொத்த எண்ணிக்கை 31 ஆகும். நீங்கள் அறிந்தவாறு ஐ.ம.சு.மு. என்பது பங்காளிக் கட்சிகள் பலவற்றின் ஒரு கூட்டுச் சேர்க்கை என்பதுடன் அவர்கள் அனைவருக்கும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படல் வேண்டும். இவ் அடிப்படையினும் மீற இடது சாரிகளின் சிறிதளவு பிரதிநிதித்துவத்துடன் கூடிய கடசிகளுக்கு 2 பிரதிநிதிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான பின்னணியில் திரு. திஸ்ஸ விதாரண இடம் ஒதுக்கப்படாமையானது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட ஒன்று எனக் கருதுவது நியாயமில்லை. ஆயினும் இதற்கு ஏதேனும் தீர்வு இல்லாமலும் இல்லை. அதாவது மேற்குறிப்பிடப்பட்ட இடதுசாரி சார்ந்த இரண்டு பிரதிநிதிகளுள் ஒருவர் விலகி திரு. திஸ்ஸ விதாரண அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதாகும். தன்னை விட அவர் பொருத்தமானவர் என அவர்களுள் ஒருவர் கருதுவாராயின் அவ் அர்ப்பணிப்பினை எதுவித சிரமமுமின்றி மேற்கொள்ள முடியும்.


Photo source : www.colombotelegraph.com

# வடமுனையில் வாழும் மக்களுக்கு உரித்தான **குறைந்தளவு அதிகாரத்தை வழங்குவோம்**

**மாகாண சபை முறைமை ஒழித்தல் அல்லது அதன் அதிகாரங்களைக் குறைத்தல் தொடர்பில் நித்திரை இன்றி தமது அரசியல் செயற்திட்டங்களை மேற்கொள்கின்ற இனப்பற்றாளர்கள் தொடர்பில் நடுநிலையுடன் நோக்குகின்றேன். என்பதை இங்கு தெரிவிக்க வேண்டும். இந்தியாவின் அழுத்தம் காரணமாக ஜே.ஆர். ஜயவர்தன இந்த முறையை ஏற்றுக்கொண்டார் என்ற காரணத்தை கூறி இதை நிராகரிக்கும் உரிமை எமக்கு இல்லை.**

**காமினி ஜயவிக்ரம பெரேரா**
தலைவர், ஐக்கிய தேசிய கட்சி

இந்நாட்டில் மாகாண சபை முறைமை ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதற்கு எதிராக சிற்சில எதிர்ப்புக்கள் உருவாகினாலும் அவ் எதிர்ப்புக்களை கட்டுப்படுத்துவதற்காக உரிய தரப்பினர் மேற்கொள்ள வேண்டியிருந்த கடமைகள் காணப்பட்டன. அதாவது, மாகாண சபை கட்டமைப்பானது எமது நாட்டுக்குப் பொருந்தும். அதேவேளை மக்களுக்கு குறிப்பிட்ட சேவையை வழங்கக் கூடிய பொறிமுறை என்பதை உறுதிப்படுத்த வேண்டிய கடமையே அது. இந்த விடயம் தொடர்பில் இதுவரையில் மாகாண சபை முதலமைச்சர்களாக பதவியேற்ற எத்தனை பேர் சவாலாக நினைத்தார்கள் என்பது தொடர்பில் நானறியேன். ஆயினும் 5 வருடங்கள் 6 மாதங்கள் 5 நாட்கள் அதாவது முழுமையான ஒரு மாகாண சபையில் முதலமைச்சராக செயலாற்றியதை நான் மீட்டிப் பார்ப்பது மனதிற்கினிய ஒரு விடயமாகவே உள்ளது என்பதை இங்கு தெரிவித்தாக

வேண்டும். இன்று மாகாண சபையின் பொருத்தப்பாடு தொடர்பில் கலந்துரையாடும் பெரும்பாலானோர் வடமேல் மாகாண சபையில் நான் வழங்கிய தலைமைத்துவம் வழங்கிய காலப்பகுதியை உதாரணமாக கொள்வதனூடாக காணக்கூடிய ஒரு விடயம் நான் ஏற்கனவே கூறிய சவாலை வெற்றி கொள்ள என்னால் முடிந்துள்ளமையே ஆகும்.

மாகாண சபை முறைமை ஒழித்தல் அல்லது அதன் அதிகாரங்களைக் குறைத்தல் தொடர்பில் நித்திரை இன்றி தமது அரசியல் செயற்திட்டங்களை மேற்கொள்கின்ற இனப்பற்றாளர்கள் தொடர்பில் நடுநிலையுடன் நோக்குகின்றேன் என்பதை இங்கு தெரிவிக்க வேண்டும். இந்தியாவின் அழுத்தம் காரணமாக ஜே.ஆர். ஜயவர்தன இந்த முறையை ஏற்றுக்கொண்டார் என்ற காரணத்தை கூறி இதை நிராகரிக்கும் உரிமை எமக்கு இல்லை. இந்தக் கட்டமைப்பு எந்த அடிப்படையில் இருக்கின்றதென்ற காரணியின் அடிப்படையிலேயே நாம் இந்த விடயம் பற்றி பேசும் போது சிந்திக்க வேண்டும். உண்மையிலேயே முழு மாகாண சபை முறைமையும் ஒற்றையாட்சிக் கட்டமைப்பின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. தனி ஒரு மாகாணமாக பிரிந்து செயற்படுவதற்கு உருவாக்கப்படவில்லை. அதைப் பற்றிக் கூட சிந்திக்க இவர்களுக்கு அவகாசம் இல்லை. நான் முதலமைச்சராக இருந்த வேளையில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பாரிய சர்வதேச நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை கைச்சாத்திட்ட அதேவேளை வடமேல் மாகாணம் ஒற்றையாட்சி அரசாக செயற்படுவதற்கு சவாலாக இருந்த மாகாண சபை முறைமைக்கு எதிராக செயற்பட்ட நபர்கள் கூட இதற்குக் குற்றம் சுமத்தவில்லை. வடக்கில் அல்லது கிழக்கில் பெரும்பான்மை மாகாண சபை உறுப்பினர்கள் தமிழ் அல்லது முஸ்லிம் நபர்களாக இருப்பதன் மூலம் எவ்வித பிரச்சினையும் இல்லை. காரணம் ஒற்றையாட்சி அரச கட்டமைப்பிற்கு சவால் விடுக்கும் அளவிற்கு மாகாண சபை பொறிமுறை வலுவான ஒன்றாக அமையாதவாறு இருப்பதற்கு ஆரம்பத்திலேயே உருவாக்கியவர்கள் யோசித்திருந்தனர். எனவே, இவ் இனவாதிகளின் மனப்பயம் வெறும் புற்றுக்கு பயந்த கதை என்றே கூற வேண்டும்.

அனுபவமில்லாத புதிய ஒருவனாக நான் மாகாண சபைக்கு வரவில்லை. மத்திய அரசின் பிரபல அமைச்சராக இருந்தபோதே மாகாண சபைக்கு வந்தேன். தேசிய அரசியலில் இணைவதற்கு பிரதேச அரசியல்வாதிகள் முயற்சிக்கும் போது நான் பிரதேச அரசியலுக்கு வந்தேன். அது 1988 ஆண்டு மே மாதம் 04ம் திகதி ஆகும். நான் எதிர்நோக்கிய இரண்டு சவால்களுக்கு வெகு சீக்கிரம் தீர்வு காண வேண்டியிருந்தது. அதாவது, முழு நாடும் ஜே.வி.பி. கிளர்ச்சியை எதிர்நோக்கிய போது மாகாண சபையின் செயற்பாடுகளை உரிய முறையில் மேற்கொள்ளல் மற்றும் புதிய அனுபவங்களைக் கொண்ட புதியதொரு மாகாண சபைக்கு உயிரூட்டுவது எனது கடமைகளாகின. இந்த இரண்டு விடயங்களையும் துல்லியமாகக் கையாண்டு வெற்றி கண்டதை இங்கு நான் தெரிவிக்க வேண்டும். ஜே.வி.பி. பிரச்சினை படிப்படியாக தீர்க்கப்பட்ட அதேவேளை, மாகாண சபைக்கு சிறந்ததொரு ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு இரண்டு வழிமுறைகளை பரிசோதித்துப் பார்க்கத் தீர்மானித்தேன். அவையாவன, அமைச்சரவையுடன் முடிந்தளவு நெருக்கத்தை ஏற்படுத்தி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேவையான அதிகாரங்கள் விடயங்கள் என்பவற்றை ஒப்படைப்பதன் மூலம் செயற்படுதல். அதேவேளை ஆற்றல் மிக்க அலுவலர் குழாம் ஒன்றை தெரிவு செய்து கொண்டேன்.

மிகக் குறுகிய காலப்பகுதியில் அதற்கான பலன் கிடைத்த அதேவேளை அமைச்சர்களது மாத்திரமன்றி எதிர்க்கட்சி உறுப்பினர்களது ஒத்துழைப்பையும் மிக இலகுவாக பெற பிற்காலத்தில் என்னால் முடிந்தது. அன்று நான் இணைத்துக் கொண்ட அலுவலர் குழாம் எந்தளவு தமது களத்தில் திறமையாக செயற்பட்டனர் என்று கூறுவதாயின் அவர்களில் பலர் தமது சேவையில் இருந்து ஓய்வு பெறும் போது நிரல் அமைச்சுக்களில் நிரந்தரச் செயலாளர்களாகப் பணியாற்றினர் என்பதையும் இங்கு கூற வேண்டும். இரவு பகல் பாராது நான் எனது செயற்பாடுகளை மேற்கொள்வதைக் கண்ட அலுவலர்களும் எனது முயற்சிக்கு உறுதுணையாக இருந்தனர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எனது செயற்பாடுகளுக்கு தடையாக இருந்ததில்லை. எமக்கிடையில் சிறந்த தொடர்புகள் வளர்ச்சியடைந்தன.

அடுத்ததாக குறிப்பிட வேண்டிய விடயம் யாதெனில் மத்திய அரசின்



**அனைத்து மாகாண சபைகளிலும் உருவாக்கப்பட்டுள்ள நியதிச் சட்டங்களைக் கூட்டினால் அது 500க்கு உட்பட்டே இருக்கும். அதுவும் வருடாந்தம் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிதி / குறை நிரப்பிச் சட்டங்களையும் சேர்ந்தே அது அமையும். ஆயினும் வடமேல் மாகாண சபைக்கு நான் தலைமைத்துவம் வழங்கிய சபை இந்த செயற்பாடுகளுக்கு எதிராக செயற்பட்ட அதேவேளை, வருமானத்தை ஈட்டக்கூடிய அனைத்து பிரிவுகள் தொடர்பில் அவதானம் செலுத்தி சட்டங்களை தயாரித்து உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிகளை எடுத்தது. நாம் அங்கு மாகாண சுற்றாடல் அதிகார சபையை உருவாக்கிய போது அதற்கு உரிய அமைச்சிடமிருந்து பாரிய எதிர்ப்பு எழுந்தாலும் அதையும் கட்டுப்படுத்தி உரிய சட்டங்களை உருவாக்கிக்கொள்ள முடிந்ததன் காரணமாக இன்றும் வடமேல் மாகாண சபைக்கு வருமானத்தை ஈட்டித்தரும் ஒரு வழியாக அது இருக்கின்றது**



**அதனடிப்படையில் தற்போது அரசோடு இணையும் நபர்களுக்கு ஒரு விடயத்தை தெரிவிக்க நான் விரும்புகிறேன். அதாவது தமிழ் மக்களுக்கும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களுக்கும் தமக்கே உரியதான மாகாண சபையொன்றை நிர்மாணிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் பலவகையான சந்தேகங்களையும் பயத்தையும் ஏற்படுத்தி அதை பயனற்றதாக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்.**

செயற்பாடே. நான் மத்திய அரசின் அமைச்சரவையையும் மீறி சிற் சில செயற்திட்டங்களை மேற்கொண்ட போது அது தொடர்பில் ஜே.ஆர் ஜயவர்தனவிடம் முறையிட்ட நபர்கள் இருப்பதையும் நான் கண்ணுற்றேன். என்னை கொழும்பிற்கு அழைத்து அவ் வேளைகளில், நீங்கள் ஓர் இளைஞர் எனவே நீண்டதொரு அரசியல் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று என்னை உற்சாகப்படுத்திய அதேவேளை, இன்று காணப்படுவது போல தமது கட்சி உறுப்பினர்களிடையே பிணக்குகளை ஏற்படுத்தி தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பாதுகாக்க மேற்கொள்கின்றதான செயற்பாடு எதையும் அவர் செய்யவில்லை.

“பொலிஸ், காணி அதிகாரங்கள் இல்லை எனில் வட மாகாண சபையில் போட்டியிடக் கூடாது” என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியதாக ஊடகங்களில் கருத்து வெளியாகி இருந்தது. அவர்களுடைய நீண்டகால கனவு அது என்பதால் அப்படிக் கூறியதில் தவறு இல்லை என்றே கூற வேண்டும். எனது தனிப்பட்ட கருத்து யாதெனில் அதிகாரம் கொண்டோ அல்லது இன்றியோ இருக்கும் போது தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும். அதன்படி அதிகாரத்திற்கு வந்தபிறகு தமது செயற்பாடுகளின் அடிப்படையில் அதற்குரியதான அதிகாரம் சுயமாகவே ஏற்படும். மாறாக “எமக்கு அதிகாரம் தாருங்கள்” என அலரிமாளிகையில் மண்டியிட வேண்டிய அவசியம் ஒரு போதும் ஏற்படாது. நீங்கள் ஒரு போதும் நம்பமுடியாத ஒரு கருத்தை நான் இங்கு கூற முடியும். அதாவது நான் முதலமைச்சராக கடமையாற்றிய காலப்பகுதியில் மத்திய அரசு எந்தவொரு அதிகாரத்தையும் எமக்குப் பகிரவில்லை. எனக்கு கிடைத்த மாகாண சபையானது புதிதாகப் பிறந்த குழந்தையைப் போன்று இருந்ததோடு, வருமானங்களை பெறும் வழிகள் தொடர்பாக சிந்திக்க அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டியிருந்தது. அந்த விடயங்களை உரிய முறையில் செய்ததன் காரணமாக எனக்குத் தேவையான அதிகாரங்கள் என்னைத் தேடி வந்தனவே ஒழிய நான் சிறிகொத்தவிற்கோ ஜனாதிபதி மாளிகைக்கோ சென்று அதிகாரம் வேண்டி பிச்சை கேட்கவில்லை. இதை எனது முயற்சிகளுக்கு உறுதுணையாகவிருந்த அரசியல் வாதிகள் மற்றும் அனுபவமிக்க அலுவலர்கள் சாட்சி பகர்வார்கள்.

மேலும் ஒரு விடயத்தை நான் தெரிவிக்க வேண்டும். அதாவது மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களை பாதுகாப்பதற்கு நான் பின்பற்றிய செயற்பாடுகளாகும். மாகாண சபைகள் பற்றி அறிந்தவர்களுக்கு அது புதிய விடயமாக இருக்கவில்லை. ஆனால் அதன் ஆரம்ப உறுப்பினர்களாகிய நாம் இன்னோரான விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இன்று பெரும்பாலான மாகாண சபைகள் சிந்திப்பது இடை நேர் விளைவுகள் காணப்படுவதால் மாகாண சபைகளுக்குரியதான சட்டங்களாக உருவாக்கிக் கொள்ளத் தேவையில்லை என்றவாறே. இதை உறுதிப்படுத்தக் கூடிய சிறந்த விடயம் யாதெனில், மூன்று தசாப்த கால வரலாற்றைக் கொண்ட மாகாண சபைகள் இதுவரையில் மிகக் குறைந்த அளவு நியதிச் சட்டங்களையே உருவாக்கியிருக்கின்றன. அனைத்து மாகாண சபைகளிலும் உருவாக்கப்பட்டுள்ள நியதிச் சட்டங்களைக் கூட்டினால் அது 500க்கு உட்பட்டே இருக்கும். அதுவும் வருடாந்தம் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிதி / குறை நிரப்பிச் சட்டங்களையும் சேர்ந்தே அது அமையும். ஆயினும் வடமேல் மாகாண சபைக்கு நான் தலைமைத்துவம் வழங்கிய சபை இந்த செயற்பாடுகளுக்கு எதிராக செயற்பட்ட அதேவேளை, வருமானத்தை ஈட்டக்கூடிய அனைத்து பிரிவுகள் தொடர்பில் அவதானம் செலுத்தி சட்டங்களை தயாரித்து உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிகளை எடுத்தது. நாம் அங்கு மாகாண சுற்றாடல் அதிகார சபையை உருவாக்கிய போது அதற்கு உரிய அமைச்சிடமிருந்து பாரிய எதிர்ப்பு எழுந்தாலும் அதையும் கட்டுப்படுத்தி உரிய சட்டங்களை உருவாக்கிக்கொள்ள முடிந்ததன் காரணமாக இன்றும் வடமேல் மாகாண சபைக்கு வருமானத்தை ஈட்டித்தரும் ஒரு வழியாக அது இருக்கின்றது. இதற்கு மேலதிகமாக கிராமிய உற்பத்திகளை விற்பனை செய்யும் நோக்கில் சுய தொழில் அடிப்படைச் சட்டம் மற்றும் வடமேல் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் போன்றவை இன்று மிகச் சிறந்த முறையில் வருமாணத்தை ஈட்டக் கூடியவையாக இருக்கின்ற அதே வேளை ஏனைய மாகாணங்களில் இல்லாத தனித்துவத்தையும் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாகியிருக்கின்றது.

மாகாண சபைகளுக்கு கிடைக்கின்ற

வரி வருமானங்கள் மற்றும் ஏனைய வருமான வழிகள் ஊடாக கிடைக்கின்ற நிதி தொடர்பாக முதலமைச்சருக்கு தெளிவான விளக்கம் இருத்தல் அவசியம். அதன் மூலம் தாம் செய்ய வேண்டிய கடமைகள் தொடர்பாக சுய மதிப்பீடொன்றை செய்ய முடிவதோடு அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதி தொடர்பிலும் தெளிவைப் பெற முடியும். இத் தெளிவின் மூலம் வடமேல் மாகாணத்தில் முதற் தடைவயாக வருமான வரி திணைக்களம் ஒன்றை உருவாக்க என்னால் முடிந்ததோடு வருமானத்தை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து அபிவிருத்திக்குத் தேவையான நிதியை இலகுவாகக் கையாள முடிந்தது.

இறுதியாக இன்னுமோர் விடயத்தைக் குறிப்பிட வேண்டும். மாகாண சபையின் அனைத்து விதமான புதிய ஆரம்பங்களின் போதும் அதற்கு பின்னால் நிழல் போன்று நாம் யாராவது இருப்பது அவசியம் என்பதாகும். அப்படிச் சந்தர்ப்பம் இல்லாத போது அமைச்சரயில் உள்ள வேறு உறுப்பினர்களுக்கு உரிய பொறுப்பை வழங்கும் முன்மாதிரி செயற்பாட்டை நாம் வடமேல் மாகாணத்தில் ஆரம்பித்தமையை இன்னும் பலர் புகழ்ந்து பேசுகின்றனர்.

வாய்க்கால் ஒன்றை அமைக்கும் சந்தர்ப்பத்தில் கலந்து கொள்வதை ஆர்வமாக கொண்டதோடு, நிகழ்வுகளுக்கு சென்று உணவருந்தி மகிழ்வதைவிட முன்பள்ளி ஒன்றை அமைக்கும் வேளையில் ஈடுபடும் மக்களுடன் மகிழ்ச்சியாக உரையாடுவதை நான் பெரும்பாலும் விரும்பும் ஒரு நபர் என்பதை தெரிவிக்க வேண்டும். இந்தளவு வேளைப் பளு நிறைந்த அரசியல்வாதி ஒருவரால் எவ்வாறு இப்படி நடந்து கொள்ள முடியும் என சிலர் கேட்கின்றனர். ஆயினும் எனது அனுபவத்தின் படி தேவைப்பாடும் ஆர்வமும் இருப்பின் செய்ய முடியாதது எதுவும் இல்லை. அதனடிப்படையில் தற்போது அரசோடு இணையும் நபர்களுக்கு ஒரு விடயத்தை தெரிவிக்க நான் விரும்புகிறேன். அதாவது தமிழ் மக்களுக்கும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களுக்கும் தமக்கே உரிய மாகாண சபையொன்றை நிர்மாணிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் பலவகையான சந்தேகங்களையும் பயத்தையும் ஏற்படுத்தி அதை பயனற்றதாக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்.

மேல் மாகாணம் அல்லது வடமேல் மாகாணங்களை விட வடக்கு அபிவிருத்தி அடையுமாயின் அதற்காக அதிகம் மகிழ்ச்சி அடையும் நபர் வேறு யாருமல்ல. அவர் இந்நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களே. அதற்குக் காரணம் வடக்கில் இருப்பவர்கள் அவருடைய சகோதர மக்களே எனவே நாம் ஒற்றையாட்சி அரச கட்டமைப்பை பாதுகாப்பதோடு வடமுனையில் வாழும் எமது மக்கள் தமக்குரிய ஆகக் குறைந்த அதிகாரத்தையாவது பின்பற்றி தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் விதத்தை நாம் பெரும் எதிர்பார்ப்புடன் பார்க்க வேண்டிய தருணம் தற்போது உருவாகியுள்ளது.



**"பொலிஸ், காணி அதிகாரங்கள் இல்லை எனில் வட மாகாண சபையில் போட்டியிடக் கூடாது" என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியதாக ஊடகங்களில் கருத்து வெளியாகி இருந்தது. அவர்களுடைய நீண்டகால கனவு அது என்பதால் அப்படிக் கூறியதில் தவறு இல்லை என்றே கூற வேண்டும். எனது தனிப்பட்ட கருத்து யாதெனில் அதிகாரம் கொண்டோ அல்லது இன்றியோ இருக்கும் போது தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும். அதன்படி அதிகாரத்திற்கு வந்தபிறகு தமது செயற்பாடுகளின் அடிப்படையில் அதற்குரியதான அதிகாரம் சுயமாகவே ஏற்படும்.**


Photo source : plus.google.com

## மாகாண சபைகள் அளவுக்கு கிராமங்களுக்கு பணியாற்றிய
# வேறெந்த நிகழ்ச்சித்திட்டமும் இல்லை

**மாகாண சபைகள் அளவுக்கு கிராமங்களுக்கு பணியாற்றிய வேறு நிகழ்ச்சித்திட்டம் எதுவுமில்லை. அதனால்தான் நான்கூட தொடர்ச்சியாக இதனுடன் தரித்திருக்கிறேன். மாகாணசபை நிதியொதுக்கீடு எமக்கு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் எங்கிருந்தாவது நிதியைத்தேடி எமது பொறுப்பை நிறைவேற்றியுள்ளோம்.**

**சாந்தினி கோன்கஹகே**
முன்னை நாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்
தலைவி சக்தி மன்றம்

**மாகாண சபை என்பது வெள்ளை யானை என்றும் அதனை இல்லாதொழிக்க வேண்டுமெனவும் குரலெழுப்பப்பட்டுவரும் இவ்வேளையில் மூன்றாவது தடவையாகவும் மாகாண சபைக்கு போட்டியிடுவதற்கான காரணமென்ன?**

மாகாணசபை வெள்ளை யானையென்று கூறுபவர்கள்தான் அதன் நன்மைகளைக் கூடுதலாக அனுபவிக்கின்றனர். மாகாணசபைகளில் தங்கி வாழ்வோரே அதனை வெள்ளை யானை என்று கூறுகிறார்களே தவிர அதன் மூலம் சேவை செய்ய முயற்சிப்போருக்கு அவ்வாறில்லை. மாகாண சபைகள் அளவுக்கு கிராமங்களுக்கு பணியாற்றிய வேறு நிகழ்ச்சித்திட்டம் எதுவுமில்லை. அதனால்தான் நான்கூட தொடர்ச்சியாக இதனுடன் தரித்திருக்கிறேன். மாகாணசபை நிதியொதுக்கீடு எமக்கு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் எங்கிருந்தாவது நிதியைத்தேடி எமது பொறுப்பை நிறைவேற்றியுள்ளோம். இந்த சபைகளின் ஊழல்களை பார்க்கும்போது எனக்கும்கூட உண்மையிலேயே மாகாணசபைகள் வெள்ளை யானைதான் என்று கூறத்தோன்றுகிறது. இருப்பினும் இந்த நிறுவனங்களில் நல்லாட்சியை கட்டியெழுப்ப முடியுமாயின் அதுதான் சரியான வழி. மக்களுக்கு சேவையாற்றுவதற்கு மக்களுக்காக அர்ப்பணிப்பவருக்கு மாகாணசபை சிறந்த கம்பளமாகும்.

**கிராமத்துக்காக சேவையாற்றுவதற்கு ஏன்கூடுதலான அதிகாரங்களை கோருகிறீர்கள். தற்போது மாகாணசபைகளுக்குள்ள அதிகாரங்கள் போதாதா?**

அதுவும் தமது அரசியல் கருத்தை பகிரங்கப்படுத்துவதற்காக பரப்பப்படும் கதையே. எவரும் கூடுதல் அதிகாரத்தை கேட்கவில்லையே கேட்பதாயினும் கேட்பது ஏற்கனவே 13 வது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையே. பொலிஸ், காணி போன்ற அதிகாரங்கள் கூட ஏற்கனவே மாகாணசபைகளுக்குரித்தான அதிகாரங்களாகவே உள்ளன. இதனைவிட கேட்பதற்கு புதிதாக என்ன இருக்கிறது.

**பிரதேசத்துக்கு ஓரளவு சேவையாற்றக்கூடியதாக இருக்கின்ற போதிலும் மாகாண சபைகளுக்கு தெரிவு செய்யப்படும் பெண்களின் தொகை மிகக்குறைவானதுதானே? அதற்கான காரணங்கள் எவை?**

உண்மையில் மாகாணசபை மட்டத்தில் அல்ல உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பாராளுமன்றத்தில் கூட நிலமை இதனைவிட மோசமானது. வேட்புமனுவில் கூடுதலாக பெண்களை இணைத்துக்கொள்வதற்கு பெருமுயற்சி எடுக்கிறோம். உலகிலேயே முதலாவது பெண் பிரதமரை உருவாக்கிய நாட்டில் இந்தளவுக்கு குறைந்தளவு பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் இருப்பது ஏனென்று சிந்திப்பதே சிரமமானது. கட்சிகளின் தொகுதி அமைப்பாளர்களுக்கும் கட்சித் தலைவர்களுக்கும் இது தொடர்பாக தெளிவான பார்வை இருக்கவேண்டும். ஆவ்வாறு இல்லாதிருப்பதனாலேயே இப்பிரச்சனை தீவிரமடைகிறது. இந்த விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலுள்ள குறைபாடுகளும் பெண்களை அரசியலிலிருந்து விலக்குவதற்குக் காரணமாக உள்ளது. நாட்டின் நல்லாட்சியை கட்டியெழுப்புவதாயின் நாம் அனைவரும் இதனைவிட அக்கறை எடுக்கவேண்டும்.



**உண்மையில் மாகாணசபை மட்டத்தில் அல்ல உள்ளூ ராட்சி மன்றங்கள் மற்றும் பாராளுமன்றத்தில் கூட நிலமை இதனைவிட மோசமானது. வேட்புமனுவில் கூடுதலாக பெண்களை இணைத்துக்கொள்வதற்கு பெருமுயற்சி எடுக்கிறோம்.**

**காணி, பொலிஸ் அதிகாரங்களை வடக்குக்கு வழங்குதல் தொடர்பில் கிராம மக்களுக்கு கருத்துக்கள் உள்ளதா?**

உண்மையிலேயே நடுநிலையாகச் சிந்திக்கும், அவ்வாறே அரசியல் தொடர்பாக அறிந்துள்ள பெருமளவானோர் இப்போதும் கிராமங்களில் உள்ளனர். துரதிர்ஷ்டவசமாக அரச பிரச்சார பொறிமுறை இந்த மக்களுக்கு புளுகு / அண்டப்புளுகு கூறி நஞ்சூட்டுகிறது. இருப்பினும் மக்கள் இதுபற்றி எப்போதும் கேட்கிறார்கள். அவர்கள் தமக்கு கிட்டும் அனுபவத்தையே பார்க்கிறார்கள். இவ்வளவு அதிகாரம் இருந்தும் கூட மக்களுக்கு பணியாற்றாமல் தமது சொந்த தேவைகளை நிறைவேற்றும் அரசியலே தற்போதுள்ளது. இவற்றைப்பார்க்கும் மக்கள் ஆகக்குறைந்தது வடக்கு மக்களுக்காவது சிறந்த சேவை கிட்டுமாயின் சிறந்த மாகாணசபை கிடைக்கவேண்டுமென்று கூறுகின்றனர். காணி, பொலிஸ் அதிகாரம் தொடர்பில் அவர்களுக்கு பிரச்சனையில்லை. அதற்கு காரணம் கண்டியாகட்டும், மாத்தறையாகட்டும் தற்போது அரசியல் வாதிகள் பொலீசாரை மேலும் மேலும் அரசியல் மயப்படுத்துகின்றனர். மற்றும் காணிகளை தமது அரசியல் கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளித்தல் போன்றவையாகும். எனக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் என்னைச்சுற்றியிருக்கும் நூற்றுக்கணக்கான பெண்களை இது தொடர்பாக தெளிவு படுத்துவதுடன் அவர்கள் சிறந்த பிரஜைகளாக அனைத்து இனத்தோருடனும் நட்புறவாக செயற்படுவதற்கு தூண்டிவிடுகிறேன்.

**மத்திய மாகாணம் பல இனங்கள் வசிக்கும் விசேட வலயமாகும். மத்திய மாகாணசபை இந்த அனைத்து இனங்களையும் மையமாகக் கொண்ட ஏதாவது அபிவிருத்தி திட்டத்தையோ நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் பணியையோ மேற்கொண்டுள்ளதா?**

உங்களுக்கு பதிலளிப்பதற்கு முன்னர் ஒன்றைக் கூறவேண்டும். அவ்வாறு இனங்களிடையே நல்லிணக்கமோ இனங்களை இணைத்து பொதுவான நன்மை அவர்களுக்கு கிடைக்கக்கூடியளவு செயற்படக்கூடிய சிறியளவாவது புத்தியுள்ளோர் மத்திய மாகாணசபையில் இல்லை. பல்வேறு இடங்களில் பல்வேறு திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதை நாம் காண்கின்றோம். அதில் பெரும்பாலானவை மத்திய அரசை மையமாகக்கொண்ட மத்திய அரசுக்கு வருமானம் கிடைக்கும் திட்டங்களாகும். நான் பிரதிநிதித்துவப்படுத்தும் தொகுதியிலிருந்து கொஞ்சதூரம் சென்றால் மாகாணசபையின் பண்பைக் காணலாம். உடுநுவர , தெல்தெனிய, பஹத்தஹேவாஹெட்ட பிரதேசங்களிலுள்ள கிராமங்களுக்கு செல்லும் வீதிக்கட்டமைப்புக்கள் பல ஆண்டுகளாக பராமரிக்கப்படவில்லை. பம்பரகல விகாரை தெல்தெனியாவுக்கு பெருமை சேர்ப்பதாகும். இந்தவிகாரையை அபிவிருத்தி செய்தால் உல்லாசப்பயணிகளை கவரும் இடமாகும் ஆனால் அந்த விகாரைக்கு செல்லும் பாதை சேதமடைந்துள்ளது. இது மிகச்சிறிய எடுத்துக்காட்டுகள் சிலவாகும். இவ்வளவு வருமானம் உழைக்கும் வழிகள் இருக்கும்போது மத்திய அரசு செய்யும்வரைக்கும் பார்த்துக் கொண்டிருப்பதனையே மாகாணசபை பிரமுகர்கள் செய்தார்கள். ஆனால் மாகாணசபை கட்டிடத் தொகுதியைப் பாருங்கள் இது மிகப்பெரும் நிர்மாணமாக இருந்தபோதிலும் அரச தரப்பு சமர்ப்பிக்கும் செலவுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது அவ்வளவு செலவாகியது என்பதனை நம்புவது சிரமம். நல்லாட்சி சீர்குலைந்த நிலையிலேயே மத்தியமாகாணசபை இருந்தது. நீங்கள் கேட்பதுபோல ஆக்கபூர்வமாக மக்களுக்கு சேவையாற்றுவதற்கு முன்னர் இந்த அப்பாவி மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளையாவது நிறைவேற்றுவதற்கு அதிகாரிகள் சிந்திக்கவில்லை. எமது மாகாணத்தில் உள்ள மகிழ்ச்சியடையக்கூடிய விடயமென்றால் மாகாணசபையின் முன்னைய தூங்கிவழியும் அரசியல் வாதிகளிடமிருந்து இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த எதனையும் செய்யாவிட்டாலும் மக்கள் மிகவும் ஒற்றுமையாக செயற்படுவதாகும். உண்மையில் எனக்குள்ள ஒரே பயம் என்னவென்றால் இந்த தேர்தலைச் சாட்டி சில அரசியல்வாதிகள் இனவாதத்தை தூண்டிவிட முயற்சிப்பதாகும். அதனால் எம் அனைவரினதும் பொறுப்பு மத்திய மாகாணத்தில் தற்போதுள்ள சமூக நல்லிணக்கத்தை அவ்வாறு பாதுகாப்பதாகும் என நினைக்கிறேன்.

சம்பாஷனைக் குறிப்பு
**மஞ்சுள கஜநாயக்க**



Photo source : www.asiantribune.com


**13வது அரசியல் சீர்திருத்தம் காலம் கடந்த ஒன்று என்ற கருத்தை பலர் தெரிவிக்கின்ற போதும் கூட இரு நாட்டின் இனப்பிரச்சனைக்கான நீண்டகால தீர்வை தேடுவதில் முதலாவது படிமுறை மாகாண சபையே என்பதை நாம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தெரிவித்தோம். 13வது சீர்திருத்தம் இலங்கைக்கு கிடைத்த பொன்னான சந்தர்ப்பமாகும்.**

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**
பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் /செயலாளர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி

## பிரச்சினைகளுக்கு நீண்டகால தீர்வைத் தேடுவதில்
# முதலாவது படி முறை மாகாண சபையாகும்

**எதிர்வரும் மாகாண சபை தேர்தல் தொடர்பில் தங்களுடைய கீழ்மட்ட ஏற்பாடுகளை விபரிக்க முடியுமா?**

வடக்கிற்கான மாகாண சபைத் தேர்தல் என்பது எனது மிக நீண்ட கால எதிர்பார்ப்பாகும். எனவே வடக்கில் தேர்தல் ஒன்றை நடத்துமாறு மிக நீண்ட காலமாக வேண்டுகோள் விடுத்திருந்தேன். அதற்கான காரணம் மாகாண சபை ஒன்றினூடாக அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை என்னுல் இருந்தமையேயாகும். இனப்பிரச்சினையோ! எதுவாக இருப்பினும் இவ்வனைத்திற்கும் தீர்வுகாண முடிவது மாகாண சபையினூடாகவே என்பது எனது நம்பிக்கை. 13வது அரசியல் திருத்தம் காலம் கடந்த ஒன்று என்ற கருத்தை பலர் தெரிவிக்கின்ற போதும் கூட இரு நாட்டின் இனப்பிரச்சனைக்கான நீண்டகால தீர்வை தேடுவதில் முதலாவது படிமுறை மாகாண சபையே என்பதை நாம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தெரிவித்தோம். 13வது சீர்திருத்தம் இலங்கைக்கு கிடைத்த பொன்னான சந்தர்ப்பமாகும். ஆயினும் அதை எல்.ரீ.ரி.ஈ மற்றும் அதன் சகபாடிகள் உரிய



**பாராளுமன்ற தெரிவுக் குழுவில் ரவூப் ஹகிம் மற்றும் திஸ்ஸ வித்தாரண போன்றோர் இணைத்துக் கொள்ளப்படாமை கேள்விக்குறியே. இவ்விடயம் தொடர்பில் அரசு அவதானம் செலுத்தும் என நான் நம்புகின்றேன்.**

முறையில் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இன்று யாவரும் 13வது திருத்தத்தைப் பற்றி கதைப்பது மாத்திரமின்றி அதை நடைமுறைப்படுத்துமாறும் அழுத்தம் கொடுக்கும் நிலைமையே காணப்படுகிறது.

**எவ்வாறாயினும் 13வது திருத்தம் தொடர்பில் அரசின் நிலைப்பாட்டை இதுவரை தெளிவுபடுத்தவில்லை. அரசினுள்ளேயே ஒரு தரப்பினர் அதை ஒழிக்க வேண்டும் என கூறும்போது இன்னுமொரு தரப்பினர் அதை முழுமையாக நடைமுறைப்படுத்தும் படி குரல் கொடுக்கின்றனர். அரசின் பங்காளி என்ற வகையில் தாங்கள் இதை எவ்வாறு காண்கிறீர்கள்?**

பல கட்சிகள் ஒன்றிணைந்தே இந்த அரசு அமைந்துள்ளது. சில கட்சிகளுக்கும் நபர்களுக்கும் இத் திருத்தத்தை ஒழிக்க வேண்டும் என தேவைப்பட்டிருக்கும் போது வேறு சிலருக்கு தேவைப்பட்டிருப்பது மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை வரையறை செய்வதாகும். அதேவேளை அரசினுள் இருக்கும் இன்னுமொரு பிரிவினர் 18 அவ்வாறு இருக்க வேண்டும் என விரும்புகின்றனர். நான் நினைக்கின்றேன் பெரும் பாலானோர் 13வது திருத்தம் ஒழிக்கப்படுவதை எதிர்க்கின்றனர். இது தொடர்பில் கையெழுத்துப் பெறும் செயற்பாடு பாராளுமன்றத்திலும் நடைபெற்றது. அதேவேளை அமைச்சரவையிலும் இரண்டு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. அதாவது மாகாணங்கள் இணைப்பது தொடர்பில் நிறைவேற்று அதிகாரத்திற்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரத்தை மீளப்பெறுவது மற்றும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை வரையறை செய்வது என்பதேயாகும். எவ்வாறாயினும் அமைச்சரவை அதை பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் ஒப்படைப்பதென தீர்மானித்தது. எனவே, 13வது திருத்தத்தை ஒழிப்பதற்கு அரசு குறிப்பிட்ட நிலைப்பாட்டிலிருந்தாலும் அது அவ்வாறு இடம்பெறாது பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைப்பதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றோம் ஆயினும், துரதிர்ஷ்டவசமாக அச் செயற்பாட்டிலிருந்து எதிர்க்கட்சி ஒதுங்கியிருப்பதால் இது சற்று தாமதமாகயிருக்கின்றது அதன் பங்குதாரராக இருப்பதற்கு எதிர்க்கட்சிற்கு தேவைப்பாடு இல்லாத சந்தர்ப்பத்திலும் கூட பாராளுமன்றத் தெரிவுக்குழுவுடன் இணைந்து செயற்பட நாம் தீர்மானித்திருக்கின்றோம். எனவே இப்பிரச்சனை தொடர்பில் தமது வெளிப்பாட்டை உண்மையாக அரசு மேற்கொண்டு இருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

**ஆயினும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், திஸ்ஸ வித்தாரண போன்ற அரசின் பிரபல பங்கு தார்கள் பாராளுமன்ற தெரிவுக் குழுவிலிருந்து விலக்கியிருப்பதன் காரணமாக மனக்கசப்பை ஏற்படுத்தியிருக்கின்றதல்லவா?**


ஆம் நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஆவர்களை விலக்கியிருப்பதற்கான காரணத்தின் பின்னணியை நான் அறியேன். அதை நியாயப்படுத்த முடியாது. பாராளுமன்ற தெரிவுக் குழுவில் ரவூப் ஹகிம் மற்றும் திஸ்ஸவித்தாரண போன்றோர் இணைத்துக் கொள்ளப்படாமை கேள்விக்குறியே. இவ்விடயம் தொடர்பில் அரசு அவதானம் செலுத்தும் என நான் நம்புகின்றேன்.

**மாகாண சபைகளுக்கு எவ்வாறான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்பது தொடர்பாக உங்களுடைய கருத்து யாது?**

மக்கள் தங்களுடைய விருப்பத்தை எமக்கு பெற்றுத்தருவார்களாயின் 13 வது திருத்தத்தை பாதுகாப்பதற்கும் அதேபோல் அதை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதெனவும் நாம் மக்களுக்கு தெரிவித்துள்ளோம்.

**பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தொடர்பான நிலைப்பாடு யாது?**

அவ்அனைத்தும் 13வது திருத்தத்தில் உள்ளடங்குகின்றது. வேறு நபர்களின் கைகளில் அதிகாரம் கிடைத்தால் அதை தவறான முறையில் பயன்படுத்துவார்கள் என்ற காரணத்தை அடிப்படையாக கொண்டு ஜனாதிபதி அவர்கள் தெரிவித்து இருப்பதாவது நாம் வெற்றி அடைந்தவுடன் எதையும் பெற்றுத் தர ஜனாதிபதி அவர்கள் விருப்பத்துடன் இருக்கின்றார் என்பதாகும். நான் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது ஜனாதிபதி அவர்களுக்கு பிரச்சினையாக இருக்கமாட்டாது.



**இராணுவம் காணிகளை கைப்பற்றுவது 2000ம் ஆண்டுகள் தொடக்கம் குறைவடைந்துள்ளது. இராணுவம் அவ்வாறு காணிகளை கைப்பற்றுவதற்கான சந்தர்ப்பமானது வுயேு மற்றும் டுவுவுநு போன்ற கட்சிகள் மற்றும் குழுக்களின் செயற்பாடுகளே காரணமாக அமைந்தது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்**

**வட மாகாணத்தில் மிகவும் கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரச்சனைகள் யாவை என நீங்கள் நினைக்கின்றீர்கள்?**

மக்களைப் பற்றி கவனம் செலுத்தும்போது அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ளல், தொழில் வாய்ப்புக்கள் மற்றும் காணிப் பிரச்சனைகள் போன்றவை அவர்கள் முகம் கொடுக்கும் பிரதானமான பிரச்சனைகளாகக் குறிப்பிட முடியும்.

**பலாத்காரமாக காணிகள் கைப்பற்றப்படுகின்றமை தொடர்பாக அரசிற்கு குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்படுகின்றன. தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துவது அந்த மக்களையே இது தொடர்பில் தங்களுடைய கருத்து என்ன?**

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில் அகதிகள் தொடர்பான உயர்ஸ்தானிகள் அலுவலகத்தினூடாக வெளியிடப்பட்ட அறிக்கையை வாசித்தால் உங்களுக்கு புரியும் அரசு மற்றும் இராணுவம் காணிகளை கைப்பற்றுவது 2000ம் ஆண்டுகள் தொடக்கம் குறைவடைந்துள்ளது.

இராணுவம் அவ்வாறு காணிகளை கைப்பற்றுவதற்கான சந்தர்ப்பமானது TNA மற்றும் LTTE போன்ற கட்சிகள் மற்றும் குழுக்களின் செயற்பாடுகளே காரணமாக அமைந்தது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆயினும், இன்று அந்த நிலமை மாற்றம் அடைந்துள்ளது.

**வடக்கில் மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்பாக கருத்தில் கொள்ளும் போது தமிழ் நாட்டு மீனவர்கள் நாட்டின் கடல் எல்லையை ஆக்கிரமித்து இருப்பதன் காரணமாக இவர்கள் இன்னோர் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து இருக்கின்றார்கள். யாழ்குடா நாட்டில் மீனவக் குடும்பங்களை பாதித்திருக்கும் இப்பிரச்சனையை தீர்ப்பதற்கு தாங்கள் ஏதாவது முயற்சி செய்கின்றீர்களா?**

தமிழ் நாட்டு மீனவர்கள் சட்டவிரோதமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். அவர்கள் பயன்படுத்தும் பாரம் கூடிய மீன்வலைகள் கடல்வளத்தை அழிக்கின்றது. எமது மீனவர்களின் உபகரணங்களை அழிக்கின்றனர். இரு நாடுகளின் அரசாங்கங்களும் இது வரையில் இவ்விடயம் தொடர்பில் ஆழமாக செயற்படவில்லை. உதவி கோரும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கடற்படையினர் எமது மீனவர்களின் உதவிக்கு வருவார்கள்.

www.nation.lk அனுசரணை



Photo source : www.cnn.com

AFP/GETTY IMAGES

# வட மாகாண சபைத் தேர்தல் 2013

# முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்புக்கள்

**குடியிருப்பிலிருந்து குடியிருப்பிற்குப் போன்றே வடக்கின் பிரதேசத்திற்கு பிரதேசம் மற்றும் மாவட்டத்திலிருந்து மாவட்டத்திற்கு முஸ்லிம் மக்களது அபிலாசைகள் ஒன்றுக்கொன்று முரணானவையாகும்.**



**பேராசிரியர் ஹிஸ்புல்லா**
பேராதனைப் பல்கலைக் கழகம்

சமீபத்தில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் சமூகத்தில் பெரும் விவாதமொன்றை ஏற்படுத்தியுள்ளதுடன் அதன் மீது முஸ்லிம் மக்களிடத்திலும் பாரியளவு எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்றன. தேர்தலின் ஒரு பிரதி விளைவாக மக்கள் தனது அவதானத்தைச் செலுத்துகின்ற விடயங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் என்பன ஏதோ ஒரு மாற்றத்திற்குட்பட்டு வருவதனைக் காண முடிகின்றது. சமூகங்களுக்கிடையேயும் சமூகங்களுக்குள்ளேயும் நிலவுகின்ற எதிர்பார்ப்புக்களிலும் ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளன. நடைபெறவுள்ள மாகாண சபைத்தேர்தல் தொடர்பாக முஸ்லிம் மக்கள் கவனஞ் செலுத்துகின்ற விடயங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் என்பன தொடர்பான சில விடயங்கள் பற்றி நோக்குதல் இச்சிறிய குறிப்பின் நோக்கமாகும்.

வடக்கு முஸ்லிம் சமூகம் மத்தியிலும் ஏனைய சமூகங்களைப் போன்றே நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாக ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் என்பன நிலவுவதைக் காணக் கூடியதாயுள்ளது. குறித்த அவதானிப்புக்களை உறுதி செய்தலுடன் தொடர்பான விளக்கம் இக்குறிப்பு மூலம் மேற்கொள்ளப்படுகிறது. வடக்கில் வாழும் முஸ்லிம் சமூகத்தின் பின்னணி தொடர்பான விடயங்கள் பற்றி நோக்குவது இவ்வாறான ஒரு விளக்கத்தின் போது மிக அத்தியாவசியமாகும் எண்ணிக்கை ரீதியாகவும் விகிதாசார ரீதியாகவும் முஸ்லிம் மக்கள் வடக்கி குறிப்பிடத்தக்க அளவு காணப்படவில்லை. ஆயினும், முஸ்லிம்கள் தமிழ் மக்களை முதன்மையாகக் கொண்ட வடக்கின் முதலாவது சிறுபான்மை இனத்தவராவர். அவ்வாறே வடக்கில் வாழும் சிங்கள மக்களைப் போல் அன்றி முஸ்லிம் மக்கள் கூட்டாக பகிர்ந்துகொள்ளும் ஒரு சில முக்கியமான விடயங்கள் வடக்கில் வாழும் தமிழ் மக்களிடத்திலும் கண்டுகொள்ள முடியும். ஒரே மொழியினை கதைத்து ஒரே விதமான பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபட்டு மேலும் பல கலாசாரப் பண்புகளை பரிமாரிக்கொள்வதனூடாக முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் ஒட்டி உறவாடி வடக்கில் வாழ்ந்து வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. அனைவரும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட

போதும் அது ஒவ்வொருவரையும் பாதித்துள்ள விதம் ஒருவருக்கொருவர் மாறுபட்டதாகும். யுத்தத்தின் எதிரொளியாக பொதுவாக தமிழ் முஸ்லிம் சிங்களம் ஆகிய மூவினங்களும் மரணம் - இடம்பெயர்தல் ஆகியவற்றை எதிர்கொண்டதுடன் அவ்வந்த பிரதேச ரீதியாக நோக்குமிடத்து அதன் மூலம் உருவாகியுள்ள ஆதிக்கங்களின் தன்மை மற்றும் பரிமாணம் என்பன மாறுபடலாம்.

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் பற்றிக் கருத்திற்கொள்ளும் போது முஸ்லிம் மக்களின் ஒரு சில பிரச்சினைகள் மற்றும் அவர்களது கவனத்தை ஈர்த்துள்ள சில விடயங்கள் என்பன அவர்களுக்கே உரித்தானவையும் குறித்த விசேட தன்மையும் ஏனைய சமூகங்களிலிருந்தும் மாறுபட்டவையுமாகும் என்பது தெளிவான ஒரு விடயமாகும். இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களுள் பெரும்பான்மையானோர் இடம்பெயர்ந்தவர்களாகவே இன்று வரை வட மாகாணத்திற்கு வெளியே வாழ்கின்றனர். மிகக் குறைந்த எண்ணிக்கையான முஸ்லிம் மக்களுள் ஒரு பகுதியினர் (இடம்பெயர்ந்த மொத்த முஸ்லிம் மக்கள் சுமார் 25% சதவீதத்தினர்) மட்டும் மீண்டும் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். ஆயினும் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்ற முஸ்லிம் வாக்காளர்களின் தொகை மேலே குறிப்பிட்ட எண்ணிக்கையை விட அதிகமாகும். இடம்பெயர்ந்த மக்கள் தாம் வாழுகின்ற பிரதேசத்தில் இருந்தவாறே வாக்களார்களாக தமது வாக்குகளை அளிப்பதற்கு இம் முறை நடக்கும் தேர்தலில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. தமது மொத்த வாக்குகளின் எண்ணிக்கையினை ஒன்று சேர்த்தாலும் எண்ணிக்கை ரீதியாக மிகவும் குறைவான மட்டத்திலுள்ள முஸ்லிம் மக்கள் வடக்கிற்கு வெளியே இருந்து கொண்டு வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படுவது, அவர்களது வாக்கு வங்கியினை ஓரளவுக்காவது அதிகரிக்கச் செய்வதற்கு காரணமாயமையும்.

**வடக்கின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மீள் குடிறேுவதற்காக வந்த சில முஸ்லிம் நபர்களை சந்திப்பதுடன் குறித்த பிரதேசங்களில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு வாக்களிக்க இம் முறை அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. எவ்வாறாயினும் அவர்கள் கூட்டாக ஒன்று சேர்ந்து தமது வாக்குகளைப் பயன்படுத்துவார்களாயின் மன்னார் மாவட்டத்தில் மட்டும் தமது பிரதிநிதிகள் சிலரைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தினை முஸ்லிம் மக்கள் உருவாக்கிக் கொள்ளலாம்.** வடக்கு முஸ்லிம் மக்கள் அரசியல் கட்சி ரீதியாக பிரிந்து நிற்பதுடன் சுமார் மூன்று பிரதான அரசியல் கட்சிகள் முஸ்லிம் அபேட்சகர்களை தமது வேட்பு மனுவில் உள்ளடக்கியுள்ளனர். ஐந்து மாவட்டங்களுள் மூன்றிற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது அபேட்சகர்களை நிறுத்தியுள்ளதுடன் ஆளுங் கட்சி கிளிநொச்சி மாவட்டம் தவிர்ந்த ஐந்து மாவட்டங்களுள் நான்கிற்கு தனது அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பும் மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் அபேட்சகர் ஒருவரை நிறுத்தியிருப்பது அனைவரதும் கவனத்தை ஈர்த்த ஒரு விடமாகும். மாகாண சபை தேர்தலுக்காக அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் முஸ்லிம் அபேட்சகர்களை தேர்தலில் நிறுத்துவதற்கான மிகுந்த தேவை இருப்பதே இதன் மூலம் சுட்டிக்காட்டப்படுகிறது. எவ்வாறாயினும் வடக்கு முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதில் நாம் எவ்வாறான ஒரு செயற்பாட்டினை பின்பற்றுவது என்பன பற்றி அல்லது இணக்கம் தெரிவிக்கப்பட்ட செயற்பாடு யாவை என்பன பற்றி எந்தவொரு அரசியல் கட்சியும் இதுவரை எதனையும் வெளிப்படுத்தவில்லை. அதற்கமைய இம்முறை தேர்தலில் முஸ்லிம் மக்கள் மிகுந்த கவனஞ் செலுத்துவது எவ்வாறு என்பது பற்றிய சில கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக கீழ் குறிப்பிடப்படும் விடயங்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

- வடக்கு முஸ்லிம் மக்களிடையே பொதுவான அபிலாசைகளே காணப்படுகிறது. அவர்களுள் சிலர் மீண்டும் திரும்பி வருவதற்கான உரிமை, இழந்த வளங்களையும் சொத்துக்களையும் மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு தமக்குள்ள உரிமை, இனரீதியான – மதரீதியான மற்றும் கலாசார ரீதியான உரிமைகள் போன்ற உரிமைகள் தொடர்பாக பெரும் எதிர்பார்ப்புடன் இருப்பதாகத் தெரிகிறது. குறித்த விடயங்கள் வடக்கில் வதியும் முஸ்லிம் மக்களைப் பாரியளவில் பாதிக்கும் விடயங்கள் என்பதால் அவர்களை வாக்காளர்களாகவும் அரசியல் கட்சிகள் என்ற ரீதியிலும் தேர்தல் காலங்களில் அவ் விடயங்கள் தொடர்பான தமது குரல்களை எழுப்புவார்கள் எனக் கருதலாம்.
- தற்போது மீண்டும் தமது சொந்த இடங்களை நோக்கி வருகை தந்துள்ள முஸ்லிம் மக்களின் நாளாந்த தேவைகள் மற்றும் தனது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு இயலுமான விசேடமாக வடக்கில் வாக்களிப்பது தடை செய்யப்பட்டுள்ள நபர்களின் தேவைகள் தொடர்பில் தமது வாக்கினைப் பயன்படுத்தும் போது முஸ்லிம் மக்கள் ஆர்வமடையக் கூடும்.
- நாளாந்த தேவைகளுள் காணிகளை இழந்துள்ள மற்றும் வீடுகளை இழந்துள்ள மக்கள் தொடர்பாக காணி மற்றும் வீடுகள் என்பவற்றின் தேவை மிக முக்கியமான ஒரு தேவை என வகைப்படுத்திக்கொள்ள முடியும். முஸ்லிம் மற்றும் ஏனைய (தமிழ்) இனங்களுக்கிடையே வடக்கின் சில இடங்களில் (உ+ ம் : மன்னார்) உருவாகி வருகின்ற பதட்ட நிலைமைகள் தொடர்பாக முஸ்லிம் மக்கள் கவனஞ் செலுத்த வேண்டும்.
- **குடியிருப்பிலிருந்து குடியிருப்பிற்குப் போன்றே, வடக்கின் பிரதேசத்திற்கு பிரதேசம் மற்றும் மாவட்டத்திலிருந்து மாவட்டத்திற்கு முஸ்லிம் மக்களது அபிலாசைகள் ஒன்றுக்கொன்று முரணானவையாகும். உதாரணமாக யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் மிகவும் தீவிரமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட தமிழ் அரசுக் கட்சி என்பவற்றின் மீது தங்கியுள்ள ஒரு நிலையில் காணப்படுகின்றனர்.** முஸ்லிம் அரசியல் கட்சிகள் மற்றும் அதன் தலைவர்களை விடவும் பொதுவாக குறித்த அரசியல் கட்சிகள் தமது விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றுவார்கள் என்று முஸ்லிம் மக்கள் சிந்திப்பதாகத் தெரிகிறது.
- வன்னி மாவட்ட முஸ்லிம் மக்கள் (மன்னார், வவுனியா, முல்லைத் தீவு) மிகத் தீவிரமாக ரிசாட் பதுர்தீன் அமைச்சர் மீது தங்கியிருக்கும் ஒரு நிலைமை காணப்படுகிறது. அப்பிரதேச முஸ்லிம் மக்களின் நாளாந்த தேவைகளுள் குறிப்பிட்டளவு செயல் ரீதியாக அவரே நிறைவேற்றுவது இதற்கான காரணமாகக் காட்ட முடியும்.
- எண்ணிக்கை ரீதியாக மிகக் குறைவான எண்ணிக்கையான முஸ்லிம் அரசியல்வாதிகள் தம்மை புறக்கணித்துள்ளதாக கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் குடியிருக்கும் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒரு வித உணர்வு நிலவுவதை இங்கு குறிப்பிட முடியும்.

# பதின்மூன்றும் நீக்கப்பட்டால் தமிழ் மக்களுக்கு எதுவுமே மிஞ்சாது

**நடைபெறவுள்ள வட மாகாணசபைத் தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்பு முதலமைச்சர் வேட்பாளராக முன்மொழித்திருப்பதனை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

தொடக்கத்தில் எனக்கு அவ்வளவு விருப்பம் இருக்கவில்லை. இருப்பினும் அது என்னால் நிறைவேற்றப்பட வேண்டிய மேலுமொரு சமூகப் பொறுப்பென்று எனது நெருங்கிய நண்பர்கள் பலரும், எனது மாணாக்கர்களும், ஏனைய நலன் விரும்பிகளும் என்னிடம் வலியுறுத்தி வேண்டுகோள் விடுத்தார்கள். தமிழ் தேசிய முதலமைச்சர் வேட்பாளராக தெரிவுசெய்யப்பட வேண்டுமென்பதே அதன்போது எனது நிலைப்பாடாக இருந்தது. ஏனைய ஐந்து பங்காளிக்கட்சிகளும் ஏகமனதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமையினால் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பொது முதலமைச்சர் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டேன். அவர்களது ஏகோபித்த கருத்துக்கு மதிப்பளித்து நான் முதலமைச்சர் வேட்பாளராக முன்வர வேண்டி வந்தது.

**தமிழ் சமூகத்தின் மிகவும் பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்குள்ள பிரச்சனைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அரசு எப்போதும் கூறினாலும், எதிர்க்கட்சியிலுள்ள அரசியல் கட்சிகள் உண்மை அதுவல்ல என தொடர்ச்சியாக கூறிக்கொண்டிருக்கின்றன. வடக்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திப் போட்டியிடும் முதன்மையான வேட்பாளர் என்ற ரீதியில் மிகவும் முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென நீங்கள் கருதும் அம் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சனைகள் எவை?**

வடக்கில் தற்போதுள்ள நிலைமை தொடர்பில் கவனிக்கும்போது இழப்பு மீளளிப்பு (ஏற்பட்ட தவறுகளை திருத்துவதற்காக புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி போன்ற விடயங்கள்) செயற்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கவேண்டுமென நம்புகிறேன். அரசால் மேற்கொள்ளப் பட்டுவரும் பல்வேறு விதமான அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கு தமிழ் மக்களை தொடர்ச்சியாக பாதிப்புக்குள்ளாக்கி இதுவரை தீர்க்கப்படாத பிரச்சனைகளுக்கு பதிலளிக்காமல் அமுல் படுத்தப்படுவதாகவே தெரிகிறது.

மக்கள் மீண்டும் எழுந்துநிற்பதற்கு எந்தவொரு வழியையும் விட்டுவைக்காமல் அவர்களது வீடுகள், தொழில்துறைகள் போன்றவை இல்லாமல் போயுள்ளன. இருப்பினும் கதைப்பதற்கும். தீர்ப்பதற்கும் கொஞ்சம் கொந்தளிப்பான மிகவும் முக்கியமான பிரச்சனையானது கூடுதலாக இராணுவம் தரித்திருக்கும் பிரச்சனையாகும். 20 வரையிலான இராணுவ படைப்பிரிவுகளில் 15-20 படைப்பிரிவுகள் வடக்கில் நிலைப்படுத்தப்பட்டிருப்பதுடன் அவர்களால் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணி கையகப்படுத்தப்பட்டுள்ளது. சில காணிகளில் வடக்குக்கு வெளியிலிருந்து கொண்டுவந்து மீள குடியேற்றப்பட்டுள்ள குடும்பங்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளதுடன், அவற்றின் உற்பத்திகள் (விளைபொருட்கள்) அக்காணிகளின் உண்மையான சட்டபூர்வ உரிமையாளர்களுக்கு விற்பனை செய்யப்படும் நிலைமையே அங்குள்ளது.

காணி கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் காணி கையப்படுத்தப்பட்டுக்கொண்டிருப்பதுடன் அவ்வாறு கையப்படுத்தப்படும் காணிகள், சொத்துக்களின் உண்மையான உரிமையாளர்கள் முகாம்களிலோ, உறவினர், நண்பர்களின் வீடுகளிலோ தலைக்கு கூரையின்றி நனைந்து கொண்டோ இருக்கும்போது,




**சீ.விக்னேஸ்வரன்**
தமிழ் தேசியக் கூட்டமைப்பின்
முதலமைச்சர் வேட்பாளர்

அவ்வாறு மிகவும் குறுகிய அறிவித்தலில் செயற்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக எனது நண்பரான தற்போது அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மருத்துவருக்குச் சொந்தமான வீடொன்று இருந்தது. அது 15 ஆண்டுகள் அளவில் பொலீசாரால் கையகப்படுத்தப்பட்டிருந்தது. சில மாதங்களுக்கு முன்னர் பொலீசார் அவ்வீட்டை கைவிட்டு வெளியேறியவுடன், அந்த வீடு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவ்வீட்டில் அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்தது. எனது நண்பர் மீண்டும் இலங்கைக்கு வந்து தனது பரம்பரை வீட்டில் தனது கடைசிக் காலத்தை கழிப்பதற்க்குத் திட்டமிட்டிருந்தார். ஆனால், மீண்டும் தனது சொத்தின் உரிமையை நிரூபிப்பதற்கு சட்டத்தின் உதவியைக் கோரவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

**ஊடகங்கள் குறித்த காலத்திலும், மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டிய போதிலும் காணாமல் போனோர் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் பிரச்சனை இன்றுவரை தீர்க்கப்படாத மிகமோசமான பிரச்சனையாக மாறியுள்ளது. நூற்றுக்கணக்கான அந்த இளைஞர்களின் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் எங்கிருக்கிறார்கள் எனத் தேடி அலைகின்றனர். இப்பிரச்சனை தொடர்பாக உங்களது அவதானிப்பு என்ன?**

இது பதிலளிக்கக் கொஞ்சம் சிரமமான கேள்வி. இருப்பினும் இவ்வாறு காணாமற்போன / தடுத்துவைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் அறிக்கை தொடர்பாக தற்போதைய சட்டமா அதிபரை சந்திப்பதற்கும் கதைப்பதற்கும் நீதிமன்றின் முன்னாள் உறுப்பினர் என்ற ரீதியில் சில வேளை எனக்கு வாய்ப்புக் கிடைக்கும். அவ்வாறே எனக்கு உதவுவதற்கு அவராலும் முடியுமாக இருக்கும், எவரும் அவ்வாறு அவருடன் (சட்டமா அதிபர்) இணைந்து செயற்படவில்லை எனத் தெரிகிறது.

காணாமல் போன நபர்கள் உயிருடன் இருக்கின்றனரா? இறந்துவிட்டனரா என உறுதிப்படுத்தமுடியாத எக்நெலி கொடவின் சம்பவம் போன்ற நிலையிலுள்ள பல சம்பவங்கள் அங்குள்ளது. இருப்பினும் இவ்வாறு காணாமல் போனோர் எங்கிருக்கின்றனர் என கண்டுபிடிப்பதற்காக ஏதாவது கூட்டுமுயற்சி எடுப்பது போன்றே ஏதாவதொரு அமைப்பை உருவாக்கி தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் விபரங்கள் அடங்கிய தரவுகள் சேகரிப்பதற்கு அவ்வாறான முயற்சி எடுக்கப்பட்டால் அதற்காக ஏதாவது செய்யக்கூடிய நிலையே உள்ளது. அவ்வாறான பணியில் ஈடுபட்டு குறைந்தது 50- 100 அளவான தடுத்து வைக்கப்பட்டுள்ளோரையாவது விடுவிக்கமுடியுமாயின் அது உண்மையிலேயே பெரும் செயற்பாடாகும்.

எந்தவொரு குற்றச்சாட்டோ வழக்கு விசாரணையோ இல்லாமல் கைதிகளாக பல ஆண்டுகள் ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை நீதிபதியென்ற வகையில் தனிப்பட்டமுறையில் நானறியேன். எடுத்துக்காட்டாக தமது பிணைப்பணம் 5000/- ரூபாவை கட்டமுடியாமல் 12-15 ஆண்டுகள் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பெண்ணைப்பற்றி எனக்குத் தெரியும். சிறைச்சாலை அத்தியட்சகர்கள் அவ்வாறான விடயங்கள் தொடர்பாக பரிசீலித்து தமது உயர் அதிகாரிகளுக்கு அறிக்கை செய்வார்களாயின் அதுபோன்ற துன்பியல் சம்பவங்களை உண்மையிலேயே தவிர்த்துக் கொள்ளலாம். நான் மாவட்ட நீதிபதியாக செயற்பட்டபோது எனது சிறைச்சாலை அலுவலர்கள் சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்துக்கு கொண்டுவரும் அனைவரினதும் பட்டியலையும் அவர்களது வழக்குகளுக்குரிய விபரங்கள் தொடர்பான பதிவேட்டையும் என்னிடம் வழங்க வேண்டுமென கூறுவதற்கு பழக்கப்பட்டிருந்தேன். சில சந்தர்ப்பங்களில் வழக்கு தொடர்பான அறிக்கை இல்லையென நான் புரிந்து கொள்ளும்போது சிறைச்சாலை அலுவலர்களுடன் கலந்துரையாடி குறித்த நபருக்கு பிணை வழங்குவதற்கு உரிய தீர்ப்புக்களை வழங்குவதனையே செய்தேன்.

**எந்தவொரு வழக்கு விசாரணையோ குற்றச்சாட்டோ இன்றி சிறைப்பட்டு இவ்வாறு துன்பப்படும் தமிழ் கைதிகள் தொடர்பில் நீதிமன்றத்தில் உள்ளவர்கள் ஓரளவுக்கு பொறுப்பேற்க வெண்டுமென்றா கூறுகிறீர்கள்?**

இல்லை அவர்கள் எவரும் வேண்டுமென்று செய்வதில்லை. இருப்பினும் கவனமின்மை, அலட்சியம் காரணமாக ஏற்படலாம். நாம் நீதிச்சேவையில் பணியாற்றியபோது சிறை வைக்கப்படுபவர்கள் தொடர்பில் தொடர்ச்சியாக சிறந்த பரிசீலிப்பில் இருப்பதனை பழக்கமாகக் கொண்டிருந்தேன். அதுபோன்றே அவ்வாறான விடயங்கள் தொடர்பாக சிறைச்சாலை அலுவலர்களை ஊக்குவித்தேன். எனது பதவிக்காலத்தில் சிறைச்சாலைக்கு செல்லுதல் சிறை வைக்கப்பட்டவர்களின் குறைகளைக் கேட்டல் போன்றவற்றை வழக்கமாகக் கொண்டிருந்தேன். அவ்வாறான முனைப்புகளூ டாக அவர்களது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எம்மால் உதவமுடிந்தது. சில நீதிபதிகள் மிக நன்றாக செயற்பட்டு அதுபோன்ற விடயங்கள் தொடர்பாக அக்கறை காட்டிய போதிலும் நீதிமன்றக் கட்டமைப்பில் உள்ள பெருமளவானோருக்கு சிறந்த தெளிவு தற்போது இல்லையெனத் தெரிகிறது. அவர்களை (கைதிகள்) பாதுகாப்பதற்கு எந்தவொரு நீதிபதிக்கும் நல்ல இதயம் இருப்பது இன்றியமையாதது.



**ஆனால் தற்போது வடக்கு, கிழக்கு மக்களை தமது தாய்மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மாறுமாறு அரசாங்கம் அழுத்தம் கொடுக்கின்றது. அனைத்து தொடர்பாடல்களும் சிங்களத்தில் மேற்கொள்ளகப்படுகின்றன. அவ்வாறு இல்லையாயின் அந்த அறிவித்தல்களை மீண்டும் தமிழ் மொழியில் தயாரிக்க வேண்டும். பொலீஸ் நிலையத்தில் வாக்குமூலம் கொடுப்பதுகூட சிங்களத்திலேயே மேற்கொள்ளப்படுகிறது. 90மூ தத்திற்கும் கூடுதலான மக்கள் தமிழ்மொழி பேசும் பிரதேசங்களில் அவ்வாறு பலவந்தப்படுத்துதல் நியாயமானதா? சிற்சில மாற்றங்கள் செய்யப்பட்டாலும் மையப் பிரச்சனை அப்படியே இருக்கிறது.**



**அதனை இந்தியா இலங்கைமீது பலவந்தமாக திணித்தது எனும் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால் இந்தியா இலங்கை ஒப்பந்நதத்தின் மூலம் இலங்கையின் அதிகாரப்பகிர்வு பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக இந்தியா ஈடுபட்ட வேளையில் உண்மையிலேயே 13 வது திருத்த சட்ட வரைபு ஜே. ஆர். ஜயவர்தன நிர்வாகத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டது.**

**இனப் பிரச்சனைக்குத் தீர்வாக 13 வது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வுக்கு செல்வதென போர் நடந்தபோதும் , போர் முடிவடைந்தவுடனும் கூறப்பட்டது. ஆனால் அவர்கள் 13 வது திருத்தத்தை செயலிழக்கச் செய்வதற்குத் தயாராவதாக தெரிகிறது. இந்த நிலைமையை நீங்கள் எவ்வாறு புரிந்து கொள்கிறீர்கள்? அது இந்தியா இலங்கை மீது பலவந்தமாக திணித்தது என உங்களுக்கு தோன்றுகிறதா?**

அதனை இந்தியா இலங்கைமீது பலவந்தமாக திணித்தது எனும் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால் இந்தியா இலங்கை ஒப்பந்நதத்தின் மூலம் இலங்கையின் அதிகாரப்பகிர்வு பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக இந்தியா ஈடுபட்ட வேளையில் உண்மையிலேயே 13 வது திருத்த சட்ட வரைபு ஜே.ஆர். ஜயவர்தன நிர்வாகத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டது. இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக குறிப்பாக வடக்கு கிழக்குக்குரிய விடயங்கள் தொடர்பில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தினூடான அழுத்தத்தினாலேயே 13 வது திருத்தம் உருவாக்கப்பட்டது. ஆனால் அந்த வியூகத்துக்கு பதிலாக நாட்டின் ஏனைய மாகாணங்களில் அது அமுல்படுத்தப்பட்டது. மிகவும் விவாதிக்கப்பட்ட சூழலில் நடாத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களைவிட இந்த அரசியலமைப்பு மேலும் முன்கொண்டு செல்லப்படவில்லை.

இன்றுவரையும் 13 வது திருத்தத்தினூடாக மாகாண சபைகளுக்கு கிடைக்கவேண்டிய அதிகாரம் தொடர்பில் தெற்கிலுள்ள மாகாண சபைகள் அக்கறையேதும் காட்டவில்லை. தனித்தனி நபர்களாக அதிகாரத்தில் திளைப்பதற்குப் பதிலாக அதிகாரத்தை மத்தியில் வைத்துக்கொண்டிருப்பதா இல்லையா என்பதே கேள்வியாக இருக்கவேண்டும். கீழ்மட்டத்தில் தாக்கம் செலுத்தும் பிரச்சைனகள் அவர்களுக்கு மிகவம் இலகுவானதாகத் தெரியும்.

வடக்கில் மொழியில் தொடங்கி வாழ்வியல் முறை பண்பாடு போன்றவை ஓரளவுக்கு வேறுபாடானது. என்பதனால் அதிகாரம் கீழ்மட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட நிர்வாக அமைப்பு அந்த மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு தேவையானதாக உள்ளது. இவ்வாறான பிரச்சனைகளை கடுமையாக அடக்குவதன் மூலம் பிரச்சனை மேலும் தீவிரமடையும் என்பதனை உண்மையிலேயே அரசாங்கம் இங்கு புரிந்து கொள்ளவேண்டிய விடயமாகும். ஏனென்றால் தற்போது நிலவும் வன்முறைகள் தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லப்பட்டால் இன்னுமொரு ஆயுதப்போராட்டம் ஏற்படுவதனை தடுக்கமுடியாமல் போகும். இதனால் இரு இனங்களுக்குமிடையில் பரஸ்பர நம்பிக்கையை உறுதிப்படுத்துதல் மிகவும் முக்கியமானதாக நான் கருதுகிறேன். தலைவர்கள் என்ற ரீதியில் ஏதாவதொரு தீர்வை நம்பிக்கை அடிப்படையில் முன்வைக்க முடிந்திருந்தால் எதிர்காலம் பற்றி எம்மால் சிந்திக்கமுடியும்.

ஏதாவதொரு போர் மீண்டும் ஏற்பட்டால் அரசின்மீது அனுதாபம் ஏற்படாது என்பதும் குறிப்பிடப்படவேண்டிய மேலுமொரு விடயமாகும்.

தமிழ் மக்களின் நலன் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக குறிப்பிட்டே அரசு இந்தியாவிடமும் சர்வதேச சமூகத்திடமும் போரை முடிப்பதற்கு உதவி கோரியது. ஆனால் இன்றுவரைக்கும் மேற்கொள்ளப்படாதிருப்பதும் அதுவே. சிலவேளை நான் தவறாகவும் இருக்கலாம். இருப்பினும் அரசு கடும் போக்காளர்களுடன் இணங்கி செயற்படுவதாக நான் நினைக்கிறேன். அவர்கள் 13 வது திருத்தத்துக்கு எதிராக குற்றம் சாட்டிக்கொண்டிருக்கும் போது தமிழ் மக்கள் அதனை எதிர்த்து நிலமை மோசமானால் அரசு மிகவும் இலகுவாக 13 இல் பெரும்பாலான குறைகள் இருப்பதாகக் கூறி தமது கைகளைக் கழுவிக்கொள்ளமுடியும். நிறைவேற்று அதிகாரமுடையவராக உருவாக்கப்பட்டுள்ள ஆளுனரின் ஒத்துழைப்பின்றி எந்தவொரு சட்டத்தையும் நிறைவேற்றமுடியாதிருப்பது எதிர்நோக்கும் முக்கியமான சிக்கலாகும். இதுபோன்ற விடயங்களுக்கு மத்தியில் 13 வது திருத்தம் பயனற்றதாகும். இருந்தபோதிலும் அதனையும் விட்டால் தமிழ் மக்களுக்கு எதுவுமே இல்லாமல் போகும். அதனால்தான் தமிழ் கூட்டமைப்பு அந்த தலைப்பின்கீழ் போட்டியிடுகிறது. இதுவரைக்கும் வடக்கில் எந்தவொரு ஜனநாயக நிறுவனமும் இல்லாதிருப்பதனால் அவ்வாறான நிறுவனமொன்றை உருவாக்குவதற்காக 13 வது திருத்தத்தின்கீழ் இடமளிக்குமாறு கோருவதே எனது வாதமாகும். ஆதன்பின்னர் ஒலிவர் டிவிஸ்ட் (Oliver Twist) போன்று அதிகமானவற்றை எம்மால் கோரமுடியும். அதன்படி தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகளுக்கு 13 வது திருத்தம் தீர்வாகுமென நீங்கள் நம்பவில்லையா?

13 வது திருத்தம் மட்டும் போதுமானதல்ல இருப்பினும் கீழ் மட்டத்துக்கு கூடுதல் அதிகாரம் கிடைக்ககூடியவாறு ஆளுனருக்கு வழங்கப்பட்டுள்ள வரையறையற்ற அதிகாரத்தை குறைப்பதன் மூலம் அதனை ஏதாவதொரு முறையில் உருவாக்கிகொள்ளலாம். ஆளுனர் மாகாண சபையின் நடவடிக்கைகளில் தலையீடு செய்வதிலிருந்து விலகியிரிப்பதாக அண்மையில் பத்திரிகையொன்றில் வாசித்தேன். ஆனால் ஆளுனர் மாகாணசபை அமைக்கப்பட்ட பின்னரும் கூட அலுவலர்கள் அவரது ஆலோசனைகளுக்கமைய செயற்படவேண்டுமெனக் கூறியுள்ளார்.

பிறருடன் தொடர்பு கொள்ளும் அனுபவம் இல்லாத ஏனையோரிடத்தில் நெகிழ்வுத்தன்மை இல்லாத இராணுவ அலுவலர்கள் சிவில் நிர்வாகிகளாக நியமிக்கப்படும்போது இதுபோன்ற சிக்கலே ஏற்படும்.

அதற்கும் மேலாக துரதிஸ்டவசமாக அரசு மேலும் மேலும் அதிகாரத்தை மையப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது.

அதற்கு மிகச்சிறந்த உதாரணம் 18 வது திருத்தமாகும். அதிகாரத்தை ஒரே இடத்தில் குவிப்பதற்கான அரசின் விருப்பம் வெளிப்படுத்தப்படுகிறது.

இவ்வாறான நிலமையில் ஏதாவது முக்கயமான மாற்றம் ஏற்படுமென எதிர்பார்க்க முடியாது. இருப்பினும் போதுமானளவு அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் சிறிய அளவில் திருத்தம் செய்யக்கூடிய ஆவணமே அது. இதற்க்காக மாகாண சபைகள், இந்தியா, இலங்கையின் மத்திய அரசு ஆகியவை இணைந்து செயற்படுவது முக்கியமானதாகும்.

**13ஆவது திருத்தத்தை இரத்து செய்யவேண்டுமென எதிர்ப்போர் கூறும் இன்னொரு விடயம் அரசியலமைப்பு ரீதியாக அதனுள் பெறுமதி இல்லை என்பதாகும். அதுவும் இல்லையாயின் உரியவாறு மக்கள் கருத்தறியப்படாமை மற்றும் இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கமைய இந்தியா தனது பங்கினை உரியவாறு நிறைவேற்றப்படாமை அந்த விடயங்கள் தொடர்பில் உங்களது கருத்து என்ன?**

அது வடக்கு, கிழக்கு ஆகிய மாகாணங்களுக்குரியது என்பதனால் கருத்தறியும் வாக்கெடுப்பு நடாத்தவேண்டிய தேவையில்லை. அவ்வாறே உச்ச நீதிமன்றம் இந்த இரண்டு மாகாணங்களையும் மீண்டும் பிரிப்பதற்க்கு தீர்ப்பு வழங்கியதனால் அந்த வாதம் தொடர்ந்தும் வலுவானதாக இருக்காது. அத்துடன் இந்தியா தனது பொறுப்பை மீறியதாக குற்றம் சாட்டுவது வெற்று பிதற்றல் மட்டுமே. ஏனென்றால் அதனைத்தான் அவர்கள் 2009 இல் நிறைவேற்றினார்கள். சர்வதேச சமூகத்தின், விசேடமாக இந்தியாவின் ஒத்துழைப்பு கிடைத்திருக்காவிட்டால் அவ்வளவு இலகுவாக தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடிக்கும் வாய்ப்பு கிடைத்திருக்குமென நினைப்பது சிரமம். 1980 தசாப்தத்தில் இந்தியா தனது பங்கினை நிறைவேற்ற முடியாது போனாலும் 2009இல் அவர்கள் இலங்கை அரசுக்கு உதவினார்கள். இலங்கை, இந்தியாவுக்கிடையில் சர்வதேச மட்டத்தில் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையை இலகுவாக ஒதுக்கிவிடக்கூடிய நிலமை இருப்பதாக நான் கருதவில்லை. அவ்வாறான உடன்படிக்கை தொடர்பாக இந்தியாவின் அங்கீகாரமின்றி அதனை ஏகமனதாக இரத்துச்செய்யலாமென நான் நினைக்கவில்லை.

**இலங்கை ஏகமனதாக செயற்பட்டால் முகம் கொடுக்க வேண்டிய விளைவுகள் எவை?**

அண்மையில் இங்கு வருகைதந்த சிவசங்கர் மேனனின் வருகைமூலம் அது வெளிப்பட்டது. ஏற்கனவே சிற்சில நெருக்கடிகளுக்கு உட்பட்டுள்ள நாடென்ற ரீதியில் எமது நம்பகத்தன்மைக்கு அதன்மூலம் பாரதூரமான பாதிப்பு ஏற்படலாம். இந்த அரசின் தலைவர் இனப்பிரச்சனைக்கு தீர்வாக 13' வழங்குவதாக முழு உலகுக்கும் அறிவித்திருந்தார். ஆனால், தற்போது அது 13 வரை தாழ்ந்து போயுள்ளது. சில மனிதர்களை உங்களால் எப்போதும் ஏமாற்ற முடியும். ஆனால் சிலரை அவ்வாறு ஏமாற்றுவது சிரமம். இருப்பினும் எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது.

**1987இல் இருந்தது போன்று வடக்கு கிழக்கு சேர்ந்திருப்பது தொடர்பில் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? வடக்கு மக்களுக்கு கூடுதலான நன்மைகள் இணைந்திருப்பதன் மூலமா? தனித்தனியாக நிர்வகிக்கப்படுவதன் ஊடாகவா கிட்டும்?**

மாகாணங்கள் இரண்டும் சேர்க்கப்பட வேண்டும் எனும் கருத்திலேயே நான் இருக்கிறேன். பதின்மூன்றாவது திருத்தத்தின் நோக்கமானது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பிரச்சனையை தீர்ப்பதாகும். 1987 மாகாண சபை முறை தொடர்பான அறிமுகத்துக்கமைய இரண்டு மாகாணங்களிலும் தமிழ் மக்கள் வாழும் ஓர் பிரதான பொது மொழி மாகாணங்கள் இரண்டும் சேர்க்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

அக்காலப்பகுதியில் கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்கள் தமிழ் பெரும்பான்மையால் ஏற்படக்கூடிய சில விடயங்கள் தொடர்பில் கவலையடைந்திருந்தனர். ஆனால் அவை தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. இங்கே தாக்கம் செலுத்தும் விடயம் என்னவென்றால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தனியான மொழி பயன்படுத்தப்படுதல், தனியான பண்பாட்டுடன் வாழ்ந்து வருதல் மற்றும் அரசியல் ரீதியாகக் கூட நாட்டின் ஏனைய மாகாணங்களை விடவும் தனித்துவமானதாக இருத்தல். அதற்க்கமைய அவ்வாறான சந்தர்ப்பத்தில் தமது நடவடிக்கைகளை தமது மொழியில் மேற் கொள்வதற்காக ஏதாவதொரு ஆட்சியதிகாரம் அவர்களுக்கு கிடைக்க வேண்டும். அவ்வாறெனின் இரு



**தமிழ் மக்களின் நலன் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக குறிப்பிட்டே அரசு இந்தியாவிடமும் சர்வதேச சமூகத்திடமும் போரை முடிப்பதற்கு உதவி கோரியது. ஆனால் இன்றுவரைக்கும் மேற்கொள்ளப்படாதிருப்பதும் அதுவே. சிலவேளை நான் தவறாகவும் இருக்கலாம். இருப்பினும் அரசு கடும் போக்காளர்களுடன் இணங்கி செயற்படுவதாக நான் நினைக்கிறேன்.**



**1980 தசாப்தத்தில் இந்தியா தனது பங்கினை நிறைவேற்ற முடியாது போனாலும் 2009இல் அவர்கள் இலங்கை அரசுக்கு உதவினார்கள். இலங்கை, இந்தியாவுக்கிடையில் சர்வதேச மட்டத்தில் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையை இலகுவாக ஒதுக்கிவிடக்கூடிய நிலமை இருப்பதாக நான் கருதவில்லை. அவ்வாறான உடன்படிக்கை தொடர்பாக இந்தியாவின் அங்கீகாரமின்றி அதனை ஏகமனதாக இரத்துச்செய்யலாமென நான் நினைக்கவில்லை.**

மாகாணங்களிலும் வாழும் மக்கள் தமது பொது மொழியை கற்பதனை வடக்கில் வாழும் சிங்கள மக்கள் எவரும் எதிர்க்க மாட்டார்கள் அவ்வாறே அந்த மாகாணங்களில் வாழும் மக்கள் தமது பொது மொழியை கற்பதற்கான உரிமையை ஏன் ஏற்றுக்கொள்ளமுடியாது? நான் சிறு பிள்ளையாக இருந்தபோது எம்மைவிடவும் நன்றாக தமிழ் உச்சரிக்கும் அப்புகாமியிடமிருந்து பாண் வாங்குவதற்கு பழகியிருந்தேன். நான் சிங்களத்தில் கதைக்கும் போது தமிழ் மொழியில் கதைக்கும் அவர் ஜோசப் பரராஜசிங்கத்துடன் ஒன்றாக வேலை செய்வதாக அறிந்திருந்தேன். ஆனால் தற்போது வடக்கு, கிழக்கு மக்களை தமது தாய்மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மாறுமாறு அரசாங்கம் அழுத்தம் கொடுக்கின்றது. அனைத்து தொடர்பாடல்களும் சிங்களத்தில் மேற்கொள்ளகப்படுகின்றன. அவ்வாறு இல்லையாயின் அந்த அறிவித்தல்களை மீண்டும் தமிழ் மொழியில் தயாரிக்க வேண்டும். பொலீஸ் நிலையத்தில் வாக்குமூலம் கொடுப்பதுகூட சிங்களத்திலேயே மேற்கொள்ளப்படுகிறது. 90% தத்திற்கும் கூடுதலான மக்கள் தமிழ்மொழி பேசும் பிரதேசங்களில் அவ்வாறு பலவந்தப்படுத்துதல் நியாயமானதா? சிற்சில மாற்றங்கள் செய்யப்பட்டாலும் மையப் பிரச்சனை அப்படியே இருக்கிறது.

**நீங்கள் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணும்போது பரஸ்பர நம்பிக்கையின் முக்கியத்துவம் தொடர்பாக நீங்கள் ஆரம்பத்தில் குறிப்பிட்டீர்கள். ஆனால் த.தே.கூட்டமைப்பு த.வி.புலிகளின் பிரதிநிதிகளாக செயற்படுவதான குற்றச்சாட்டு மீண்டும் எழுப்பப்படுகின்றது. பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்புதல் மேற்கொள்ளமுடியமென நீங்கள் கருதுகிறீர்களா?**

பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் கல்விமூலமாக நம்பிக்கையை கட்டியெழுப்பலாமென நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு எப்போதுமே நிகழ்ச்சித்திட்டம் ஒன்றுக்காவும் சமஷ்டிக்காகவும் முன்னிற்பதனை மறக்கக்கூடாது. அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளைப் போன்று செயற்படவில்லை. தமிழ் மக்கள் இரண்டாம் தர குடிமக்களாக வகைப்படுத்தலுக்கு மட்டும் வரையறுத்தல் பொதுவாழ்க்கைக்குரிய உரிமைகளிலிருந்து பொதுமக்களை ஒதுக்கிவைத்தல் போன்ற ஒரேமாதிரியான பிரச்சனைகளுக்காக த.வி.புலிகளைப்போன்றே த.தே.கூட்டமைப்பினரும் தமது எதிர்ப்பைக் காட்டினார்கள். இவ்வாறான பிரச்சனைகளில் தலையிடுதல் நியாயமானதாக இருந்தபோதிலும் அதற்கமைய த.தே. கூட்டமைப்பினரை த.வி.புலிகளின் பிரதிநிதிகளாக முத்திரை குத்துவதற்கும் அவற்றைப்பயன்படுத்துகின்றனர். தமது தலைவர்கள் த.வி புலிகளால் கொல்லப்பட்டபோது அவர்களது தெரிவுக்கு எதுவுமே இல்லாத நிலை. இருப்பினும் த.வி. புலிகளின் வன்முறைகளுக்கு முன்னால் அவர்கள் மௌனமாக இருக்க வேண்டியிருந்தது. **அரசும் வேறு பல தரப்புக்களும் த.தே.கூட்டமைப்பு த.வி.புலிகளைப்போன்று செயற்படுவதாகக் கூறமுடியும். ஆனால் த.தே.கூட்டமைப்பு த.வி.புலிகளின் பிரதிநிதிகளென அவர்கள் எப்படிக்கூறலாம். தற்போது இல்லாத ஒன்றின் பிரதிநிதியாகவே குற்றம் சாட்டுகின்றனர்.**

**எதிர்க்கட்சிகளின் அரசியல் செயற்பாடுகளுக்கு அரசாங்கத்தின் பொறுமையற்ற கொள்கை தொடர்பாக எதிர்க்கட்சிகள் எப்போதும் குற்றம் சாட்டுகின்றன. இந்த நிலையில் சுதந்திரமான நியாயமான தேர்தல் செப்ரெம்பரில் நடக்குமென எதிர்பார்க்கமுடியுமா?**

இது தற்போது எமது கவனம் செலுத்தப்பட்டுள்ள விடயமாகும் . வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களின் வருகைக்கெதிராக அரசாங்கம் செயற்படுவதுடன் எனக்கென்றால் சுதந்திரமான அமைதியான தேர்தல் நடாத்துவதற்கான எமது ஒரே எதிர்பார்ப்பும் நிறைவேறாது எனத் தெரிகிறது.தேர்தல் ஆணையாளருடன் அண்மையில் த.தே.கூட்டமைப்பு உறுப்பினர்கள் நடாத்திய கலந்துரையாடலின்போது தேர்தல் காலத்தில் படையினரை முகாம்களுக்குள் மட்டுப்படுத்து மாறு ஆணை யாளரிடம் கோரிக்கை விடுத்தார்கள். அவர் அதனை நிராகரித்தார். அது நடைமுறைக்கு சாத்தியமற்றதெனக் கூறினார். அதுபோன்ற கோரிக்கைகளுக்கு பொருத்தமான தீர்வு வழங்கமுடியாதெனின் தேர்தல் ஆணையாளர் என்ற ரீதியில் அவரது பணிப்பொறுப்பு என்ன? அவருக்கும் சுரேஸ்பிரேமசந்திரனுக்குமிடையில் ஓரளவு வாக்குவாதம் ஏற்படுவதற்கும் அது காரணமாக இருந்தது. சுதந்திரமான அமைதியான தேர்தல் நடக்குமா இல்லையா என்பது தொடர்பாக அனைவரும் இதுபற்றி கற்பனை செய்து பார்க்கலாம். பெரும்பாலான தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணையில் நான பங்குபற்றியிருப்பதனால் எதிர்க்கட்சியின் பலத்தை குறைத்து மதிப்பிடுவதற்காக அதிகாரத்திலுள்ளோர் மேற்கொள்ளும் செயற்பாடுகள் பற்றி எனக்கு தெரியும். அதன்படி ஓரளவுக்காவது நடாத்துவதற்கு வழியேற்படுத்துவது கட்டாயமானதென கூறியே ஆக வேண்டும்.

அனுசரணை : **டெயிலி நிவ்ஸ்**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), கடந்த வியாழக்கிழமை, 2013 ஆகஸ்ட் 1 ஆம் திகதி, மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் வெலிவேரிய எனுமிடத்தில் இடம்பெற்ற துயரமான சம்பவங்களை மிகுந்த எச்சரிக்கையுடனும் மற்றும் கவலையோடும் கவனத்தில் கொள்கிறது. யுத்தத்திற்குப் பின் இலங்கையில் ஆயுதம் தரிக்காத குடிமக்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான தங்களது ஜனநாயக உரிமையை அப்பியாசிக்கையில் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டு, பாதுகாப்புப் படைகளால் சுடப்பட்டு மற்றும் கொல்லப்படுவதும் இது முதல் தடவையல்ல: 2011 இல் கட்டுநாயக்கவின் ஏற்றுமதிச் செயன்முறை வலயத்தில் மற்றும் 2012இல் சிலாபத்திலும் முறையே, 01 குடிமகன் வீதம் கொல்லப்பட்டுள்ளனர். அதேபோன்று, நிகழ்வுகள் தொடர்பாக செய்தி சேகரிக்கும் ஊடகப் பணியாளர்கள் தாக்கப்பட்டு மற்றும் அவர்களது உபகரணங்கள் கைப்பற்றப்பட்டு, சேதமாக்கப்பட்டு அல்லது அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. வெலிவேரியவில் இறந்தவர் எண்ணிக்கை தற்பொழுது 03 ஆக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

ஆயுதம் தரிக்காத குடிமக்கள் – அதுவும் வெலிவேரிய சம்பவத்தில், எதிர்ப்புப் போராட்டத்தில் நேரடியாக சம்பந்தப்படாததாக அறிவிக்கப்படும் இரண்டு இளம் மாணவர்கள் கொல்லப்பட்ட, இந்த சம்பவங்கள் – எமது நாட்டில் சட்டத்தினாட்சி குலைந்து போயுள்ளதினதும் மற்றும் மிக முக்கியமாக, அதன் குடிமக்களால் ஜன நாயக உரிமைகளின் அப்பியாசித்தல் தொடர்பாக அரசாங்கத்தினுடைய மனப் பாங்கின் சோகமான மற்றும் வெட்ககரமானதுமான நினைவூட்டல்களாக அமைகின்றன. அரசியலமைப்பு மற்றும் சட்டக் கட்டமைப்பு என்பவற்றை முற்றிலுமாக உதாசீனம் செய்து சிவில் அதிகாரத்துக்கு உதவியாக ஆயுதப்படைகளை சட்டபூர்வமாக அழைக்கின்ற சந்தர்ப்பங்களின் சூழமைவுகளில், அரசாங்கத்தினால் சட்டத்தினாட்சி மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுதல் தொடர்பில் தீவிரமான மற்றும் அடிப்படையான கேள்விகள் முன்னெழுகின்றன. இந்த சட்டத்துக்குப் புறம்பான செயற்பரப்பில், செயற்றிறனின்மை அல்லது வேறுவகையிலான ஏதும் காரணத்தின் பேரில், சட்டத்துக்கும் ஒழுங்குக்குமான அதன் பொறுப்புகளைக் கைவிட்டு, மற்றும் விசேட படைகள் மற்றும் இராணுவத்தை அழைப்பது பொலிசாருக்கு இப்பொழுது ஒரு வழமையான செயல்முறைரீதியான நடைமுறையா? அத்தகையதொரு நிலைமையில் இராணுவத்துக்கு வழங்கப்படும் கட்டளைகள் என்ன? நிஜமான துப்பாக்கி ரவைகள் மற்றும் குண்டுகளைப் பயன்படுத்துவதற்கா? சுடுவதற்கும் மற்றும் சுட்டுக்கொல்வதற்குமா? உண்மையில், இந்தக் கட்டளைகளை வழங்குவது யார்? இவற்றுக்கான பொறுப்புகளை யார் எடுப்பது? கட்டளைக்கான செயற்பாட்டுரீதியிலான தொடரொழுங்கு என்ன மற்றும் பாராளுமன்றத்துக்கு பதிலளிப்பது யார்? ஓர் தடையற்ற நீதிச் செயன்முறைக்கான சாத்தியங்கள் என்ன?

இராணுவத்தின் புதிய தளபதி பதவியேற்ற முதல் நாளிலேயே கண்டிக்கப்பட வேண்டிய இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதுடன், இது தொடர்பாக ஓர் உள்ளக விசாரணைக்கு அவரால் உத்தரவிடப்பட்டுள்ளது. அத்தோடு, ஓர் பொலிஸ் விசாரணையும் மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவும் கூட ஓர் விசாரணையை ஆரம்பித்துள்ளது. இந்தச் சம்பவங்களுக்கு மேலும் இழுக்கைச் சேர்க்கும் வகையில், அரசாங்கத்தின் பேச்சாளர்கள் சம்பவத்தில் வெளிநாட்டுச் சக்திகளின் சம்பந்தம் உள்ளதாகவும், அரசியல் கட்சிகளால் வன்முறைகள் அனுசரனை அளிக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டியதுடன், சம்பவங்களுக்கு ஊடகங்களையும் கூட பொறுப்புக் கூறினர். மக்களைக் காப்பதற்குப் பதிலாக அவர்களைக் கொன்றளிக்கும் ஒன்றாக இலங்கை அரசு விரைவாக மாறி வருவது மட்டுமன்றி, அதன் குடிமக்களின் நம்பிக்கை மற்றும் நல்லெண்ணம் என்பவற்றவையும் கூட முழுமையான அவமதிப்புக்கு அது உள்ளாக்குகின்றது.

சட்டத்தினாட்சி மற்றும் சட்டமும் ஒழுங்கும் என்பவற்றின் ஓர் அபாயகரமான அளவிலான சீர்குலைவு என்பவற்றின் காரணமாக ஓர் நம்பகத்தன்மையான, சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற புலன்விசாரணையும், அதன் கண்டறிதல்களின் பகிரங்கப்படுத்துதலும் மட்டுமே, இலங்கைக் குடிமக்களின் கரிசனைகளை அமைதிப்படுத்த முடியும். அத்தகையதொரு புலன்விசாரணை மேற் கொள்வதற்கும் மற்றும் குற்றமிழைத்தோர்களுக்கு அவசியமான நீதிமுறையான தண்டனையை வழங்கத் தவறுவதும், நீதிமுறைமையின் ஓர் பெரும் நீதித் தவறுகையாக, அதன் மக்களுக்கு அரசு அளிக்க வேண்டிய முக்கியமான கடப்பாடான பாதுகாப்பளித்தலிலான ஓர் அடிப்படைத் தவறாகவும், மற்றும் இலங்கையின் மனித உரிமைகள் பதிவுகள் மீது தொடர்ச்சியான சர்வதேசத்தின் எதிரிடையான கவனத்துக்கான ஓர் அழைப்பாகவும் அமையும். மதக் குருப் பிரிவுகள் உட்பட்ட அரசாங்கம் மற்றும் அதன் அரசியல் கூட்டுகள் என்பன, வெலிவேரிய சம்பவத்திற்கான தங்களது பதிலில் இந்தக் கரிசனைகளை கவனத்தில் கொள்வதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சட்டத்தினாட்சி மற்றும் சட்டமும் ஒழுங்கு என்பவற்றுக்கு அரசாங்கத்தின் நேர்மையான பற்றுறுதியின் முழுமையான வெளிக்காட்டுதல் இலங்கையில் ஜனநாயக ஆட்சி முறைமையை உறுதிப்படுத்துவதற்கான அதன் விருப்பு மற்றும் இயல்தன்மை என்பவற்றுக்கான ஓர் நடவடிக்கையாக நோக்கப்படும். அவ்விதம் செயற்படத் தவறுவது வளரும் ஜனநாயகப் பற்றாக் குறையை மேலும் அதிகரிக்கவும் மற்றும் நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் சுபீட்சம் என்பவற்றுக்கான எங்களது சாத்தியங்களையும் தடைப்படுத்துவதாக மட்டுமே அமையும்.

## உத்தேசிக்கப்பட்ட அரசியலமைப்புத் திருத்தம் மீதான அறிக்கை

**5 ஜூன் 2013**

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகள் பலவற்றை திருத்துவதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாகத் தெரிவிக்கும் அண்மைய ஊடக அறிக்கைகளால் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) ஆழ்ந்த கவலை அடைந்துள்ளது. அரசியலமைப்பைத் திருத்துவதற்கு கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது பற்றி கடந்த பல வாரங்களாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் (ஐ.ம.சு.கூ) சிரேஷ்ட அமைச்சர்களால் முரண்பாடான அறிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், அத்தகைய அனைத்து அறிக்கைகளும் அமைச்சரவையின் உதவிப் பேச்சாளரால் மறுக்கப்பட்ட அதேவேளை, வாராந்த அமைச்சரவை செய்தியாளர் கூட்டத்தில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டைப் பிரதிநிதிப்படுத்துவதாக கருதப்படும் அவர், இவ்வாறு குறிப்பிட்டார்;

> "தற்போதைய அரசியலமைப்புக்கு, விசேடமாக 13ஆவது திருத்தத்துக்கு ஏதேனும் திருத்தங்கள் இருக்குமாயின், அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கியதான ஓர் பாராளுமன்றத் தெரிவுக்குழு அவற்றைக் கலந்துரையாடலாம் என ஜனாதிபதி தெளிவாகக் கூறியுள்ளார். அத்தகைய நிலைமையில், அந்த நிலைப்பாட்டை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை."

எவ்வாறாயினும், இன்று காலை ஊடக நிறுவனங்கள் பல பதின்மூன்றாவது திருத்தத்தின் ஏற்பாடுகள் பலவற்றுக்கு அரசாங்கம் திருத்தங்களைப் பிரேரிப்பதாகவும் அத்துடன் இந்த திருத்தங்கள் ஓர் அவசர சட்டமூல வடிவில் அறிமுகப்படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளன. உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குவதாக தெரிவிக்கப்படுகின்றன:

- பெரும்பாலான மாகாண சபைகள் குறித்த சட்டவாக்கத்துக்கு இணங்கியதாக வழங்கப்பட்ட ஒரு தனிப் பெரும்பான்மையினால் மாகாண சபை பட்டியலிலுள்ள விடயங்கள் தொடர்பாக மத்தியிலுள்ள அரசாங்கம் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அனுமதிப்பதற்கு அரசியலமைப்பின் உறுப்புரை 154 (எ) [3] இன் காப்புவாசகங்களை நீக்குதல்.
- அருகருகே அமைந்துள்ள இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் ஒரு நிர்வாக அலகை உருவாக்குவதற்கு ஏற்பாடளிப்பதற்கு பாராளுமன்றத்தை அனுமதிக்கும் உறுப்புரை 154 (அ) [3] ஐ இரத்துச் செய்தல்.

இத்தகைய சந்தர்ப்பங்களின் கீழ், செய்தி அறிக்கைகள் பலவற்றினால் சுட்டிக்காட்டப்பட்டவாறான உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக பின்வரும் கரிசனைகளை எழுப்புவதற்கு மா.கொ.நி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

### அரசியலமைப்பு திருத்தத்தின் செயன்முறை

ஓர் பன்மைத்துவ சமூகத்தின் அனைத்துக் கருத்துக்களையும் கவனத்தில் கொள்கின்ற ஓர் கலந்தாலோசனைச் செயன்முறையின் ஒரு விளைவாக இருந்தால் மட்டுமே அனைத்துப் பிரஜைகளையும் பிணிப்பதற்கான தார்மீக அதிகாரத்தை ஓர் அரசியலமைப்பு பெறுகின்றது. உத்தேசிக்கப்பட்ட திருத்தங்களாவன, ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாத்தல் மற்றும் யுத்தத்துக்கு பிந்திய நல்லிணக்கத்தை அடைதல் ஆகிய இரு விடயங்கள் தொடர்பாகவும் அளவுக்கு அதிகமான தாக்கங்களைக் கொண்டுள்ளன. உத்தேசிக்கப்பட்ட திருத்தம், இரகசியமான வகையில் மூடி மறைக்கப்பட்டதும் மற்றும் ஐ.ம.சு.கூ அரசாங்கத்தின் சில கூட்டுசக்திகளுக்கு மட்டுமே மட்டுப் படுத்தப்பட்டிருந்த ஒரு செயன்முறையின் விளைவே என்பதினால், அது மிகவும் குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. அரசியலமைப்பு திருத்தங்களை உருவாக்கும் மற்றும் பரந்த விதிவிலக்கல்லாத சட்டவாக்கச் செயன்முறைகளிலான வெளிப்படைத்தன்மையின்மை மற்றும் மக்கள் பங்கேற்பு இல்லாமை குறித்து ஆரம்பம் முதலே மா.கொ.நி விமர்சித்து வந்துள்ளது. எவ்வாறாயினும், வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்த போதிலும், தற்போதைய அரசாங்கத்தின் 'தேசிய மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டம்' என்பதற்கான பிரேரணைகள் உட்பட, அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் சட்டவாக்கச் செயன்முறைகளிலான இந்தக் குறைபாடுகளை பயன்படுத்திக் கொண்டதுடன் இந்தத் தவறுதல்களுக்கு பரிகாரம் காண்பதற்கு எந்த ஆர்வத்தினையும் வெளிக்காட்டவில்லை.

பதவியிலிருக்கும் அரசாங்கம், அரசியலமைப்புக்கான திருத்தங்களை 'அவசர சட்டமூலங்களாக' வகைப்படுத்தும் ஒரு செயன்முறையை மீண்டும் மீண்டும் கடைப்பிடித்ததுடன், இதன்மூலம் பகிரங்க விவாதம் மற்றும் நீதிமுறையிலான ஆராய்தல் என்பவற்றுக்கான இடைவெளியை மேலும் மட்டுப்படுத்தியது. போருக்குப் பிந்திய நல்லிணக்கச் செயன்முறையில் தற்போதைய திருத்தம் கொண்டிருக்கக்கூடிய தீவிரமான மற்றும் மாற்றமுடியாத பாதிப்புகளை கவனத்தில் கொண்டு, மா.கொ.நி, அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை திருத்தும் சட்டத்தை அரசாங்கம் பிரேரிக்கும் சந்தர்ப்பத்தில், அவசர சட்டமூல நடைமுறையைக் கடைப்பிடிப்பதிலிருந்து அவர்கள் விலகியிருப்பதற்கு மா.கொ.நி அரசாங்கத்தை கடுமையாக நிர்ப்பந்திக்கிறது.

### பதின்மூன்றாவது திருத்ததுக்கான திருத்தங்கள்

மாகாணங்களுக்கான அதிகாரங்களைப் பகிர்வதில், பதின்மூன்றாவது திருத்தம் போதுமானதல்ல என மா.கொ.நி மீண்டும் மீண்டும் விமர்சித்து வந்துள்ளது. பதின்மூன்றாவது திருத்தம், அதிகாரச் சமனிலை மத்திய அரசாங்கத்துக்கு சார்ந்ததான ஏற்பாடுகளுடன் திணிக்கப்பட்டதாக உள்ளது. பதின்மூன்றாவது திருத்தத்தின் பலவீனத்தைக் கவனத்தில் கொண்டு, மங்கள முனசிங்க குழுப் பிரேரணைகளிலிருந்து அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் பெரும்பான்மை அறிக்கை வரை, அடுத்து பதவிக்கு வந்த அரசாங்களின் கீழான முன்னெடுப்புகளிலும் தெரிவிக்கப்பட்ட பின்னைய அனைத்து அதிகாரப் பகிர்வு பிரேரணைகளும், பதின்மூன்றாவது திருத்தத்தின் ஏற்பாடுகளுக்கு அப்பால் நகர வேண்டிய தேவையை வலியுறுத்தியுள்ளன.

அனைத்து மாகாண சபைகளினதும் சம்மதத்தினை முதலில் பெறாமல் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட விடயங்கள் மீது மத்திய அரசாங்கம் சட்டங்களை ஆக்குவதிலிருந்து தடுப்பதற்கு அரசியலமைப்பு ஏற்பாடுகளில் உட்கட்டமைக்கப்பட்ட ஒரு காப்பீடே உறுப்புரை 154 (எ) [3] ஆகும். ஒன்று அல்லது மேற்பட்ட மாகாண சபைகள் உத்தேச சட்ட மூலத்துக்கு சம்மதிக்காத சந்தர்ப்பத்தில், தனிப் பெரும்பான்மையொன்றின் மூலம், சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கான தெரிவை மத்திய அரசாங்கம் கொண்டுள்ளது. அத்தகைய சந்தர்ப்பத்தில், சட்ட மூலம், அதற்கு சம்மதம் தெரிவித்த மாகாண சபைகளுக்கு மட்டும் பிரயோகிக்கப்படக்கூடிய சட்டமாக வரும். அல்லது, அரசாங்கம் சட்ட மூலத்தை மூன்றில் இரண்டு அறுதிப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றின், சட்ட மூலம் நாடு முழுவதற்கும் பிரயோகிக்கப்படக்கூடிய சட்டமாக வரும். மத்திய அரசாங்கம் எந்தவொரு கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்திலும் ஓர் தனிப் பெரும்பான்மையுடன் சட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் அல்லது அனைத்து அதிகாரங்களையும் எடுத்துக் கொள்ளலாம் என்பதால், இந்தக் காப்பீட்டை அகற்றுவதுதானது சட்டவாக்க அதிகாரத்தை பகிர்வதற்கு ஓர் பெறுமதியற்றதாக பொறிமுறையாக பதின்மூன்றாவது திருத்தத்தை மாற்றிவிடும்.

தற்போதுள்ள அதிகாரப் பகிர்வுக் கட்டமைப்பை முற்றிலுமாக இல்லாமலாக்குவதற்கு அரசாங்கத்திலான இந்த ஏகாதிபத்திய நடவடிக்கை ஓர் வரலாற்றுத் தவறாகலாம். பதின்மூன்றாவது திருத்தத்தை திருத்துவதற்கான குறித்த பிரேரணைகள், இலங்கையின் இன முரண்பாடுகளின் வரலாற்று வேர்களை புரிந்து கொள்வதற்கு அரசாங்கத்தின் இயலாமையையும், மற்றும் கடந்த அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட இதேபோன்ற தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கான அதன் இயலாமையையும் காட்டிக் கொடுக்கின்றது. இதற்கும் மேலாக, அனைத்துச் சமூகங்களுக்கும் ஏற்றுக்கொள்ளத்தக்கதான வகையிலான ஓர் அரசியல் தீர்வை உருவாக்குவதில் அரசாங்கத்தின் நேர்மையான நோக்கம் மீதும் தீவிரமான பழியைச் சுமத்துகிறது. தற்போதுள்ள அரசியலமைப்பின் ஒரு பகுதியாகவுள்ள பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக அமுல் படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அது யுத்தத்துக்குப் பிந்தியதிலிருந்து ஓர் முரண்பாட்டிற்கு பிந்திய நிலைக்கு இலங்கை நிலைமாற்றமடைவதை ஏற்படுத்துவதற்காக, ஓர் புதிய அதிகாரப் பகிர்வுத் தீர்வு நோக்கி முன்னெடுக்கப்படக்கூடியதான ஒரு அரசியலமைப்பு பேச்சுவார்த்தைச் செயன்முறையின் மிகவும் குறைந்தபட்ச அடிப்படையையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

அத்தகையதொரு தன்னிச்சையான நடவடிக்கை, அனைத்துச் சமூகங்களுக்கும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான ஒரு அரசியல் தீர்வை உருவாக்குவதற்கு செயலாற்றுவதாக சர்வதேச சமூகத்துக்கு தற்போதைய அரசாங்கம் அளித்திருந்த குறித்த உறுதிமொழிகளின், விசேடமாக எதிர்காலத்திலான எந்தவொரு அரசியல் தீர்வும் பதின்மூன்றாவது திருத்தக் கட்டமைப்புக்கும் அப்பால் செல்வதாக அமையும் என இந்திய அரசாங்கத்துக்கு அது கொடுத்திருந்த உறுதிமொழி என்பவற்றின் ஓர் மீறலாக அமையும். இந்த அறிக்கைகளின் நோக்கங்களை பொருட்படுத்தாது, அரசாங்கம் போருக்குப் பிந்திய அதிகாரப் பகிர்வொன்றுக்கு பேச்சுவார்த்தையை மேற்கொள்வதில் நம்பிக்கொள்ளும் வகையிலான பற்றுறுதியை வெளிக்காட்டவில்லை. ஆகையால், உத்தேசிக்கப்பட்ட அரசியலமைப்பு திருத்தத்தை மேற்கொள்வதற்கு வேண்டாமெனவும் மற்றும் அனைத்துச் சமூகங்களுக்கும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான ஒரு அரசியல் தீர்வுக்கு முக்கிய பாத்தியதை கொண்ட அனைத்து தரப்புகள் மத்தியில் ஒரு கருத்தொற்றுமையை உருவாக்கும் நோக்கில் ஓர் உள்ளிணைக்கும் தன்மையாக பேச்சு வார்த்தையை மீளவும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்தை மா.கொ.நி பலமாக வலியுறுத்துகின்றது.



“எமக்கு சுதந்திரம் ஏன் இருக்க வேண்டும் ?
எமது அடிப்படை உரிமைகளுடன் மோதலை ஏற்படுத்தும்
சமத்துவமின்மை, பாரபட்சமாக நடத்தப்படுதல் என்பவை
நிறைந்த எமது சமூக அமைப்பை மாற்றியமைக்கவே”
சுதந்திரம் வேண்டும்”

**பீ.ஆர். அம்பேட்கார்**
(இந்திய அரசியலமைப்பின் சிருஷ்டிகர்த்தா)

ISSN 955-1800-0061